# நானிலம்

*சிறப்பு மலர் வெளியீடு - 2012*



வெளியீடு - 9

கலைஞர் விபரத்திரட்டு

கலாசாரப்பேரவை, பிரதேசசெயலகம்

ஏறாவூர்ப்பற்று, செங்கலடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானிலம்

ஏறாவூர்ப் பற்று பிரதேச

## கலைஞர் விபரத்திரட்டு

"தமிழர்தம் கலைகள் யாவும்
தரணியில் மிளிரச் செய்வோம்"

வெளியீடு

பிரதேச செயலக கலாசாரப் பேரவை
ஏறாவூர்ப் பற்று, செங்கலடி

2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

801/080

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | நானிலம் |
| நூலின் வகை | : | ஏறாவூர் பற்று கலைஞர் விபரத்திரட்டு |
| எழுத்தாக்கம் | : | நூலாக்க குழு |
| அட்டைப்படம் | : | மூ. சசிக்குமார், கணனி - கிறிஷ்டி |
| பதிப்பு | : | முதல் பதிப்பு |
| பதிப்புரிமை | : | ஏறாவூர் பற்று பிரதேச கலாசாரப் பேரவை,பிரதேச செயலகம் செங்கலடி |
| பக்கம் | : | 180 |
| அளவு | : | B5 |
| பிரதிகள் | : | 250 |
| வெளியீடு | : | ஏறாவூர் பற்று பிரதேச கலாசார பேரவை,பிரதேச செயலகம் செங்கலடி |
| அச்சுப்பதிப்பு | : | காணா டிஜிட்டல், திருமலை வீதி, மட்டக்களப்பு. |


# Bibiographical Data


| | | |
|---|---|---|
| **Tittle** | : | Nanilam |
| **Type by** | : | Eravur Pattu Division Artist Details 2012 |
| **Script:** | : | Writers Team |
| **Cover Design** | : | M. Sachekkumar, Computer - Christy |
| **Edition** | : | First Edition October |
| **Copy Right** | : | Eravur Pattu Cultural Council Divisional Secretariat,Eravur Pattu,Chenkalady |
| **Pages** | : | 180 |
| **Size** | : | B5 |
| **No.of.Copies** | : | 250 |
| **Published by** | : | Eravur Pattu Cultural Council Divisional Secretariat,Eravur Pattu,Chenkalady |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை



ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வாழ்ந்த, வாழ்கின்ற கலைஞர்களை தொகுத்து ஆவணமாக்குகின்ற இந்த முயற்சியிலே ஈடுபட்டுக் கொண்டு இருக்கும் கலாசாரப் பேரவை உறுப்பினர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன். ஏறாவூர்ப்பற்று கலாசாரப் பேரவையானது வருடந்தோறும் வெளியிடுகின்ற "**நானிலம்**" என்ற சிறப்பு மலரானது இவ்வருடம் சற்று வித்தியாசமான முறையிலே அதாவது இம் மலர் ஏற்கனவே கலைஞர்களின் படைப்புக்களான கட்டுரை, கவிதை, சிறுகதை போன்ற ஆக்க இலக்கியப் படைப்புக்களைத்தான் கடந்த எட்டு வருடமாக (08) சுமந்து தன்னை பறைசாற்றிக் கொண்டு வந்து இருப்பதை யாவரும் அறிவீர்கள்.

எனவே இம்முறை வெளிவருகின்ற இந்த "**நானிலம்**" சிறப்பு மலரானது சற்று வித்தியாசமான முறையிலே தங்களின் கரம் தவழ இருக்கின்றது. அந்த வகையில் கலைகளைப் படைக்கின்ற எமது பிரதேசத்திலே வாழ்ந்த, வாழ்கின்ற கலைஞர்களைத் தேடி அவர்களின் விபரங்களையும், கலையாக்க முயற்சிகளையும் ஆவணப்படுத்துகின்ற ஒரு முன் மாதிரியான முயற்சி என்றே இதனைக் கூறிக் கொள்ளலாம்.

உண்மையிலே இப்பிரதேசத்திலே எத்தனையோ கலைஞர்கள் தங்களை அடையாளம் காட்ட வழி தெரியாமல் தங்களின் கலைப்பொக்கிசங்களை தங்களுக்குள்ளேயே விட்டுச் சென்றவர்கள் அநேகர். இந்த கள ஆய்வின் போது அவர்களை அடையாளப்படுத்த முடிந்தது. இந்த ஆவணமாக்கல் முயற்சியினால் பல கலைஞர்கள் வெளிக் கொணரப்பட இருக்கின்றார்கள். அத்துடன் அவர்களது கலையாக்க முயற்சிகளையும் அறிய இவ்வாறான ஆவணமாக்கல் முயற்சி மிகவும் வேண்டத்தக்க ஒன்றாக உள்ளது.

எனவே இவ் ஆவணமாக்கல் முயற்சியானது இப்பிரதேசத்தில் வாழ்ந்த, வாழ்ந்து கொண்டு இருக்கின்ற கலைஞர்களை தொகுத்து அவர்களின் கலையாக்க முயற்சிகளுக்கு ஏற்ப வகைப்படுத்தி உள்ளமையினால் மட்டுமன்றி கிராம ரீதியாகவும் இவர்களை வகைப்படுத்தி உள்ளார். அக்கிராமத்திலுள்ள கலைஞர்களை இலகுவில் அறியவும் இவை உதவும் என்பதில் ஐயமில்லை. அத்தோடு மேற்கொண்டு இது பற்றிய ஆய்வுகளை மேற்கொள்வோருக்கு இவ் ஆவணமாக்கல் தொகுப்பானது மிகவும் பயன் உடையதாக அமையும் என்பதில் எனக்கு ஐயமில்லை.

எனவே இவ்வாணமாக்கல் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கின்ற கலாசார உத்தியோகத்தர் மற்றும் கலாசாரப் பேரவை உறுப்பினர்களுக்கும் தகவல் வழங்கிய ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் கலாசாரப் பிரிவில் இணைக்கப்பட்டுள்ள பட்டதாரி பயிற்சி உத்தியோகத்தர்கள் பொதுமக்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**உ. உதயசிறிதர்**
பிரதேச செயலாளரும்,
பேரவைத் தலைவரும்
ஏறாவூர்ப்பற்று
செங்கலடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி



ஈழ மணித்திருநாட்டின், பாடும் மீன்களின் நாடு என்று அழைக்கப்படும் மட்டக்களப்பு மாநகரத்தின், வட பால் அமைந்துள்ள பாரம்பரிய பண்பாட்டு மரபுகள் கொண்ட முதிர்ந்த தமிழ் பிரதேசமான, ஏறாவூர்ப்பற்று பிரதேச கலாசாரப் பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கலாசார விழாவும் **"நானிலம்"** மலர் வெளியீடும் இவ்வருடமும் சிறப்பாக கொண்டாடப்படவிருப்பது பாராட்டுதலுக்குரியதாகும்.

ஏறாவூர்ப்பற்று கலாசாரப் பேரவை, இத்தகைய விழாக்களை ஏற்பாடு செய்து மக்களை விழிப்புணர்வூட்டுவதன் மூலம், அன்னிய நாட்டுக் கலாசாரங்களின் கோரப்பிடியிலிருந்து, ஓரளவாவது எமது சமூகம் விடுபடுவதுடன், கலாசார விழுமியங்களும் புதிய உத்வேகத்தைப் பெற உதவும்.

இப்பாரம்பரிய பிரதேசத்தில் இலைமறைக்காயாகக் காணப்படும், சிறப்பு மிகு கலைகளையும், பண்பாட்டுக் கலாசார விழுமியங்களையும் ஆவணப்படுத்தும் நோக்கோடும், கலைஞர்களையும், கவிஞர்களையும், எழுத்தாளர்களையும் கௌரவிக்கும் நோக்கம் கொண்டும் வெளியிடப்படும் இச்சிறப்பு மலர் ஆண்டு தோறும் தவறாமல் வெளிவர வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

**"நானிலம்"** சிறப்பு மலர் வெளியீட்டோடு தொடர்புடைய பேரவை உத்தியோகத்தர்கள், ஆக்கத்திறன்கள் வழங்கியோர், இதனை ஒழுங்குபடுத்தி முன்னெடுக்கும் மலர்க்குழுவினர், இந்த விழாவினைத் திறம்பட நடாத்த ஒத்துழைக்கும் நலன்விரும்பிகள், அதற்கு நேரிய வழிகாட்டும் பிரதேச செயலாளர் முதலானோர், பாராட்டப்பட வேண்டியவர்கள்.

ஏறாவூர்ப்பற்று கலாசார பேரவையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கலாசார விழா சிறப்பாக கொண்டாடப்படுவதோடு, **"நானிலம்"** சிறப்பு மலர் வெளியீடும், சீராகவும், சிறப்போடும் வெளிவரவேண்டுமென ஆசி கூறி, இந்த ஆக்கபூர்வமான செயற்பாட்டில் இணைந்துள்ள அனைவருக்கும் இறைவன் மேலும் அர்ப்பணிப்போடு கூடிய ஆர்வத்தை வழங்க வேண்டுமென பகவான் ஸ்ரீராமகிருஸ்ணரைப் பிரார்த்திக்கின்றேன்.


**இறைபணியில்**

**(சுவாமி கபாலீசானந்தா)**

**ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன்**

**கல்லடி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



ஏறாவூர்நகர் பிரதேச செயலக கலாசார பிரிவினால் வெளியிடப்பட விருக்கும் "நானிலம்" எனும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

ஒவ்வொரு வருடமும் பிரதேச செயலக ரீதியாக நடைபெற்று வரும் கலாசார விழாக்கள் அப்பிரதேசத்தின் பண்பாட்டு விழுமியங்களைப் பேணுவதிலும் பாரம்பரிய விழுமியங்களை நிலை நிறுத்திக் கொள்வதிலும் பெரும் பங்கு வகிக்கின்றது.

இப்பிரதேசத்திற்கே உரித்தான நால்வகை நிலங்களையும் இவற்றின் செழுமையையும் அச் செழுமையின் வனப்பில் வாழும் மக்களின் கலை கலாசார பாரம்பரிய அம்சங்களையும் ஏனைய சமூகத்திற்கு எடுத்தியம்புவதாக அமையப்பெற்ற "நானிலம்" எனும் சிறப்பு நூல் மேலும் இச்சமூகம் சிறப்புற வழிகோலும் என்பதில் ஐயமில்லை.

மேலும் இது போன்ற சமூக நிகழ்வுகள் தொடர்ச்சியாக நடாத்தி வருகின்ற ஏறாவூர் நகர் பிரதேச செயலாளர்,மற்றும் ஊழியர்கள் மற்றும் விழாக் குழுவினர்களுக்கும் எனது இதயம் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

**திருமதி. பி. எஸ். எம். சார்ள்ஸ்,**
மாவட்ட செயலாளரும்/அரசாங்க அதிபரும்,
மட்டக்களப்பு மாவட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகத்தின் கலாசாரப் பேரவையினால் வருடா வருடம் கலாசார விழாவினையும் அதனோடு தொடர்புடையதான "**நானிலம்**" எனும் சிறப்பு மலரையும் வெளியீடு செய்து வருவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

ஒரு நாட்டின் அல்லது மனித சமுதாயத்தின் பெருமைகளை எடுத்துக்காட்டும் அடையாளங்களாக விளங்குவது அந்நாட்டின் அல்லது சமூகத்தின் கலாசார விழுமியங்களே என்றால் மிகையாகாது. அந்த வகையில் கலைக்கே பேர்போன மட்டுமா நகரில் ஏறாவூர்ப்பற்று பிரதேசமானது கூத்துக்கலைகளினதும் கிராமிய கலைகளினதும் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் மெருகூட்டும் விதமான இவ் வருடம் கலாசார விழாவை நடத்தவுள்ளது. அத்தோடு அப்பிரதேசத்தின் மண்ணின் மகிமையை வெளிக்கொணரும் நோக்கில் "**நானிலம்**" எனும் சிறப்பு மலர் வெளியீடு செய்வது பெருமைப்படக் கூடிய விடயமாகும். எனவே இம் மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்விழா சிறப்புற அமைய எனது நல்லாசிகளை தெரிவிப்பதோடு இவ்விழாவினை முன்னின்று செயற்படுத்துகின்ற பிரதேச செயலாளர், கலாசார உத்தியோகத்தர் மற்றும் கலாசார பேரவையினர் அனைவருக்கும் எனது நன்றியினையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

D.W.U.**வெலிக்கல**
பணிப்பாளர்
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
கல்வி அமைச்சு
கிழக்கு மாகாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை



எமது ஏறாவூர்ப்பற்று பிரதேச கலாசாரப் பேர்வையானது கடந்த எட்டு வருடமாக ஆண்டு தோறும் வெளியிட்டு வருகின்ற இந்த நானிலம் மலரானது இவ்வருடம் ஒன்பதாவது மலராக எமது பிரதேச கலைஞர்களின் விபரங்களைத் தாங்கி ஒரு விபரத்திரட்டாக வெளிவருவதையிட்டு பெருமை கொள்கின்றது.

ஒரு சமூகத்தினுடைய அடிப்படை கூறுகளில் ஒன்று கலை. இந்த கலை சமூகத்தின் இருப்பு நிலைக்கு ஊன்று கோலாகவும் அமைந்து இருக்கின்றது. ஒரு இனத்தின், சமூகத்தின் அடையாளமாக விளங்கும் இக் கலை தற்போது எம்மை விட்டு நகர்ந்து வேறு பரிணாமத்தினை அடைந்து கொண்டு இருக்கும் இவ் வேளையில் அவற்றினைப் பேணிப் பாதுகாத்து எமது பிச்சந்ததியினருக்கு அதனை அளிக்கை செய்ய வேண்டிய தேவைப்பாடு எம் அனைவருக்கும் சுமத்தப்பட்டு இருக்கும் தலையாய கடமையாகும்.

அந்த வகையில் எமது பிரதேசத்தில் வாழ்ந்து மறைந்த கலைஞர்களையும் அவர்களது படைப்புக்களையும் வாழ்ந்து கொண்டு இருக்கும் கலைஞர்களின் படைப்புக்களையும் நானிலத்தினுடாக ஆவணப்படுத்த வேண்டும் என பேரவையின் முயற்சியின் அடிப்படையில் இவ்வேலைத் திட்டத்தினை மேற்கொண்டுள்ளோம்.

இவ்வேலைத் திட்டத்தினை இரண்டு வருட காலமாக வெளிக்கள ஆய்வில் ஈடுபட்டு நேரடியாக கலைஞர்களைப் பேட்டி காணல் மூலம் தரவுகள், தகவல்கள் சேகரிக்கப்பட்டது. இவ் வேலைத் திட்டத்திற்காக என்னுடன் பட்டதாரி பயிற்சி உத்தியோகஸ்தர்களையும் கள ஆய்வில் ஈடுபடுத்தி இவ் ஆவணமாக்கல் வேலைத்திட்டத்தில் ஈடுபட்டேன்.

என்னைப் பொறுத்த வரையில் ஒரு சில கலைஞர்களின் விபரங்கள் விடுபட்டு இருக்கலாம். அது தெரிந்து விடுபட்டது அல்ல. அவரைப்பற்றிய தகவல்களைப் பெறுவதற்குரிய ஆதாரங்கள் இன்மையேயாகும். சிலருடைய புகைப்படங்களைப் பெற முடியாமல் போய் விட்டது.

ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கிராமங்களை ஆய்வுக்குட்படுத்திய போது மொத்தமாக 39 பிரிவில் வாழ்ந்த வாழ்ந்து கொண்டிருக்கின்ற இளம் கலைஞர்கள், பெண் கலைஞர்கள் போன்றோரின் தகவல்கள் கிடைக்கப்பெற்றது. மொத்தமாக 216 கலைஞர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட கலைஞர்களை அவர்களது கலைப்படைப்புக்களின் அடிப்படையிலே உப பிரிவுகளாக பிரித்துள்ளேன்.

அடுத்து இப்பிரதேசங்களில் கூடுதலாக ஏறாவூர் போன்ற கிராமங்களில் அனேகமான நாட்டுப்புறக் கலையான கிராமிய வைத்தியத்தில் ஈடுபடுகின்ற கலைஞர்கள் அதிகமாக வாழ்ந்திருக்கிறாகள் வாழ்ந்து கொண்டும் இருக்கிறார்கள். அதுமட்டுமன்றி மந்திர ஏடுகள், மருத்துவ ஏடுகளும் இவ்வாய்வின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி இப்பிரதேச நிகழ்த்து கலைகளை என்னால் அடையாளப்படுத்த முடிந்தது. அந்த வகையில் வடமோடி, தென்மோடி கூத்து, வசந்தன் கூத்து நடன வகைகளான கரகம், காவடி, மயிலாட்டம், கிராமிய பண்பாட்டினை அடிப்படையாகக் கொண்ட நடனமும் நடனக்கலைஞர்களையும் காணக்கூடியதாகவுள்ளது. ஆக்க இலக்கியப் படைப்புக்கள் சார்ந்த நூல்கள் என்பனவற்றினை அடையாளப்படுத்த முடிந்தது. அதுமட்டுமன்றி வாய்மொழி சார்ந்த பாடல்கள், மாந்திரிகம், கவி, சிந்து போன்ற துறை சார்ந்த படைப்புக்களையும் கலைஞர்களையும் அடையாளம் காண முடிந்தது. அதுமட்டுமன்றி சிறந்த ஓவியர்கள், சிறந்த புகைப்படக் கலைஞர்கள், சிற்பக் கலைஞர்கள், சிறந்த இசைக் கலைஞர்கள், சிறந்த நாடகக் கலைஞர்கள் தோல் வாத்தியக் கலைஞர்கள் போன்றோரை இனம் காண முடிந்தது.

இறுதியாக இந்த ஆவணமாக்கல் வேலைத்திட்டமானது ஒரு நூலாக வெளிவருவதற்கு முன்னின்று உழைத்த பிரதேச செயலாளருக்கும், உதவி பிரதேச செயலாளர், கலாசார பேரவை உறுப்பினர்கள், கிராம சேவை உத்தியோகஸ்தர்கள், சமூர்த்தி உத்தியோகஸ்தர்கள், பட்டதாரி பயிற்சி உத்தியோகஸ்தர்கள், வாழ்த்துரை வழங்கிய அரசாங்க அதிபர், ஆசிச் செய்தி வழங்கிய சுவாமி அவர்களுக்கும், உதவிப்பணிப்பாளர் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கிழக்கு மாகாணம் மற்றும் மறைந்த கலைஞர்களின் விபரங்களைத் தந்து உதவிய அவர்களுடைய உறவினர்கள் மற்றும் நூலினை அச்சிட்டு வழங்கிய கணா டிஜிட்டல் உரிமையாளர் மற்றும் அட்டைப் படத்தினை வடிவமைத்து தந்த ஓவியர் சசீகுமார் மற்றும், கணனி வடிவினை செய்த கிறிஷ்டி அவர்களுக்கும் நிதிவசதியினை வழங்கிய பிரமுகர்கள் மற்றும் மக்கள் வங்கி, பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், செங்கலடி அவர்களுக்கும் எமது பேரவையின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மூ. சிவானந்தராசா**
கலாசார உத்தியோகத்தரும்
கலாசாரப் பேரவைச் செயலாளரும்
ஏறாவூர்ப் பற்று
செங்கலடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏறாவூர்ப்பற்று பிரதேச கலாசாரப் பேரவை உறுப்பினர்கள் - 2012

| | | | |
|---|---|---|---|
| 01. | தலைவர் | :- | **திரு. உருத்திரன் உதயசிறிதர்** (பிரதேச செயலாளரும், பேரவைத் தலைவரும்) |
| 02. | உபதலைவர் | :- | **திருமதி. நவருபரஞ்சினி முகுந்தன்** (உதவிப் பிரதேச செயலாளர்) |
| 03. | செயலாளர் | :- | **திரு ழு. சிவானந்தராசா** (க. சா. உ) |
| 04. | பொருளாளர் | :- | **திரு. வீ. விசுவராசா** (கி. சே. உத்தியோகத்தர்) |
| 05. | இணைப்பாளர்கள் | :- | **திரு. டீ.எஸ். டேவிட்** (கணக்காளர்)<br>**திருமதி. நவவதனி சசிதரன்** (நிருவாக உத்தியோகத்தர்)<br>**திரு. ஆர். கங்காதரன்** (உதவிப்பணிப்பாளர்) |

## நிருவாக உறுப்பினர்கள்

01. திரு. ஆர். சயனொளிபவன் (கிராம சேவை உத்தியோகத்தர்)
02. திரு. ரி. சேனாதிராசா (கிராம சேவை உத்தியோகத்தர்)
03. திரு. கே. வாமதேவன் (கிராம சேவை உத்தியோகத்தர்)
04. திரு. எஸ். அண்ணாத்துரை (பேரவை உறுப்பினர்)
05. திருமதி. சுதாகரி மணிவண்ணன் (பேரவை உறுப்பினர்)
06. திரு. எஸ். சண்முகம், (பேரவை உறுப்பினர்)
07. திரு. வே. பிரபாகரன், (பேரவை உறுப்பினர்)
08. திரு. வ. ஆனந்தசங்கர் (பேரவை உறுப்பினர்)
09. திரு சீ. தெய்வநாயகம் (பேரவை உறுப்பினர்)
10. திருமதி. சுபாஜினி உதயகுமார் (பேரவை உறுப்பினர்)
11. திரு. யோ. கனகரெட்ணம் (பேரவை உறுப்பினர்)
12. திரு. அ. பத்தினியன் (பேரவை உறுப்பினர்)
13. திரு. சி. தேவநாதன் (பேரவை உறுப்பினர்)
14. திரு. போ. பரமசிவம் (பேரவை உறுப்பினர்)
15. திரு. எசாக்கியேல் நவரத்தினராசா குருஸ் (பேரவை உறுப்பினர்)
16. திரு. இ. ரமேஸ்குமார் (பேரவை உறுப்பினர்)

## மலர் வெளியீட்டுக் குழு

01. திரு. உருத்திரன் உதயசிறிதர் (பிரதேச செயலாளரும், பேரவைத் தலைவரும்.).
02. திரு. எம். சிவானந்தராசா (கலாசார உத்தியோகத்தர்)
03. திரு ஆர். சயனொளிபவன் (கிராம சேவை உத்தியோகத்தர்)
04. திரு. கே. வாமதேவன் (கிராம சேவை உத்தியோகத்தர்)
05. திரு. ரி. சேனாதிராசா (கிராம சேவை உத்தியோகத்தர்)
06. திரு. சீ. தெய்வநாயகம் (பேரவை உறுப்பினர்)
07. திரு. இ. ரமேஸ்குமார் (பேரவை உறுப்பினர்)
08. திரு. சி. தேவநாதன் (பேரவை உறுப்பினர்)
09. திருமதி. சுதாகரி மணிவண்ணன் பேரவை உறுப்பினர்)
10. திரு. கே. சண்முகம் பேரவை உறுப்பினர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே ...


அணிந்துரை
ஆசிச் செய்தி
வாழ்த்துச் செய்திகள்
வெளியீட்டுரை
கலாசாரப் பேரவை உறுப்பினர்கள் விபரம்


**ஆக்க இலக்கியம்**


திரு. சுப்பிரமணியம் சிவலிங்கம் ........ 01
திரு. பொன்னுச்சாமி தவநாயகம் ........ 03
திரு. சின்னத்தம்பி சோமசுந்தரம் ........ 04
* திரு. அருணாசலம் தருமலிங்கம் ........ 05
. . . . மாரிமுத்து சோமலிங்கம் ........ 06
திரு. ஏசாக்கியேல் நவரெத்தினராசா குருஸ ........ 07
திரு. கிருஸ்னப்பிள்ளை துரைராசசிங்கம் ........ 08
திரு. குமாரசாமி சண்முகம் ........ 10
திருமதி. பரமேஸ்வரி இளங்கோ ........ 12
அமரர். தங்கராசா கந்தசாமி (கலியுகம்) ........ 14
திருமதி சந்திரகௌரி சிவபாலன் ........ 15
அமரர். இரத்தினசிங்கம் இரட்ணகுமார் ........ 16
திரு. இரத்தினசிங்கம் பெஸ்லியோ வாஸ் ........ 17
திரு. இரத்தினகோபால் சந்திரகாந்தன் Y.E.S காந்தன் ........ 18
திரு. அருளானந்தம் ரவிசங்கர் ........ 21
திருமதி. வானதி பகீரதன் ........ 23
திரு. இளையதம்பி ரமேஸ்குமார் ........ 25
சிங்காரவேல் தேவநாதன் ........ 26
திருமதி. சுதாகரி மணிவண்ணன் ........ 27
அமரர். திருமதி சுகந்தி இராசநாயகம் ........ 28
திருமதி. சுதாகினி டெஸ்மன் றாகல் ........ 29
திரு. சண்முகராசா விஜிதராசா ........ 30
திரு. தர்மலிங்கம் காளிஸ்வரன் ........ 31


**கூத்துத் துறை**


அமரர். சடையன் முத்துவேல் ........ 32
திரு. மூத்தான் முத்துலிங்கம் ........ 33
அமரர். பூபாலப்பிள்ளை ஆறுமுகம் ........ 34
அமரர். குமாரவேல் தம்பிராசா ........ 34
திரு. மாரிமுத்து முத்துலிங்கம் ........ 35
திரு. கந்தையா வேலாயுதப்பிள்ளை ........ 36
திரு. கந்தப்போடி பொன்னுத்துரை ........ 37





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர். கதிரமலை செல்லையா .................................................. 38
திரு. வல்லிபுரம் சிதம்பரப்பிள்ளை .................................................. 39
திரு. பொன்னையா சுப்பிரமணியம் .................................................. 40
அமரர். முத்துக்குட்டி ஜெயராமன் .................................................. 41
திரு. கந்தையா மயில்வாகனம் .................................................. 41
திரு. வேல்முருகு தம்பிமுத்து .................................................. 42
திரு. பாலிப்போடி கமலநாதன் .................................................. 43
திரு. செல்லையா செல்வராசா .................................................. 44
திரு. சிதம்பரப்பிள்ளை இராசதுரை .................................................. 45
திரு. குமாரவேலு நவரெட்ணம் .................................................. 46
திரு. வெள்ளக்குட்டி கிருஸ்ணப்பிள்ளை .................................................. 47
திரு. சுப்பிரமணியம் தேவராசா .................................................. 47
திரு. தம்பிராசா சிவஞானம் .................................................. 48
திரு. வேலாயுதம்பிள்ளை பிரபாகரன் .................................................. 49

**நடனத் துறை**

திரு. தம்பிராசா ஸ்ரீனிவாசன் .................................................. 50
திருமதி. சுகந்தி நிரஞ்சன் .................................................. 51
திரு. சங்கரலிங்கம் கிருஷ்ணகாந்தன் .................................................. 53
செல்வி. சங்கரலிங்கம் மிதிலா .................................................. 54
செல்வி. யோகராசா ரிசாந்தினி .................................................. 54
செல்வி. விஜயகுமார் நிதாந்தினி .................................................. 55
செல்வன். பரமேஸ்வரன் றொசாந்தன் .................................................. 55

**நாடகத் துறை**

பிரான்சிஸ் சேவியர் அருள் செபஸ்டியான் .................................................. 56
திரு. குமாரசாமி ஆண்டியப்பன் .................................................. 57
திரு. சிதம்பரம் விஸ்வநாதன் .................................................. 58
அமரர். சின்னத்துரை நவரெட்ணம் .................................................. 59
அமரர். பொன்னுத்துரை ரவீந்திரா .................................................. 60
திரு. வைரமுத்து மாணிக்கவேல் .................................................. 61
திரு. கணபதிப்பிள்ளை இளையதம்பி .................................................. 63
திரு. செல்லத்துரை அண்ணாத்துரை .................................................. 64
கதிரவேலு துரைராஜா .................................................. 65
திரு. ஆறுமுகம் ஸ்ரீதரன் .................................................. 66
திரு. கற்பூரப்போடி பரமானந்தம் .................................................. 68
திரு. ஆறுமுகம் சோமசுந்தரம் .................................................. 70
திரு. கந்தவேல் சுவர்ணேஸ்வரன் .................................................. 71
திரு. வைரமுத்து லோகிதராஜ் .................................................. 73
திரு. தியாகராஜா விஜயநாத் .................................................. 73
திரு. வண்ணமணி சந்திரவர்ணன் .................................................. 74
செல்வி. தேவரஞ்சன் கஸ்மீயா .................................................. 75



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இசைத் துறை**


திருமதி. ஞானதேவி பொன்னுத்துரை .................... 76
திருமதி. மங்கம்மா சோதிநாதன் .................... 77
திருமதி. கிறிஷாந்தி பத்மவேணி சிறிதரன் .................... 78
திருமதி. பரமேஸ்வரி ரவீந்திரன் .................... 79
திரு. செல்வராசா இராஜேந்திரன் .................... 80
திருமதி. நிர்மலேஸ்வரி பிரசாந்த் .................... 81


**புகைப்படத்துறை**


திரு. கருப்பையா இராஜரெட்ணம் .................... 82
திரு. ஐயாத்துரை கோபாலகிருஷ்ணன் .................... 83
பேரின்பநாயகம் வரதராஜன் .................... 84
அமரர். சண்முகம் கணேசமூர்த்தி .................... 84
திரு. ஆனந்த சயனம் ரமேஸ்குமார் .................... 85
இலட்சுமணன் தேவபிரதீபன் .................... 85


**ஓவியம், சித்திரத் துறை**


திருமதி. லெட்சுமி பொன்னுத்துரை .................... 86
திரு. கணபதிப்பிள்ளை தங்கவடிவேல் .................... 86
திரு. அழகையா அச்சுதகுமார் .................... 87
திரு. ஞானசிங்கம் ரவிச்சந்திரன் .................... 88
திரு. சிவராசா மௌனேஸ் .................... 89
திரு. கனகரெட்ணம் சிவநாதன் .................... 89
திரு. சின்னத்தம்பி சிவநாதன் (வரதன்) .................... 90
திரு. சுசீமன் நிர்மலவாசன் .................... 91
திரு. மூத்ததம்பி சசிகுமார் .................... 93
திரு. சுசீமன் றினோசன் .................... 93
திரு. உதயகுமார் உதயபிரகலாதன் .................... 94


**சிற்பத் துறை**


அமரர் கலையப்பெருமாள் கோவிந்தசாமி .................... 95
திரு. வேலுப்பிள்ளை கனகசபாவதி .................... 96
திரு. செல்லையா கணபதிப்பிள்ளை .................... 97
திரு. விநாயகம் கலாதரன் .................... 97
திரு. பரஞ்சோதி குணவதனன் .................... 98
திரு. கதிர்காமநாதன் ரமேஸ்குமார் .................... 98
தங்கராசா இராஜேந்திரன் .................... 99


**கலையும் கைவினையும்**


திரு. சின்னத்தம்பி கந்தப்போடி .................... 100
அமரர். சின்னையா பொன்னு .................... 100





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. ஞானமுத்து சின்னராசா ...................................... 101
திரு. ஆறுமுகம் தில்லையம்பலம் ...................................... 102
திரு. நல்லையா ராஜேந்திரன் ...................................... 102
சோமசுந்தரம் தாமோதரம் ...................................... 103
திருமதி கனகசூரியம் கிருபைமலர் ...................................... 104
திருமதி. செல்வராசா பரஞ்சோதி ...................................... 105
திருமதி. லோகேஸ்வரன் கோமளாதேவி ...................................... 106
திரு. பொன்னு யோகராசா ...................................... 107
தவம் தர்மலிங்கம் ...................................... 107

## கிராமிய வைத்தியம்

அமரர். வேலன் பொன்னையா ...................................... 108
திரு. ரண்கொட்டி பண்டார லாகே சிறிவர்த்தன ...................................... 108
அமரர். விளங்கர் – தம்பிப்பிள்ளை ...................................... 109
திருமதி. கந்தன் கனகம்மா ...................................... 110
திரு. கணபதி காத்தமுத்து ...................................... 111
அமரர். கொம்பர் சுப்பிரமணியம் ...................................... 111
திரு. பிள்ளையான் காத்தமுத்து ...................................... 112
அமரர். பத்தினியன் சின்னாங்குட்டி ...................................... 112
அமரர். மாரிமுத்து கந்தையா ...................................... 113
அமரர். சின்னையா நாகமணி ...................................... 113
அமரர். வைரமுத்து கந்தக்குட்டி ...................................... 114
அமரர். பத்தினியன் தங்கராசா ...................................... 114
அமரர். சூசைப்பிள்ளை யோசப் லீலி ...................................... 115
அமரர் வைத்திலிங்கம் அருணாச்சலம் ...................................... 115
பிள்ளையான் - பொன்னுத்துறை ...................................... 116
சபாவதி பத்தினியன் ...................................... 116
அமரர். பாலிப்போடி சிவலிங்கம் ...................................... 117
அமரர். தம்பிமுத்து வைரமுத்து ...................................... 117
அமரர். கதிர்காமத்தம்பி சாமித்தம்பி ...................................... 118
அமரர் நீலக்குட்டி கணபதிப்பிள்ளை ...................................... 118
திரு. கோவிந்தன் கணேசமூர்த்தி ...................................... 119
திரு. யோசப் கனகரெட்னம் ...................................... 119
அமரர் பூபாலபிள்ளை சுப்பிரமணியம் ...................................... 120
அமரர் கணபதிப்பிள்ளை கண்ணகை ...................................... 120
அமரர். செம்பாகுட்டி கிருஸ்ணபிள்ளை ...................................... 121
அமரர் காத்தான் சீனித்தம்பி ...................................... 121
அமரர். நல்லையா கமலாவதி ...................................... 121
திரு. ஆபரணம் வரதராஜன் ...................................... 122
திரு. மார்கண்டு சுந்தரமூர்த்தி ...................................... 122
அமரர் கதிர்காமத்தம்பி ஞானமுத்து ...................................... 123
திரு. சுப்ரமணியம் கோபாலபிள்ளை ...................................... 123



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் சங்கரப்பிள்ளை நல்லதம்பி .......... 124
திரு. முத்துப்பிள்ளை கணபதிப்பிள்ளை .......... 124
அமரர் கந்தக்குட்டி நாகலிங்கம் .......... 125
அமரர் கற்பூரம் ஞானமுத்து. .......... 125
திரு. சீனித்தம்பி கனகசபை .......... 126
அமரர். வைத்திலிங்கம் சின்னத்துரை .......... 126
திரு. செம்பாப்போடி பொன்னம்பலம் .......... 127
திருமதி. நாகராஜா சாராதாதேவி .......... 127
திரு. செல்லையா கந்தவேல் .......... 128
அமரர் சீனித்தம்பி ஆறுமுகம் .......... 128
அமரர் சுப்பிரமணியம் நாகராஜா .......... 129
திரு. பொன்னுத்துரை தேவசிங்கம் .......... 129
திரு. வீரபத்திரன் வைகாலிப்போடி .......... 130
திரு. செல்லப்பா மயில்வாகனம் .......... 130
அமரர் காளிக்குட்டி அரசரெத்தினம் .......... 130
அமரர் சீனித்தம்பி கந்தப்பன் .......... 131
திரு. கோபால் சந்திரசேகரம் .......... 131
திரு. சீனித்தம்பி நடராசா .......... 131
திருமதி. கந்தப்பன் தங்கம் .......... 132
அமரர். செல்லையா சுப்பிரமணியம் .......... 132
திரு. சுப்பிரமணியம் பாலசிங்கம் .......... 132
அமரர். சண்முகம் நாகராசா .......... 133
திரு. வண்ணமணி தவராசா .......... 133
திரு. வேலுப்பிள்ளை செல்லத்துரை .......... 134
திரு. பொன்னுச்சாமி சுந்தரமூர்த்தி .......... 134
திரு. கணபதிப்பிள்ளை தங்கவேல் .......... 134
திரு. பொன்னுத்துரை கருணாகரன் .......... 135
திரு. ஆறுமுகம் கமலசேகரம் .......... 135
அமரர். கண்ணமுத்து வேலுப்பிள்ளை .......... 135
அமரர். இளையவன் வைரி .......... 136
அமரர் காசிநாதன் செல்லத்தம்பி .......... 136
அமரர் வேலாப்போடி மாரிமுத்து .......... 136
திரு. சாமித்தம்பி பரமசிவம் (நாகராசா) .......... 137
திரு. நாகராசா சிறிஸ்கந்தராசா .......... 137
திரு. நாகலிங்கம் இராசதுரை .......... 137
திரு. கனகரெத்தினம் வசந்தக்குமார் .......... 138
வைசியன் யோசப் மேரி .......... 138
திரு. தம்பிராசா யோகராசா (சின்னவன்) .......... 138
அமரர் சின்னத்தம்பி மூத்தான் .......... 139
அமரர். வீரகத்தி காசுபதி .......... 139
திரு. அரசு சிறிதரன் .......... 139
திரு. சீனித்தம்பி சந்திரன் .......... 140




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. சுப்பிரமணியம் இராமகிருஷ்ணன் ........................................ 140
திரு. சிதம்பரப்பிள்ளை கலைச்செல்வன் ........................................ 140
அமரர் அருணந்தி வைத்திலிங்கம் ........................................ 141
திரு. இடமே கெரத் முதியான்சலகே அமரசிங்க ........................................ 141
திரு. கதிரவேல் சிவலிங்கம் ........................................ 142
திரு. பொன்னம்பலம் சுசீலன் ........................................ 142
திரு. கந்தசாமி இராசு ........................................ 142
செல்வி. பொன்னுத்துறை — யாழினி ........................................ 143
இளையதம்பி கோமளேஸ்வரி ........................................ 143
திரு. தம்பிராசா விஜிசுதன் ........................................ 143
அமரர். வெள்ளையர் கிருஷ்ணபிள்ளை ........................................ 144
அமரர். இராமக்குட்டி தம்பியப்பா ........................................ 144
திரு. செல்லத்துரை மோகன் ........................................ 145
திரு. நாகராஜா சந்திரமோகன் ........................................ 145
திரு. கணேசமூர்த்தி புருசோத்மன் ........................................ 145

**ஊடகத் துறை**

திரு. பணிக்கர் மயில்வாகனம் ........................................ 146
அமரர். செல்லத்தம்பி ஸ்ரீ கோவிந்தசாமி ........................................ 147
திரு. கதிர்காமத்தம்பி வாமதேவன் ........................................ 148
திரு. பேரின்பராசா சபேஷ் ........................................ 149
திரு. செல்வக்குமார் நிலாந்தன் ........................................ 150

**வாய்மொழிப் பாடல்**

திரு. கதிர்காமத்தம்பி மயில்வாகனம் ........................................ 151
திரு. சின்னவன் காளிமுத்து ........................................ 153
திரு. காத்தமுத்து நடராசா ........................................ 154
திரு. தம்பிராசா சேனாதிராசா ........................................ 155
திரு. செல்லத்தம்பி சந்திரகுமார் ........................................ 156
திரு. வடிவேல் ஆனந்தசங்கர் ........................................ 157

**சோதிடம்**

திரு. சோமநாதன் நவரெட்ணம் ........................................ 158
திரு. பொன்னையா கணபதிப்பிள்ளை ........................................ 159
திரு. சீனித்தம்பி தெய்வநாயகம் ........................................ 160
திரு. தர்மலிங்கம் ஜெயக்குமார் ........................................ 162

**தோல் வாத்தியம்**

திரு. கந்தப்பு அரியதாஸ் ........................................ 163
திரு. தங்கவேல் தவராசா ........................................ 164
திரு கிருஷ்ண மூர்த்தி கிருஷ்ணராஜ் ........................................ 164



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| **முழுப்பெயர்** | : | **திரு. சுப்பிரமணியம் சிவலிங்கம்** |
| **முகவரி** | : | **குமாரவேலியார் கிராம வீதி, செங்கலடி** |
| **பிறந்த திகதி** | : | **1934.11.08** |
| **வயது** | : | **78** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | : | **செங்கலடி** |
| **துறை** | : | **ஆக்க இலக்கியம்** |
| **தொழில்** | : | **பொறியியலாளர்** |

- ❖ சந்திவெளியில் ஒரு பழம் பெரும் விவசாயக் குடும்பத்தில் பிறந்த திரு. சுப்பிரமணியம் சிவலிங்கம் செங்கலடியை தனது நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவர்.

- ❖ இவர் தனது ஆரம்பக் கல்வியினை சந்திவெளி மெதடிஸ்த மிஸன் பாடசாலையிலும், உயர் கல்வியை மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயம், மற்றும் யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரியிலும், பொறியியல் பட்டப்படிப்பை கொழும்பு பல்கலைக்கழகத்திலும் மேற்கொண்டார். சிரேஸ்ட கட்டட வடிவமைப்பு பொறியியல் துறையில் சிற்றி இல்ட்ஸ் (இலண்டன்) உயர் கல்வி நிறுவனம்.

- ❖ இவர் தனது 17 வயதிலேயே ஆக்க இலக்கியத்துறையில் ஈடுபட்டு சிறுகதைகளையும், கட்டுரைகளையும், கவிதைகளையும் தினகரன், வீரகேசரி, சிந்தாமணி, சுடரொளி போன்ற பத்திரிகைகளில் எழுதியுள்ளார்.

- ❖ இரசிகமணி கனக செந்தில் நாதன் அவர்கள் 60களின் முற்பகுதிகளில் ஆவணப்படுத்திய ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்கள் பற்றிய நூலில் வளர்ந்து வரும் சிறந்த சிறுகதை எழுத்தாளர்கள் வரிசையில் திரு. சிவலிங்கம் அவர்களையும் இணைத்துப் பாராட்டியுள்ளார்.

- ❖ 2003இல் கிழக்குப் பல்கலைக்கழகம் நடாத்திய வாணி விழா கவிதைப் போட்டியில் இவருடைய கவிதை முதலிடம் பெற்றது.

- ❖ 2006இல் இவருடைய முதல் நூலான "விவேகானந்தர் காவியம்" வெளி வந்தது. 400 பக்கங்கள் கொண்ட இந்நூல் ஸ்ரீ மத் சுவாமி ஆத்மானந்தாஜி (தமிழ் நாடு), பேராசிரியர் சி. மௌனகுரு (மட்டக்களப்பு), பேராசிரியர் கா. சிவத்தம்பி (யாழ்ப்பாணம்), கொழும்பு) பேராசிரியர் சே. மூக்கையா (மலையகம்) ஆகிய அனைத்து தமிழ் கூறும் நல்லுலகைச் சேர்ந்த தமிழ் பேரறிஞர்களின் சிறப்பான பாராட்டுதலைப் பெற்றுள்ளது.

- ❖ 2006இல் ஆக்கப்பட்ட நூல்களை ஆய்வு செய்த தேசிய நூலாக ஆவணமாக்கல் சேவைகள் சபையானது அந்த ஆண்டின் சிறந்த காவிய நூலாக இவரது விவேகானந்தா காவியத்தைத் தெரிவு செய்து அதன் புத்தக வெளியீடு உதவித் திட்டத்தின் கீழ் 70,000.00 பெறுமதியான பிரதிகளை கொள்முதல் செய்து இவரைக் கௌரவித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ விவேகானந்தர் காவியத்தை இயற்றியதற்கு இவர் கூறும் காரணம் "இன்று உலகில் அதிகளவான மக்களால் பின்பற்றப்படும் பெரிய மதங்களான இந்துசமயம், பௌத்தம். கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய நான்கு மதங்கள் விளங்குகின்றன. இவற்றுள் பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய மதங்களைத் தோற்றுவித்த புத்தபிரான், இயேசுநாதர், முகம்மது நபி (ஸல்) ஆகிய மதப்பெரியார்களைப் பற்றி முறையே கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை, கவியரசு கண்ணதாசன், கவிஞர் மேத்தா ஆகியோர் காவியம், படைத்துள்ளனர். ஆனால் ஆதியும் அந்தமுமில்லாத இந்து சமயத்திற்கு புத்துயிர் ஊட்டி உலகமெல்லாம் சென்று அதன் அரும்பெரும் தத்துவங்களைப் பரப்பி மதப்புரட்சி செய்த வீரத்துறவி விவேகானந்தரைப் பற்றி காவியம் படைக்க தமிழ் நாட்டிலோ அல்லது ஈழ நாட்டிலோ எவரும் முன்வரவில்லை. இந்த குறையை நிவர்த்தி செய்யவே விவேகானந்தர் காவியம் எழுதப்பட்டது.

❖ தனது விவேகானந்தர் காவியத்தைப் படித்து ரசித்த வாசக அன்பர்களின் ஏகோபித்த வேண்டுகோளுக்கிணங்க தற்பொழுது இவர் "விபுலானந்தர் காவியம்" எழுதும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| **முழுப்பெயர்** | : | **திரு. பொன்னுச்சாமி தவநாயகம்** |
| **முகவரி** | : | **சித்தாண்டி – 02** |
| **பிறந்த திகதி** | : | **1935.11.28** |
| **வயது** | : | **77** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | : | **சித்தாண்டி** |
| **துறை** | : | **ஆக்க இலக்கியம்** |
| **தொழில்** | : | **ஓய்வு பெற்ற அதிபர்** |

- ❖ இவர் சித்ததாண்டியைப் பிறப்பிடமாகவும், மட்டக்களப்பினை வசிப்பிடமாகவும் கொண்டவர் இவர் 1950களில் இருந்து எழுத்துத் துறையில் ஈடுபட்டு வருகின்றார்.
- ❖ இவர் கவிதை, கட்டுரை, இசை, நூலாய்வு, கிராமிய இலக்கியம், கிராமியக் கூத்து ஆகிய துறைகளில் ஈடுபாடு கொண்டவர்.
- ❖ இவர் பொன்தவநாயகம், பொன், தவம், பூபாரதன், நாகபொன்தவம் போன்ற புனைபெயர்களில் எழுதி வரும் பொன் தவநாயகம் இலங்கை அதிபர் சேவையின் முதல் தர அதிபர் ஆவார்.
- ❖ இவர் ஆசிரிய கலாசாலையில் விரிவுரையாளராகக் கடமையாற்றினார்.
- ❖ இவர் பழகு தமிழ் பாவலர், நகைச்சுவை நாவலர், தத்துவக் கவிஞர் போன்ற பட்டங்களைப் பெற்றுள்ளார்.
- ❖ இவர் சுதந்திரன், வீரகேசரி, தினபதி போன்ற பத்திரிகைகளில் இவரது ஆரம்ப கால கவிதைகள் பிரசுரமாகியுள்ளது.
- ❖ அதே போன்று பல சமய விழாக்களில் இவர் எழுதி இசையமைத்த பல பாடல்கள் பாடப்பட்டுள்ளன.
- ❖ 2008ம் ஆண்டு அவுஸ்ரேலியாவில் விக்டோரியா மாநிலத்து தமிழர் சங்கம் நடாத்திய முத்தமிழ் விழாவின் உலகளாவிய ரீதியில் கவிதைப் போட்டியில் இவரது கவிதை சான்றிதழும் பணப்பரிசும் பெற்றது குறிப்பிடத்தக்கது.
- ❖ கவிஞர் கண்ணதாசனின் தத்துவக் கருத்துக்களும், கவிஞர் காசியானந்தனின் உணர்ச்சிப் பெருவாகவும், கவிஞர் பாண்டியூரானின் மண்வளப் பாடல்களும் தன்னை ஒரு கவிஞனாக மாற்றியது எனக் குறிப்பிட்டு இருந்தார்.
- ❖ அதுமட்டுமன்றி இவரது பொன் மொழித் திரட்டு, பக்திப் பாடல் திரட்டு என்பன தற்போது அச்சேறியுள்ளது எனலாம்.
- ❖ 2011ம் ஆண்டு இந்து கலாசாரத் திணைக்களத்தினால் கலாபூசணை விருது பெற்றவர்.
- ❖ கொழும்பு தமிழ் சங்கம் நடத்திய கவிதைப் போட்டியில் 1ம் இடம் பணப்பரிசு பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| முழுப்பெயர் | : திரு. சின்னத்தம்பி சோமசுந்தரம் |
| முகவரி | : பிரதான வீதி, கொம்மாதுறை |
| கிராமசேவையாளர் பிரிவு | : கொம்மாதுறை |
| பிறந்த திகதி | : 1939.17.04 |
| வயது | : 73 |
| துறை | : ஆக்க இலக்கியம் |
| தொழில் | : காணி உத்தியோகத்தர் |

❖ இவர் கொம்மாதுறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தற்போது 5ம் குறுக்கு கல்லடியில் வசிக்கும் இவர் தனது ஆரம்பக் கல்வியை வந்தாறுமூலை மத்திய கல்லூரியிலும் அதன் பின்பு மட்டக்களப்பு சென்மேரிஸிலும் கல்வி பயின்றார்.

❖ இவர் தனது கலைப்பணியினை "சோமு இளந்திரையன்" என்ற புனை பெயரில் எழுதி வருகின்றார்.

❖ இவர் கிழக்கொலி கை எழுத்து சஞ்சிகையின் ஆசிரியர் ஆவார். இதனை விவசாயக் கல்லூரியில் படிக்கும் போது மேற்கொண்டார். இதில் கட்டுரை, சிறுகதை என்பனவற்றினை எழுதி வருகின்றார்.

❖ இவர் பட்டிமன்றம், விவாதமேடை போன்ற செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றார்.

❖ இவர் ஒரு சமாதான நீதவானாகவும், முதியோர் சங்கத்தின் உறுப்பினராகவும், தமிழ் தாய் மன்றத்தின் தலைவராகவும், கிராம முன்னேற்றச் சங்கத்தின் தலைவராகவும் இருக்கின்றார்.

❖ முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் சிலையை சித்தாண்டி முச்சந்தியில் அமைப்பதற்கு இவர் ஒரு காரணகர்த்தாவாக இருந்தார்.

❖ இத்துடன் கிழக்கு பல்கலைக்கழகத்தினை வந்தாறுமூலைக்குக் கொண்டு வருவதற்கு இவரும் அமரர் நாகேந்திரன் என்பவருடன் அயராது உழைத்தார்.

❖ அடுத்து கிழக்கு இலங்கை முன்னேற்றச் சங்கத்தின் தலைவரும் ஆவார்.

❖ இவர் ஒரு நாடக தயாரிப்பாளரும் சிறந்த நடிகரும் ஆவார். யூலியசீசர் என்னும் நாடகத்தினை மேடையேற்றியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திரு. அருணாசலம் தருமலிங்கம் |
| முகவரி | : | "அருணோதயம்" பிரதேச சபை வீதி, வந்தாறுமூலை. |
| பிறந்த திகதி | : | 1945.06.17 |
| வயது | : | 67 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | வந்தாறுமூலை கிழக்கு, இல – 197 |
| துறை | : | ஆக்க இலக்கியம் |
| தொழில் | : | ஓய்வுபெற்ற தொழிநுட்பவியலாளர், கடதாசிஆலை வாழைச்சேனை. |

❖ சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், கிழக்கில் அமைந்துள்ள "அருணோதயத்தை" வசிப்பிடமாகவும் கொண்டவர். இவர் தனது ஆரம்பக் கல்வியை சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலும், உயர் கல்வியை புத்தளம் சாகிரா தேசிய பாடசாலையிலும் (சாகிரா கல்லூரி) கற்றார்.

❖ இவர் விஞ்ஞான பாடங்களை ஆங்கில மொழி மூலம் கற்று 1965ம் ஆண்டு சித்தியெய்தினார். தாவரவியல் பாடத்தில் விசேட சித்தியும் பெற்றார்.

❖ 1966ம் ஆண்டு வாழைச்சேனை கிழக்கிலங்கை கடதாசி ஆலை கூட்டுத் தாபனத்தில் (தேசிய கடதாசி கம்பனி) இணைந்து கொண்டார்.

❖ நிறுவையாளர், பண்டகசாலை காப்பாளர், தரம் மதிப்பீட்டு உதவியாளர் போன்ற பதவிகளை வகித்த பின் ஓய்வு பெறுவதற்கு முன்னர் கடதாசி தொழிநுட் பவியலாளராக 5 ஆண்டுகள் கடமையாற்றினார்.

❖ காகித ஆலையில் மாதாந்த வெளியீடான "காகித மலர்" சஞ்சிகைக்கு அவ்வப்போது கட்டுரைகள் எழுதி வந்தார்.

❖ பத்திரிகைத்துறையில் ஜாம்பவனாகத் திகழ்ந்த காலஞ்சென்ற எஸ்.டி. சிவநாயகத்தின் வேண்டுதலின் பெயரில் ஆக்க இலக்கியத்தில் பிரவேசித்தார்.

❖ எம்.டி.குணசேன நிறுவனத்தினரால் வெளியிடப்பட்ட தினபதி, சிந்தாமணி, தந்தி போன்ற பத்திரிகைகளுக்கு வாழைச்சேனை நிருபராக கடமையாற்றினார். முன்னர் கல்குடா நிருபராகவும் சேவையாற்றினார்.

❖ 2006ம் ஆண்டிற்குப்பின் இன்றுவரை வீரகேசரி, தினக்குரல் மற்றும் அரசுக்குச் சொந்தமான "லேக்கவுஸ்" பத்திரிகையான தினகரனிலும் இலக்கியம் அடங்கலாக சகல துறைகள் பற்றிய ஆக்கங்கள், சிறுகதைகள் பிரசுரமாகின. தினகரன் பத்திரிகையில் மட்டும் நூற்றுக்கு மேற்பட்ட ஒரு பக்கக் கட்டுரைகள் அருணா – தருமலிங்கம் என்ற புனை பெயரில் வெளிவந்து கொண்டிருக்கின்றமை சிறப்பம்சமாகும். தற்போது மட்டக்களப்பிலிருந்து வெளிவருகின்ற "சுவத்திரள்" சஞ்சிகையிலும் கட்டுரை, நகைச்சுவை என்பன வெளிவந்து கொண்டிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | அமரர் மாரிமுத்து சோமலிங்கம் |
| புனை பெயர் | : | கண்ணகிதாசன் |
| முகவரி | : | பிரதான வீதி, வந்தாறுமூலை |
| பிறந்த திகதி | : | 1933.05.23 |
| இறந்த திகதி | : | 1995.06.05 |
| வயது | : | 62 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | வந்தாறுமூலை |
| துறை | : | ஆக்க இலக்கியம். |
| தொழில் | : | அதிபர் |

வந்தாறுமூலையினை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர். வந்தாறுமூலையினை சேர்ந்த பிரபல்யமான மயிலப்போடி குடும்பத்தினை சேர்ந்தவர். இவர் தனது ஆரம்ப கல்வியினை வந்தாறுமூலை விஷ்ணு மகா வித்தியாலயத்திலும், க.பொ.த சாதாரண தர கல்வியினை ஏறாவூர் அலிகார் மகா வித்தியாலயத்திலும் கற்றார். பின்னர் 1957, 1958 ஆண்டுகளில் கிராம சேவை உத்தியோகத்தராகவும் அதன் பின்னர் 1959ல் மட்/அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் தனது கல்வியினை முடித்து 1961ல் முதல் ஆசிரியர் நியமனத்தை சம்பூர் மத்திய மகா வித்தியாலயத்தில் பெற்றார். அதன் பின் பசறை மகா வித்தியாலயத்திலும், கறுவாக்கேணி வித்தியாலயத்திலும் ஆசிரியராக பணியாற்றி அதன் பின் சம்மாந்துறையில் விவசாயம் தொடர்பான ஒரு வருட கால பயிற்சியினை பெற்றுக் கொண்டார். சித்தாண்டி ஸ்ரீ இராம கிருஸ்ண மிஷன் பாடசாலையில் ஆசிரியராக அதன் பின்பு சேவையாற்றி 1987ல் சந்திவெளி பானலயடித்தோணா அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் அதிபராக கடமையாற்றினார்.

இலக்கிய பணி மீது கொண்ட அதிகளவு ஈடுபாட்டினால் 16 வயது முதல் கவிதை எழுத தொடங்கினார். கவிதை கட்டுரை ஆகிய துறையில் தன்னை தடம் பதித்துக் கொண்டவர். அந்த வகையில் ஆரம்ப காலத்தில் சுதந்திரன், தினபதி, வீரகேசரி ஆகிய பத்திரிகைகளுக்கு தொடர்ச்சியாக தனது கவிதை படைப்புக்களை வெளியிட்டு வந்தார். அந்த வகையில் வீரகேசரியில் வெளிவந்த அழகுப் பொண்ணாள், அருகிருக்க உளம் நாடுதே என்ற கவிதைகள் சிறப்பானவை. மட்டக்களப்பில் சுகாதார அமைச்சினால் நடத்தப்பட்ட கவிதைப் போட்டியிலே கலந்து முதல் பரிசை பெற்றுள்ளார். பத்திரிகைகளில் வெளிவந்த இவரது கவிதைகளாக காத்திருப்பாள், அவரை கண்டால் சொல்லுங்கள், தவிக்கிறேன், சுவைக்கும் கரும்பு, சந்தேகம், காத்திருக்கிறேன் என்பன குறிப்பிடத்தக்கவை. அத்தோடு மரணவண்டிக்காக காவல் என்ற இவரது கவிதை பாராட்டுக்கள் பல பெற்றது என்பது சிறப்பான விடயமாகும். இவர் சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்க செயலாளராகவும், கிராம அபிவிருத்திச் சங்க தலைவராகவும் இருந்து செயற்பட்டு வந்திருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திரு. ஏசாக்கியேல் நவரெத்தினராசா குருஸ் |
| முகவரி | : | மே பிளவர், பிரதான வீதி, செங்கலடி |
| பிறந்த திகதி | : | 1951.02.10 |
| வயது | : | 61 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | செங்கலடி |
| துறை | : | ஆக்க இலக்கியம் |
| தொழில் | : | பயிற்றப்பட்ட ஆசிரியர் |

❖ இவர் மட்டக்களப்பின் வடக்கு எல்லைக் கிராமமான வாகரையிலுள்ள கதிரவெளி என்னும் இடத்தினை பிறப்பிடமாகவும், செங்கலடிக் கிராமத்தினை வசிப்பிட மாகவும் கொண்டவர்.

❖ தனது ஆரம்பக் கல்வியை வாழைச்சேனை இந்துக்கல்லூரியிலும், வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்திலும் கற்றார். உயர் கல்வியினை ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் வர்த்தகப் பிரிவில் வெளிவாரியாக கற்று பின்னர் இலங்கைப் பட்டயக் கணக்காளர் முதல் பரீட்சையில் சித்தி பெற்று சில காலம் வெளிநாட்டில் கணக்காளராக சேவையாற்றினார்.

❖ இவரது இலக்கியப் பணியை குறிப்பிடும் போது பல கவி அரங்குகளை வழிநடாத்திச் சென்று இருக்கிறார். அத்துடன் இசையும்,கதையும் எழுதி வெளியிடுபவர் ஆவார்.

❖ இவரது எழுத்துத் துறையானது 1970ம் ஆண்டில் இருந்து இன்று வரை கவிதை, கட்டுரைகளை சுதந்திரன் பத்திரிகை, சிந்தாமணி வாரவெளியீடு போன்றவற்றில் 10க்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதியிருக்கிறார்.

❖ இது ஒன்றும் புதிய கதை அல்ல, கொள்ளி வாய்ப்பிசாசுகள், ஒருவன் வாடகைக்கு வீடு தேடுதல், இலட்சியம் இல்லா இலட்சியங்கள், தேவன் பூமிக்கு வந்தான், உரிமை என்பன குறிப்பிடத்தக்கவை.

❖ தற்போது வெளிவருகின்ற வீரகேசரி வெளியீட்டில் 06 சிறுகதைகள் பிரசுரமாகி இருக்கின்றது.

❖ இவர் 1999ம் ஆண்டில் மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையில் முத்தமிழ் மன்றத் தலைவராகவும் "கலைச்செல்வி" சஞ்சிகை வெளியீட்டின் ஆசிரியராகவும் கடமையாற்றினார்.

❖ மட்/களுவன்கேணி விவேகானந்தா பாடசாலையில் வருடாவருடம் வெளியிடப்படுகின்ற ஏத்துக்கால் சஞ்சிகையின் முதல் இதழ் ஆசிரியரும் ஆவார்.

❖ இவர் மன்முனை வடக்கு கலாசாரப் பேரவையினால் வெளியிடப்படுகின்ற தேனகம் சிறுகதைகள் என்ற தொகுப்பில் இவரது சிறுகதைகள் இடம் பெற்று வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| **முழுப்பெயர்** | **: திரு. கிருஸ்னப்பிள்ளை துரைராசசிங்கம்** |
| **முகவரி** | **: உப்போடை வீதி, வந்தாறுமூலை** |
| **பிறந்த திகதி** | **: 1956.07.28** |
| **வயது** | **: 56** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | **: வந்தாறுமூலை கிழக்கு** |
| **துறை** | **: ஆக்க இலக்கியம்** |
| **தொழில்** | **: ஓய்வு பெற்ற ஆசிரியர் (சட்டத்தரணி)** |

- இவர் வந்தாறுமூலையைப் பிறப்பிடமாகவும், இல. 73 வாவிக்கரை வீதி - 01 மட்டக்களப்பினை வசிப்பிடமாகவும் கொண்டவர்.
- இவர் தனது ஆரம்பக் கல்வியை வந்தாறுமூலை விஸ்ணு மகா வித்தியால யத்திலும் அதன் பின்பு வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்திலும் கல்வி பயின்றார்.
- அதன் பிற்பாடு ஆசிரியர் நியமனம் பெற்று ஆசிரியராகக் கடமையாற்றினார். பின் 1992ம் ஆண்டு சட்டக்கல்லூரிக்குத் தெரிவு செய்யப்பட்டு சட்டத்தரணி பட்டமும் பெற்றார்.
- இவர் பாடசாலையில் படிக்கும் போது கலையில் ஆர்வம் மிக்கவராகத் திகழ்ந்தார். கட்டுரை எழுதுதல், கவிதை எழுதுதல், விவாதப் போட்டிகளில் பங்கு பற்றுதல் போன்ற இலக்கிய செயற்பாட்டில் தன்னை ஈடுபடுத்தி வந்தார்.
- அந்த வகையில் ஒரு நாடக ஆசிரியர், கவிதை எழுதும் ஆற்றல், சிறுகதை எழுதும் ஆற்றல், விவாதம், அரங்க மேடைப் பேச்சுகள், வில்லிசை, மெல்லிசை நூல்களை திறனாய்வு செய்யும் வல்லாளர் என தன்னை தடம் பதித்து கொண்டவர்.
- அதுமட்டுமன்றி, குறுங்காவியங்களைப் படைக்கும் வல்லமை மிக்கவர்.
- இவர் அண்ணாதாசன் என்ற புனை பெயரில் எழுதி வருகின்றார். அந்த வகையில் 1970களில் சுதந்திரன் பத்திரிகையில் எழுதத் தொடங்கினார். அதாவது "தியாகச் செம்மல்" என்ற கவிதை, அரசியல் சார்பான கவிதைகளையும் எழுதத் தொடங்கினார்.
- அதுமட்டுமன்றி சுடர் என்ற இதழில் இலக்கியம் சார்பான கவிதைகளை எழுதினார்.
- வயல்என்ற சஞ்சிகையில் வாசன் வட்டத்தினால் நடத்தப்பட்ட சஞ்சிகைக்கு கவிதைகள் எழுதியிருக்கின்றார். அதுமட்டுமன்றி, "அகதியின் வாழ்க்கை" என்ற சிறுகதையையும் எழுதியிருக்கிறார்.
- அடுத்து சுடர் என்ற பத்திரிகையில் காலம் சென்ற வந்தாறுமூலையைச் சேர்ந்த ஸ்ரீகோவிந்தசாமி ஊடகவியலாளர் அவர்களால் வெளிவந்த பத்திரிகையில் மூட்டைப்பூச்சி என்ற கவிதையை எழுதினார்.
- அடுத்து தினபதி, வீரகேசரி பத்திரிகையில் வருட நிகழ்வுகள் பற்றிய சிறப்பு கவிதைகளை எழுதி வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ அதுமட்டுமன்றி இருக்கிறம் என்ற சஞ்சிகையில் "முதியோரைப் பேணுதல்" சம்பந்தமான கவிதைகளை எழுதியிருக்கிறார்.

❖ அடுத்து செங்கதிர் பத்திரிகையில் "உண்மையான அன்பு" என்ற கவிதையை எழுதியிருக்கிறார்.

❖ இவர் பல குறுங்காவியங்களையும் எழுதியிருக்கிறார். அந்த வகையில் 1945ம் ஆண்டு "கண்டேன் தமிழ் தாயே" அடுத்து "கிராமத்து கீதங்கள்" போன்ற குறுங்காவியங்களை எழுதியிருக்கிறார்.

❖ அடுத்து இவர் பாடசாலையில் படிக்கும் போது பாடசாலை மாணவர்களை கலை ஆர்வம் மிக்க மாணவர்களாக பல இலக்கிய ஆக்கச் செயற்பாடுகளில் ஈடுபட வைத்தார். அந்த வகையில் கற்றன் தமிழ் வித்தியாலயத்தில் ஆசிரியராக கடமையாற்றும் போது நவராத்திரி விழாக்களுக்கு மாணவர்களுக்கு வில்லிசை பழக்கி மேடை ஏற்றினார்.

❖ அடுத்து ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலயத்தில் "குப்பி விளக்கு" என்ற சிறுகதை எழுதி மாவட்டமட்டத்தில் பரிசும் பெற்று இருக்கிறார்.

❖ அடுத்து களுவன்கேணி விவேகானந்த வித்தியாலயத்தில் மாணவர்களைக் கொண்டு "அல்லி அரசாணி" என்ற நாட்டுக்கூத்தினைப் பழக்கி மேடை ஏற்றினார்.

❖ அடுத்து ஆசிரியர் கலாசாலையில் வெளியிடப்படுகின்ற கலைச்செல்வி என்ற சஞ்சிகைக்கு "இலைக்கறி" என்ற சிறுகதை எழுதியிருக்கிறார்.

❖ அடுத்து 1969ம் ஆண்டு பாடசாலையில் படிக்கும் போது உதயசூரியன் என்ற பத்திரிகையைத் தொடங்கினார்.

❖ ஆசிரியர் கலாசாலையில் படிக்கும் போது சிவசக்தி இந்து மாமன்றத்தினால் கையெழுத்து சஞ்சிகையை வெளியிட்டார்.

❖ சட்டக்கல்லூரியில் படிக்கும் போது மாணவர் மன்றத்தினரால் வெளியிடப்படுகின்ற நீதி முரசு என்ற நூலின் துணை ஆசிரியராகச் செயற்பட்டார்.

❖ இந்து சமய அபிவிருத்திச் சங்கத்தின் அங்கத்தவராக இருந்து கொண்டு சிவபுராண மனனப் போட்டிகளில் ஈடுபட்டு பரிசு பெற்று இருக்கிறார்.

❖ சிவதொண்டன் நிலையத்தினால் நடத்தப்படுகின்ற மனனப் போட்டிகளில் பங்கு பற்றி இருக்கிறார். அதுமட்டுமன்றி இவ் நிறுவனத்தினால் வெளியிடப்படுகின்ற ஆண்டு இதழில் யோகசுவாமி பற்றிய கட்டுரைகளை எழுதியிருக்கிறார்.

❖ 1994ம் ஆண்டு அரசியல் வாழ்க்கையில் தன்னை ஈடுபடுத்தி இவர் 2000ம் ஆண்டு வரை பாராளுமன்ற உறுப்பினராக இருந்தார்.

❖ தற்போது 2000, 2012ம் வரையான காலப்பகுதியில் மாகாணசபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத் தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| **முழுப்பெயர்** | : | **திரு. குமாரசாமி சண்முகம்** |
| **முகவரி** | : | **நடுவில் தம்பி வீதி, வந்தாறுமூலை** |
| **பிறந்த திகதி** | : | **03.09.1956** |
| **வயது** | : | **56** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | : | **வந்தாறுமூலை** |
| **துறை** | : | **ஆக்க இலக்கியம்** |
| **தொழில்** | : | **ஆசிரியர்** |

இவர் களுவன்கேணியை பிறப்பிடமாகவும் வந்தாறுமூலையை வசிப்பிடமாகவும் கொண்டவர். இவர் ஆரம்ப கல்வியை மட்/மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலையில் கற்றார். அதன் பின் உயர் கல்வியை மட்/வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் க.பொ.த உயர்தரம் வரை கற்று சித்தியடைந்தார்.

கிழக்கு பல்கலைக் கழகத்தில் B.A பட்டத்தை பெற்ற இவர் இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தில் பட்டத்தின் பின் கல்வி டிப்ளோமா (P.G.D.E) பட்டத்தையும், இதே பல்கலைக் கழகத்தில் பட்டத்தின் பின் விசேட கல்வி டிப்ளோமா (P.G.D.Special Education) பட்டத்தையும் பெற்றார். கிழக்கு பல்கலைக் கழகத்தில் முதுகலைமாணி கற்கை நெறியை மேற்கொண்டு M.A பட்டத்தை தமிழ் துறையில் பெற்றுள்ளார். அத்துடன் IP Srilanka நிறுவனத்தில் உள சமூகவியல் டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுள்ளார்.

1979ம் ஆண்டு நீர்ப்பாசனத் திணைக்களத்தில் மேற்பார்வை உத்தியோகஸ்தராக பதவியேற்றுக்கொண்டார். 1981ம் ஆண்டு தொடக்கம் இலங்கை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையில் வேலைத் தளப் பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய இவர் 1987ம் ஆண்டு நடைபெற்ற ஆசிரிய நியமனப் போட்டிப் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்து 1988ம் ஆண்டு ஆசிரியராக கடமையேற்று மட்/களுவன்கேணி விவேகானந்தா வித்தியாலயத்தில் கடமையாற்றி, 1996ம் ஆண்டு மட்/சிங்காரத்தோப்பு சரஸ்வதி வித்தியாலயத்தை இவரது அயராத முயற்சியினால் தாபித்து அந்தப் பாடசாலையில் அதிபராக 2008ம் ஆண்டு வரை கடமையாற்றி, தற்போது மட்/சித்தாண்டி அலைமகள் வித்தியாலயத்தில் அதிபராகவும் கடமையாற்றிக் கொண்டிருக்கிறார்.

இவர் தனது பத்தாவது வயதில் கிழக்கிலங்கை தமிழ் தாய் மன்றம் நடாத்திய பேச்சுப் போட்டியில் 1969ம் ஆண்டு பங்குபற்றி முதலாவது இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தை பெற்றுள்ளார்.

இவற்றை விட பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டி, கட்டுரைப் போட்டிகளில் பங்கு பற்றி உள் நாட்டிலும், வெளி நாட்டிலும் பரிசுகளை பெற்றுள்ளார். இவர் நூற்றுக் கணக்கான இலக்கிய மற்றும் பல்துறை கட்டுரைகளையும் கவிதைகளையும், சிறுகதைகளையும் எழுதியுள்ளார். இவரது ஆக்கங்கள் தினகரன், வீரகேசரி, தினக்குரல் முதலிய உள்ளூர் பத்திரிகைகளிலும் கூர்மதி, மருதநிலா, கவிந்தமிழ், முதலிய உள் நாட்டு சஞ்சிகைகளிலும் தினமணி, தமிழ்முரசு, காற்றுவழி முதலிய வெளிநாட்டு சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் சிறந்த நாடக எழுத்தாளராகவும், நாடக நடிகராகவும் உள்ளார் இவர் புதுயுகம் (1976), சின்னமாமி (1976), வாழநினைத்தால் (1977), ஸ்ரீராமன் (1977), இதுவும் அப்படித்தான் (1978), புதுமாப்பிள்ளை (1979) முதலிய நாடகங்களை எழுதி நெறிப்படுத்தியுள்ளதோடு முக்கிய கதாபாத்திரங்களிலும் நடித்துள்ளார். நவீன நாட்டுக் கூத்துக்களையும் எழுதி நெறிப்படுத்தியுள்ள இவருக்கு பெருமை தேடிக் கொடுத்தது மூட நம்பிக்கையை தகர்த்தெறியும் நோக்கோடு நெறிப்படுத்தப்பட்ட போடிக்கு ஒரே மகள் என்ற நாட்டுக் கூத்தாகும். கிழக்கு பல்கலைகழக அரங்கு உட்பட 9 தடவை மேடையேற்றப்பட்டதுடன், பரிசும் பாராட்டும் பெற்றது. இதை விட மட்/களுவன்கேணி விவேகானந்தா வித்தியாலய மாணவர்களைக் கொண்டு நெறிப்படுத்தப்பட்ட ஆரவல்லி என்ற நாட்டுக் கூத்து (1991) மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்றது. இவற்றை விட சுபத்திரை கலியாணம், குகனும் பரதனும், ஸ்ரீவள்ளி முதலிய புராண கூத்துக்களையும் வீரத் திருமகன், வேலாயுதம், புதுமைப் பெண் முதலிய நவீன நாட்டுக் கூத்துக்களையும் எழுதியுள்ளார்.

களுவன்கேணியைச் சேர்ந்த கொம்பர் சுப்பிரமணியத்திடம் மட்டக்களப்பு மாந்திரிகத்தினையும், சோதிடத்தையும், ஆயுள்வேத விச வைத்தியத்தையும் கற்றுக் கொண்ட இவர் இன்று இவற்றை கைக்கொண்டு வருகின்றதோடு பிரபல்யமான மாந்திரிக பூசகராகவும் விளங்குகின்றார். களுவன்கேணியை சேர்ந்த கணபதி காத்தமுத்துவிடம் வேடுவ மந்திர கலையை கற்று அதிலும் தேர்ச்சி பெற்று வருகிறார். இவரது மகப்பேற்று மருத்துவத்தினால் நூற்றுக் கணக்கானோர் பயன் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை, ஏறாவூர்ப்பற்று பிரதேச கலாசாரப் பேரவை முதலிய சமூக நிறுவனங்களில் அங்கத்தவராக உள்ள இவர் மட்டக்களப்பு மாவட்ட சமாதான நீதவானாகவும் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இவரது ஆக்கங்கள் ஜனா, பராசக்தி, நெய்தல் நம்பி, ஆழி முத்து ஆகிய புனை பெயர்களிலும் வெளிவந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| முழுப்பெயர் | : திருமதி. பரமேஸ்வரி இளங்கோ |
| முகவரி | : 167, இராசநாயகம் வீதி, எல்லைநகர் ஏறாவூர் |
| பிறந்த திகதி | : 1957.08.07 |
| வயது | : 55 |
| கிராமசேவையாளர் பிரிவு | : எல்லைநகர் |
| துறை | : ஆக்க இலக்கியம், இசையும் கதையும் |
| தொழில் | : பிரதிக் கல்விப் பணிப்பாளர் (முகாமைத்துவம்) SLES III |

- இவர் ஏறாவூர் எல்லை நகரினைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர்.தனது ஆரம்பக் கல்வியை ஏறாவூர் விபுலானந்தா வித்தியாலயத்திலும், பின்னர் ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலயத்திலும் கற்று பின்பு க.பொ.த. சா.தரத்திற்கு மட்/ வின்சன்ட் மகளிர் தேசிய பாடசாலையில் கல்வி கற்றார்.

- இவர் ஆக்க இலக்கியம், இசையும் கதையும் போன்ற துறைகளில் பிரபல்யம் பெற்று விளங்குறார்.

- 16 வயதில் இருந்து ஆக்கஇலக்கிய முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார்.

- பாடசாலை வாழ்க்கையில் இடம் பெறுகின்ற கவிதை கட்டுரை போட்டிகளில் தோற்றி பல சான்றிதழ்களையும் பெற்று இருக்கிறார். தமிழ் ஆசிரியா சங்கத்தால் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் தோற்றி தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்றிருக்கிறார்.

- இவர் தற்போது தினபதி, சிந்தாமணி போன்ற பத்திரிகைகளில் "பரமாசண்முகம்' எனும் புனைபெயரில் சிறுகதைகளை எழுதி வருகிறார். மாவட்ட கலாசார பேரவையினால் ஏற்பாடு செய்து நடாத்தப்பட்ட "காலம் கற்றுத்தந்த பாடம்" எனும் சிறுகதை முதலாம் பரிசை தட்டிக் கொண்டது.

- "கோபுரதீபம்" என்ற சிறுகதையும் எழுதி உள்ளார். இவரது சிறுகதை ஒன்று மட்டக்களப்பில் பிரசித்தி பெற்ற "சித்தாண்டி ஸ்ரீசித்திரவேலாயுத சுவாமி ஆலய மயில்கட்டு திருவிழா" என்ற சிறுகதை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தேசிய சேவையில் ஒலிபரப்பாகின.

- அதன் பின்பு 2000ம் ஆண்டின் பின் மதுபாரதி என்ற புனைபெயரில் பல சிறுகதைகளை எழுதியுள்ளார்.ஆசிரியர் எனக்குப் பிடிக்காது, ஆசான், கடைப்பார்வை, அந்தியில் ஒருவிடியல் போன்ற சிறுகதைகளை வீரகேசரி பத்திரிகைகளில் எழுதி வந்துள்ளார்.

- இவர் கவிதைத் துறையிலும் பிரசித்தி பெற்று விளங்குகிறார். அந்த வகையில் ஏறாவூர்ப் பற்று பிரதேச கலாசாரப் பேரவையால் நடாத்தப்பட்ட கவிதைப்போட்டியில் தேசிய ஒருமைப்பாடு சம்பந்தமான கருப்பொருளைக் கொண்ட கவிதைப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இவர் எழுதிய ஏனைய கவிதைகளாக "சுதந்திரம் என்ன, ஏட்டு சுரைக்காயோ" "ஏன் இப்படி இவர்கள்" என்ற கவிதைகள் அமைகின்றன. மட்டக்களப்பில் நடைபெற்ற கண்காட்சி ஒன்றில் முதன்முறையாக இவரால் எழுதப்பட்ட கவிதை "வேலையற்றோர் பிரச்சினை" என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

- அடுத்ததாக இவர் இசையும் கதையும் எழுதுவதில் ஆர்வம் மிக்கவராக காணப்பட்டார். இவர் பாடசாலை வாழ்வில் இருக்கும் போது இசையும் கதையும் எழுதத் தொடங்கினார்.

- 1975ம் ஆண்டு இவர் எழுதிய இசையும் கதையுமான "ஓரு புயல் ஓய்கிறது."இது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக சேவையில் ஒலிபரப்பானது. இதுவரையில் 13 வகையான இசையும் கதையும் எழுதியுள்ளார். அதில் "ஒன்றும் புரியவில்லையே" இசையும் கதையும் B.M.H அப்துல் கமீட் அவர்களால் வாசிக்கப்பட்டது "திருப்பம்" என்ற இசையும் கதையும் இவரால் எழுதப்பட்டு ஒலிபரப்பானதொன்றாகும்.

- அதுமட்டுமன்றி மட்டக்களப்பின் முஸ்லிம் கொட்டல் ஒன்று பற்றி இசையும் கதையும் நிகழ்ச்சியில் குறிப்பிட்டுள்ளார்.

- இதுமட்டுமன்றி இவர் சிறந்த பாடல்களைப் பாடும் இசைப்பிரியரும் ஆவார். அந்த வகையில் "ஈழத்துப்பாடல்கள்" என்ற தலைப்பில் இரண்டு பாடல்களை வானொலியில் "பூவும் பொட்டும்", "மங்கையர் மஞ்சரி" என்ற நிகழ்வில் பாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | அமரர். தங்கராசா கந்தசாமி (கலியுகம்) |
| முகவரி | : | வீ.சி வீதி, வந்தாறுமூலை |
| பிறந்த திகதி | : | 06.08.1936 |
| இறந்த திகதி | : | 23.11.1989 |
| வயது | : | 53 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | வந்தாறுமூலை கிழக்கு |
| துறை | : | ஆக்க இலக்கியம் |
| தொழில் | : | புகையிரத நிலைய ஊழியர் |

- இவர் வந்தாறுமூலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர்.
- இவர் கூடுதலாக கவிதை துறையில் ஈடுபாடு கொண்டவர்.
- அந்த வகையில் அண்ணா காட்டிய ஒற்றைவிரல், இன்னல் மறந்திடும் நாள், திருக்குறள், புரட்சி ஏடு 1967ம் ஆண்டு மித்திரனில் ஏழு கவிதை வெளிவந்தது.
- பூஞ்சிமிட்டாய்" தேடிவந்தேன், சங்கமம் என்ற பத்திரிகையில் "புதியதோர்புரட்சி செய்வோம் என்ற கவிதை வெளிவந்து இருக்கின்றது.
- 1970களில் ஒளியில் ஒருவன் வீரகேசரியில் வெளிவந்து இருக்கின்றது.
- 1969ம் ஆண்டு மித்திரனில் "போன இடம் செல்லாதே", அதுமட்டுமன்றி குரல் என்னும் பத்திரிகையிலும் எழுதி வந்து இருக்கின்றார்.
- திருக்குறளின் புரட்சி ஏடு என்ற கவிதையையும், ஞானதீபம் என்ற நூலில் "எங்களுக்கு உண்டு நாடு" என்ற கவிதையையும் எழுதி வந்து இருக்கின்றார்.
- 1984ம் ஆண்டு வீரகேசரியில் பொங்கல் மலர் என்ற கவிதையும் அடுத்து சிறந்த ஓரங்க நாடகங்களையும் நடித்து இருக்கின்றார்.
- அதுமட்டுமன்றி கிளிநொச்சி இலக்கிய வட்டத்தில் 1975களில் தலைவராகவும் இருந்து செயல்பட்டு வந்து இருக்கின்றார்.
- அன்னார் தற்போது அமரத்துவமடைந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| முழுப்பெயர் | : திருமதி சந்திரகௌரி சிவபாலன் |
| முகவரி | : புகையிரத நிலைய வீதி, ஏறாவூர்-04 |
| பிறந்த திகதி | : 1960.08.07 |
| வயது | : 52 |
| கிராமசேவையாளர் பிரிவு | : ஏறாவூர்-04 |
| துறை | : ஆக்க இலக்கியம் |
| தொழில் | : ஆசிரியர் |

இவர் ஏறாவூரை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர் இவர் தனது ஆரம்ப கல்வியை ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலயத்திலும் தனது உயர் தர கல்வியை வின்சன்ட் மகளீர் உயர் தர பாடசாலையிலும் கற்றார். பின்பு பேராதனை பல்கலைகழகத்தில் தமிழ் சிறப்பு கலைமாணி பட்டம் பெற்றார். அதன் பின்பு கல்வியல் டிப்ளோமா பட்டத்தையும் பெற்றார். இவர் சிறுகதை, கவிதை, ஆன்மீக சிந்தனை பாடல்கள் என்பவற்றை எழுதி வருகின்றார். இவர் ஜேர்மனியில் இருந்து கொண்டு இலக்கிய பணியை செய்து வருகின்றார். இலங்கையில் வாழ்ந்த காலத்தில் தொழில் ரீதியாக பணியாற்றிய போது பல தரமான ஆக்கங்களை இலங்கை தேசிய பத்திரிகைகளில் எழுதி வந்தார். "கௌசி" என்னும் புனை பெயரில் புலம்பெயர் நாடுகளில் இருந்து எழுதி வருகின்றார். இவருடைய கவிதைகளுள் பொறிக் கவிதைகள் குறிப்பிடத்தக்கது. இவரது கவிதைகள் ஜேர்மனியில் வெளிவரும் மண் சஞ்சிகையில் வெளிவருகின்றது. அதே போல் இலண்டன் தமிழ் வானொலியில் இலக்கியங்களை படைத்து வருகின்றார். இதுவரையில் தான் எழுத்து துறையில் பிரகாசிப்பதற்கு ஈடுபடக் காரணமாக இருந்தவர் வித்துவான் எவ்.எக்ஸ். நடராஜா ஆவார். இவர் எழுதிய கவிதைகளாக நல்லொழுக்கம், நல்லறிவு, அறம், அழகு, நல்லுணர்வு, தண்டனை, வரலாறு போன்ற கவிதைகளை எழுதி வருகின்றார்.

அதுமட்டுமன்றி இவரது இலக்கண, இலக்கியப் புலமைகளையும் பின்வரும் கட்டுரை வாயிலாக வெளிக் காட்டுகின்றார். "கருவிழி மறைக்க இமையொன்று திரையிட நாளொன்று திரைப்படம் முடிகிறது" என்ற இலக்கிய கட்டுரை வாயிலாக இலக்கியப் புலமையினையும் வெளிக் காட்டிநிற்கின்றார் எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | அமரர். இரத்தினசிங்கம் இரட்ணகுமார் |
| வேறு பெயர் | : | மல்லிகை வண்ணன் |
| முகவரி | : | இல – 2, நகரசபை விடுதி, எல்லை வீதி, செங்கலடி |
| பிறந்த திகதி | : | 04.06.1959 |
| இறந்த திகதி | : | 01.07.2010 |
| வயது | : | 51 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | எல்லை நகர் |
| துறை | : | இலக்கியம் |
| தொழில் | : | கிராம சேவை உத்தியோகஸ்தர் |

இவர் எல்லை நகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர், இவர் தனது ஆரம்பக் கல்வியை விபுலை தமிழ் மகா வித்தியாலயத்திலும் அதன் பின்பு உயர்தரக் கல்வியை வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்திலும் கற்றார்.

1977 ஏப்ரல் - 1978 ஏப்ரல் வரை மட்/வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தினால் வெளியிடப்பட்ட "உதயம்" மாதாந்த பத்திரிகையின் ஆசிரியராக பணிபுரிந்துள்ளார். 1978 ஜூன் - 1978 நவம்பர் வரை மட்டக்களப்பு பொது நூலகத்தின் ஆதரவுடன் வெளியிடப்பட்ட "மல்லிகை இதயம்" மாதாந்த சஞ்சிகையின் ஆசிரியராக பணிபுரிந்துள்ளார். "லக்கி ரியூசன் சென்ரர்" மூலம் மாதம் தோறும் வெளியிடப்பட்ட "துடைப்பம்" எனும் பத்திரிகையின் ஆசிரியராக 1983 முதல் 1985 வரை தொழிற்பட்டார். தனது கடமைக் காலத்தில் கடமைப் பிரிவில் கிராமோதய சபையினையும் பின்னர் கிராம அபிவிருத்தி சங்கத்தினையும் அமைத்து அவர்களுக்கு தேவையான வழிகாட்டல்களை மேற்கொண்டமை இவரது இலக்கிய, சமுதாய பணிகளாகும். இவர் தற்போது அமரத்துவம் அடைந்துவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| முழுப்பெயர் | : திரு. இரத்தினசிங்கம் பெஸ்லியோ வாஸ் |
| முகவரி | : மருத்துவர் வீதி, ஏறாவூர் – 04 |
| பிறந்த திகதி | : 1961.03.22 |
| வயது | : 51 |
| கிராமசேவையாளர் பிரிவு | : ஏறாவூர் – 04 |
| துறை | : ஆக்க இலக்கியம் |
| தொழில் | : பிரதி அதிபர் |

- ஏறாவூர் - 4ஐப் பிறப்பிடமாகவும், தற்போது 62/100 சுப்பிரமணியம் வீதி, கருவேப்பன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தனது ஆரம்பக் கல்வியை ஏறாவூர் G.T.M.S இலும் அதன் பிற்பாடு வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்திலும் பயின்றார்.

- 1983ம் ஆண்டு ஆசிரியர் பதவி கிடைத்து தற்போது மட்/மெதடிஸ்த மத்திய கல்லூாயில் பிரதி அதிபராக கடமையாற்றிக் கொண்டு இருக்கிறார்.

- இவர் ஒரு கணித ஆசிரியர் ஆவார்.

- இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணி பட்டம் பெற்றதுடன் கொழும்பு பல்கலைக்கழகத்தில் நூலகத்துறையில் ஆங்கில மொழி மூலம் முதுமாணி பட்டத்தினையும் பெற்றார்.

- அத்துடன் இவர் கிழக்கு பல்கலைக்கழகத்தில் கல்வியல் முதுமாணிப் பட்டத்தினையும் பெற்று இருக்கின்றார்.

- இவர் தொண்டன் என்ற சஞ்சிகையின் துணை ஆசிரியராக இருந்து வருகின்றார். இச் சஞ்சிகையின் முக்கிய பகுதிகளான போட்டி நிகழ்ச்சிப் பகுதி, இலக்கிய மஞ்சரிப் பகுதி, கடுகுக்கதை போன்ற துறைகளுக்கு பொறுப்பாக இருந்து வருகின்றார்.

- அத்துடன் தொண்டன் பத்திரிகையில் "கல்லறை ஆண்டவன் என்ற" சிறுகதை எழுதியிருக்கிறார். அத்துடன் புதிய உலகம் சஞ்சிகை சிறுகதைப் போட்டிகளில் "சுவரைத் தேடும் சித்திரம்" என்ற சிறுகதை தேசிய விருதினைப் பெற்றது.

- இலங்கை வானொலியில் கத்தோலிக்க நற்சிந்தனை, மற்றும் சிற்றுரைகள் போன்றவற்றினையும் செய்து வருகின்றார்.

- இவர் தேன்மலர் கை எழுத்துச் சஞ்சிகைப் பிரதியையும் செய்து வருகின்றார்.

- அதுமட்டுமன்றி இலங்கை நூலகச் சங்கத்தில் அங்கத்தவராகவும் திகழ்கின்றார்.

- ஆழியோன் என்ற புனைபெயரில் எழுதிவருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திரு. இரத்தினகோபால் சந்திரகாந்தன் Y.E.S காந்தன் |
| முகவரி | : | ஸ்ரீ பத்திரகாளியம்மன் தேவஸ்தானம், ஏறாவூர் |
| பிறந்த திகதி | : | 1962.04.04 |
| வயது | : | 50 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | ஏறாவூர் – 04 |
| துறை | : | ஆக்க இலக்கியம் |
| தொழில் | : | இந்து சமய குரு |

- ❖ ஏறாவூர் - 04ஐ பிறப்பிடமாகவும் ஸ்ரீ காளிபுரம் பெரிய போரதீவினை வசிப்பிடமாகவும் கொண்டவர். இவர் தனது ஆரம்பக் கல்வியினை ஏறாவூர் மெதடிஸ்த மிஷனிலும் ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலயத்திலும் கற்றார்.
- ❖ இவரது கல்வித் தகைமை தரம் 04 என்றாலும் தேடலின் மூலமாக தனது கல்வியறிவினை மென்மேலும் வளரச் செய்தார்.
- ❖ தனது தேடலின் மூலம் பல் துறை ஆற்றல் பெற்ற இவர் இந்து சமய கருத்துக்களை மட்டுமன்றி இஸ்லாம், பௌத்தம், கிறிஸ்தவ சமயங்கள் தொடர்பான ஆழமான அறிவினையும் கொண்டவர்.
- ❖ பேச்சுத் திறன் வாய்ந்த இவர் தமது தேடலின் சிந்தனைகளை பலருக்கும் நல்ல விதமாக அமையும் வண்ணம் பல சிறந்த நூல்களை இயற்றியுள்ளார்.
- ❖ அனைத்துக்கும் மூலமாக அன்னாருக்கு ஏறாவூர் பத்திரகாளியம்மாள் துணை இருப்பதாக கூறியுள்ளார்.

இவரது நூல்கள்

- ❖ ஏறாவூர் விநாயகர் வரலாற்று அகவல் - இது அன்னாரின் கன்னி நூல் ஆகும். இது 1980.09.25ல் வெளியிடப்பட்டது.
- ❖ பெரிய போரதீவு ஸ்ரீ பத்திரகாளியம்மன் வரலாற்றுப் பதிகமும் கும்மியும்
- ❖ ஏரூர் அன்னை மாகாளியின் மகிமையின் ஒரு துளி
- ❖ ஏறாவூர் வரசித்தி விநாயகர் ஆலய வரலாறும் திருப்பொன்னூஞ்சலும் பதிகமும்
- ❖ நவநாயகியும் நவராத்திரியும்
- ❖ கந்த விரதமும் ஷஷ்டியின் மகிமையும்
- ❖ ஏன் இந்த மனமாற்றமும் ஏன் இந்த மத மாற்றமும்
- ❖ ஆலயமும் அந்தணர்களும்
- ❖ இராமகிருஸ்ண பரமகம்சர் பிள்ளைத் தமிழ் - இது இராமகிருஸ்ண பரமகம்சருக்கு பாடப்பட்ட முதலாவது பிள்ளைத் தமிழ் நூல் ஆகும். மயிலாப்பூர் இராமகிருஸ்ண மிஷன் இதனை வெளியிட்டது.
- ❖ முனைத்தீவு மாணிக்கப்பிள்ளையார் திருப்பொன்னூஞ்சலும் பதிகமும்.
- ❖ கொழும்பு இரண்டாம் நவகம்புர ஸ்ரீ பத்திரகாளியம்மன் திருப்பொன்னூஞ்சல்.
- ❖ கண்மணி தாசன் கவிதைத் தொகுப்புக்கள் - ஜேர்மனியில் வெளியிடப்பட்ட 32 கவிதைகளை உள்ளடக்கிய நூல்
- ❖ போரூர் பத்திரகாளி கவசம்
- ❖ ஏரூர் பத்திரகாளி கவசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆலய வழிபாடும் ஆத்மீக வெளிப்பாடும் - 2002ல் மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தால் வெளியிடப்பட்ட இந்து இல்லம் எனும் நூலில் வெளியிடப்பட்டது.
- அழகிய மலையில் - மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் கவிதைப்பாமாலை
- திருமண தமிழ் விருந்து - இது 2010ல் எழுதப்பட்ட நூல் இந்நூலில் மனித வாழ்க்கையில் திருமணங்கள், தமிழர் திருமணங்கள், திருமண கிரியைகள், பிற சமய திருமணங்கள் பற்றிய பல விடயங்களை உள்ளடக்கிய நூல் ஆகும்.
- மட்டக்களப்பு தமிழகத்தில் மந்திர வழக்கும் மரபுவழி சடங்கும் - இந்நூலில் மந்திரங்கள் பற்றிய விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.
- மட்டக்களப்பு தமிழகத்தில் பண்பாட்டியல் ஒரு ஆத்ம தரிசனம் - வட்டியும், தயிரும், சோறும், சமூகம் சார்ந்த விடயங்கள், உளம் சார்ந்த நெருக்கம் போன்ற சமூக பண்பாட்டு விடயங்கள் உள்ளடங்குகின்றது.
- விஸ்வகுல கம்மியரின் குடிமரபும் குல விருதும் - சமூகம் சார்ந்த நூல்
- விஸ்வகுல கம்மியரின் வரலாற்றுப் பெருமையும் சிறப்பும்
- யார் இந்த கண்ணாளன்
- என் இதயம் கண்ட பெருமானார் - இந்நூல் முகம்மது நபி அவர்கள் பற்றிய ஓர் இதயக் கண்ணோட்டம்
- போரூர் பத்திரகாளியம்மன் கும்மிப் பாட்டும் பதிகமும், இறுவெட்டும் வெளியீடானது முக்கியமான ஒன்றாகும். ஏனெனில் 1998 காலப்பகுதியில் வெளியிடப்பட்ட இவ் இறுவெட்டு இக் காலப்பகுதியில் தென்னிந்தியாவில் இருந்து வெளியான பக்திப் பாடல்களுக்கு இணையாக இங்கு வெளியிடப்பட்டது. இவ் இறுவெட்டு தென்னிந்தியப் பக்திப் பாடல்களுடன் ஒப்பிடும் போது அதற்கு இணையாக இங்குள்ள ஆலயங்களில் வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது. இந்த வகையில் ஏரூர் பத்திரகாளியம்மன் கும்மிப் பாட்டும் பதிகமும் இறுவெட்டும் அமைகிறது.

அச்சுப் பெறாத நூல்கள்

- ஏறாவூர் மான்மியம் பெருந்தொகை – 2002
- வீரத்துறவி சுவாமி விவேகானந்தரின் வரலாற்றுக் காவியம்
- வீரத்துறவியின் வீர முழக்கம்- சிக்காக்கோ பிரசங்கம்
- ஏழைகளின் இதயத்தாய் - அன்னை திரேசா பற்றிய கண்ணோட்டம்
- புனித அன்னை – சாரதாதேவியின் வரலாறும் சமயப் பணியும்
- பயனுறு கல்வி
- இந்து சமயத்தின் முரண்பாடுகளும் முன்னேற்பாடுகளும்
- மதம் கடந்த சமயம்
- விரதங்களும் அதன் உண்மை விளக்கங்களும்
- தாய் நிகர் தமிழே தமிழ் வரலாற்று காப்பியம்

இவரது இந்து சமயத்தை வந்தனை செய்வோம் வாரீர் எனும் துண்டுப் பிரசுரம் குறிப்பிடத்தக்கது.

பெற்ற விருதுகளும் பட்டங்களும்

- சைவ சித்தாந்த வித்தகர் – 1983ல் யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை தொல்புரம் வளக்கம்புரம் அம்மன் ஆலயத்தில் வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- செந்தமிழ் பாருதி – 1983ல் சுழிபுரம் பத்திரகாளியம்மன் ஆலயத்தினரால் வழங்கப்பட்ட பட்டம் ஆகும்.
- செஞ்சோல் கொண்டர் - 1983ல் பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தினரால் கொடுக்கப்பட்டது.
- பல்கலைப் புலவர் - மட்டக்களப்பு கலாசார பேரவையினால் வழங்கப்பட்டது.
- ஆச்சாரிய தீபம் - ஓந்தாச்சிமடம் இந்து இளைஞர் மன்றத்தினால் வழங்கப்பட்டது.
- சைவசமய கலாசோதி – 1992ல் ஆன்மிகம் அழைக்கின்ற சேவாதள பணியகம் - கொழும்பு வழங்கப்பட்டது.
- கிரியா கலாநிதி – பெரிய கல்லாறு ரவிப்பிரியா மடத்தடி கும்பாபிசேக நிகழ்வின்போது கொடுக்கப்பட்ட பட்டம்.
- சைவ சித்தாந்த சாகரம் - 2010ல் ஏறாவூர் ஸ்ரீ கணேசகாளிகா பரிபாலன சபையினரால் வழங்கப்பட்டது.
- பண்டித ஆச்சாரியார் – 2003ல் பௌத்த வித்தியாலங்கார பீடத்தினால் வழங்கப்பட்டது.
- அகில இலங்கை இந்து தர்மோதய ஸ்தாபகர் - இதனை 1990ல் நிறுவியுள்ளார். அத்தோடு இதன் தலைவராகவும் உள்ளார்.
- ஆன்மிகம் அழைக்கின்ற சேவாதளப் பணியகப் பணிப்பாளர்.
- ஏறாவூர் ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய பிரதம குரு
- பெரிய போரதீவு ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய பிரதம குரு
- பெரிய போரதீவு ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய பிரதம குரு. இதனுடன் சேர்ந்து 16 ஆலயங்களில் பிரதம குருவாகவும் இருக்கிறார்.

- சிவ சமய வாழ்வகம் - சைவ சமய வழிகாட்டல் ஸ்தாபனம்

- பிரம்மாதின குருகுலம் ஸ்தாபனம் - குருமார் பயிற்சி கல்வி நிலையம் ஆகும். இங்கு வைத்தியம், சோதிடம், மாந்திரிகம், குருத்துவம் முதலான துறைகளுக்கான பயிற்சி வழங்கப்படுகின்றது.
- விஸ்வ கர்ம ஆதீன ஸ்தாபகர்
- விஸ்வ கம்மிய மகாசபை ஸ்தாபகர்

இது மட்டுமல்லாது இவர் சோதிடம், சித்த ஆயுள் வேதம், விச வைத்தியம், பூத வைத்தியம், குருத்துவம் போன்ற துறைகளில் சிறப்பானவராக விளங்குகின்றார். பல ஆலய கும்பாபிசேகங்களை நிகழ்த்தியுள்ளார். தேடலின் மூலமான பல் துறை ஆற்றல் பெற்றுள்ளார். இவரது அனைத்து திறமைக்கும் சாதனைகளுக்கும் மூலமாக ஏறாவூர் பத்திரகாளி அம்மன் விளங்குவதாக குறிப்பிடுவது சிறப்பானதோர் விடயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| **முழுப்பெயர்** | : **திரு. அருளானந்தம் ரவிசங்கர்** |
| **முகவரி** | : **ஆறுமுகத்தான் குடியிருப்பு** |
| **பிறந்த திகதி** | : **1968.04.27** |
| **வயது** | : **44** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | : **ஆறுமுகத்தான் குடியிருப்பு** |
| **துறை** | : **ஆக்க இலக்கியம்** |
| **தொழில்** | : **ஆசிரியர்** |

- ❖ இவர் பங்குடாவெளியைப் பிறப்பிடமாகவும், ஆறுமுகத்தான் குடியிருப்பை வசிப்பிடமாகவும் கொண்டவர். இவர் தனது ஆரம்பக் கல்வியை ஆறுமுகத்தான் குடியிருப்பு அ.த.க பாடசாலையிலும், அதன் பிற்பாடு 1978ம் ஆண்டு தரம் 04 தொடக்கம் மட்/மெதடிஸ்த மத்திய கல்லூரியிலும் பயின்றார்.
- ❖ இவர் பாடசாலையில் படிக்கும் போது அதாவது க.பொ.த சாதாரண தரம் படிக்கும் காலத்தில் சுயமாகவே சிறு சிறு கவிதைகளை எழுதத் தொடங்கினார். அவரது முதல் கவிதை காதல் கவிதையாகும். அக் கவிதையின் ஒரு சில வரிகள்

  "என் தேவிக்கு
  பாதங்கள் நோகுமென
  பாதைக்கே
  பூத்தூவ எண்ணுகின்றேன்"

- ❖ இதன் பிற்பாடு 1987ம் ஆண்டு பிற்பகுதியில் அவர் மீண்டும் எழுதுவதற்கு ஒரு ஊன்று கோலாகத் திகழ்ந்தவர் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர் பசீர் சேகுதாவூர். இவர் ஒரு ஆசிரியராக இருந்த போதும் பாடம் கற்பிக்கும் போது தான் இவரை இன்னும் எழுதத் தூண்டியது.
- ❖ தனது உயர் தரக் கல்வியை செங்கலடி மத்திய கல்லூரியில் கற்றார். அப்போது அவர் நிறைய கவிதைகளை எழுதி வாசிப்பார்.
- ❖ பாடசாலை மட்ட கவிதைப் போட்டிகளில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார். அந்த வகையில் கோட்டமட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற கவிதைகளில் பின்வருவனவற்றினைக் குறிப்பிடலாம். அந்த வகையில் "பொழுது புலர்கிறது", "தனிமனிதனுக்கு உணவு இல்லையே", "இலக்கியத்தில் காதல்" என்பவற்றை குறிப்பிடலாம்.
- ❖ அடுத்து கவிதை மட்டுமன்றி, சிறந்த சிறு கதைகளையும் எழுவதில் வல்லவராகக் காணப்பட்டார். அந்த வகையில் அவர் எழுதிய சிறுகதையாக "பழம் நழுவிப் பாலில்" என்பது விளங்குகின்றது.
- ❖ அதுமட்டுமன்றி, 1990ம் ஆண்டுக் கலவரம், இடம்பெயர்வு என்பன அவரை ஒரு சமூக நோக்கு கவிதைகளை எழுதத் தூண்டியது. அந்த வகையில் அவர் எழுதிய கவிதை "சமாதானம்" பற்றிய கவிதையாகும்.
- ❖ 1991ம் ஆண்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இளையதம்பி தயானந்தா அவர்களால் நடத்தப்பட்ட "நாளைய சந்ததி" என்ற நிகழ்ச்சியில் நாடகமே உலகம் எனும் தலைப்பில் மரபுக் கவிதை ஒலிபரப்பப்பட்டது.
- ❖ இவர் தன்னை பத்திரிகைத் துறைகளில் அர்ப்பணித்தார். அந்த வகையில் 1992ம் ஆண்டு மித்திரன் என்ற பத்திரிகையில் "எப்படி" என்ற புதுக்கவிதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதினார். அதுமட்டுமன்றி, சஞ்சிகைகளுக்கும் கவிதைகளை எழுதத் தொடங்கினார். அந்த வகையில் கிழக்கொளிக்கு "நானும் ஒருவன்" "கண்ணீருக்காக கண்ணீரை" என்பவற்றை எழுதினார்.

❖ இவர் எழுதுகின்ற கவிதைகளுக்கு மென்மேலும் அறிவுரையும், ஆலோசனையும் ஆக்கமும் ஊக்கமும் அளித்தவர்களுள் இவரது நண்பரான நீர்பாசன இலாகாவில் கடமையாற்றிய சிவமூர்த்தியும் ஒருவர். இவரும் சிறந்த கவிஞர் என்பது குறிப்பிடத்தக்கது.

❖ 1996ம் ஆண்டு காலப்பகுதியில் மன்று நிறுவனத்தில் மாதாந்தம் வெளிவரும் சஞ்சிகையான "சூழல் சுடர்" சஞ்சிகையில் பல கவிதைகளையும் சூழல் விழிப்புணர்வுக்கட்டுரைகளையும் எழுதினார். அதுமட்டுமன்றி, அக் காலத்தில் வெளிவந்த விடிவானம் என்ற பத்திரிகையிலும் பல கவிதைகளை எழுதினார்.

❖ 1996ம் ஆண்டு ஆசிரியர் தொழில் கிடைக்கப் பெற்றது. இப்போது பங்குடாவெளி G.T.M.S பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை மட்ட போட்டிகளுக்கு நாடகம், கவிதை, கதை, பாடல்கள் என்பனவற்றினைப் பழக்கி அதில் மாணவர்களை வெற்றி பெறச் செய்தார்.

❖ 1987களில் கிழக்குப் பல்கலைக்கழகத்திலிருந்து வெளிவரும் சஞ்சிகைக்கு "காற்று வாங்கப் போனேன்" என்ற சிறுகதை எழுதினார். இச் சிறுகதையானது திறன் ஆய்வு செய்யப்பட்டு பல்கலைக்கழக விரிவுரையாளர் மட்டத்தில் பாராட்டுக்களையும் பெற்றார்.

❖ தனது ஆசிரியர் கலாசாலை வாழ்க்கையில் அதாவது 1998 - 1999ம் ஆண்டு காலப்பகுதியில் ஆசிரியர் கலாசாலை இலக்கிய மன்றத்தில் ஒரு உறுப்பினராக இருந்து கொண்டு கவிதை அரங்கம், பட்டிமன்றம் போன்றவைகளையும் நடாத்தி கலாசாலையில் பாராட்டுக்களையும் பெற்றார்.

❖ அதுமட்டுமன்றி, கலாசாலையிலிருந்து வருடா வருடம் வெளியாகும் கலைச்செல்வி என்ற சஞ்சிகைக்கு பல கவிதைகளை எழுதினார். "கல்லறைக் குரல்" "ஒரு பேனாவின் உறுதிமொழி" 1ம் இடத்தைப் பெற்று பிரசுரமானது.

❖ அது மட்டுமன்றி, கலாசார காலத்தில் தினமுரசு, மித்திரன், வீரகேசரி வார வெளியீடுகளில் பெண்களின் நவீனம் சார் கவிதைகளையும் பெண் ஆளுமையின் உணர்வுகளை உருவாக்கி கவிதைகளையும் கட்டுரைகளையும் அபிராமி என்ற புனை பெயரில் எழுதி வருகின்றார்.

❖ அதுமட்டுமன்றி, வானொலியில் இடம்பெறுகின்ற ஆடவர் அரங்கம், வாலிபர் வட்டம், பூவும் பொட்டும், மங்கையர் மஞ்சரி போன்ற நிகழ்ச்சியில் இவரது கவிதை ஒலிபரப்பப்பட்டது.

❖ 1999ம் ஆண்டு காதலர் சிறப்புக் கவிதையாக மித்திரன் வார மலரில் "காதலர் தினமதிலே" இக் கவிதைக்கு பல வாசகர்களிடம் இருந்து பாராட்டுக் கிடைத்தது.

❖ எனவே எல்லாவற்றையும் தொகுத்து நோக்குகின்ற போது திருவாளர் ரவீச்சந்திரன் அவர்கள் பல்வேறு துறைகளிலும் தன்னை தடம் பதித்துள்ளார். அந்த வகையில் கவிதைத்துறை, நாடகத்துறை, சிறுகதை, பாடலாக்கம், சிறுவர் இலக்கியம் போன்ற துறைகளில் தன்னை தடம் பதித்துள்ளார் என்றே கூறத்தோன்றுகின்றது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திருமதி. வானதி பகீரதன் |
| முகவரி | : | ஆண்டான் குளம், செங்கலடி |
| பிறந்த திகதி | : | 18.01.1971 |
| வயது | : | 41 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | செங்கலடி |
| துறை | : | ஆக்க இலக்கியம் |
| தொழில் | : | விரிவுரையாளர் |

- இவர் செங்கலடியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர்.
- தனது ஆரம்பக் கல்வியை மட்/செங்கலடி மத்திய கல்லூரியிலும், க.பொ.த. உயர்தரக் கல்வியை மட்/சிசிலியா பெண்கள் பாடசாலையிலும் கற்றார்.
- தற்போது கிழக்குப்பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராக இருக்கின்றார். இவர் பின்வரும் ஆக்க இலக்கிய முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றார்.

1. நாட்டார் பாடல்களில் பெண்களின் எதிர்ப்புக்குரல்கள், பெண்தொகுதி - 03, இதழ் - 03, சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம், மட்டக்களப்பு 1998.

2. குடும்ப ஜீவனோபாய அவலிடிக்கும் பெண்கள் வந்தாறுமூலையை மையப்படுத்திய ஒரு நோக்கு, நானிலம் 2000, பிரதேச செயலக கலாசாரப் பேரவை, செங்கலடி.

3. பெரும்பாணாற்றுப்படையில் ஐவகை நிலங்களும் அவற்றுக்கிடையிலான அசமத்துவ வளர்ச்சியும், கோல், 2001, மட்/செங்கலடி மத்திய கல்லூரி, செங்கலடி.

4. பழமொழி நானூறும் மாணவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நற்பண்புகளும், கோல், வருடாந்த சஞ்சிகை 2008

5. ஈழத்துத் தமிழ் விமர்சன மரபில் கண்டனங்கள் பெறும் முக்கியத்துவம் கோல் மட்/செங்கலடி மத்திய கல்லூரி, செங்கலடி. 2007

6. வந்தாறுமூலை – க. மயில்வாகனத்தின் சிவனார் அந்தாதியும் அதில் காணப்பட்ட ஒரேச்சர் மரபுகளும், நானிலம், கலாசார விழா சிறப்பு மலர், 2008 கலாசாரப் பேரவை, பிரதேச செயலகம்

7. சுவாமி விபுலானந்தர் நினைவுதின விழா – அறிமுகம், சுவாமி விபுலானந்தர் நினைவுதின விழாமலர் 2008, சிறப்பு வெளியீடு, சு.வி.அ.க.நிறுவகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. மா.பீதாம்பரம் - "கவனிக்கப்படாத, கவனிக்கப்பட வேண்டிய ஈழத்து சிறுவர் நாடக முன்னோடி – ஓர் ஆய்வு, ஏ.ஆர்.எஸ், 2010 மார்கழி 18, கிழக்குப்பல்கலைக்கழகம்.

9. வாய்மொழி இலக்கியங்களில் சமூக விமர்சனம் - ஓர் கண்ணோட்டம், ஏ.ஆர்.எஸ், 2010 மார்கழி 18, கிழக்குப்பல்கலைக்கழகம்.

10. மட்டக்களப்புப் பிரதேச சிறுவர் நாவல்கள்- கலையருவி சு.வி.அ.க. நிறுவக மாணவர் ஒன்றியம், 2011.

11. கேணியூர் ரமேஸின் சுனாமிப் பேரலை கவிதை மலர் (நூல் விமர்சனம்) சமூக மேம்பாட்டு மன்றம், ஏறாவூர்ப்பற்று, களுவங்கேணி, 2006.

12. ஏர் (நூல் விமர்சனம்) முப்பெரும்விழா சிறப்பு வெளியீடு, மட்/கிரான் மகா வித்தியாலயம் கிரான், 2007

13. சுவாமி விபுலானந்தர் நினைவுதின மலர் (தொகுப்பாசிரியர்), சுவாமி விபுலானந்தர் நினைவுதின விழாமலர், 2008, சிறப்பு வெளியீடு, சு.வி.அ.க. நிறுவகம்.

14. கோல் (தொகுப்பாசிரியர்), மட்/செங்கலடி மத்திய கல்லூரி, செங்கலடி, 2011.

**Abstracts**

1. மா.பீதாம்பரம் - "கவனிக்கப்படாத, கவனிக்கப்பட வேண்டிய ஈழத்து சிறுவர் நாடக முன்னோடி ஓர் ஆய்வு, ஏ.ஆர்.எஸ் 2010 மார்கழி 18, கிழக்குப்பல்கலைக்கழகம்.

2. வாய்மொழி இலக்கியங்களில் சமூக விமர்சனம் ஓர் கண்ணோட்டம், ஏ.ஆர்.எஸ். 2010 மார்கழி 18, கிழக்குப்பல்கலைக்கழகம்.

3. காரைக்காலம்மையாரின் வரலாற்றுப் புனைவுக்கான அடிப்படைகளும் இயக்கி அம்பிகாவின் வரலாறும் - ஓர் ஒப்பாய்வு, ஏ.ஆர்.எஸ், 2011 மார்கழி கிழக்குப்பல்கலைக்ழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| முழுப்பெயர் | : திரு. இளையதம்பி ரமேஸ்குமார் |
| முகவரி | : பிரதான வீதி, களுவன்கேணி - 02 |
| பிறந்த திகதி | : 1973.05.07 |
| வயது | : 39 |
| கிராமசேவையாளர் பிரிவு | : களுவன்கேணி - 02 (198A) |
| துறை | : ஆக்க இலக்கியம் |
| தொழில் | : ஆயுள் வேத வைத்தியம் |

- இவர் களுவன்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர்.
- இவர் ஆயுள் வேத துறையில் டிப்ளோமா போன்ற உயர் கல்வியைக் கற்று இருக்கின்றார்.
- இவர் நாடகம் தயாரித்தல், நடித்தல், குறுங்கதை எழுதுதல் போன்ற துறைகளில் ஈடுபாடு உடையவர்.
- இவர் ஆயுர் வேதத் துறையிலே D.N.H.C போன்ற பட்டங்களைப் பெற்றுள்ளார்.

இவர், துறையூர் கண்ணகியம்மன் காவியம், சுனாமிப் ஆழிப் பேரவை போன்ற கவிதை நூல்களை வெளியீட்டு இருக்கின்றார்.

இவர் சிறந்த சமூக சேவையாளரும் ஆவார். இவர் கிராம அபிவிருத்திச்சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், மீனவர் கூட்டுறவுச்சங்கம் என்பவற்றில் அங்கத்தவராகவும் ஆலய நிருவாக செயலாளராகவும் கடமையாற்றிக் கொண்டு இருக்கின்றார், இவர் ஏறாவூர்ப்பற்று பிரதேச கலாசாரப் பேரவை உறுப்பினராகவும் செயல்பட்டு வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | சிங்காரவேல் தேவநாதன் |
| முகவரி | : | உறுகாமம் |
| பிறந்த திகதி | : | 24-02-1973 |
| வயது | : | 39 |
| கிராமசேவகர் பிரிவு | : | உறுகாமம் |
| துறை | : | ஆக்க இலக்கியம் |
| தொழில் | : | ஆசிரியர் |

- இவர் பெரியபுல்லுமலையைப் பிறப்பிடமாகவும், உறுகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்டவர்.
- இவர் ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியராவார்.
- இவர் தற்போது மட்/மாவளையாறு கையிலன் வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார்.
- இவர் இலக்கியம், இசை, நாடகம், என்ற முத்துறையிலும் தன்னை பறைசாற்றிக் கொண்டு இருக்கின்றார்.
- இவர் சிறுகதை, மற்றும் கவிதை எழுதுதல், அடுத்து கிராமியப் பாடல்களை உருவாக்கி, அதற்கு இயல்பான மெட்டுக்களை உருவாக்கிப் பாடும் வல்லமை கொண்டவர்.
- மேலும் இவர் நாடகப் பிரதிகளை எழுதுதல், நடித்தல், பழக்குதல், மற்றும் கிராமிய கலைகளான கும்மி, கோலாட்டம் போன்ற நிகழ்வுகளைச் செய்பவர். அத்துடன் சிறந்த அறிவிப்பாளருமாவார்.
- இவர் கிராம மரண அபிவிருத்திச்சங்கத் தலைவராகவும், விறிலியன் திரைப்படக் கலைஞராகவும், ஏறாவூர்ப்பற்று பிரதேச கலாசாரப் பேரவையின் உறுப்பினராகவும் இருந்து கொண்டு கலையாக்க முயற்சியில் ஈடுபட்டு வருகின்றார். என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| **முழுப்பெயர்** | **: திருமதி. சுதாகரி மணிவண்ணன்** |
| **முகவரி** | **: எல்லை வீதி, செங்கலடி** |
| **பிறந்த திகதி** | **: 1974.02.04** |
| **வயது** | **: 38** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | **: எல்லை நகர்** |
| **துறை** | **: இலக்கியம் (ஆக்கம்)** |
| **தொழில்** | **: ஆசிரியை** |

- இவர் செங்கலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர்.
- 1995 இல் அகில இலங்கை ரீதியில் சிறுகதைப் போட்டியில் மூன்றாம் இடம் பெற்றமை.
- 1996 இல் அகில இலங்கை ரீதியில் கட்டுரைப் போட்டியில் முதலாம் இடம் பெற்றமை.
- 1999 இல் அகில இலங்கை ரீதியில் சிறந்த கலைஞர் ஜனாதிபதி விருது பெற்றமை.
- 1999 இல் அகில இலங்கை ரீதியில் சிறந்த இளம் எழுத்தாளர் ஜனாதிபதி விருது பெற்றமை.
- 1997 இல் சூரியா பெண்கள் அபிருத்திச் சங்கத்தால் வெளியிடப்பட்ட கானல் கவிதைத் தொகுப்பிற்கு கவிதைகளை சமர்ப்பித்து வெளியிட உதவியமை. அத்துடன் அச்சகத்தால் நடத்தப்பட்ட கவிதா நிகழ்வில் பிரதான பாத்திரமேற்று நடித்தமை.
- 1997 இல் பிரதேச மட்டத்தில் இடம்பெற்ற நாடகம், கவிதை, சிறுகதை போட்டியில் முதலிடம் பெற்றமை.
- 2000ம் ஆண்டு பிரதேச முத்தமிழ் விழாவில் நாடகப் பிரதி நாடகத்தில் நடித்து முதலாம் இடம் பெற்றமை.
- 2000ம் ஆண்டு பிரதேச முத்தமிழ் விழாவில் சிறுகதைப் போட்டியில் முதலாம் இடம் பெற்றமை.
- 2001ல் இடம் பெற்ற பிரதேச முத்தமிழ் விழாவில் சிறுகதைப் போட்டியில் முதலாம் இடம் பெற்றமை.
- 1994 முதல் நாடகப் பிரதிகள் எழுதியும், நடித்தும், மேடையேற்றியும் உள்ளமை.
- 2001 - 2006 வரை கலை இலக்கியப் படைப்புக்களை ஆற்றியமை, அத்துடன் சரணிகலைக் கழகத்தினை உருவாக்கி அதனூடாக நாடகம், கலையை வளர்த்து வருவது குறிப்பிடத்தக்க விடயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முழுப்பெயர் : அமரர். திருமதி சுகந்தி இராசநாயகம்
முகவரி : எல்லை வீதி, செங்கலடி
பிறந்த திகதி : 1962.04.16
இறந்த திகதி : 1996.08.04
வயது : 34
கிராமசேவையாளர் பிரிவு : எல்லை நகர்
துறை : ஆக்க இலக்கியம்
தொழில் : ஆசிரியை

❖ இவர் யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், மட்டக்களப்பு ஏறாவூர்ப் பற்று பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள எல்லை நகரை வசிப்பிடமாகவும் கொண்டவர்.

❖ இவர் தமிழ் துறையில் சிறப்பு கலைமாணிப்பட்டம் பெற்றவர்.

❖ யாழ் உடுவில் மகளிர் கல்லூரியில் ஆசிரியராகவும், பின்பு மட்டக்களப்பு இந்துக் கல்லூரியில் ஆசிரியராகவும் கடமையாற்றினார்.

❖ இவர் சிறந்த ஓர் ஆய்வாளர்..அந்த வகையில் "மனிதனின் வாழ்க்கை படிநிலை சடங்குகள்" என்ற ஆய்வினையும், கிழக்கிலங்கையில் "கண்ணகி வழிபாடு" என்ற ஆய்வினையும், "மட்டக்களப்பு மாவட்ட மக்களின் வாழ்வியல் சடங்குகள்" என்ற ஆய்வினையும் மேற் கொண்டிருந்தார்.

❖ அகில இலங்கை ரீதியாக கொழும்பு தமிழ் சங்கம் நடாத்திய கவிதைப் போட்டியில் முதலிடம் பெற்று இருக்கிறார்.

❖ இவருடைய "மட்டக்களப்பு மாவட்டத்து கிராமிய வழிபாட்டு சடங்குகளும் அவை தொடர்பான பாடல்களும்" என்ற ஓர் ஆய்வை லண்டன் தமிழ் இந்து மாமன்றம் 2006ல் செய்தது.

❖ மாவட்ட மட்டத்தில் பேச்சு போட்டி, பட்டிமன்றம் போன்றவற்றில் கலந்து கொண்டு வெற்றி பெற்றதுடன் பாராட்டி கௌவிக்கப்பட்டுள்ளார்.

❖ அடுத்து ஓவியத்துறையில் ஈடுபாடு கொண்ட இவர் வரைந்த ஓவியம் லண்டனில் இடம் பெற்ற ஓவியக் கண்காட்சியில் வைக்கப்பட்டு பாராட்டு பெற்றது. லண்டன் தமிழ் பத்திரிகையிலும் இவரது ஓவியம் வெளி வந்தது குறிப்பிடத்தக்கது.

❖ தாம் கற்பித்த காலங்களில் தனது பாதையில் மாணவர்களை அழைத்துச் செல்லும் ஓர் முன்னுதாரணமான ஆசிரியையாக, கலைஞராக விளங்கினார்.

❖ இவர் சேவை செய்வதிலும் சிறந்து விளங்கினார். கல்லடியில் உள்ள சிவானந்தா பாடசாலையில் இலவசமாக கற்பித்தார்.

❖ அவரது அற்புத திறன்களிலும் அன்பிலும் மயங்கியதாலே தான் இறைவன் 1996.08.04 அன்று அவரை தன்னுடன் அழைத்துக் கொண்டான் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திருமதி. சுதாகினி லெஸ்மன் றாகல் |
| முகவரி | : | எல்லை வீதி, செங்கலடி |
| பிறந்த திகதி | : | 1978.10.12 |
| வயது | : | 34 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | எல்லை நகர் |
| துறை | : | இலக்கியம் |
| தொழில் | : | ஆசிரியை |

- இவர் ஏறாவூர் எல்லை நகரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர்.
- 2004ம் ஆண்டு அடையாளம் என்ற சஞ்சிகையை வெளியிட்டமை.
- சூரியா பெண்கள் அபிருத்திச் சங்கத்தின் ஆக்க இலக்கியப் பணிக்கு கவிதைத் தொகுதிகள் வழங்குகின்றமை.
- இலங்கையில் வெளிவரும் தமிழ் பெண்கள் சார் தமிழ் சஞ்சிகைகள் "தேடலும் மதிப்பீடும்" என்ற ஆய்வு நூலை 2005 ஆம் ஆண்டு வெளியிட்டமை.
- 2006 இல் BBC WORLD TRUS SERVICE இனால் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் பயிற்சி பெற்றமை.
- அகில இலங்கை ரீதியில் 2003 இல் இளைஞர் பரிசளிப்புக்கான தொலைக்காட்சி நாடகப் பிரதியாக்கம் போட்டியில் மூன்றாம் இடம் பெற்றமை.
- 1999 இல் தமிழ் மொழித்தின போட்டியில் இலக்கிய நாடக நிகழ்ச்சியில் மாகாண மட்டத்தில் இரண்டாம் இடம் பெற்றமை.
- 1998 இல் மாகாண மட்டத்தில் விவாதப் போட்டியில் பங்கு கொண்டமை.
- 1998 இல் மாகாண மட்டத்தில் நடைபெற்ற குறுநாடகப் பிரதியாக்கத்தில் பங்கு கொண்டு பரிசில்கள் பெற்றமை.
- 1997, 2000ம் வருடங்களில் பிரதேச மட்ட இலக்கியப் போட்டிகளில் நாடகம், கவிதை போன்றவற்றில் பங்கு கொண்டு பரிசில்கள் பெற்றமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திரு. சண்முகராசா விஜிதராசா |
| முகவரி | : | வாசிகசாலை வீதி, கொம்மாதுறை |
| பிறந்த திகதி | : | 30.06.1978 |
| வயது | : | 34 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | கொம்மாதுறை |
| துறை | : | ஆக்க இலக்கியம் |
| தொழில் | : | பொதுமுகாமைத்துவ உதவியாளர் |

- இவர் தற்போது கொம்மாதுறையை வசிப்பிடமாகக் கொண்டவர்.

- க.பொ.த.உயர் தரத்தில் கல்வி பயின்ற இவர் ஆக்க இலக்கிய முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றார்.

- இவர் ஆன்மீகம் சம்பந்தமான புத்தகங்களை வெளியிட்டுள்ளார். அதாவது கொம்மாதுறை ஸ்ரீமகா பெரியதம்பிரான் ஆலய வருடாந்த உற்சவத்தினை முன்னிட்டு 2010ம் ஆண்டு "பெருமுரசு" என்ற சமய நூலை வெளியிட்டமை.

- அரச முகாமைத்துவ உதவியாளர்களுக்கான தடை தாண்டல் பரீட்சை நூலுக்கான கணனி வடிவமைப்பை மேற்கொண்டார்.

- சிறந்த சமூக சேவைக்கான விருதினை பெற்று இருக்கின்றார். சமூக சேவை அபிவிருத்திக்காக RDB வங்கியினால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

- கொம்மாதுறை ஸ்ரீ மகா பெரிய தம்பிரான் ஆலய பரிபாலன சபையினரால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

- கிராம அபிவிருத்திச் சங்க தலைவராக இருப்பதோடு சிறந்த கிராம மேம்பாட்டு அபிவிருத்திக்கு உழைப்பவராகவும் விளங்குகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| முழுப்பெயர் | : திரு. தர்மலிங்கம் காளிஸ்வரன் |
| முகவரி | : காளிகோயில் வீதி, கொடுவாமடு, செங்கலடி |
| பிறந்த திகதி | : 1978.02.03 |
| வயது | : 34 |
| கிராமசேவையாளர் பிரிவு | : கொடுவாமடு |
| துறை | : இலக்கியம் |
| தொழில் | : கமநல சேவைத் திணைக்களத்தில் விற்பனை இலிகிதர் |

- இவர் கொடுவாமடுவினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர். க.பொ. உயர்தரம் வரை கல்வியைத் தொடர்ந்துள்ளார்.
- இவர் ஆக்க இலக்கியங்களைப் படைப்பதில் முக்கியமானவர்.
- அந்த வகையில் இவர் மெல்லிசைப் பாடல்கள், சிறுகதை எழுதுதல், ஆலய பக்திப் பாடல்கள் இயற்றுதல், கட்டுரை என்பனவற்றினை எழுதிக் கொண்டு இருக்கிறார்.
- ஆலய உற்சவம், மற்றும் திருவிழாக் காலங்களில் மெல்லிசைப் பாடல்களை பாடி வருகின்றார் அத்துடன் பக்திக் கீதங்களை இயற்றி அதனை பாடி வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| **முழுப்பெயர்** | : | **அமரர். சடையன் முத்துவேல்** |
| **முகவரி** | : | **களுவன்கேணி – 01** |
| **பிறந்த திகதி** | : | **1930.05.12** |
| **இறந்த திகதி** | : | **2010.06.17** |
| **வயது** | : | **80** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | : | **களுவன்கேணி – 01 (198)** |
| **துறை** | : | **நாட்டுக்கூத்து (அண்ணாவியார்)** |
| **தொழில்** | : | **கமம்** |

❖ இவர் களுவன்கேணியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர்.

❖ இவர் கிராமங்கள் தோறும் நாட்டுக்கூத்து அரங்கேற்ற நிகழ்வுகளை மேற்கொண்டு இருக்கிறார். அந்த வகையில் இவர் இந்த கலையை தனது தந்தையாரிடம் இருந்து கற்றுக் கொண்டார். வடமோடி, தென்மோடி இரண்டு துறைக்கும் பெயர் போனவர்.

❖ கிராம மட்டத்தில் நிகழ்த்திய நாட்டுக் கூத்துக்களாக,

- அபி மன்னன், சுந்தரி மாயை
- துரோணர் யுத்தம்
- சாரசந்திரன் போர்
- குசலவன் நாடகம்
- கண்ணன் சண்டை போன்ற வடமோடி நாட்டுக்கூத்துக்களை அரங்கேற்றி உள்ளார்.

❖ இவரது பணி கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத் துறையுடன் சேர்ந்து அபிமன்னன், சுந்தரி மாயை, துரோணர் யுத்தம் எனும் இரண்டு கூத்துக்களை அரங்கேற்றம் செய்தது சிறப்புக்குரிய விடயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திரு. மூத்தான் முத்துலிங்கம் |
| முகவரி | : | களுவன்கேணி – 02 |
| பிறந்த திகதி | : | 1932.02.22 |
| வயது | : | 80 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | களுவன்கேணி – 02 (198A) |
| துறை | : | நாட்டுக்கூத்து (அண்ணாவியார்) |
| தொழில் | : | மீன்பிடித்தொழில் |

❖ இவர் களுவன்கேணியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர்.

❖ இவர் ஏற்று நடித்த கூத்துக்களும் பாத்திரங்களும்

- தருமர் அஸ்வமேதயாகம் - சுவிலகாதேவி
- குருசேத்திரம் - நாட்டியக்காரி
- குயலவன் நாடகம் - சலவைத் தொழிலாளியின் மனைவி
- தருமபுத்திர நாடகம் - விதுரன்
- வாள்அபிமன்யு - இடையன்

❖ தலைமை அண்ணாவியாராகவிருந்து அரங்கேற்றிய நாட்டுக்கூத்துக்கள்

- அருச்சுனன் தவநிலை - 1958
- வாள்அபிமன்யு - 1968
- குயலவன் நாடகம் -
- சராசந்தன் போர் -
- இராம நாடகம் - 1993

❖ "வாள்அபிமன்யு" பிரதேச செயலக மட்டத்தில் முதலிடம் பெற்றது.

❖ இவை தவிர சுமார் பதினைந்து நாட்டுக்கூத்துக்களில் பதில் அண்ணாவியாராகக் கலைப்பணி புரிந்துள்ளார்.

❖ இவர் பாம்புக்கடி, விசர் நாய்க்கடி போன்ற நோய்களுக்கு சிகிச்சையளிப்பதில் சிறந்தவராக விளங்கினார்.

❖ 'புயலின் கொடுமை' என்னும் கும்மி மெட்டில் அமைந்த கவிதைப் புத்தகமொன்று வெளியிட்டுள்ளார்

❖ 12 பாடல்களைக் கொண்ட காவடிப்பாடல் தொகுப்பொன்றும் இவரால் வெளியிடப்பட்டுள்ளது

❖ இவர் அண்ணாவிமாரைப் பயிற்றுவித்தலிலும் ஈடுபட்டுள்ளார் என்வது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முழுப்பெயர் : அமரர். பூபாலப்பிள்ளை ஆறுமுகம்
முகவரி : R.D.S வீதி, மாவடிவேம்பு – 01
பிறந்த திகதி : 04.05.1926
இறந்த திகதி : 13.12.2005
வயது : 79
கிராமசேவையாளர் பிரிவு : மாவடிவேம்பு – 01
துறை : அண்ணாவியார்
தொழில் : பூசாரி

- ❖ இவர் வந்தாறுமூலையைப் பிறப்பிடமாகவும், மாவடிவேம்பு – 01ஐ வசிப்பிடமாகவும் கொண்டவர்.
- ❖ இவர் தென்மோடி கூத்துக்களைஆடியும் பழக்கியும் உள்ளார்.
- ❖ அந்த வகையில் வாணாசூரன், அல்லிநாடகம் திருத்தொண்டர் மகுடிக்கூத்து ஆடியும் அதனை பழக்கி மேடையேற்றிம்யுள்ளார்.
- ❖ இவர் ஒரு பூசாரியும் ஆவார்.
- ❖ கமலகன்னி என்ற ஒரு ஆலயத்தினை அமைத்து அங்கு சடங்குடன் கூடிய வேடப்புனைவுகளை புனைந்து ஆடும் திறமையும் மிக்கவர்.
- ❖ இவர் தற்போது இறந்துவிட்டார்.

முழுப்பெயர் : அமரர். குமாரவேல் தம்பிராசா
முகவரி : சவுக்கடி வீதி, தளவாய்
கிராமசேவையாளர் பிரிவு : தளவாய்
பிறந்த திகதி : 1932.04.03
இறந்த திகதி : 2010.04.03
வயது : 78
துறை : அண்ணாவியார்
தொழில் : கடற்றொழில்

- ❖ இவர் கிரான்குளத்தைப் பிறப்பிடமாகவும், தளவாயினை வசிப்பிடமாகவும் கொண்டவர்.
- ❖ இவர் ஓர் தென்மோடி கூத்துக் கலைஞர் ஆவார்.
- ❖ நாடகம், கரகம், கும்மி ஆகிய கலைகளில் ஈடுபாடு கொண்டதுடன் இவற்றை பயிற்றுவிப்பதிலும் சிறப்பாக ஈடுபட்டார்.
- ❖ இவரது "பவளக்கொடி" எனும் நாடகம் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன அலைவரிசையில் ஒலிபரப்பானது.
- ❖ ஸ்ரீராமர் ஆஞ்சநேயர் யுத்தம் எனும் கூத்தும் சிறப்பானது.
- ❖ இவர் ஒரு கூத்துக் கலைஞர் மட்டுமன்றி, சமாதான நீதவானாகவும் வட்ட விதானையாகவும், பூசகராகவும் இருந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| முழுப்பெயர் | : திரு. மாரிமுத்து முத்துலிங்கம் |
| முகவரி | : வீரபத்திரர் சுவாமி வீதி, ஏறாவூர் – 05 |
| பிறந்த திகதி | : 1934.09.24 |
| வயது | : 78 |
| கிராமசேவையாளர் பிரிவு | : ஏறாவூர் – 05 |
| துறை | : அண்ணாவியார் |
| தொழில் | : கமம் |

ஏறாவூர் - 05ஐ பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இவர் ஏறாவூர் விபுலானந்தா வித்தியாலயத்தில் தரம் 2 வரை கல்வி கற்றார். இவர் ஒரு வடமோடி நாட்டுக்கூத்துக் கலைஞர் ஆவர். நாட்டுக் கூத்துக்களைத் தயாரிப்பதிலும் அதில் நடிப்பதிலும் சிறந்த ஒருவராக திகழ்கின்றார். இவர் 14 வயதிலிருந்து கூத்தின் மீது கொண்ட ஈடுபாடு காரணமாக வந்தாறுமூலை செல்லையா அண்ணாவியாரை குருவாகக் கொண்டு அவரிடம் இருந்து நாட்டுக்கூத்தினை கற்றுக்கொண்டார்.

இவர் மேடையேற்றிய கூத்துக்களாக

1965ம் ஆண்டு 13, 14ம் போர் ஏறாவூர் - 5 வீரபத்திரர் சுவாமி ஆலயம்
1967ல் பூதத்தம்பி நாடகம் ஏறாவூர் - 5 வீரபத்திரர் சுவாமி ஆலயம்
1974ல் 15ம், 16ம் போர் போன்ற கூத்துக்களையும் மேடையேற்றியதோடு இவரால் ஆடப்பட்ட கூத்துக்களாக பூதத்தம்பி நாடகத்தில் பூதத்தம்பி வேடம் ஏற்று நடித்த தோடு 13ம்,14ம் போர் கூத்தில் அர்ச்சுணன் வேடம் ஏற்று நடித்தார் இவர் சிறந்த சமுக சேவையாளரும் கூட வட்டவிதானையாராக 1966ம் ஆண்டு முதல் 2004ம் ஆண்டு வரை செயல்பட்டு வந்திருக்கின்றார். அத்தோடு கிராம அபிவிருத்திச் சங்க தலைவராகவும், சனசமூக நிலைய தலைவராகவும் உள்ளார். ஏறாவூர் - 05 வீரபத்திரர் ஆலய பணியினை 60 வருடகாலமாக செய்து வந்து இருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| **முழுப்பெயர்** | : | **திரு. கந்தையா வேலாயுதப்பிள்ளை** |
| **முகவரி** | : | **மயிலவட்டுவான், வந்தாறுமூலை** |
| **பிறந்த திகதி** | : | **1935.12.07** |
| **வயது** | : | **77** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | : | **மயிலவட்டவான்** |
| **துறை** | : | **அண்ணாவியார்** |
| **தொழில்** | : | **கமம்** |

❖ இவர் வந்தாறுமூலையைப் பிறப்பிடமாகவும், தற்போது பலாச்சோலையை வசிப்பிடமாகவும் கொண்டவர். இவர் தனது ஆரம்பக்கல்வியை வந்தாறுமூலை விஸ்ணு மகா வித்தியாலயத்தில் பயின்றார்.

❖ இவர் தற்போது மயிலவட்டுவான் கிராம அபிவிருத்தி சங்கத்தில் ஒரு உறுப்பினராகவும் அப்பிரதேச வயல்களுக்கு வட்டவிதானையாகவும், விவசாய அமைப்பின் தலைவராகவும் செயற்பட்டு வருகின்றார்.

❖ இவர் பல கூத்துக்களை ஆடியும் பழக்கியும் வந்து இருக்கின்றார். அந்த வகையில் இவர் ஆடிய கூத்துக்களாக

- அனுருத்திர நாடகம் - இதில் (தென்மோடி) வாணன் பாத்திரம் ஏற்று நடித்தார்.
- குசலவன் நாடகம் - (வடமோடி) இதில் சீதை பாத்திரம் ஏற்று நடித்தார்.
- காத்தவராயன் கூத்து – (வடமோடி) இதில் ஆரியப்பூமாலைப் பாத்திரம் ஏற்று நடித்தார்.

**இவர் பழக்கிய கூத்துக்கள்**

- குசலவன் நாடகம் - (வடமோடி) மயிலவட்டுவான்
- காத்தவராயன் - (வடமோடி) ஈரளக்குளம்
- வசந்தன் கூத்து – வந்தாறுமூலை
- கரகாட்டம் - இதனை பாடசாலைப் பிள்ளைகளைக் கொண்டு பழக்கி மேடையேற்றினார்.
- அல்லி அர்ச்சுனன் - தற்போது பலாச்சோலை பாரதி கலாமன்றத்துடன் இணைந்து பல தெருக் கூத்துக்களையும் பழக்கி மேடையேற்றி வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| முழுப்பெயர் | : திரு. கந்தப்போடி பொன்னுத்துரை |
| பிறந்த இடம் | : விளாவட்டுவான் |
| பிறந்த திகதி | : 27.08.1937 |
| வயது | : 75 |
| கிராமசேவையாளர் பிரிவு | : குமாரவேலியார் கிராமம், செங்கலடி |
| துறை | : நாட்டுக்கூத்து, நாடகம் |
| தொழில் | : கமம் |

- இவர் 1961ம் ஆண்டிலிருந்து அண்ணாவியாகச் செயற்படத் தொடங்கினார்.
- இவரது முதல் அரங்கேற்றம் "ராஜசூய யாகம்" எனும் நாட்டுக்கூத்து ஆகும்.
- இதற்குப் பின் பல நாட்டுக் கூத்துக்களையும், நாடகங்களையும் அரங்கேற்றி மக்கள் மத்தியில் பாராட்டுக்களைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

இவர் தலைமை அண்ணாவியாராக விருந்து அரங்கேற்றிப் பிரபல்யம் பெற்ற படைப்புக்கள்.

01. யாகசூரன் சண்டை
02. ராஜசூய யாகம்
03. பதின்மூன்றாம் போர்
04. ஸ்ரீ கிருஷ்ணன் தூது
05. ஆரவல்லி சூரவல்லி நாடகம்
06. தரும புத்திரன் நாடகம்
07. சராசந்தன் போர்
08. தர்ம அஸ்ம யாகம்
09. பப்பரவாக நாடகம்
10. சூரசம்மாரம்
11. திரசேர் மடந்தை திருக்கல்யாணம்
12. வள்ளியம்மை நாடகம்
13. மார்க்கண்டேயர் நாடகம்
14. கற்பலங்காரி
15. கோபாலன் சரித்திரம்
16. இராம நாடகம்
17. மாரியம்மன் கரகாட்டம்
18. காத்தவராயர் மாரி தர்க்கம்
19. காளியம்மன் கோலாட்டம்
20. முருகன் ஆனந்தக் காவடியாட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | அமரர். கதிரமலை செல்லையா |
| பிறந்த இடம் | : | வந்தாறுமூலை |
| கிராமசேவையாளர் பிரிவு | : | வந்தாறுமூலை |
| பிறந்த திகதி | : | 18.04.1938 |
| வயது | : | 74 |
| துறை | : | நாட்டுக்கூத்து |
| தொழில் | : | கமம் |

இவர் வந்தாறுமூலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர்.

1963ம்ஆண்டிலிருந்து அண்ணாவியாராகச் செயற்படத் தொடங்கிய இவரது முதல் அரங்கேற்றமான "13ம் போர்" கூத்து 1964ல் இடம்பெற்றது. இது தவிர இவரது நெறியாள்கையில் பரிணமித்த கூத்துக்களாவன,

| | | |
|---|---|---|
| சுபத்திரை கல்யாணம் | : | 1964 |
| அஸ்வதேம யாகம் | : | 1966 |
| இராமநாடகம் | : | 1968 |
| வாள வீமன் நாடகம் | : | 1969 |
| குருக்கேத்திரப்போர் | : | 1969 |
| அரசிளங்குமாரி | : | 1970 |
| 14ம் போர் | : | 1972 - நாவலடி, மட்டக்களப்பில் |
| ஏணியேற்றம் | : | 1978 – சித்தாண்டி |
| தர்மபுத்திரன் நாடகம் | : | 1978 – குடியிருப்பு |
| கீசகன் போர் | : | 1984 – கோட்டமுனை, மட்டக்களப்பு |
| இராவணேசன் | : | பல்கலைக்கழகம், கண்டி |
| 17ம் போர் | : | றோயல் கல்லூரி, கொழும்பு |
| உத்தமன் பரதன் | : | மட்/ வின்சன்ட் கல்லூரி |

1993ல் முன்னாள் ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க அவர்களால் "இலங்கைத்திலகம்" (LANKA TILAKE) எனும் பட்டம் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது தற்போது அமரத்துவம் அடைந்த விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திரு. வல்லிபுரம் சிதம்பரப்பிள்ளை |
| முகவரி | : | தரவைச்சேனை வீதி, ஆறுமுகத்தான் குடியிருப்பு |
| கிராமசேவையாளர் பிரிவு | : | ஆறுமுகத்தான் குடியிருப்பு |
| பிறந்த திகதி | : | 1940.11.12 |
| வயது | : | 72 |
| துறை | : | நாட்டுக்கூத்து (அண்ணாவியார்) |
| தொழில் | : | ஓய்வு பெற்ற தென்னை ஆராய்ச்சி நிலைய உதவியாளர் |

- இவர் அறுமுகத்தான் குடியிருப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர்.
- ஆறுமுகத்தான் குடியிருப்பு கலைமகள் வித்தியாலயத்தில் தரம் 8 வரை கல்வி கற்றுள்ளார்.
- பின்னர் 1963 இல் தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் உதவியாளராகக் கடமையேற்று பணிபுரிந்து வந்தார்.
- இவரது கலை ஈடுபாடு காரணமாக வந்தாறுமூலை செல்லையா அண்ணாவியாரிடம் கூத்துக்கலையினை கற்றுக்கொண்டார்.
- இவருடன் இன்னும் ஏராளமானோர் செல்லையா அண்ணாவியாரிடம் கூத்துக்கலையினை பயின்றுள்ளனர்.
- அந்த வகையில் 1965 இல் வாளவீமன் என்ற கூத்து ஆறுமுகத்தான் குடியிருப்பில் உள்ள காளி கோயிலில் மேடையேற்றினார்.
- பின்பு 1970 இல் கர்ணன் சண்டை ஏறாவூர் வீரபத்திரன் முன்றலில் மேடையேற்றப்பட்டது.
- கண்ணமுத்து போடியார் நாடகம் ஆறுமுகத்தான் குடியிருப்பு காளி கோயில், வந்தாறுமூலை விஸ்ணு கோயில், காளிகாமடு பிள்ளையார் கோயில், கொம்மாதுறை மாணிக்கப்பிள்ளையார் கோயில் என்பவற்றில் மேடையேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.
- நாட்டில் ஏற்பட்ட வன்முறை காலங்களில் இடம் பெயர்ந்து சென்ற இவர் வன்முறை சம்பவங்கள் முடிவிற்கு கொண்டு வரப்பட்ட பின் தனது ஊருக்கு வந்து மீண்டும் கண்ணமுத்துப் போடியார் நாடகம் என்னும் கூத்தில் இவ்வூர் இளைஞர்களைக் கொண்டு 2004 இல் மேடையேற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| முழுப்பெயர் | : திரு. பொன்னையா சுப்பிரமணியம் |
| முகவரி | : சித்தாண்டி – 03 |
| பிறந்த திகதி | : 08.02.1942 |
| வயது | : 70 |
| கிராமசேவையாளர் பிரிவு | : சித்தாண்டி – 03 |
| துறை | : நாட்டுக்கூத்து (அண்ணாவியார்) |
| தொழில் | : கமம் |

❖ இவர் சித்தாண்டியைப் பிறப்பிடமாக கொண்டவர்.

❖ இவர் தனது ஆரம்பக் கல்வியை மட்/சித்தாண்டி இராமகிருஷ்ணமிசன் பாடசாலையில் கற்றார்.

❖ இவர் வடமோடி, தென்மோடி நாட்டுக்கூத்துக்களை முறையாக பயின்றார்.

❖ இவர் சித்தாண்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்லத்தம்பி அண்ணாவியாரிடம் முறையாகப் பயின்றார்.

❖ இவர் இந்த நாட்டுக்கூத்துக் கலையை 1977ம் ஆண்டிலிருந்து பயிற்றுவித்து வருகின்றார்.

❖ இவர் வடமோடி, தென்மோடி கூத்துக்களை ஆடியும்,பயிற்றுவித்தும் இருக்கின்றார்.

❖ அந்த வகையில் இவர் ஆடிய கூத்துக்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- அநுபுத்திர நாடகம் - தென்மோடி இதில் சுந்தரி பாத்திரம் ஏற்று நடித்தார்.
- சுபத்திரை கலியாணம் - சுபத்திரை பாத்திரம் ஏற்று நடித்தார்.
- மாடு பிடி சண்டை
- இவரால் அரங்கேற்றப்பட்ட கூத்துக்களை பின்வருவனவற்றினைக் குறிப்பிடலாம்.
- சூரசம்காரம் என்ற நாட்டுக்கூத்தினை சித்தாண்டி கலைஞர்களை கொண்டு பழக்கி மேடை ஏற்றினார்.
- கர்ணன் சண்டை - இதிலே 17ம் 18ம் போர் என்பனவற்றினை சித்தாண்டி கலைஞரைக் கொண்டு பழக்கி மேடை ஏற்றினார்.
- அல்லி நாடகம் - சித்தாண்டியில் மேடை ஏற்றப்பட்டது.
- சுபத்திரை கலியாணம் - இதனை சந்திவெளியில் மேடை ஏற்றினார்.
- வசந்தன் கூத்துக்களையும் பழக்கி மேடை ஏற்றினார்.
- இராம நாடகம் - வடமோடி நாடக கூத்தினைப் பழக்கி மேடை ஏற்றினார்.

❖ பாடசாலை மாணவர்களுக்கு காவடியாட்டம் என்பவற்றினையும் பழக்கி மேடை ஏற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | அமரர். முத்துக்குட்டி ஜெயராமன் |
| முகவரி | : | களுவன்கேணி – 01 |
| பிறந்த திகதி | : | 1943.05.30 |
| வயது | : | 69 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | களுவன்கேணி – 01 (198) |
| துறை | : | நாட்டுக்கூத்து |
| தொழில் | : | அண்ணாவியார் |

❖ களுவன்கேணி - 01ஐப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குட்டி ஜெயராமன் தற்போது இறந்துவிட்டார்.

❖ இவர் வடமோடி, தென்மோடி கூத்துக்களை ஆடியும் பழக்கியும் உள்ளார்.

❖ இவர் அண்ணாவியாராக இருந்து அரங்கேற்றிய நாட்டுக்கூத்துக்களாவன,

- பவளக்கொடி நாடகம் - 1983
- இராம நாடகம் - 1988
- ஆரவல்லி, சூரவல்லி நாடகம் - 1992
- குருஸேத்திரன் போர் - 1994

❖ என்பவற்றினை குறிப்பிட்டுக் கொள்ளலாம்.



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திரு. கந்தையா மயில்வாகனம் |
| முகவரி | : | அந்தோனியார் ஆலய வீதி, களுவன்கேணி –02 |
| பிறந்த திகதி | : | 1945.01.20 |
| வயது | : | 67 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | களுவன்கேணி – 02 (198 A) |
| துறை | : | நாட்டுக்கூத்து |
| தொழில் | : | மீன்பிடி |

❖ களுவன்கேணி - 02ஐப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர்.

❖ இவர் தனது இளமைக்கல்வியை முறக்கொட்டான்சேனை இராமகிருஸ்ண மிஷன் பாடசாலையில் வகுப்பு 05 வரை கற்றார்.

❖ இவர் பழக்கி அரங்கேற்றிய நாட்டுக்கூத்துக்களாவன,

- புவனேந்திர நாடகம்
- பப்பிரவாக நாடகம்
- குருகேந்திரன் போர்

❖ போன்றவற்றினையும், கரகம் காவடி, கும்மி, வசந்தன் போன்ற கூத்துக்களையும் பழக்கியும், மேடை ஏற்றியுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| முழுப்பெயர் | : திரு. வேல்முருகு தம்பிமுத்து |
| முகவரி | : வைத்தியர் வீதி, சித்தாண்டி – 03. |
| பிறந்த திகதி | : 05.07.1947 |
| வயது | : 65 |
| கிராமசேவையாளர் பிரிவு | : சித்தாண்டி – 03 |
| துறை | : நாட்டக்கூத்து (அண்ணாவியார்) |
| தொழில் | : கமம் |

- ❖ இவர் சித்தாண்டி – 03ம் பிரிவைச் சேர்ந்தவர். திரு. திருமதி. வேல்முருகு தம்பதிகளின் புதல்வன் ஆவார்.
- ❖ இவரது தந்தை வடமோடி, தென்மோடி நாட்டுக்கூத்துக்களை முறையாகப் பயின்று பயிற்றுவிப்பவர். இவரிடம் இருந்து தான் நாட்டுக்கூத்தினை ஆடியும் பயிற்றுவித்தும் வருகின்றார். இவரது மானசீக குருவாக இவரது தந்தை விளங்கினார்.
- ❖ இவரது நாட்டுக்கூத்து திறமையினை கருத்திற் கொண்டு கல்வி பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2006ம் ஆண்டு ஆளுனர் விருது வழங்கி கௌரவித்துள்ளது.
- ❖ இவர் வடமோடி, தென்மோடி கூத்துக்களை ஆடியும், ஏனையோர்க்கு பழக்கியும் உள்ளார். அந்த வகையில் இவர் ஆடிய கூத்துக்கள் பின்வருமாறு.

1. மணிமாலன் சண்டை - தோழி பாத்திரம் ஏற்று நடித்தார்.
2. சுபத்திரை கலியாணம் - அர்ச்சுனன் பாத்திரம் ஏற்று நடித்தார்
3. தருமபுத்திர நாடகம் - தர்மர் பாத்திரம் ஏற்று நடித்தார்

இவரால் அரங்கேற்றப்பட்ட கூத்துக்களாக பின்வருவனவற்றை கொள்ளலாம்

- சூரசம்காரம் சித்தாண்டியில் அரங்கேற்றப்பட்டது.
- தர்மபுத்திர நாடகம் சித்தாண்டியில் அரங்கேற்றப்பட்டது.
- சாரங்கருபன் (தென்மோடி) சித்தாண்டியில் அரங்கேற்றப்பட்டது.
- அல்லி நாடகம் சித்தாண்டியில் அரங்கேற்றப்பட்டது.
- குசேலன் நாடகம் முறக்கொட்டாஞ்சேனையில் மேடை ஏற்றப்பட்டது.
- 14ம் போர் சித்தாண்டியில் அரங்கேற்றப்ட்டது.
- 14ம் போர் முறக்கொட்டாஞ்சேனையில் அரங்கேற்றப்பட்டது.
- பவளக்கொடிக் கூத்து சித்தாண்டியில் 1986.03.07ல் மேடை ஏற்றப்பட்டது.
- 14ம் போர் மாவடிவேம்பில் மேடை ஏற்றப்பட்டது.
- சுபத்திரை கல்யாணம் முறக்கொட்டாஞ்சேனையில் மேடை ஏற்றப்பட்டது. (1990.03.07)
- 18ம் போர் முறக்கொட்டாஞ்சேனையில் மேடை ஏற்றப்பட்டது. (1998.06.06)
- 18ம் போர் களுவன்கேணியில் மேடை ஏற்றப்பட்டது. (1999.09.06)
- 13ம் போர் சித்தாண்டியில் மேடை ஏற்றப்பட்டது. (1993.02.03)
- வள்ளியம்மன் நாடகம் களுவன்கேணியில் மேடை ஏற்றப்பட்டது. (1996.01.03)
- 14ம் போர் களுவன்கேணியில் மேடை ஏற்றப்பட்டது. (2000.03.02)
- குருசேத்திரன் போர் மாவடிவேம்பில் மேடை ஏற்றப்பட்டது. (2006.02.03) என்பன குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| **முழுப்பெயர்** | **: திரு. பாலிப்போடி கமலநாதன்** |
| **புனை பெயர்** | **: கலைக்கமல்** |
| **முகவரி** | **: கொம்மாதுறை, செங்கலடி** |
| **பிறந்த திகதி** | **: 17.10.1948** |
| **வயது** | **: 64** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | **: கொம்மாதுறை** |
| **துறை** | **: நாடகம், நாட்டுக்கூத்து, தோற்கருவிகள் இசைத்தல், ஒப்பனை** |
| **தொழில்** | **: கமம்** |

❖ இவர் சந்திவெளியைப் பிறப்பிடமாகவும், கொம்மாதுறையை வசிப்பிடமாகவும் கொண்டவர்.

❖ இவர் பாலிப்போடி அண்ணாவியாரிடம் முறையாக நாடகங்களையும், நாட்டுக் கூத்துக்களையும் கற்றவர்.

❖ இவர்களது பரம்பரையில் இவர் ஏழாவது தலைமுறை கூத்துக்கலைஞராக கலைத்துறைக்கு சேவையாற்றி வருகின்றார்.

❖ 1966ம் அண்டு "அஸ்வமேத யாகம்" என்னும் நாட்டுக்கூத்து இவரால் ஆசிரிய கலாசாலையில் அரங்கேற்றப்பட்டது. இவர் அரங்கேற்றிய நாடகங்கள் பல அவற்றுள் சில :-

1. சத்தியின் தத்துவம்
2. தெய்வ பக்தி
3. மசூர்கட விநாயகர்
4. முகமூடி
5. கல்வியின் பெருமை
6. படித்தால் மட்டும் போதுமா?
7. ஒள்ளுப்பம் நில்லு
8. மணமகன் தேவை
9. பிள்ளைக்கு மாப்பிள்ளை வந்தாச்சு

என்பனவற்றினைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| முழுப்பெயர் | : திரு. செல்லையா செல்வராசா |
| முகவரி | : 11ம் கட்டை ஆலயவீதி, வந்தாறுமூலை |
| பிறந்த திகதி | : 1949.05.18 |
| வயது | : 63 |
| கிராமசேவையாளர் பிரிவு | : வந்தாறுமூலை கிழக்கு |
| துறை | : அண்ணாவியார் |
| தொழில் | : கமம் |

❖ இவர் வந்தாறுமூலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர்.

❖ இவர் வந்தாறுமூலையில் பிரசித்தி பெற்று விளங்கிய செல்லையா அண்ணாவியாரின் மகனாவார்.

❖ இவர் தரம் - 05 இல் கல்வி பயின்றவர். தனது தந்தையிடம் கூத்துக்கலலையைப் பயின்றார்.

❖ இவர் வடமோடி, தென்மோடிக் கூத்துக்கள் ஆடியும் பழக்கியும் உள்ளார். அந்த வகையில் இவரால் ஆடப்பட்ட கூத்தாக கர்ணண் போர். இதில் துட்ட தூய்மனிக்கு ஆடினார்.

❖ அடுத்து இவர் பழக்கிய கூத்துக்களாக பின்வருவனவற்றினை குறிப்பிடலாம். இராமநாடகம், அர்ச்சுனன் தவசு, சுபத்திரை கல்யாணம், வாளவீமன், சண்டை, அரசிளங்குமாரி போன்ற கூத்துக்களை முறக்கொட்டான்சேனை, கொடுவாமடு, ஐயங்கேணி, வந்தாறுமூலை போன்ற இடங்களில் பழக்கி மேடையேற்றினார்.

❖ சிறப்பாக இராவணேசன் என்ற நாட்டுக்கூத்தை தனது தகப்பனாருடன் பல்கலைக்கழக மாணவர்களுக்குப் பழக்கி மேடையேற்றினார். (பேராசிரியர் சி. மௌனகுருவின் நெறியாள்கையுடன்) என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| முழுப்பெயர் | : திரு. சிதம்பரப்பிள்ளை இராசதுரை |
| முகவரி | : வேலாயுதம் வீதி சித்தாண்டி – 04 |
| பிறந்த திகதி | : 03.10.1952 |
| வயது | : 60 |
| கிராமசேவையாளர் பிரிவு | : சித்தாண்டி – 04 |
| துறை | : நாட்டுக்கூத்து (அண்ணாவியார்) |
| தொழில் | : கமம் |

- இவர் சித்தாண்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர்.
- இவர் தனது தந்தையிடம் இருந்து கூடிய அனுபவங்களை பெற்றுள்ளார்.
- இவரது தந்தை வேலுப்பிள்ளை சிதம்பரப்பிள்ளையாகும். இவரை அடியொற்றியே இவர் வளர்த்து எடுக்கப்பட்டார்.
- 22 வயதில் இருந்து தனது பணியை ஆரம்பித்திருக்கின்றார். முதலில் நாட்டுக்கூத்துக்களை ஆடியிருக்கின்றார்.
- இவரால் அர்ச்சுனன் தவசு, வள்ளி திருமணம், அல்லி நாடகம், இராமநாடகம் போன்ற நாடகங்கள் மேடை ஏற்றப்பட்டது.
- இது மட்டுமல்லாமல், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திற்குச் சென்று தனது நாட்டுக் கூத்தினை மேடை ஏற்றி பரிசில்களும் பெற்று இருக்கின்றார்.
- இவர் பாடசாலை மட்டத்திலும், கிராம மட்டத்திலும் தற்போது நாட்டுக்கூத்துக்கள் பயிற்றுவித்து வருகின்றார்.
- அர்ச்சுனன் தவசு என்ற நாட்டுக்கூத்தில் முக்கியமான பாத்திரம் ஏற்று நடித்திருக்கிறார். அது மட்டுமன்றி, சிறந்த நடிகன், அண்ணாவி போன்ற துறைகளை தன்னகத்தே பதித்துக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| முழுப்பெயர் | : திரு. குமாரவேலு நவரெட்ணம் |
| முகவரி | : 119, உப்போடை வீதி, வந்தாறுமூலை. |
| பிறந்த திகதி | : 26.10.1950 |
| வயது | : 62 |
| கிராமசேவையாளர் பிரிவு | : வந்தாறுமூலை மேற்கு |
| துறை | : நாட்டுக்கூத்து (அண்ணாவியார்) |
| தொழில் | : கமம் |

- வந்தாறுமூலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர் தனது ஆரம்பக் கல்வியை மட்/வந்தாறுமூலை விஷ்ணு வித்தியாலயத்தில் 06ம் தரத்தில் கல்வி கற்றார்.

- இவர் 15 வயதில் இருந்து வந்தாறுமூலையில் மலைவெட்டி அண்ணாவியார் என்று சிறப்பு பெயரால் அழைக்கப்படுகின்ற அண்ணாவியாரிடம் முறையாகப் பயின்றார்.

- 1985ம் ஆண்டு வந்தாறுமூலை விஷ்ணு ஆலயத்தில் வருடாந்த உற்சவத்தின் போது ஆனந்தகாவடி போன்ற நிகழ்வுகளை ஏற்பாடு செய்து நடாத்தினார். இவ்வாலயத்தில் நொண்டிக் கூத்துக்களையும் மேடையேற்றி இருக்கின்றார்.

- இவர் நாட்டுக் கூத்துக்களை ஆடுவதிலும் பயிற்றுவிப்பதிலும் திறமை மிக்கவர். இவர் ஆடிய கூத்தாக 1947ல் அல்லி நாடகத்தினை குறிப்பிடலாம். இதில் வீமன் பாத்திரம் ஏற்று நடித்துள்ளார். இதனால் "வீமன் நவரெட்ணம்" என்றும் சிறப்புப் பெயரையும் பெறுகின்றார்.

- இவர் 1991ம் ஆண்டு வந்தாறுமூலை இளைஞர்களைக் கொண்டு அல்லி நாடகத்தினை சிறப்பாக மேடையேற்றினார்.

- இவர் வடமோடி, தென்மோடிக் கூத்துக்கள் இரண்டையும் பயிற்றுவிப்பதில் திறமை மிக்கவர்.

- 1991ம் ஆண்டு மட்/வந்தாறுமூலை கணேச வித்தியாலயத்தில் மகுடிக் கூத்தினை அரங்கேற்றியிருக்கிறார். அத்துடன் நடித்தும் இருக்கின்றார்.

- அல்லி அருச்சுனா, பிரளாபதி போன்ற கூத்துக்களையும் பழக்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| முழுப்பெயர் | : திரு. வெள்ளக்குட்டி கிருஸ்ணப்பிள்ளை |
| முகவரி | : பாடசாலை வீதி, களுவன்கேணி – 02 |
| பிறந்த திகதி | : 1959.08.04 |
| வயது | : 53 |
| கிராமசேவையாளர் பிரிவு | : களுவன்கேணி – 02 (198யு) |
| துறை | : நாட்டுக்கூத்து |
| தொழில் | : மீன்பிடித்தொழில் |

- ❖ இவர் களுவன்கேணி - 01ஐப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர்.
- ❖ இவர் நாட்டுக்கூத்து, நாடகம் என்பனவற்றினை ஆடியும் பழக்கியும் உள்ளார்.
- ❖ அந்த வகையில் இராமர் நாடகம், கர்ணன் சண்டை, அல்லி நாடகம், சூரவல்லி, அரவல்லி, அர்ச்சுனன் யுத்தம், வில் வளைவு போன்ற நாட்டுக்கூத்துக்களை ஆடியும் அரங்கேற்றியும் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



| | |
|---|---|
| முழுப்பெயர் | : திரு. சுப்பிரமணியம் தேவராசா |
| முகவரி | : விநாயகர்கிராமம், மயிலம்பாவெளி, தன்னாமுனை |
| பிறந்த திகதி | : 1965.12.20 |
| வயது | : 47 |
| கிராமசேவையாளர் பிரிவு | : மயிலம்பாவெளி |
| துறை | : அண்ணாவி |
| தொழில் | : அண்ணாவி, தோல் வாத்தியக்கலை |

- ❖ இவர் மயிலம்பாவெளியினைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர். இவர் 06ம் தரம் வரை கல்வி பயின்றுள்ளார்.
- ❖ இவர் 07 வருடமாக அண்ணாவியராக செயற்பட்டு வருகின்றார்.
- ❖ வடமோடி, தென்மோடி கூத்துக்களை சிறப்பாக ஆடியும் பழக்கியும் உள்ளார்.
- ❖ அந்த வகையில் ஆரவல்லி, அருச்சுனன் யுத்தம், கர்ணன் சண்டை போன்ற நாட்டுக் கூத்துக்களை மேடையேற்றி இருக்கிறார்.
- ❖ இவர் உடுக்கு, தவில், தபேலா போன்ற வகையை வடிவமைக்கும் வல்லவராகவும் திகழ்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| **முழுப்பெயர்** | **: திரு. தம்பிராசா சிவஞானம்** |
| **முகவரி** | **: களுவன்கேணி – 01** |
| **பிறந்த திகதி** | **: 1966.09.06** |
| **வயது** | **: 46** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | **: களுவன்கேணி – 01 (198)** |
| **துறை** | **: நாட்டுக்கூத்து** |
| **தொழில்** | **: மீன்பிடித்தொழில்** |

❖ இவர் மாவடிவேம்பினைப் பிறப்பிடமாகவும் களுவன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்டவர்.

❖ இவர் நடித்த கூத்துக்களாவன,

- குருசேத்திரன் போர்
- வாளவீமன் நாடகம்
- தஞ்சன் போர்
- அசுமேதயாகம் போன்ற கூத்துக்களை நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| **முழுப்பெயர்** | **: திரு. வேலாயுதம்பிள்ளை பிரபாகரன்** |
| **முகவரி** | **: நாவலர் வீதி, கொம்மாதுறை வடக்கு.** |
| **பிறந்த திகதி** | **: 1982.02.11** |
| **வயது** | **: 30** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | **: கொம்மாதுறை வடக்கு** |
| **துறை** | **: நாட்டுக் கூத்து** |
| **தொழில்** | **: துவிச்சக்கரவண்டி திருத்துனர்** |

இவர் மயிலவட்டவானைப் பிறப்பிடமாகவும், கொம்மாதுறையினை வசிப்பிடமாகவும் கொண்டவர். இவர் தனது ஆரம்பக் கல்வியினை மயிலவட்டவான் அ.த.க பாடசாலையிலும், உயர்தர கல்வியினை செங்கலடி மத்திய கல்லூரியிலும் கற்றார். இவர் இக் கலையினை தனது தந்தையான வேலாயுதம் பிள்ளையிடம் இருந்து கற்றறிந்து கொண்டார். 10 வயதில் இருந்து இவர் இக் கூத்தினை ஆடி வருகிறார். தற்போது வந்தாறுமூலை கண்ணகி அம்மன் ஆலயத்தில் மழை வேண்டி செய்யப்படும் கொம்பு முறித்தல் எனும் விளையாட்டில் வசந்தன் கூத்து ஆடும் நிகழ்வு இடம் பெறும் இவ் விளையாட்டு நிகழ்வினை கடந்த மூன்று ஆண்டுகளாக தனது தந்தையின் பின் இவர் நிகழ்த்தி வருகின்றார். பாடசாலை காலத்தில் தாள லயம் எனும் இசையுடன் சேர்ந்த கூத்து நிகழ்வை பாடசாலையில் நடத்தியிருக்கிறார். 2001ல் பாடசாலையில் இருந்து இடை விலகிய மாணவர்களுக்கு நடத்தப்பட்ட கற்பித்தல் செயற்பாடுகளில் அம் மாணவர்களைக் கொண்டு நடத்திய இடை விலகல் எனும் கூத்தில் இரண்டாம் இடம் பெற வழியமைத்தார். 2001ம் ஆண்டு வட கிழக்கு மாகாண தமிழ் தினப் போட்டியில் நாட்டு கூத்திற்காக மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும், மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளார். 2002ம் ஆண்டு வட கிழக்கு மாகாண தமிழ் தின போட்டியில் நாட்டுக் கூத்திற்காக மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும், கோட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும், வலய மட்டத்தில் முதலாம் இடத்தையும் பெற்றுள்ளார். அத்தோடு ஏறாவூர்ப் பற்று பிரதேச கலாச்சாரப் பேரவையினால் நடத்தப்பட்ட 2008ம் ஆண்டின் கலாசார விழாவில் கூத்திற்காக முதலாம் இடம் பெற்றுள்ளார். 2004ம் ஆண்டில் மாவட்ட செயலகத்தால் பெண்கள் உரிமைகள் தொடர்பான விவாத போட்டியில் மகளீர் விவகார அமைச்சினால் 1ம் இடம் பெற்று கௌரவிக்கப்பட்டுள்ளார். அத்தோடு 2004ல் மகளீர் விவகார அமைச்சினால் நடாத்தப்பட்ட பெண்கள் உரிமைகள் தொடர்பான விவாதத்தில் மாகாண மட்டத்தில் இரண்டாம் இடம் பெற்றுள்ளார்.

கொம்மாதுறை துறையூர் கம்பன் கலைகழக நாடக மன்ற உறுப்பினராகவும், கொம்மாதுறை வடக்கு கிராம அபிவிருத்திச் சங்க செயலாளராகவும் இருக்கிறார். அத்துடன் ஏறாவூர்ப் பற்று பிரதேச கலாசாரப் பேரவையில் ஒரு உறுப்பினராகவும் இருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| முழுப்பெயர் | : திரு. தம்பிராசா ஸ்ரீனிவாசன் |
| முகவரி | : 537/2 பிரதான வீதி, ஏறாவூர் – 05 |
| பிறந்த திகதி | : 1948.07.08 |
| வயது | : 64 |
| கிராமசேவையாளர் பிரிவு | : ஏறாவூர் – 05 |
| துறை | : சிலம்பாட்டம் |
| தொழில் | : ஓய்வு பெற்ற கடதாசி ஆலை ஊழியர் |

- இவர் ஏறாவூர் - 05ஐப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர். இவர் தனது ஆரம்பக்கல்வியை ஏறாவூர் - 05 விபுலானந்தா வித்தியாலயத்திலும் அதன் பின்பு அலிகார் மத்திய கல்லூரி, மட்டக்களப்பு மத்திய கல்லூரி இறுதியாக மட்/ இந்துக்கல்லூரியிலும் கற்றார்.

- பாடசாலையில் கற்கும் போது இக்கலையில் நாட்டம் மிக்கவராகக் காணப்பட்டார்.

- இந்தியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட சந்திரமோகன் கோன்பா என்பவரிடம் இக்கலையினைப் பயின்றார்.

- இது பல்வேறு முறையான ஆட்டமுறையினைக் கொண்டது. கர்நாடகம், குறவஞ்சி, பறையடி மேளம், அர்ச்சுனன் மல்லு, சல்வி விளையாட்டு போன்ற ஆடல்களை மிகவும் திறமையுடன் செய்யும் வல்லமை பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| **முழுப்பெயர்** | **: திருமதி. சுகந்தி நிரஞ்சன்** |
| **முகவரி** | **: பிரதான வீதி, கொம்மாதுறை** |
| **பிறந்த திகதி** | **: 30.12.1973** |
| **வயது** | **: 39** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | **: கொம்மாதுறை கிழக்கு** |
| **துறை** | **: நடனம்** |
| **தொழில்** | **: ஆசிரியை (நடனம்)** |

❖ இவர் மட்டக்களப்பு ஆரையம்பதியை பிறப்பிடமாகவும், தற்போது கொம்மா துறையை வசிப்பிடமாகவும் கொண்டவர்.

❖ இவர் தனது ஆரம்பக் கல்வியை ஆரையம்பதி இராமகிருஷ்ண தமிழ் கலவன் பாடசாலையில் கற்று பின் தரம் 05 இல் இருந்து உயர்தரம் வரை மட்/ வின்சன்ற் உயர்தர பெண்கள் பாடசாலையில் கற்றார்.

❖ இவர் தரம் 06 தொடக்கம் உயர்தரம் வரை நடனத்தை ஒரு பாடநெறியாக கற்றார்.

❖ இவருக்கு இயல்பாகவே நடனத்தில் இருந்த ஈடுபாடு இவரை மேலும் இத்துறையில் பிரகாசிக்கச் செய்தது.

❖ பாடசாலைக் கல்வியோடு திருமதி. கமலேஸ் தவராஜரெட்ணம் என்பவரிடம் முறைப்படி கற்று (தனியார் வகுப்பில்) வட இலங்கை சங்கீத சபை நடாத்திய 03ம் தரம் வரையிலான நடனப் பரீட்சையில் விசேட சித்தி பெற்றார்.

❖ அத்துடன் செல்வி.சிவாந்தி குமாரசாமி ஆசிரியையின் வழிகாட்டலில் வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சையிலும் (இசைத்துறை) விசேட சித்தியைப் பெற்றுக்கொண்டார்.

❖ 1993ம் ஆண்டு சுவாமி விபுலானந்த அழகியற் கற்கை நிறுவகத்தில் இணைந்து 04 வருட டிப்ளோமா கற்கை நெறியினை பூர்த்தி செய்து 2ம் தர (2nd paper class) சித்தி எய்தினார்.

❖ தொடர்ந்து 1997 - 2000 வரை தான் கற்ற நிறுவகத்திலேயே பகுதி நேர விரிவுரையாளராகவும் கடமை புரிந்தார்.

❖ இக்காலப்பகுதியில் கலைஞர் வேலானந்தன் அவர்களின் நெறியாள்கையில் கதகளி பட்டறை ஒன்றில் கலந்து கொண்டு அதில் திறமையான 05 மாணவர்களுள் ஒருவராகவும் தெரிவு செய்யப்பட்டார்.

❖ இவர் ஒரு பயிற்றப்பட்ட பட்டதாரி ஆவார்.

❖ பின்பு 2000 - 2011 ஆம் வரை வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் ஆசிரியையாக முதல் நியமனம் பெற்றார். இக்காலப்பகுதியில் பல மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்தரம் வரை நடனத்தைக் கற்று பல்கலைக்கழக அனுமதி பெறுவதற்கு காரண கர்த்தாவாகச் செயற்பட்டார்.

- இவர் ஆசிரியையாக கடமை புரிந்து கொண்டிருக்கும் பொழுதே 2002 – 2004 ஆம் ஆண்டு வரை யாழ்/கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலையில் சேர்ந்து பயிற்றப்பட்ட ஆசிரியையாக வெளியேறினார்.

- பேராசிரியர் மௌனகுரு அவர்களின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட "விமோசனா" கலைக்கூடத்தில் அங்கத்தவராக இருந்து (1997 – 2000) அரங்க ஆற்றுகைகளில் ஈடுபட்டார்.

- இவற்றுடன் மட்டக்களப்பு கலாசார மத்திய நிலையத்தில் செங்கலடி பிரதேசத்திற்குரிய வளவாளராக கடமையாற்றி மாணவர்கள் போட்டிகளில் கலந்து கொண்டு தேசிய மட்டத்திற்கு செல்லும் வகையில் பயிற்றுவித்தமையும் குறிப்பிடத்தக்கது.

- எல்லாவற்றுக்கும் மேலாக "சிவாஞ்சலி கலைக்கூடம்" என்ற பெயரில் நடன வகுப்பினையும் நடத்தி வருகின்றார்.

- வட இலங்கை சங்கீத சபை பாடத்திட்டத்திற்கு அமைவாக கல்வி கற்பித்து அச்சபை நடாத்தும் பரீட்சையில் சித்தியடையச் செய்தலே இக்கலைக்கூடத்தின் நோக்கமாகும்.

2005ம் ஆண்டு தொடக்கப்பட்ட இக்கலைக்கூடத்தில் சுமார் 40 மாணவர்கள் வரையில் சித்தியடைந்து வெளியேறியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| முழுப்பெயர் | : திரு. சங்கரலிங்கம் கிருஷ்ணகாந்தன் |
| முகவரி | : இல.06 கணபதிப்பிள்ளை நகர், செங்கலடி. |
| பிறந்த திகதி | : 29.05.1983 |
| வயது | : 29 |
| கிராமசேவையாளர் பிரிவு | : செங்கலடி |
| துறை | : நடனம் |
| தொழில் | : நடனம் பயிற்றுனர் |

- ❖ இவர் கணபதிப்பிள்ளை கிராமம் செங்கலடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.
- ❖ தனது ஆரம்பக் கல்வியை கொழும்பு முகத்துவாரம் இந்துக்கல்லூரியிலும்,க.பொ.த உயர் தரக் கல்வியை மட்/இந்துக்கல்லூரியிலும் பயின்றார்.
- ❖ இவர் கலைத்துறையினைப் பயின்றதோடு கலைத்துறைப் பாடத்தில் நடனத்தினையும் ஒரு பாடமாக கற்றார்.
- ❖ இவர் பாடசாலையில் நடைபெறுகின்ற தமிழ்த் தினப் போட்டியில் பரத நாட்டியத்தில் பங்கு பற்றி கோட்டம், வலய மட்டத்தில் 1ம் பரிசினையும் பெற்றிருக்கின்றார். அத்துடன் மாவட்ட மட்டத்திலும் பரிசுகளைப் பெற்றிருக்கின்றார்.
- ❖ இவர் பரத நாட்டியத்தினை இந்து இளைஞர் மன்றம் மற்றும் வட இலங்கை சங்கீத சபையில் தரம் - 04 வரை கற்றுள்ளார். அத்துடன் மிருதங்கம் வாசிக்கும் பயிற்சியும் உடையவர்.
- ❖ சின்மயாமிஷன் மன்றத்தினரால் நடாத்தப்பட்ட பரத நாட்டியப் போட்டியில் 1ம் இடத்தினைப் பெற்று கௌரவிக்கப்பட்டார்.
- ❖ இவர் இந்தியா சென்னை திருவெண்டையூர் கலாசேத்திர நாட்டிய பள்ளியில் டிப்ளோமா பரத நாட்டியமும், தமிழ் நாடு இசைநடனக் கல்லூரியில் மிருதங்கமும் கற்றார்.
- ❖ மன்னார்க்குடி நடராஜா முத்தமிழ் சபாவில் ஆடல் நம்பி என்ற பட்டமும் பெற்றுள்ளார்.
- ❖ இந்தியா கொட்டிவாக்கம் நடன டிப்ளோமா, மேலைத்தேய நடனப்பயிற்சிகளையும் பெற்றார்.
- ❖ செங்கலடியில் கலைக்காவேரி நாட்டியப்பள்ளி மன்றத்தினை உருவாக்கி கலைகளைப் பயிற்றுவித்தும் வருகின்றார்.
- ❖ இவரது சேவையினைப் பாராட்டி கிழக்குப்பல்கலைக்கழக நூல் வெளியீட்டு விழாவில் கல்வி அமைச்சினால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.
- ❖ அடுத்து களுவாஞ்சிக்குடி இராசமாணிக்கம் மண்டபம், மற்றும் குருக்கள்மடம் மக்களால் முன்னெடுக்கப்பட்ட சிவராத்திரி விழாவில் பாராட்டி கௌரவிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| **முழுப்பெயர்** | : | **செல்வி. சங்கரலிங்கம் மிதிலா** |
| **முகவரி** | : | **கணபதிப்பிள்ளை நகர், செங்கலடி** |
| **பிறந்த திகதி** | : | **06.08.1988** |
| **வயது** | : | **24** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | : | **செங்கலடி** |
| **துறை** | : | **நடனம்** |
| **தொழில்** | : | **நடனம் பயிற்றுனர்** |

- ❖ இவர் தனது ஆரம்பக் கல்வியை கொழும்பு முகத்துவாரம் இந்துக்கல்லூரியிலும், அதன்பிற்பாடு க.பொ.த. சா.தரத்தினை செங்கலடி மத்திய கல்லூரியிலும் கற்றார்.
- ❖ இவர் வட இலங்கை சங்கீத சபையில் தரம் - 04 வரை பயின்றார்.
- ❖ அபிக்கமல் சங்கரிடம் டிப்ளோமா பெற்றார்.
- ❖ கலைக்காவேரி நாட்டியப் பள்ளியினூடாக தற்போது மேலைத்தேய கீழைத்தேய கலைகளைப் பயிற்றுவித்தும் வருகின்றார்.
- ❖ பல்வேறு நடனப் போட்டிகளில் பங்குபற்றி பல பாராட்டுக்களையும் பெற்றுள்ளார்.
- ❖ இவரால் இப்பிரதேசத்தில் அநேகமான நடன மாணவர்கள் உருவாகி இருக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



| | | |
|---|---|---|
| **முழுப்பெயர்** | : | **செல்வி. யோகராசா ரிசாந்தினி** |
| **முகவரி** | : | **போதகர் வீதி, செங்கலடி** |
| **பிறந்த திகதி** | : | **24.03.1989** |
| **வயது** | : | **23** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | : | **195 B, பழைய ஊர், செங்கலடி** |
| **துறை** | : | **நடனம்** |
| **தொழில்** | : | **மாணவி** |

- ❖ பழைய ஊர், செங்கலடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.
- ❖ இவர் தனது ஆரம்பக் கல்வி தொடக்கம் க.பொ.த உயர்தரம் வரையும் செங்கலடி மத்திய கல்லூரியில் பயின்றவர்.
- ❖ க.பொ.த உயர்தரத்தில் நடனத்தினை ஒரு பாடமாக கற்றார்.
- ❖ அதன் பிறகு நர்த்தன பவன நாட்டியப்பள்ளி மன்றத்துடன் இணைந்து நடனக் கலையை நிகழ்த்தி வருகின்றார்.
- ❖ பாடசாலை வாழ்க்கையுடன் நடனக்கலையில் ஆர்வம் ஏற்படத் தொடங்குகின்றது. ஆண்டு 05ல் புஸ்பாஞ்சலி நடனத்தினை நிகழ்த்தி இருக்கின்றார்.
- ❖ 2010ம் ஆண்டு நர்த்தன பவன நாட்டிய மன்றத்தில் இணைந்து புஸ்பாஞ்சலி என்ற நாட்டியத்திற்காக தேசிய விருது பெற்றார்.
- ❖ எமது பிரதேசங்களில் ஏற்பாடு செய்து நடாத்தப்படுகின்ற கலாசாரப் போட்டிகள், இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடாத்தப்டுகின்ற போட்டியில் வெற்றி பெற்று விருதுகளும் பெற்று இருக்கிறார்.
- ❖ வட இலங்கை சங்கீத சபையில் பயின்று பட்டமும் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| **முழுப்பெயர்** | : | **செல்வி. விஜயகுமார் நிதாந்தினி** |
| **முகவரி** | : | **போதகர் வீதி, செங்கலடி** |
| **பிறந்த திகதி** | : | **18.10.1989** |
| **வயது** | : | **23** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | : | **செங்கலடி** |
| **துறை** | : | **இசையும் நடனமும்** |
| **தொழில்** | : | **இல்லை** |

- போதகர் வீதி, செங்கலடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.
- இவர் தனது ஆரம்பக் கல்வியை மட்/செங்கலடி மத்திய கல்லூரியிலே பயின்றார்.
- இவர் தனது மானசீக குருவாக சித்தாண்டியைப் பிறப்பிடமாக கொண்ட மங்கம்மா ஆசிரியரைக் பின்பற்றினார்.
- இவர் பாடசாலையில் நடைபெறுகின்ற தமிழ்த்தினப் போட்டிகள், மாவட்ட, மாகாண போட்டிகளில் பங்கு பற்றி வெற்றி பெற்றுள்ளார்.
- சூரியா லேயம் என்னும் அமைப்புடன் இணைந்து இசை நிகழ்த்தி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கதோடு இவர் ஒரு இளம் கலைஞர் ஆவார்.



| | | |
|---|---|---|
| **முழுப்பெயர்** | : | **செல்வன். பரமேஸ்வரன் றொசாந்தன்** |
| **முகவரி** | : | **போதகர்வீதி, செங்கலடி** |
| **பிறந்த திகதி** | : | **12.02.1997** |
| **வயது** | : | **15** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | : | **செங்கலடி** |
| **தொழில்** | : | **மாணவன்** |
| **துறை** | : | **தனி பரதம்** |

- செங்கலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட பரமேஸ்வரன் றொசாந்தன் தனது கல்வியை மட்/செங்கலடி மத்திய கல்லூரியில் பயின்று வருகின்றார்.
- இவர் ஒரு இளம் கலைஞர்.
- இவர் பரத நாட்டியக் கலையில் மிகவும் ஈடுபாடு உடையவர்.
- இவர் தனியாகவும், குழுவாகவும் பரத நாட்டியத்தினை ஆற்றுகை செய்யக்கூடியவர்.
- இவரது பரத நாட்டியத்துக்கு களம் அமைத்துக் கொடுத்தது மட்/செங்கலடி மத்திய கல்லூரியாகும்.
- இவர் பாடசாலை மட்டத்தில் நடைபெறுகின்ற தமிழ் மொழித்தினப் போட்டிகளில் பங்கு பற்றி மாவட்ட மட்டத்திலும், மாகாண மட்டத்திலும் பல பரிசில்களையும், சான்றிதழ்களையும் பெற்றுள்ளார் இவர் வளர்ந்து வரும் இளம் கலைஞரும் ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | பிரான்சிஸ் சேவியர் அருள் செபஸ்டியான் |
| முகவரி | : | கோப்பாவெளி, பெரிய புல்லுமலை |
| பிறந்த திகதி | : | 1945.07.06 |
| வயது | : | 67 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | கோப்பாவெளி |
| துறை | : | நாடகத்துறை |
| தொழில் | : | கமம் |

❖ கோப்பாவெளி பெரிய புல்லுமலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இவர் மட்டக்களப்பு சென் செபஸ்டியான் றோமன் கத்தோலிக்க பாடசாலையில் சாதாரண தரக் கல்வியைக் கற்றார்.

❖ 1963ல் இருந்து இன்று வரை இவர் தனது நாடகத்துறையில் திறமை காட்டி வருகின்றார். இவர் தயாரித்து நடித்த நாடகங்கள்,

- பழிக்குப் பழி – சமூக நாடகம்
- வேலைக்காரன் - 1969 (சமூக நாடகம்)
- மானம் காத்த மைந்தன் - 1970 (சமூக சீர்திருத்த நாடகம்)
- சிதம்பர சாமியார்
- சமையல்காரன் சங்கரப்பிள்ளை
- நீயா நானா – குறு நாடகம்
- மனைவியும் மக்களும்
- காலங்கள் வெல்லும் - லுனுகலையில் மேடையேற்றப்பட்டது.

❖ கிறிஸ்தவ மதத்தினைச் சேர்ந்த இவரால் எழுதப்பட்ட வேலைக்காரன் எனும் நாடகம் கிறிஸ்தவ மதம் சார்ந்ததாக அமைந்து காணப்படுகின்றது.

❖ இவர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவராகவும் இருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| முழுப்பெயர் | : திரு. குமாரசாமி ஆண்டியப்பன் |
| முகவரி | : 2ம் குறுக்கு வீதி, பலாச்சோலை |
| பிறந்த திகதி | : 07.06.1950 |
| வயது | : 62 |
| கிராமசேவையாளர் பிரிவு | : பலாச்சோலை |
| துறை | : நாடகம் |
| தொழில் | : சிற்றூழியர் (ஓய்வு, நீர்ப்பாசனத்திணைக்களம்) |

- வந்தாறுமூலை கிராமத்தினைப் பிறப்பிடமாகவும், மயிலவட்டவானை வசிப்பிடமாகவும் கொண்டவர்.
- இவர் தற்போது பலாச்சோலை என்னும் இடத்தில் வசித்து வருகின்றார்.
- இவர் தனது ஆரம்பக் கல்வியை மயிலவட்டவான் வித்தியாலயத்தில் 5ம் வகுப்பு வரை கற்றார்.
- இதன் பிறகு 1968ம் ஆண்டு அரச உத்தியோகத்தில் இணைந்து கொண்டார்.
- 1970ம் ஆண்டு குசலவன் நாடகத்தில் குசலவன் பாத்திரம் ஏற்று நடித்தார். இதே ஆண்டில் பிள்ளைக்கொரு மாப்பிள்ளை என்ற நாடகத்தினை வந்தாறுமூலை ஐக்கிய கலாமன்றத்துடன் இணைந்து மேடையேற்றினார்.
- தேரோட்டிய மகன் - புராண நாடகம் வந்தாறுமூலை கண்ணகியம்மன் ஆலயத்தில் மேடையேற்றினார்.
- இதே ஆண்டில் ஓடம் என்ற சமூக நாடகத்தினை அரங்கேற்றினார்.
- 1975ம் ஆண்டு கறப்பாளை கண்ணகி கலா மன்றத்துடன் இணைந்து வேலைக்காரன் என்ற சமூக நாடகப் பிரதியொன்றினை எழுதி அதில் பாத்திரம் ஏற்று நடித்தார். இதனால் இப்பிரதேச மக்களின் அபிமானத்தையும் பெற்றார்.இதேயாண்டில் வாழப் பிறந்தவன், வேலைக்காரன் மகன் என்ற சமூக நாடகத்தினை மேடையேற்றினார்.
- 1976ம் ஆண்டு இரும்பு விலங்கு, இவர் என் மகன் போன்ற நாடகத்தினை மேடையேற்றினார்.
- இவர் மயிலவட்டவான் கிராமத்தில் சித்தி விநாயகர் கலாமன்றம் தாபித்து அதன்மூலம் பலநாடகங்களை மேடையேற்றினார்.அவற்றுள் பரியாரியார், படகமணி, போலிவேடங்கள், திருவிளையாடல், கண்ணகிசபதம், கர்ணன் போன்றன குறிப்பிடத்தக்கது.
- இவர் நாடகம் மட்டுமன்றி பல நாட்டுக்கூத்துக்களையும் பழக்கியுள்ளார். அந்தவகையில் பதினான்காம் போர், குருசேத்திரன் போர், இராமநாடகம், சுபத்திரை கலியாணம், கம்சன் போர், வள்ளியம்மன் நாடகம், அஸ்வமேத யாகம் போன்றவற்றை ஆடியும் பழக்கியுமுள்ளார்.
- 1998ம் ஆண்டு பலாச்சோலை கிராமத்தில் பாரதிகலா மன்றத்தினை தாபித்து பல அரங்கச் செயற்பாடுகளை நிகழ்த்தி வருகின்றார். அந்த வகையில் கர்ணன் நாடகம், கண்ணகி சபதம் என்ற நாடகத்தினை மேடையேற்றினார்.
- இவர் சிறந்த ஒப்பனைக் கலைஞரும் ஆவார். இவர் நாடகம், நாட்டுக்கூத்து, சிறந்த வீதி நாடகங்கள் தயாரிப்பதிலும் அதனை நெறியாள்கை செய்வதிலும் சிறந்து விளங்குகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| **முழுப்பெயர்** | : | **திரு. சிதம்பரம் விஸ்வநாதன்** |
| **முகவரி** | : | **மாவளையாறு, கரடியனாறு** |
| **பிறந்த திகதி** | : | **1950.11.10** |
| **வயது** | : | **62** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | : | **கரடியனாறு** |
| **துறை** | : | **நாடகத்துறை** |
| **தொழில்** | : | **கமம்** |

- இவர் மாவளையாறு கரடியனாற்றினை வசிப்பிடமாகக் கொண்டவர். இவர் கா.பொ.த உயர்தரம் கற்றவர். இவர் இளமையிலிருந்து நாடகத்தினைச் செய்து வருகின்றார்.

- இவர் நாடகம் மட்டுமன்றி, நாட்டுக்கூத்துக்களையும் பழக்குவதில் வல்லவர்.

- இவர் அநேகமாக சமூக நாடகங்களைத் தயாரிப்பதிலும் அதனை பயிற்றுவிப் பதிலும் வல்லவர். அத்துடன் நாடகத்தில் பங்கேற்றும் நடித்துள்ளார்.

- இவர் கோலாட்டம், கும்மி போன்ற நடனங்களைப் பயிற்றுவித்து வருகின்றார்.

- இவர் மாவளையாற்றில் கலைஞர்களைக் கொண்டு கலைக் குயில் கலை மன்றத்தினை ஆரம்பித்து அதனூடாக நாடகம், கூத்து போன்ற கலைகளை வளர்த்து வருகின்றார்.

- இவர் தபேலா, ஓகன் போன்ற வாத்தியக்கருவிகளை இசைக்கும் வல்லமை கொண்டவர்.

- இவர் சமூக சேவையில் ஈடுபாடு கொண்டவர். அதாவது 1993ம் ஆண்டில் இருந்து கமநல அமைப்பின் தலைவராகவும், கிராம அபிவிருத்தி சங்கத் தலைவராகவும் செயற்பட்டு வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| முழுப்பெயர் | : அமரர். சின்னத்துரை நவரெட்ணம் |
| முகவரி | : வெற்றிவேல் வீதி, ஏறாவூர் – 05 |
| பிறந்த திகதி | : 1951.07.09 |
| வயது | : 61 |
| கிராமசேவையாளர் பிரிவு | : ஏறாவூர் – 05 |
| துறை | : நாடகத்துறை |
| தொழில் | : கமம் |

❖ இவர் 1960களில் ஏறாவூர் - 05 ல் பாரதிகலா மன்றம் என்ற நாடகமன்றத்தினை ஸ்தாபித்து அதற்கு தான் தலைவராக செயற்பட்டு வருகின்றார்.

❖ இவர் இளமையில் நாடகத்தினை ஆக்குபவராகவும் அதனை பயிற்றுவிப்பவராகவும் திகழ்கின்றார்.

❖ இவரது தந்தையார் வெள்ளையர் - சின்னத்துரை என்பவரிடமே இதனை கற்றுக் கொண்டார்.

❖ 1969களில் சமூக சீர்திருத்த நாடகங்களை இயற்றி பாரதி கலை மன்ற உறுப்பினர்களைக் கொண்டு நடிக்க வைத்து ஆலய உற்சவங்களின் போது மேடையேற்றினார். ஓடிப்போன ஒய்யாரி, வடியின் கொடுமை போன்ற நாடகங்கள்.

❖ சரித்திர நாடகத்தினை மேடையேற்றினார்.

- பண்ராட வன்னியன்
- ஆணவத்தின் அழிவு

❖ ஆலய அறங்காவலர்களினால் சிறந்த நாடகத்திற்கான பரிசினையும் பெற்று கௌரவிக்கப்பட்டார்.

❖ இன்று கிழக்குப் பல்கலைக்கழகம் என்று அழைக்கப்படும் இடம், அன்று வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயமாக திகழ்ந்தது. அப்போது தொழிலாளி என்ற நாடகம் நடிக்கப்பட்டு அதிலே அவர் தொழில் அதிபர் பாத்திரம் ஏற்று நடித்து பரிசில்களையும் கௌரவத்தினையும் பெற்றார்.

❖ தற்போது சிறந்த நாடகப் பிரதிகளை எழுவதில் வல்லவராகத் திகழ்கின்றார் இவர் தற்போது அமரத்துவம் அடைந்துவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | அமரர். பொன்னுத்துரை ரவீந்திரா |
| முகவரி | : | ஒருமுழச்சோலை, கொம்மாதுறை |
| பிறந்த திகதி | : | 09.06.1954 |
| வயது | : | 58 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | கொம்மாதுறை வடக்கு |
| துறை | : | நாடகத்துறை |
| தொழில் | : | கமம் |

- ❖ இவர் ஏறாவூர் 5ம் குறிச்சியை சேர்ந்தவர். தனது ஆரம்பக் கல்வியை ஏறாவூர் 5ம் குறிச்சி விபுலானந்தா வித்தியாலயத்திலும் தனது க.பொ.த. சா.தரத்தினை அலிகார் தேசிய பாடசாலையிலும் கற்றார்.

- ❖ இவர் பாடசாலையில் படிக்கும் போது நாடகங்கள் தயாரிப்பதிலும் ஈடுபட்டு வந்தார்.

- ❖ இவர் சிறந்த நடிகராகவும், சிறந்த நெறியாளராகவும் திகழ்ந்தார். அந்த வகையில் சரித்திர நாடகங்களையும், காசியசமூக நாடகங்களையும், சிறந்த நாட்டுக் கூத்துக்களையும் நடித்து பெருமை சேர்த்துள்ளார்.

- ❖ இவர் நடித்த சரித்திர நாடகங்களாவன - இராவணேசன், வீரப்பதக்கம், வீர அபிமன்யு, அரிச்சந்திரன், பண்டாரவன்னியன், இரணியன், மகுடம் காத்த மன்னன் போன்றவைகளாகும்.

- ❖ சமூக நாடகங்களாக - பொறுப்பான மாமியார், ஓடிப்போன ஒய்யாரி, சிவபூசையில் கரடி, தலை தப்பிய தம்பிரான், ஏமாந்த ஆறுமுகம், சறுக்கிவிழுந்த சம்பந்தியார், எமலோகத்தில் ஒரு நாள், கடைசி முத்தம், புழுதி, பணத்திமிர், வா கோட்டிற்கு போன்ற நாடகங்களை நடித்து பெருமை பெற்றுள்ளார்.

- ❖ இவர் 1971ம் ஆண்டு பாடசாலையில் கல்வி கற்கும் போது கவிஞர் ஆரையூர் அமரன், அமரசிங்கம் ஆகியோருடன் இணைந்து மயான காண்டம் எனும் நாடகத்தினை வின்சன்ற் மகளிர் உயர்தர தேசிய பாடசாலையில் நடைபெற்ற நாடகப்போட்டியில் முதலாம் இடத்தினை பெற்றதோடு சிறந்த நடிகருக்கான விருதினையும் பெற்றுக் கொண்டார்.

- ❖ கிராமிய கலைமன்றங்களைத் தாபித்து அதாவது கலைவாணர் கலை நாடக மன்றத்தினை தாபித்து அதனூடாக நாடகக் கலையை வளர்த்தார். அது மட்டுமன்றி ஏறாவூர் 04ல் மன்றம் தாபித்து தற்போது நாடகக் கலையை வளர்த்து வருகின்றார்.

- ❖ இவர் சிறந்த சமூக சேவையாளரும் ஆவார். ஆலயப்பணி, அறப்பணியில் ஈடுபட்டு வந்து இருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| முழுப்பெயர் | : திரு. வைரமுத்து மாணிக்கவேல் |
| முகவரி | : பாடசாலை வீதி, களுவன்கேணி – 01 |
| பிறந்த திகதி | : 1952.09.04 |
| வயது | : 60 |
| கிராமசேவையாளர் பிரிவு | : களுவன்கேணி – 01 (198) |
| துறை | : நாடகத்துறை |
| தொழில் | : அதிபர் |

- இவர் களுவன்கேணி - 01ஐ பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர். களுவன்கேணி மெதடிஸ்த மிசன் பாடசாலையில் ஆண்டு - 05 வரை கற்று வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் க.பொ.த சாதாரண தரம் சித்தி எய்தி, மட்/ இந்துக்கல்லூரியில் க.பொ.த உயர் தரம் கலைப்பிரிவில் கற்று பல்கலைக்கழகம் தெரிவானார்.

- 1978ம் ஆண்டு கமநல சேவைகள் திணைக்களத்தில் பயிர்செய்கை உத்தியோகத்தராக நியமனம் பெற்றார்.

- அதன் பிற்பாடு 1979ம் ஆண்டு ஆசிரியர் நியமனம் பெற்று மாத்தறை கம்புறு கமுக சிங்கள மகா வித்தியாலயத்தில் கடமையாற்றினார். அதன் பின்பு ஓட்டமாவடி முஸ்லீம் மகா வித்தியாலயம், அதன் பின்பு களுவன்கேணி விவேகானந்தா வித்தியாலயம், அதன் பின்பு 1958ம் ஆண்டு ஆசிரியர் கலாசாலையில் பயிற்சி ஆசிரியராகச் சென்றார்.

- அதன் பிற்பாடு காத்தான்குடி மீராபாலிகா வித்தியாலயத்தில் கடமையாற்றும் போது அங்கு சிறுவர் நாடகம், வரவேற்பு நாடகம் என்பனவற்றினை மாணவர்களைப் பழக்கி மேடையேற்றினார்.

- அக்கரைப்பற்று பனங்காடு பாசுபதேஸ்வரர் வித்தியாலயத்தில் கடையாற்றும் போது அங்கு அப்பாடசாலைக் கீதம், பாடசாலை மகுட வாசகம் அத்துடன் மாணவர்க்ளுக்கு நாட்டுக்கூத்துப் பழக்கி மேடையேற்றியிருக்கிறார்.

- 01.07.1992ம் ஆண்டு அதிபர் பதவி கிடைத்து மட்/ கோறளங்கேணி திருமகள் வித்தியாலத்தில் கடமையாற்றி அங்கு பாடசாலைக்கீதம், மகுடவாசகம் என்பவற்றினை தானே இயற்றினார்.

- தற்போது மட்/ பாலையடித்தோனா ஸ்ரீமுருகன் வித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றுகிறார்.

- இவர் ஒரு சமூக சேவையாளரும் கூட. அந்த வகையில் கிராம அபிவிருத்திச் சங்க செயலாளராக கடமையாற்றினார்.

- சமூக விழிப்புணர்வுக் குழுவில் தலைவராக இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ❖ கிறிஸ்தவ தேவாலய உள்ளூர் அருள் உரையாளர்.

- ❖ ஏறாவூர்பற்று பிரதேச மத்தியசபைக் குழுவில் உறுப்பினராகக் காணப்படுகின்றார்.
- ❖ மாவட்ட சமாதான நீதவான்.

- ❖ சமாதான நீதிவான்களின் மனித உரிமை ஒன்றியத்தில் ஒரு உறுப்பினராக இருக்கிறார்.

- ❖ இவர் தனது கிராமத்தில் வசிக்கின்ற இளைஞர்களைக் கொண்டு பாரதி கலாமன்றம் என்ற மன்றத்தினை ஸ்தாபித்து அதற்கு அவரே தலைவராக இருந்து பல கலை முயற்களில் ஈடுபட்டு வந்தார். அந்த வகையில்

  - இளங்கோவடிகள் - சமய நாடகம்
  - தெய்வ தரிசனம் - சமய நாடகம்
  - மனச்சாட்சி - சமூக நாடகம்
  - குருதட்சணை - சமய நாடகம்
  - றேடியோ சின்னராஜா - சமூக நாடகம்
  - நீங்க தான் வேணும் - சமூக நாடகம்
  - நவீன நாரதர் விஜயம் - கதா காலாட்சேபம்
  - கண் திறந்தது - சரித்திர நாடகம்
  - சிலம்புச் செல்வி - கதா காலாட்சேபம்
  - அமெரிக்கா போன அம்மாச்சி - சமூக நாடகம்
  - ஐயா அத்தான் - சமூக நாடகம்
  - அவரோடதான் போகப் போறன் - சமூக நாடகம்
  - ஓடாவி தங்கராஜன் - சமூக நாடகம்
  - ஆனந்தக்கண்ணீர் - சமூக நாடகம்

- ❖ இவரால் மேடையேற்றப்பட்ட நாட்டுக்கூத்துக்கள்
  - போடியார் சின்னத்தம்பி - நவீன நாட்டுக்கூத்து
  - நியாயத்தீர்ப்பு - நவீன நாட்டுக்கூத்து
  - நபிகள் மத்தியில் - நவீன நாட்டுக்கூத்து
  - நண்பனாம் இயேசு -

- ❖ வில்லுப்பாட்டு
  - ஒளி பிறந்தது

- ❖ எனவே இவர் ஒரு நாடக ஆசிரியர் மாத்திரமன்றி, நாட்டுக்கூத்து, வில்லிசை, மெல்லிசைப் பாடல்கள் இயற்றிப்பாடும் பல்கலைக் கலைஞர் என்றே கூறத் தோன்றுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| முழுப்பெயர் | : திரு. கணபதிப்பிள்ளை இளையதம்பி |
| முகவரி | : M.P.C. வீதி, களுவன்கேணி – 02 |
| பிறந்த திகதி | : 1948.07.25 |
| வயது | : 64 |
| கிராமசேவையாளர் பிரிவு | : களுவன்கேணி – 02 (198A) |
| துறை | : நாடகத்துறை |
| தொழில் | : மீன்பிடித்தொழில் |

- இவர் M.P.C.S வீதி, களுவன்கேணி - 02 ஐப் பிறப்பிடமாகக் கொண்டவர்.
- ஆண்டு 08 வரை கல்வி பயின்ற இவர் இளமையில் இருந்து நாடகத்துறையில் ஈடுபாடு உடையவர்.
- அதுமட்டுமன்றி, நாட்டுக்கூத்துக்களைப் பழக்குவதிலும் ஈடுபாடு உடையவர்.
- அன்னார் களுவன்கேணிக் கிராமத்தில் நடைபெறும் அனைத்துப் பொது நிகழ்ச்சிகளிலும் தனது கலை வண்ணத்தினைக் காட்டி இருக்கிறார்.
- அன்னார் சமூக நாடகங்களையும், இதிகாச நாடகங்களையும் தயாரித்து மேடையேற்றும் வல்லமையுடையவர்.
- இவர் அற்றிய நாடகங்களாக கண்ணகி சபதம் - புராண இதிகாச நாடகம், கலாட்டா கல்யாணம் - சமூக நாடகம், மராட்டிய மருந்து வியாபாரி – சமூக நாடகம், பணமா பாசமா – சமூக நாடகம் என்பவற்றினை மேடையேற்றி பெருமை பெற்றுள்ளார்.
- அதுமட்டுமன்றி, அக்கிராமத்தின் முதியோர் சங்கத்தின் பொருளாளராகவும் இருந்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| முழுப்பெயர் | : திரு. செல்லத்துரை அண்ணாத்துரை |
| முகவரி | : 10ம் கட்டை வீதி, செங்கலடி, கொம்மாதுறை |
| பிறந்த திகதி | : 1950.10.27 |
| வயது | : 62 |
| கிராமசேவையாளர் பிரிவு | : செங்கலடி |
| தொழில் | : கமம் |
| துறை | : நாடகத்துறை |

❖ இவரது பிறப்பிடம் ஏறாவூர் 5ம் குறிச்சியாகும். திருமண வாழ்விடம் செங்கலடியாகும். இளமையிலிருந்து கலையார்வம் மிக்கவராகக் காணப்பட்டார். இவருக்கு கலை வளர்த்த இடம் பாடசாலையாகும். இவர் 5ம் ஆண்டில் கல்வி பயிலும் போது பாடசாலையில் நடைபெறுகின்ற மாணவர் மன்றம், கலை விழாக்கள் போன்றவற்றில் பல நாடகங்களை நடித்து அதிபர், ஆசிரியர், மாணவர்களின் பாராட்டுக்களையும் பெற்று வந்து இருக்கிறார். இதுவே இவரது நாடக முயற்சிக்கு ஒரு மைக்கல்லாக திகழ்ந்தது எனலாம்.

❖ இவரால் நடிக்கப்பட்ட நாடகங்களாக பின்வருவனவற்றைக் கொள்ளலாம்.

- நல்ல மகள் - சீர் திருத்த நாடகம் பாடசாலையில் படிக்கும் போது நடிக்கப்பட்டது.
- வீரபாண்டியன் கட்டப் பொம்மன்- புராண இதிகாச நாடகம்
- தொழிலாளி - சீர் திருத்த நாடகம்
- சட்டத்தின் கரங்கள் - வரலாற்று நாடகம்
- போடியார் மகள் - சமூக சீர் திருத்த நாடகம்

❖ இவர் ஒரு சிறந்த நாடகப் பயிற்றுவிப்பாளராகவும் தன்னை இணைத்துக் கொண்டார். அந்த வகையில் துறையூர் கம்பன் கலைக் கழகத்தினை ஆரம்பித்து அதனூடாக நாடகப் பணியினை இட்டு சென்றார்.

- தேடி வந்த கோபுரம் - என்ற நாடகம் கிழக்குப் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்ட சாகித்திய விழாவில் மேடையேற்றப்பட்டு 1ம் இடத்தைப் பெற்றது. அப்போது கௌரவ விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். இது 26 மேடைகளில் ஏற்றப்பட்டது. அத்துடன் தானும் இதில் முக்கிய பாத்திரம் ஏற்று (தளபதி) நடித்தார்.
- இலிங்கேஸ்வரன் - இது ஒரு வரலாற்று நாடகம். இது வந்தாறுமூலை விஸ்ணு மகா வித்தியாலய சாகித்திய விழாவில் மேடையேற்றப்பட்டது.
- சீதனம் எங்கே - சமூக சீர்திருத்த நாடகம்
- கரை காணாத ஓடங்கள் - சமூக சீர்திருத்த நாடகம்
- கண்டி ராஜன் - சரித்திர புராண இதிகாச நாடகம் என்பன இவரால் நெறிப்படுத்தப்பட்ட நாடகங்களாகும்.
- இவர் பொதுச்சேவையையும் செய்து வருகின்றார்.இந்த வகையில்
- கொம்மாதுறை கிராம அபிவிருத்தி சங்க தலைவராகவும் கொம்மாதுறை விழிப்புக் குழு நிருவாக உறுப்பனராகவும் திகழ்கின்றார்.
- இவர் ஒரு சிறந்த நாடக நடிப்பானராகவும் நல்ல சிறந்த நெறியாளராகவும் சிறந்த சமூக சேவையாளராகவும் தன்னை தடம் பதித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப் பெயர் | : | கதிரவேலு துரைராஜா |
| முகவரி | : | நெசவு வீதி, வந்தாறுமூலை |
| பிறந்த திகதி | : | 1959.05.09 |
| வயது | : | 53 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | வந்தாறுமூலை கிழக்கு |
| துறை | : | நாடகத்துறை |
| தொழில் | : | நுண்கலைத்துறை அலுவலக உதவியாளர் |

இவர் வந்தாறுமூலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொணடவர். வந்தாறுமூலை விஷ்னு வித்தியாலயத்தில் தரம் 08 வரை கல்வி கற்றுள்ளார். சிறு வயதில் இருந்து நாடகம், கவிதை எழுதுதல், ஓவியம் வரைதல் போன்ற துறைகளில் ஈடுபாடு கொண்டவர். இவரது கவிதைகளில் சில வீரகேசரி பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. அவற்றுள் தாய் அன்பு, சின்ன இடையுடையாள் என்பன சிறந்தவை. நாடகத்துறையினுள் ஈடுபாடு கொண்ட இவர் பல நாடகங்களில் நடித்துள்ளார். சூரன் போர், இரணியன்வதை, கைகேயி கேட்டவரம், கர்ணன், திரும்பிப் பார், ஏமார்ந்த பக்தர்கள் போன்றன இவர் நடித்த நாடகங்களுள் சிலவாகும். இவற்றுள் சமயம் சார்ந்த நாடகங்கள், விரதங்கள், திருவிழாக்கள் நடை பெறும் சம்பவங்களில் மேடையேற்றப்பட்ட நாடகங்களாகும். கைகேயிகேட்ட வரம் என்ற நாடகம் 1991ல் வந்தாறுமூலை விஷ்னு கோயிலில் மேடையேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது ஆகும்.

மேலும் வில்லுப்பாட்டு நிகழ்வுகளிலும் இடுபாடு கொண்ட இவர் சமூக சீர்திருத்தம் சம்மந்தமான வில்லுப்பாடடு நிகழ்வுகளை நடாத்தியுள்ளார். மது பாவனை பாதகமான ஓர் செயல் என்பதை (வடி) எனும் தலைப்பிலான வில்லுப்பாட்டு மூலம் வெளிப்படுத்தியுள்ளார் சமூக, சமய தொடர்பான செய்திகளையும் வில்லுப்பாட்டு வாயிலாக வெளிப்படத்தியுள்ளார்.

இவர் ஓவியம் வரைதல், திரைச்சீலை, மற்றும் பாதைகள் வரைதல், அழகான கோலங்கள் போடுதல், பூமாலை கட்டுதல் ஆகிய கலைநயமிக்க செயற்பாடுகளையும் செய்து வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| **முழுப்பெயர்** | **: திரு. ஆறுமுகம் ஸ்ரீதரன்** |
| **முகவரி** | **: முத்தகம், புதிய வீதி, கொம்மாதுறை** |
| **பிறந்த திகதி** | **: 20.11.1968** |
| **வயது** | **: 44** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | **: கொம்மாதுறை வடக்கு** |
| **துறை** | **: நாடகம்** |
| **தொழில்** | **: ஆசிரியர்** |
| **வேறு தகைமைகள்** | **: சிற்பம், ஓவியம், கட்டடக்கலை** |

- ❖ இவர் ஏறாவூர் 05ம் குறிச்சியைப் பிறப்பிடமாகவும், கொம்மாதுறையை வசிப்பிடமாகவும் கொண்டவர்.
- ❖ ஏறாவூர் 05ம் குறிச்சி விபுலானந்தா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியினையும், ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலயத்தில் தனது உயர்தரக் கல்வியையும் கற்றார்.
- ❖ 1991ல் உயர்தரம் சித்தியடைந்து 1992ல் கிழக்கு பல்கலைக்கழகத்தில் கலைப்பீடத்தில் தனது பட்டப்படிப்பினை தொடர்ந்தார்.
- ❖ 1998ல் தனது பல்கலைக்கழக கல்வியை முடித்து 1999 வரை நுண்கலைப்பிரிவில் தற்காலிக விரிவுரையாளராக கடமையாற்றினார்.
- ❖ பின் 1999ல் கிண்ணையடி சரஸ்வதி வித்தியாலயத்தில் நூலக உதவியாளராக கடமையாற்றினார். 2000ம் ஆண்டு அதே பாடசாலையில் முகாமைத்துவ உதவியாளராக பணிபுரிந்தார்.
- ❖ 2006ல் வந்தாறுமூலை மத்திய கல்லூரியில் கலைப்பிரிவு ஆசிரியராக பொறுப்பேற்று இன்று வரை கற்பித்துக் கொண்டிருக்கின்றார்.

**இவரது நாடகங்களாவன**

- ❖ 1995ல் மங்கையராய் பிறப்பதற்கு எனும் நாடகத்தில் நடித்தார்.
- ❖ 1997ல் பேராசிரியர் மௌனகுரு, கலாநிதி பாலசுகுமார், கலாநிதி ஜெயசங்கர், விரிவுரையாளர் சீவரெத்தினம் போன்றவர்களின் நாடகங்களில் நடிகராகவும், ஒப்பனையாளராகவும், மேடை அமைப்பாளராகவும் செயற்பட்டமை.
- ❖ 2000ம் ஆண்டில் கிண்ணையடி சரஸ்வதி வித்தியாலயத்தில் மாணவர்களை கொண்டு அநீதிகள் எனும் நாடகத்தை மேடையேற்றினார்.
- ❖ 2002ம் ஆண்டு ஆங்கில நாடக தின போட்டியில் மாவட்ட மட்டத்தில் கிண்ணையடி சரஸ்வதி வித்தியாலய மாணவர்களைக் கொண்டு ஷேக்ஸ்பியரின் ஷம்லட் எனும் கவிதை நாடகத்தினை மேடையேற்றினார்.
- ❖ 2003ம் ஆண்டு ஆங்கில நாடக தின போட்டியில் மாவட்ட மட்டத்தில் கிண்ணையடி சரஸ்வதி வித்தியாலய மாணவர்களைக் கொண்டு ஷேக்ஸ்பியரின் ஜூலியட் சீசர் எனும் கவிதை நாடகத்தினை மேடையேற்றி பரிசுகள் பெற வழியமைத்தார்.
- ❖ 2006ல் வந்தாறுமூலை மகா வித்தியாலயத்தில் மாணவர்களைக் கொண்டு நடத்திய ஒற்றுமை எனும் நாடகம் மாகாண மட்டத்தில் மூன்றாம் இடம் பெற்றது.
- ❖ 2007ம் ஆண்டு வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலய மாணவர்களைக் கொண்டு நடத்திய எதற்கும் ஓர் காலம் வரும் நாடகம் மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடம் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 2008ம் ஆண்டு வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலய மாணவர்களைக் கொண்டு நடத்திய கண்ணகி வரலாற்று நாடகம் வலயமட்டத்தில் இரண்டாம் இடம் பெற்றது.
- 2010ல் வந்ததாறுமூலை மத்திய மகா வித்தியாலய மாணவர்களைக் கொண்டு நடத்திய "சுகாதார பழக்க வழக்கங்கள்" எனும் சிறுவர் நாடகம் மாகாண மட்டத்தில் மூன்றாம் இடம் பெற்றது.
- 2011ல் வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலய மாணவர்களைக் கொண்டு நடாத்திய சிறுவர் நாடகம் வலய மட்டத்தில் இரண்டாம் இடம் பெற்றது.
- 2012ல் வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலய மாணவர்களைக் கொண்டு நடாத்திய சிறுவர் நாடகம் வலய மட்டத்தில் இரண்டாம் இடம் பெற்றது.
- வேல்ட் விஷன் அனுசரணையில் "சூழலை பாதுகாப்போம்" எனும் நாடகம் தொலைக்காட்சியில் ஒளிபரப்பானது.
- 2007ல் செங்கலடி பிரதேச செயலக கலாச்சார பிரிவால் நடாத்தப்பட்ட கலாச்சார விழாவில் நடந்த வில்லுப்பாட்டுப் போட்டியில் வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலய மாணவர்கள் கலந்து கொண்டு முதலாம் இடம் பெற வழியமைத்தார்.
- 2007ல் முகிழ்ப்பு எனும் தெரு நாடகத்தில் வயோதிபர் வேடம் ஏற்று நடித்துள்ளார்.
- 2007, 2008ம் ஆண்டுகளில் உழவர் தின விழாவில் தேனக கலா மன்றத்தினால் நடாத்தப்பட்ட கலை நிகழ்வுகளில் பங்கேற்றுள்ளார்.
- 2007, 2008, 2009, 2010, 2011ம் ஆண்டுகளில் சிறந்த நாடகம் கற்பிக்கும் ஆசிரியருக்கான மற்றும் நாடகம் தயாரிப்பதற்கான விருதுகளை ஏறாவூர் பற்று கல்விக் கோட்டத்தினால் நடாத்தப்பட்ட விழாவில் பெற்றுள்ளார்.
- 2011 செங்கலடி பிரதேச செயலக கலாசார விழாவில் அரச ஊழியர்களுக்கான குறு நாடக போட்டியில் சிறந்த நடிப்பிற்கான விஷேட விருது உயிர்ப்பு நாடகத்திற்காக கிடைத்தது.
- கல்குடா வலய ஆசிரியர்களால் நடாத்தப்பட்ட மரபு வழி கலிங்கத்துப் போர் எனும் வடமொழிக் கூத்தில் ஏடு பார்ப்பவராக நடித்தார். இது 2012 தைப் பொங்கல் தினத்தில் நேத்ரா அலைவரிசையில் ஒளிபரப்பானது.
- ஓவியம் மற்றும் சிற்பம் போன்ற துறைகளிலும் தனது பங்களிப்பை மேற்கொண்டுள்ளார்.
- கொடுவாமடு நாகதம்பிரான் கோயிலில் இவரால் அமைக்கப்பட்ட நாகதம்பிரான் சிலை காணப்படுகிறது.
- சாரணர் தலைவராக தற்போதும் வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் உள்ளார்.
- பாடசாலை, தனியார் நிறுவனங்களில் நடத்தப்படும் நிகழ்ச்சிகளில் நாடகத்துறை வள ஆளணியராக செயற்பட்டு வருகிறார்.
- கட்டடக்கலையினை பகுதிநேர தொழிலாக மேற்கொண்டு வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திரு. கற்பூரப்போடி பரமானந்தம் |
| முகவரி | : | சந்தை வீதி வந்தாறுமூலை |
| பிறந்த திகதி | : | 1971.08.02 |
| வயது | : | 41 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | வந்தாறுமூலை மேற்கு |
| துறை | : | நாடகம் |
| தொழில் | : | ஆசிரியர் |

- இவர் அம்பிளாந்துறையைப் பிறப்பிடமாகவும், சந்தை வீதி வந்தாறுமூலையை வசிப்பிடமாகவும் கொண்டவர்.

- இவர் தனது ஆரம்பக்கல்வியை அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலயத்திலும், அதன் பின்பு உயர் தரக்கல்வியை மட்/ குருக்கள்மடம் கலைவாணி மகா வித்தியாலயத்திலும் பயின்றார்.

- இவர் ஆரம்ப காலத்தில் கல்வி கற்கும் போது நாடகத்தில் ஈடுபாடு கொண்டவராகத் திகழ்ந்தார். அந்த வகையில் பாடசாலையில் நடைபெறுகின்ற ஒவ்வொரு போட்டிகளிலும் தவறாது கலந்து கொண்டார். அந்த வகையில் அவர் எழுதி நடித்த நாடகமாக "இது எங்கள் பூமி" என்ற நாடகத்தினை நடித்தார். அடுத்து "பருவம் தவறிய பரிதாப முடிவு" அடுத்து இவர் பழக்கிய கூத்துக்களாக "நாராயணச் சாத்திரியார்" கூத்தினை தானே எழுதி பழக்கினார்.
- அது மட்டுமன்றி, தனது ஆசிரியர் தொழிலின் நிமித்தம் தான் கற்பித்த பாடசாலையில் மாணவர்களுக்கு நாடகத்தினைப் பழக்கி மேடையேற்றி இருக்கிறார். அந்த வகையில் "பொன்னம்பலப் போடியார்" என்ற கூத்தினை மட்/ குருக்கள் மடம் கலைவாணி மகா வித்தியாலய மாணவர்களுக்கு பழக்கி மேடை ஏற்றினார்.

- கதிரவெளி விக்கினேஸ்வரா வித்தியால மாணவர்களுக்கு "இராம நாடகம்" பழக்கி மேடை ஏற்றினார்.

- அடுத்து வந்தாறுமூலை விஸ்ணு வித்தியாலய மாணவர்களைக் கொண்டு "காத்தவராயன் சிந்து" நடைக் கூத்து மேடை ஏற்றி மாகாண மட்டத்தில் பரிசும் பெற்று இருக்கிறது. அத்துடன் "தேடல்" என்ற நாடகம் மாவட்ட மட்டம் மற்றும் கொழும்பு றோயல் கல்லூரிலும் மேடையேற்றப்பட்டு பரிசு பெற்றது.
- அடுத்து நல்லவற்றை செய்து நலம் பெறுவோம், என்ன புதுமை, சமூதாயம் குழம்பிய குடும்பம், திருந்திய குடும்பம், வாயாடி, ரைவர் பட்ட பாடு, வெளிநாட்டு பொம்பிளை அநீதிகள், மதியக் கொடுக்கும் மது, விருத்திராசுரன் வதமும் விப்பலாதன் கேட்டவரமும், சீதகப் போடியார், அம்மன் அருள், பள்ளிக்குப் போவோம், பாரதி இன்று இருந்தார் பாடல் எழுதியிருக்கின்றார். போன்ற நாடகங்களையும் பழக்கியுள்ளார்.

- அத்துடன் இவர் ஆசிரியராக இருக்கும் போது G.T.Z அனுசரனையுடன் வலயக்கல்வி அலுவலகத்தினால் நடத்தப்பட்ட கூத்துப் போட்டிகளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூத்துக்கள் ஆடியிருக்கிறார். அந்த வகையில் மனம் திருந்திய மன்னன் என்ற கூத்தில் சோழ மன்னன் பாத்திரம் ஏற்று நடித்தார். கலிங்கத்துப் போர் என்ற கூத்தில் கலிங்க மன்னன் பாத்திரம் ஏற்று நடித்தார். இக் கூத்தானது அண்மையில் ரூவாயினியில் ஒலி பரப்பட்டது.

- அடுத்து பல்கலைக்கழகத்தில் படிக்கும் போது பல்வேறு கூத்துக்களையும் நாடகங்களையும் நடித்து இருக்கிறார். அந்த வகையில் அவர் நடித்த நாடகங்களாக கொங்கைத் தீ, செம்பவளக்காளி, ஆற்றைக் கடத்தல் , கருஞ்சுழி, நவீன பத்மா சூரன் போன்ற நாடகங்களையும், இவர் ஆடிய கூத்துக்களாக இராவணேசன் - இராமர் பாத்திரம் ஏற்று நடித்தார். இதுமட்டுமன்றி கிழக்கு இசை நாட்டிய மரவுப் பாடல்களில் பல பாடல்களைப் பாடியிருக்கிறார். இந்த வகையில் காவடி, வசந்தன், அம்மன் காவியம், ஏர் பாடல், அம்மன் நடை என்பனவாகும்.

- அடுத்து போராசிரியர் கு. மௌனகுரு அவர்களால் நடாத்தப்படுகின்ற ஆய்வரங்குக் கூடம் என்ற அமைப்பில் ஊடாக மண்ணின் பாடல்கள் மற்றும் சி.மௌனகுரு அவர்களின் நெறியாழ்மையின் கீழ் சக்தி பிறக்கும் என்ற தொனிப் பொருளில் பல பாடல்களைப் பாடியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| **முழுப்பெயர்** | : | **திரு. ஆறுமுகம் சோமசுந்தரம்** |
| **முகவரி** | : | **உறுகாமம், கரடியனாறு** |
| **பிறந்த திகதி** | : | **1973.04.16** |
| **வயது** | : | **39** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | : | **உறுகாமம்** |
| **துறை** | : | **இசையும், நாடகமும்** |
| **தொழில்** | : | **அதிபர்** |

இவர் மொனராகலையைப் பிறப்பிடமாகவும் உறுகாமத்தினை வசிப்பிடமாகவும் கொண்டவர். தனது ஆரம்பக் கல்வியினை மொனராகலையிலும் இடை நிலை கல்வியினை கித்துள் ஸ்ரீ கிருஸ்ணா வித்தியாலயத்திலும் உயர்தர கல்வியை கரடியனாறு மத்திய மகா வித்தியாலயத்திலும் கற்றார். அதன் பின்னர் உறுகாமம் சரஸ்வதி வித்தியாலயத்தில் ஆசிரியராகவும், வேப்பவெட்டுவான் அ.த.க பாடசாலையில் ஆசிரியராகவும் தற்போது பெரிய புல்லுமலை றோமன் கத்தோலிக்க பாடசாலையில் அதிபராகவும் இருக்கிறார்.

சிறு வயது முதல் இசை, நாடகம் ஆகிய துறைகளில் ஈடுபாடு கொண்ட இவர் நாடகங்கள் நடிப்பதிலும் பாடல்கள் பாடுவதிலும், விவாத போட்டிகளில் பங்கெடுப்பதிலும் ஆர்வம் மிக்கவராக இருந்தார். "பாதை மாறிய பயணம்", "சாம்ராட் அசோகன்" ஆகிய நாடகங்களில் நடித்ததோடு வில்லிசை, ஆலயங்களில் இசை நிகழ்ச்சிகள், பொது இசை நிகழ்ச்சிகளிலும் பாடல்கள் பாடுபவராகவும் இருந்தார்.

முத்தமிழ் கலா மன்ற உறுப்பினரான இவர் இக் கிராமத்தினிடையே கலை வளர்சியை மேம்படுத்த பல நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார். இவர் ஏறாவூர்ப் பற்று மத்தியஸ்த சபை தலைவராகவும், சமாதான நீதவானாகவும் உள்ளார். இலங்கை செஞ்சிலுவை சங்க முதலுதவி பயிற்றுவிப்பாளரும் இலங்கை செஞ்சிலுவை சங்க மாவட்ட செயற்குழு உறுப்பினரும், இலங்கை செஞ்சிலுவை சங்க ஏறாவூர்ப் பற்று தலைவருமாக இவர் செயற்படுகின்றார். என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திரு. கந்தவேல் சுவர்ணேஸ்வரன் |
| முகவரி | : | 10ம் கட்டை வீதி, கொம்மாதுறை, செங்கலடி |
| பிறந்த திகதி | : | 27.09.1974 |
| வயது | : | 38 |
| கிராம சேவையாளர் பிரிவு | : | கொம்மாதுறை |
| துறை | : | நாடகம், கூத்து, இசை, கவிதை, வில்லிசை |
| தொழில் | : | ஆசிரியர் |

இவர் கொம்மாதுறையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர் தனது ஆரம்பக்கல்வியை செங்கலடி மத்திய கல்லூாயில் கற்றார் நடிகராக, நெறியாளராக செயற்படுதல், பாடசாலைக் காலத்தில் தமிழ் மொழித்தினம் இளைஞர் சேவைகள் மன்றப் போட்டிகளில் நாடகத் துறையில் பங்காற்றி பரிசுகளும் விருதுகளும் வென்றுள்ளமை குறிப்பிடத் தக்கது.

பாடசாலைக்கு வெளியே பல நாடக முயற்சிகளில் ஈடுபட்டுள்ளமை சிறப்பாக கொம்மாதுறையில் இயங்கும் துறையூர் கம்பன் கலைக் கழகம் எனும் ஆற்றுகை சார் அமைப்பினுடாக பல நாடகங்களை நடித்தும் நெறியாள்கையும் செய்துள்ளமை அவற்றில் இலங்கேஸ்வரன், மனக்கோபுரம் எனும் நாடகங்கள் குறிப்பிடத்தக்கவை. இவற்றில் பெண் வேடம் தாங்கி நடித்தமை விசேட அம்சமாகும்.

பாடசாலை ஆசிரியரான பின்னர் பல நாடகங்களை எழுதி நெறியாள்கை செய்துள்ளார். தமிழ் மொழித் தினப் போட்டி மற்றும் ஏனைய நிறுவனங்களினால் அவ்வப்போது நடத்தப்படும் நாடகப் போட்டிகளுக்கான நாடகங்களைத் தயாரித்துள்ளமை மட்/செங்கலடி மத்திய கல்லூரி மாணவர்களைக் கொண்டு தயாரித்த நாடகங்களில் சமாதானக் காணி, ஆசையின் கேடு, வெள்ளம் வரும் முன்னே (வீதி நாடகம்), எயிட்ஸ் ஆட்கொல்லி போன்ற நாடகங்கள் சிறந்த பரிசுகளைப் பெற்றுள்ளது.

மாகாணக் கல்வி திணைக்களத்தினால் நடாத்தப்படும் சிறுவர் நாடகப் போட்டியில் 2002, 2003, 2004 ஆகிய வருடங்களில் கல்குடா கல்வி வலய மட்டத்திலான போட்டியில் முதலாமிடம் பெற்று மாகாண அரங்க விழாவில் மாணவர்கள் கலந்து கொள்ள செய்தமை. இவர் எழுதி நெறியாழ்கை செய்தவற்றில் சிறப்பான சிறுவர் நாடகங்கள்,

1. ஆண்டார் குளத்தருகே
2. ஒற்றுமையே பலம்
3. கண்ணிவெடி கவனம் மக்காள்

பாடசாலையில் அரங்க செயற்பாடுகளில் ஆங்கில நாடக தயாரிப்புக்களில் ஈடுபட்டுள்ளார். இவர் நெறியாழ்கை செய்த சிறப்பான ஆங்கில நாடகங்கள்

1. The King Solaman
2. True Friend Ship
3. Unity is Strength



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து கூத்துதுறை சார்ந்த செயற்பாடுகளாக பாடசாலையில் ஆடப்பட்ட கூத்துக்களில் பங்கேற்றமை விசேடமாக 1992ல் வந்தாறுமூலையின் புகழ்பூத்த அண்ணாவியார் திருவாளர் செல்லையா அவர்கள் அண்ணாவியராக பணியாற்ற செங்கலடி மத்திய கல்லூரியில் தயாரிக்கப்பட்ட வாளவீபன் நாடகம் எனும் வடமோடிக் கூத்தில் அபிமன்னனாக நடித்தமை குறிப்பிடத்தக்கது.

அண்மையில் 23.10.2011ல் மேடையேற்றப்பட்ட கலிங்கத்துப் போரைச் சித்தரிக்கும் "சமாதான வாழ்வு" எனும் வடமோடிக் கூத்தில் அசோகனின் மந்திரியாக நடித்துள்ளமை சிறப்பானது. இக் கூத்து 14.01.2012ல் இலங்கை ரூபவாகினி கூட்டுத்தாபன தொலைக்காட்சி சேவையில் காண்பிக்கப்பட்டது.

அடுத்து இவரது கவிதை சார்ந்த செயல்பாடுகளாக பாடசாலைக் காலத்தில் தமிழ் மொழித்தினம் ஏனைய போட்டிகளுக்காக கவிதை எழுதியுள்ளமை. இலங்கை வானொலி தேசிய சேவையின் கவிதைக் கலசம் குறிப்பிடத்தக்கது. தற்போது ஆன்மீகத் துறையில் பாடல் கவிதை ஈடுபாடு விசேடமாக கொம்மாதுறை ஸ்ரீ சிவமுத்து மாரி அம்மன் மீது பாடப்பட்ட காவியம் குறிப்பிடத்தக்கது. மேலும் திதி வெண்பாக்கள் இயற்றுதல் என்பவற்றில் ஆர்வம் காட்டி வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| முழுப்பெயர் | : திரு. வைரமுத்து லோகிதராஜ் |
| முகவரி | : இல – 49, குமாரவேலியார் கிராமம் |
| பிறந்த திகதி | : 1975.07.20 |
| வயது | : 37 |
| கிராமசேவையாளர் பிரிவு | : குமாரவேலியார் கிராமம் |
| துறை | : நாடகம் |
| தொழில் | : இல்லை |

- ❖ குமாரவேலியார் கிராமத்தினைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர்.
- ❖ இவர் ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலயத்தில் கா.பொ.உயர் தரம் வரை கற்றார்.
- ❖ இவர் பாடசாலையில் கற்கும் போது நாடகத்துறையில் ஈடுபாடு உடையவராகக் காணப்பட்டார். பாடசாலையில் இவருக்கு களம் அமைத்துக் கொடுத்தவர் திரு. எம். மகேசன் ஆசிரியர் ஆவார்.
- ❖ பாடசாலையில் படிக்கும் போது பின்வரும் நாடகங்களை நடித்து இருக்கின்றார். அந்த வகையில் வாட்போர் - சமூக நாடகம். இதில் மகன் பாத்திரம் ஏற்று நடித்தார். நுளம்பு பேசுகிறார், இயேசுவின் பிறப்பு போன்ற நாடகங்களையும் தயாரித்துள்ளார்.
- ❖ இவர் சிறந்த நாடகப் பிரதிகளையும் தயாரிக்கும் திறமையுள்ளவர். இந்த வகையில் ஒற்றுமையே பலம் - சிறுவர் நாடகம், பிள்ளையை வாழ விடு – சமூக நாடகப் பிரதிகளை எழுதியுள்ளார்.
- ❖ மேடையேற்றப்பட்ட நாடகங்களாக மங்கையராய் பிறப்பதற்கே - இதற்கு சூரியா பெண்கள் அமைப்பு ஒத்துழைப்பு வழங்கியது நிராகரிக்க முடியாத படி உழவர் உலா வரும் திருநாள் இவரால் மேடை ஏற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.



| | |
|---|---|
| முழுப்பெயர் | : திரு. தியாகராஜா விஜயநாத் |
| முகவரி | : அம்மன்புரம், செங்கலடி |
| பிறந்த திகதி | : 21.03.1983 |
| வயது | : 29 |
| கிராமசேவையாளர் பிரிவு | : செங்கலடி |
| துறை | : நாடகத்துறை |
| தொழில் | : கமம் |

- ❖ இவர் காயான்குடாவைப் பிறப்பிடமாகவும், அம்மன்புரம் செங்கலடியை வசிப்பிடமாகவும் கொண்டவர்.
- ❖ இவர் தரம் 06 வரை மட்/ஏறாவூர் விபுலானந்தா வித்தியாலயத்தில் கல்வி பயின்றார்.
- ❖ சிறந்த சமூக நாடகங்களைத் தயாரிப்பதிலும், அதனை பயிற்றுவிப்பதிலும் மிகவும் திறமை வாய்ந்தவர்.
- ❖ இவர் நாடகங்களை நடிப்பதிலும் வல்லவர்.
- ❖ இவாரால் வெளியிடப்பட்ட நாடகங்களாக தேடிவந்த செல்வம் - இது 2003ம் ஆண்டு 2004ல் செங்கலடி மாரியம்மன் ஆலயத்தில் மேடையேற்றப்பட்டது.
- ❖ வெளிநாட்டு மாப்பிள்ளை போன்ற சமூக நாடகங்களைப் பழக்கியும் வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திரு. வண்ணமணி சந்திரவர்ணன் |
| முகவரி | : | பதுளை வீதி, கித்துள்வெவ, கறுடியனாறு |
| பிறந்த திகதி | : | 1984.11.06 |
| வயது | : | 28 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | கித்துள்வெவ |
| துறை | : | நாடகத்துறை |
| தொழில் | : | வியாபாரம் |

- இவர் பதுளை வீதி கித்துளைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இளநுண்கலைமாணி சிறப்பு பட்டத்தினை முடித்தவர்.

- இவர் சிறுவர் நாடகங்கள், சமூக நாடகங்கள், வீதி நாடகங்கள் போன்ற நாடகங்களைப் பழக்குவதிலும் ஈடுபாடு கொண்டவர்.

- இவர் கித்துள் கிராமத்தில் நடைபெறும் அனைத்துப் பொது நிகழ்வுகளிலும், ஆலய வருடாந்த உற்சவங்களிலும் தனது கலைத் திறமைகளைக் காட்டி வருகின்றார்.

- இவர் வரலாற்று நாடகங்கள், இதிகாச நாடகங்கள் போன்றவற்றைப் பழக்குவதிலும் வல்லமை உடையவர். அத்தோடு வடமோடி, தென்மோடி கூத்துக்களிலும் புலமை உடையவர்.

- இவர் மேடையேற்றிய நாடகங்களாவன "குள்ள நரியாரும் குட்டி எலிகளும்" - சிறுவர் நாடகம், நரி மாப்பிள்ளை – சமூக நாடகம், மாம்பழக்கதை - இதிகாச நாடகம் போன்ற நாடகங்களைப் பழக்கியுள்ளார்.

- அத்தோடு கருஞ்சுழி, தர்மயுத்தம் இன்னும் பல நாடகங்களில் வேடம் தாங்கி நடித்துள்ளார். அத்தோடு வில்லுப்பாட்டு, தாளலயம் போன்ற கலை நிகழ்வுகளிலும் ஈடுபாடு உடையவர்.

- இவர் தற்போது கித்துள் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவராகவும் விளையாட்டுக் கழக செயலாளராகவும், ஆதி விநாயக ஆலய செயலாளராகவும் கடமையாற்றி வருவதுடன் கலை செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| **முழுப்பெயர்** | : | **செல்வி. தேவரஞ்சன் கஸ்மீயா** |
| **முகவரி** | : | **சந்தை வீதி, செங்கலடி** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | : | **செங்கலடி – 2** |
| **பிறந்த திகதி** | : | **1989.05.22** |
| **வயது** | : | **23** |
| **துறை** | : | **நாடகம்** |
| **தொழில்** | : | **மாணவி** |

- இவர் செங்கலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர்.
- இவர் தற்போது கிழக்குப்பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருக்கின்றார்.
- இவர் செங்கலடி மத்திய கல்லூரியில் படித்துக் கொண்டியிருக்கும் போது பல நாடகங்களை நடித்திருக்கின்றார்.
- தமிழ் தினப் போட்டிகளிலும் ஆங்கில தினப் போட்டிகளிலும் நாடகங்களை நடித்திருக்கின்றார்.
- இவர் பல கூத்துக்களையும் நடித்திருக்கிறார். சகுந்தலை வடமோடி நாட்டுக்கூத்தில் பாத்திரம் ஏற்று நடித்திருக்கின்றார்.
- பல்கலைக்கழகத்தில் படிக்கும் போது பல தெருக்கூத்துக்களையும் ஆற்றுகைகளையும் செய்திருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திருமதி. ஞானதேவி பொன்னுத்துரை |
| முகவரி | : | பாடசாலை வீதி, மயிலம்பாவெளி, தன்னாமுனை |
| பிறந்த திகதி | : | 1937.01.12 |
| வயது | : | 75 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | தன்னாமுனை |
| துறை | : | இசை |
| தொழில் | : | ஆசிரியை |

- இவர் யாழ்ப்பாணம் பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், மயிலம்பாவெளியினை வசிப்பிடமாகவும் கொண்டவர். தனது ஆரம்பக் கல்வியை பருத்தித்துறை மெதடிஸ்த கல்லூரியிலும் தரம் 06 தொடக்கம் சாதாரண தர கல்வி வரை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியிலும் கற்றார்.

- இவர் பாடசாலைக் காலத்திலிருந்து இசைமீது கொண்ட அதீத ஆர்வத்தினால் வல்வெட்டித்துறை கமலவதனா பெரியதம்பி அவர்களிடம் சங்கீதம் கற்றார். பின் வட இந்திய சங்கீத சபையில் சங்கீதம் கற்று தனது இசை அறிவை மேம்படுத்தினார்.

- 1973 காலப்பகுதியில் பருத்தித்துறை வேலாயுதர் வித்தியாலயத்தில் பகுதி நேர சங்கீத ஆசிரியராகவும் அதன் பின் யாழ் கரவெட்டி வித்தியாலயத்திலும் சங்கீதம் கற்பித்தார்.

- 1975ல் தன் கணவரின் சொந்த ஊரான மட்டக்களப்பிற்கு வந்தார். அங்கு ஏறாவூரில் இருந்து பின் மயிலம்பாவெளிக்கு வந்து நிரந்தரமாக குடியேறினார்.

- 1986ம் ஆண்டளவில் மட்டு நகருக்கு வந்து சங்கீத பிரத்தியேக வகுப்புக்களை நடத்தி வந்தார். அதன் மூலம் ஏராளமான சங்கீத கலைஞர்களை உருவாக்கியுள்ளார். அதன் பின் 2004ம் ஆண்டு முதல் 2007 வரை மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் ஆசிரியராக கடமையாற்றினார்.

- பின் 2006ல் இருந்து 2012 தற்போது வரை கருணாலயத்தில் உள்ள ஆண் பிள்ளைகளுக்கு இசை வகுப்புக்களையும் வாழும் கலை அமைப்பில் 2010 முதல் பெண்களுக்கான இசை வகுப்புக்களையும் நடாத்தி வருகின்றார்.

- வட இந்திய சங்கீத சபையினால் நடத்தப்பட்ட போட்டிகளில் பங்கேற்று பரிசில்களையும் பெற்றுள்ளார். அத்தோடு 1958ல் வட மாகாண ஆசிரியர் சங்கம் நடத்திய போட்டிகளில் முதலிடம் பெற்றுள்ளார்.

- 2004, 2006களில் பயிற்சி கலாசாலையில் சிறந்த சங்கீத ஆசிரியருக்கான விருதுகளைப் பெற்றுள்ளார்.

- இவரால் கற்பிக்கப்பட்ட பலர் சங்கீத ஆசிரியர்களாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திருமதி. மங்கம்மா சோதிநாதன் |
| முகவரி | : | வேலாயுதம் வீதி, சித்தாண்டி – 04 |
| பிறந்த திகதி | : | 14.01.1969 |
| வயது | : | 43 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | சித்தாண்டி – 04 |
| துறை | : | இசை |
| தொழில் | : | ஆசிரியை (கர்நாடக சங்கீதம்) |
| விருது | : | இசைக்கலைமாமணி |

- இவர் சித்தாண்டியைப் பிறப்பிடமாகவும்,வசிப்பிடமாகவும் கொண்டவர்.
- இவர் தனது ஆரம்பக் கல்வியை மட்/சித்தாண்டி ஸ்ரீராமகிருஷ்ண வித்தியாலயத்தில் கற்று உயர் கல்வியை மட்/வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் கற்றார்.
- இவர் மட்டக்களப்பு விபுலானந்தா இசைநடனக்கல்லூரியில் 04 வருடம் டிப்ளோமா பட்டப்படிப்பை மேற்கொண்டு 1992ம் ஆண்டு பட்டம் பெற்றார்.
- இவர் அகில இலங்கை இளைஞர் கழக இசைப்போட்டியில் தொடர்ந்து 10 வருடங்கள் வாத்திய இசையில் (தேசியமட்டம்) முதலாம் இடத்தைப் பெற்றார்.
- வடஇலங்கை சங்கீத சபை தரம் 1 – தரம் 5 வரை வாய்ப்பாட்டில் முதலாம் தரத்தில் சித்தியெய்தினார்.வயலின் தரம் 1 – தரம் 5 வரை இரண்டாம் தரத்தில் சித்தியெய்தினார்.
- 1992ம் ஆண்டிலிருந்து 1996 வரை மட்/வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் தொண்டராசிரியராக கடமையாற்றினார்.
- 1997ல் முதல் நியமனம் மட்/வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் இரண்டு வருடங்கள் கடமையாற்றினார்.
- 1999ம் ஆண்டு தொடக்கம் 2001ம் ஆண்டு வரை யாழ் அரசினர் ஆசிரியர் கலாசாலையில் ஆசிரியப் பயிற்சி பெற்றார்.
- 2001ம் ஆண்டில் இருந்து 2011ம் ஆண்டு வரை மட்/செங்கலடி மத்திய கல்லூரியில் ஆசிரியையாக இருந்தார்.
- 2011ம் ஆண்டில் இருந்து இன்று வரையும் மட்/கறுவாக்கேணி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார்.
- இவர் பண்ணிசை வகுப்புக்களை நடாத்தல், பஜனைப் பாடல்களை கற்றுக் கொடுத்தல், அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கு பண்ணிசை கற்பித்தல் போன்றவற்றை செய்து வருகின்றார்.
- மற்றும் தமிழ்மொழித் தினத்துக்கு மாணவர்களை ஆயத்தம் செய்தல்.
- கலாசாரப் போட்டி, தமிழ்மொழித்தினப் போட்டி, பண்ணிசைப் போட்டி போன்றவற்றுக்கு மத்தியஸ்தம் வகித்தல் போன்ற சேவைகளையும் செய்து வருகின்றார்.
- மட்/செங்கலடி மத்திய கல்லூரி மாணவியான செல்வி. சர்மிலா பிரபாகரன் அவர்களின் நாட்டிய நிருத்தனாஞ்சலிக்கு வாய்ப்பாட்டு இசை வழங்கியது.
- ஒவ்வொரு வருடமும் சித்தாண்டி ஸ்ரீசித்திரவேலாயுதர் மகோற்சவ இறுதி நாளில் தனி இசைக் கச்சேரி நிகழ்த்துகின்றமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திருமதி. கிறிஷாந்தி பத்மவேணி சிறிதரன் |
| முகவரி | : | போதகர் வீதி, செங்கலடி |
| பிறந்த திகதி | : | 20.07.1969 |
| வயது | : | 43 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | குமாரவேலியார் கிராமம் |
| துறை | : | இசைத்துறை (சங்கீதம்) |
| தொழில் | : | ஆசிரியர் |

- திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் போதகர் வீதி, செங்கலடியை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தனது ஆரம்பக் கல்வியை உவர்மலை விவேகானந்தா கல்லூரியிலும், உயர் கல்வியை திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்துமகளிர் தேசிய பாடசாலையிலும் கற்றார். அதன் பிற்பாடு மட்டக்களப்பு இசை நடனக் கல்லூரியில் 04 வருட சங்கீத டிப்ளோமாவைக் கற்றார்.
- அதன் பின்பு இசை நடனக் கல்லூரியில் பகுதிநேர விரிவுரையாளராக கடமையாற்றினார்.
- அதன் பின்பு 01.08.2000ம் ஆண்டு மட்/குடியிருப்பு கலைமகள் வித்தியாலயத்தில் ஆசிரியராக கடமையாற்றினார்.
- அதன் பின்பு 2004, 2006ம் ஆண்டு யாழ்ப்பாணம் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் கல்வி கற்று பயிற்றப்பட்ட ஆசிரியராக வெளியேறினார்.
- 2006ம் ஆண்டு ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராக கடமையாற்றி வருகின்றார்.
- வட இலங்கை சங்கீத சபையில் வாத்தியங்களை (வீணை) வாய்ப்பாட்டு என்பவற்றினை முறையாக கற்று சித்தி எய்தினார்.
- இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் வானொலி நிகழ்ச்சியில் வாய்ப்பாட்டுக் கச்சேரி நிகழ்வு செய்து இருப்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திருமதி. பரமேஸ்வரி ரவீந்திரன் |
| முகவரி | : | நல்லையா வீதி, சித்தாண்டி – 03 |
| பிறந்த திகதி | : | 14.01.1972 |
| வயது | : | 40 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | சித்தாண்டி – 03 |
| துறை | : | இசை |
| தொழில் | : | ஆசிரியை (கர்நாடக சங்கீதம்) |
| விருது | : | இசைக்கலைமாமணி (1999) |

- சித்தாண்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர்.
- இவர் தனது ஆரம்பக் கல்வியை மட்/சித்தாண்டி ஸ்ரீராமகிருஷ்ண வித்தியாலயத்தில் கற்று உயர் கல்வியை மட்/வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் கற்றார்.
- மட்/கல்லடி விபுலானந்தா இசை நடனக் கல்லூரியில் பயின்று சங்கீத டிப்ளோமா பட்டம் பெற்றார். அவரது இசைக் குருவாக விளங்கியவர் திருமதி.இராஜகுமாரி சோதிநாதன் ஆவார்.
- முதல் நியமனம் மட்/வந்தாறுமூலை விஷ்ணு மகா வித்தியாலயத்தில் ஆசிரியையாக கிடைக்கப் பெற்றது. (1999 – 2006)
- 2002ம் ஆண்டு தொடக்கம் 2004 வரை யாழ் கோப்பாய் அரசினர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்றப்பட்ட சங்கீதத்தைக் கற்றார்.
- 2006 மார்ச் மாதம் தொடக்கம் இன்றுவரையும் மட்/சந்திவெளி சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் கற்பித்துக் கொண்டிருக்கின்றார்.
- இவர் சங்கீத வகுப்புக்களை நடாத்துதல், பண்ணிசை கற்பித்துக் கொடுத்தல்.
- மற்றும் தமிழ்மொழித்தினம், கலாசாரப் போட்டிகள், பண்ணிசைப் போட்டிகள் போன்றவற்றுக்கு மத்தியஸ்தம் வகித்தல் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திரு. செல்வராசா இராஜேந்திரன் |
| முகவரி | : | ஹட்ணாபுரம், ஐயங்கேணி, செங்கலடி |
| பிறந்த திகதி | : | 28.06.1980 |
| வயது | : | 32 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | ஐயங்கேணி |
| துறை | : | இசைத்துறை |
| தொழில் | : | பட்டதாரி பயிற்சியாளர் |

- இவர் வேப்பவெட்டுவானைப் பிறப்பிடமாகவும், ஐயங்கேணியை வசிப்பிடமாகவும் கொண்டவர்.
- இவர் இளமையிலே இரு கண்பார்வையும் இழந்தவர்.
- இவர் தனது ஆரம்பக் கல்வியை மட்டக்களப்பு தரிசனப் பாடசாலையில் கற்று கலைப்பட்டதாரியாக தற்போது இருக்கின்றார்.
- இவர் தனது க.பொ.த. உயர்தரத்தில் சங்கீதத்தினை ஒரு பாடமாக கற்றுள்ளார்.
- இவர் மாலை வேளைகளில் பாடசாலை மாணவர்களுக்கு சங்கீத வகுப்புக்களைச் செய்து வருகின்றார்.
- அது மட்டுமன்றி, தரிசன மாணவர்களுக்கும் வகுப்புக்களைச் செய்து வருகின்றார்.
- இவர் வட இலங்கை சங்கீத சபை பரீட்சையில் தோற்றி சித்தியடைந்துள்ளார்.
- இவருக்கு சர்வதேச சிறுவர் தின விழாவில் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திருமதி. நிர்மலேஸ்வரி பிரசாந்த் |
| முகவரி | : | ஆண்டான் குளம், செங்கலடி |
| பிறந்த திகதி | : | 20.05.1981 |
| வயது | : | 31 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | செங்கலடி |
| துறை | : | பண்ணிசை |
| தொழில் | : | விரிவுரையாளர் (சுவாமிவிபுலானந்தா இசைநடனக் கல்லூரி) |

- ❖ இவர் செங்கலடியைப் பிறப்பிடமாகவும், மட்டக்களப்பினை வசிப்பிடமாகவும் கொண்டவர்.
- ❖ இவர் இசைத்துறை முதுமாணிப்பட்டதாரியாவார். (தமிழ்நாடு இந்தியா)
- ❖ இவருக்கு தமிழ்நாட்டிலுள்ள திருவாவடுதுறை ஆதின இயக்குனர் உயர்திரு. கு. வைத்தியநாதன் அவர்களால் "சித்தாந்த இரத்தினம்" என்னும் சிறப்புப்பட்டம் 2007 ஆம் ஆண்டு வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.
- ❖ இவர் கல்வி பயிலும் காலத்தில் இருந்தே ஞாயிறு தோறும் நடைபெறும் அறநெறிப் பாடசாலைகளுக்குச் சென்று சைவசமயக் கல்வி புகட்டினார்.
- ❖ சைவத்திருமுறைகளைப் பண்ணோடு பாட மாணவர்களை பயிற்றுவித்தார்.
- ❖ குறிப்பாக இவர் கொம்மாதுறை விபுலானந்தா அறநெறிப்பாடசாலையில் 1999 – 2003 வரை ஆசிரியராக சேவையாற்றினார்.
- ❖ அறநெறி மாணவர்களுக்குப் பண்ணிசை, பஜனை, பக்தி நாடகங்கள் போன்ற துறைகளில் பயிற்றுவித்து சிறப்பு பெற்றுள்ளார்.
- ❖ செங்கலடி சிவதொண்டன் நிலையத்தில் இடம் பெறும் ஆண்டு நிறைவு விழாக்களில் மாணவர்களைப் போட்டி நிகழ்வுகளில் பங்கு கொள்ளச் செய்து பாராட்டும் பெற்றுள்ளார்.
- ❖ இவர் சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் இசைமாணிப்பட்டம் பெற்று தாய்நாடு திரும்பி பின்னர் இந்து கலாசார திணைக்களம் இவரை பகுதிநேர சைவப் போதனாசிரியராக நியமனம் செய்தது.
- ❖ அதன் படி வாரந்தோறும் ஞாயிறு அறநெறிப்பாடசாலை (ஏறாவூர்ப்பற்று பிரதேசம்) ஆசிரியராக கடமையாற்றி மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் நன்மதிப்பை பெற்றுள்ளார்
- ❖ இவர் விரிவுரையாளராக நியமனம் பெற்ற பின்னரும் இப்பணியை தொடர்ந்து மேற்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.
- ❖ சித்தாண்டியில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி தேவஸ்தான வருடாந்த உற்சவ காலங்களில் இவரது கதாகலாட்சேபங்கள் இடம்பெற்று முருக பக்தர்களை பக்தி நெறிக்குள் ஈர்க்கும், அதே போன்று மயிலம்பாவெளி கருணாலயம் ஆண்டு விழாக்கள், சித்தாண்டி யோகசுவாமி மகளிர் இல்ல ஆண்டு விழாக்கள் போன்ற சிறப்பு நிகழ்வுகளுக்கு அவற்றின் இயக்குனர்களின் அழைப்புக்கிணங்க மாணவர்கள் சகிதம் பங்கு பற்றிச் சிறப்பிப்பது இவரது சேவைகளில் முதன்மையானதாகும்.
- ❖ தன்நலம் கருதாது சைவத்திற்கும் தமிழுக்கும் தொண்டாற்றி வரும் இவ்வாறான கலைஞர்களைக் கௌரவிப்பதும் விபரங்களை ஆவணப்படுத்துவதும் பிரதேச செயலக கலாசார மன்றத்துக்குப் பொருத்தமான பணியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| முழுப்பெயர் | : திரு. கருப்பையா இராஜரெட்ணம் |
| முகவரி | : 405/8, அம்பலவாணர் வீதி, ஏறாவூர் –05 |
| பிறந்த திகதி | : 1952.05.22 |
| வயது | : 60 |
| கிராமசேவையாளர் பிரிவு | : ஏறாவூர் –05 |
| துறை | : புகைப்படக்கலை |
| தொழில் | : புகைப்படப்பிடிப்பாளர் |

- இவர் கண்டியைப் பிறப்பிடமாகவும், ஏறாவூர் - 05ஐ வசிப்பிடமாகவும் கொண்டவர். ஆரம்பக்கல்வியை வத்தேகம மத்திய கல்லூாயிரில் க.பொ.த (உ.த) சிங்கள மொழியில் கற்றார்.

- தனது உறவினரின் உதவியுடன் இக்கலையைப் பயின்று அவற்றினை தற்போது தொழிலாகச் செய்து வருகின்றார்.

- 1970ல் இருந்து இன்று வரையும் இக் கலையை செய்து வருகின்றார்.

- ஆரம்பத்தில் விளக்கம் வைற் போட்டோவைத் தயாரித்து வந்தார். தற்போது கணனியின் உதவியுடன் டிஜிற்றல் போட்டோவையும் வடிவமைத்து வருகின்றார்.

- பிறந்த நாள் வைபவங்கள், விசேட நிகழ்வுகள் ஊடகங்களுக்குத் தேவையான போது தேவையான போட்டோக்களை வழங்கிவருகிறார்.

- செங்கலடியில் முதல் முதல் இவரது வீடியோ ஆரம்பிக்கப்பட்டது. கமல்ராஜ் ஸ்ருடியோ சேவை வழங்கிக் கொண்டு வருகின்றது.

- பிலிம் புரோடக்சன் நிலையத்தினால் சகானா கலர் லேப் ஊடாக 3 நாள் பாசறை நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட அனுபவம் அவருக்கு கிடைத்தது.

- கொடக்கம்பனியின் பல்வேறு நிகழ்வுகளல் கலந்து கொண்டு பல அனுபவங்களைப் பெற்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| **முழுப்பெயர்** | **: திரு. ஐயாத்துரை கோபாலகிருஷ்ணன்** |
| **முகவரி** | **: போதகர் வீதி செங்கலடி** |
| **பிறந்த திகதி** | **: 16.05.1953** |
| **வயது** | **: 59** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | **: குமாரவேலியார் கிராமம்** |
| **துறை** | **: புகைப்படக்கலை** |
| **தொழில்** | **: புகைப்படம் பிடிப்பாளர்** |

- ❖ பங்குடாவெளியைப் பிறப்பிடமாகவும், குமாரவேலியார் கிராமம் செங்கலடியை வசிப்பிடமாகவும் கொண்டவர்.

- ❖ இவர் தனது ஆரம்பக் கல்வியை ஏறாவூர் அலிகார் மகா வித்தியாலயத்திலும் எஸ்.எஸ்.சி வரை கல்வி பயின்று இருக்கின்றார்.

- ❖ இவர் இப்புகைப்படக்கலையை 1988ம் ஆண்டில் இருந்து இன்று வரை செய்து வருகின்றார்.

- ❖ இவர் செங்கலடியைச் சேர்ந்த சண்முகம் கணேசமூர்த்தியிடம் இப்புகைப் படக்கலையை பயின்றவர்.

- ❖ இவர் பல்வேறு வகையான போட்டோ வகைகளை செய்து வருகின்றார். நிழற்போட்டோ,அடையாள அட்டை பெறுவதற்கான போட்டோ, திருமணப் போட்டோ, பிறந்த நாள் போட்டோ, போட்டோக்களை அழகுபடுத்தல், கணனி வடிவமைத்து நவீனமயப்படுத்தல், போன்ற திட்டங்களை மேற்கொண்டு வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| முழுப்பெயர் | : பேரின்பநாயகம் வரதராஜன் |
| முகவரி | : வேக்கவுஸ் வீதி, வந்தாறுமூலை |
| பிறந்த திகதி | : 15.04.1963 |
| வயது | : 49 |
| கிராமசேவையாளர் பிரிவு | : வந்தாறுமூலை |
| துறை | : புகைப்படக்கலை |
| தொழில் | : புகைப் படப்பிடிப்பாளர் |

- ❖ இவர் வந்தாறுமூலையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர். இவர் க.பொ.த உயர்தரம் வரை கல்வி பயின்றுள்ளார். இவர் புகைப்படக் கலையை 1985ம் ஆண்டில் இருந்து செய்து வருகின்றார்.
- ❖ நிழல் படங்கள் தயாரித்தல், திருமணம் மற்றும் பிறந்தநாள் புகைப்படங்கள் எடுப்பதில் திறமைமிக்கவர். அத்துடன் டிஜிட்டல் போட்டோக்கள், குறும் திரைப்படம் தயாரிப்பதற்கான காட்சிகளை மிக நுணுக்கமாகப் படம் பிடித்து காட்சிப் படுத்தும் வல்லவராகத் திகழ்கின்றார்.



| | |
|---|---|
| முழுப்பெயர் | : அமரர். சண்முகம் கணேசமூர்த்தி |
| முகவரி | : போதகர் வீதி, செங்கலடி |
| பிறந்த திகதி | : 1952.06.05 |
| இறந்த திகதி | : 1990.08.25 |
| வயது | : 38 |
| கிராமசேவையாளர் பிரிவு | : குமாரவேலியார் கிராமம், செங்கலடி |
| துறை | : புகைப்படத்துறை |
| தொழில் | : புகைப்படம் பிடிப்பாளர் |

- ❖ இவர் செங்கலடி குமாரவேலியார் கிராமத்தினை பிறப்பிடமாகக் கொண்டவர்.
- ❖ தற்போது இவரே இப்பிரதேசத்தின் மூத்த புகைப்படக் கலைஞரும் ஆவார்.

இவர் புகைப்படங்களை நுட்பமாக வடிவமைக்கும் ஆற்றல் படைத்தவர். வெளர் கீறி அதில் போட்டோக்களைப் பொருத்துதல் சித்திரம் வரைதல் கடைகளுக்கான போட்டோ அலங்காரங்களைச் செய்தல் போன்றவற்றில் கைவந்த கலைஞராக திகழ்ந்து இருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| முழுப்பெயர் | : திரு. ஆனந்த சயனம் ரமேஸ்குமார் |
| முகவரி | : எல்லை வீதி, செங்கலடி |
| பிறந்த திகதி | : 11.10.1976 |
| வயது | : 36 |
| கிராமசேவையாளர் பிரிவு | : எல்லை நகர் |
| துறை | : புகைப்படத்துறை |
| தொழில் | : புகைப்படம், வீடியோ எடுத்தல் |

மட்டக்களப்பினை பிறப்பிடமாகவும், செங்கலடியை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தனது ஆரம்பக் கல்வியை ஏறாவூர் தமிழ் மகாவித்தியாலயத்திலும் கற்று பின்னர் வீடியோக் கலையில் ஈடுபட்டார்.

புகைப்பட கருவி, வீடியோ என்பவற்றின் ஆரம்ப பயிற்சிகளை சகோதரன் ரவிக்குமாரிடமும் பின் வெளி நாட்டில் தொழில் வாய்ப்பு பெற்று சென்ற போது மேலதிக பயிற்சிகளை சுயமாக கணனி அறிவு மூலம் பெற்றுக் கொண்டவர்.



| | |
|---|---|
| முழுப் பெயர் | : இலட்சுமணன் தேவபிரதீபன் |
| முகவரி | : நூலக வீதி, வந்தாறுமூலை |
| பிறந்த திகதி | : 1981.12.19 |
| வயது | : 31 |
| கிராமசேவையாளர் பிரிவு | : வந்தாறுமூலை கிழக்கு |
| துறை | : புகைப்பட கலைஞர் |
| தொழில் | : புகைப்படப் பிடிப்பாளர் |

வந்தாறுமூலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொணடவர். வந்தாறுமூலை விஷ்னு வித்தியாலயத்தில் கா.பொ.த. (சா/த) வரை கற்ற இவர் தனது சகோதரரான தேவா தீபன் என்பவரிடம் இக் கலையை கற்று தற்போது முழு நேர புகைப்பட பிடிப்பாளராக இருக்கின்றார். சகல வகையான கலை நிகழ்வுகள் மங்கள நிகழ்வுகளையும் புகைப்படம் எடுத்து வருகின்றார். காட்சி பதிவுகள் மற்றும் காட்சிப் பதிவு இணைப்புகள் என்பவற்றை சிறப்பாக செய்து வருகின்றார். இது மட்டுமன்றி சிறந்த ஒருபாடகராகவும் இவர் திகழ்கின்றார். அத்துடன் குறும் திரைப்படங்கள் தயாரிப்பதிலும் அதனை வடிவமைப்பதிலும் வல்லவராக திகழ்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திருமதி. லெட்சுமி பொன்னுத்துரை |
| முகவரி | : | வேலாயுதம் வீதி, சித்தாண்டி – 04 |
| பிறந்த திகதி | : | 12.04.1957 |
| வயது | : | 55 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | சித்தாண்டி – 04 |
| தொழில் | : | ஆசிரியை |
| துறை | : | சித்திரம் |

- இவர் சித்தாண்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர்.
- இவர் தனது ஆரம்பக் கல்வியை மட்/சித்தாண்டி ஸ்ரீராமகிருஷ்ண வித்தியாலயத்தில் கற்று உயர் கல்வியை மட்/வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் கற்றார்.
- முதல் நியமனம் மட்/வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் 1990ம் ஆண்டு பெற்றார்.
- 1993ம் ஆண்டு தொடக்கம் 1994ம் வரை மட்/அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்றப்பட்ட பின் தொடர்ந்து 2009ம் ஆண்டு வரை மட்/வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் கற்பித்தார்.
- 2009ம் ஆண்டு தொடக்கம் இன்று வரையும் மட்/சந்திவெளி சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் கற்பித்துக் கொண்டிருக்கின்றார்.
- மாணவர்களை சித்திரப் போட்டிக்கு ஊக்குவித்தல், தேசியமட்டத்தில் வெற்றி பெறச் செய்தல்.
- மாணவர்களை சித்திரப் போட்டிக்கு ஊக்குவிப்புச் செய்தமைக்கு கௌரவிப்பு நடைபெற்றமையும் குறிப்பிடத்தக்கது.



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திரு. கணபதிப்பிள்ளை தங்கவடிவேல் |
| முகவரி | : | மயிலவட்டுவான், வந்தாறுமூலை |
| பிறந்த திகதி | : | 1962.04.21 |
| வயது | : | 50 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | மயிலவட்டவான் |
| துறை | : | ஓவியத்துறை |
| தொழில் | : | ஆசிரியர் |

- தம்பிலுவிலைப் பிறப்பிடமாகவும், மயிலவட்டுவானை வசிப்பிடமாகவும் கொண்டவர். கா.பொ. உயர்தரம் வர்த்தகப் பிரிவில் கல்விகற்ற இவர் தற்போது ஆசிரியராக கடமையாற்றுகின்றார்.
- இவர் ஆரம்பக்கல்வியை நிந்தவூர் அல் அஸ்ரகத் மகா வித்தியாலயத்தில் கா.பொ.த உயர் தரத்தினையும் இப்பாடசாலையில் கற்றார்.
- இவர் இந்த ஓவியக்கலையை தம்பிலுவிலைச் சேர்ந்த விநாயகமூர்த்தி என்பவரிடம் கேட்டு கற்று அறிந்தார், சுவர் ஓவியங்கள் மற்றும் பாடசாலைகளில் சித்திரப் போட்டிக்கு மாணவர்களைத் தயார்படுத்தல், பாடசாலைகளுக்கு இடையிலான சுவர் ஓவியப் போட்டிகளில் பாடசாலைக்கு சுவர் ஓவியங்கள் வரைதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திரு. அழகையா அச்சுதகுமார் |
| முகவரி | : | கணபதிப்பிள்ளை நகர், இல 08ம் குறுக்கு, செங்கலடி. |
| பிறந்த திகதி | : | 01.11.1973 |
| வயது | : | 39 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | செங்கலடி |
| துறை | : | ஓவியம் |
| தொழில் | : | சித்திர ஆசிரியர் |

- ❖ இவர் செட்டிபாளையத்தினை பிறப்பிடமாகவும், கணபதிப்பிள்ளைநகர் செங்கலடியை வசிப்பிடமாகவும் கொண்டவர்.

- ❖ தனது ஆரம்பக் கல்வியை மட்/செட்டிபாளையம் மகா வித்தியாலயத்தில் பயின்றார்.

- ❖ இவர் பாடசாலை வாழ்க்கையில் நடைபெறுகின்ற சித்திர போட்டிகளுக்குச் சென்று அதில் வெற்றிகளை பெற்றுள்ளார்.

- ❖ அது மட்டுமன்றி 18 வருடகாலமாக ஓவியங்களை வரைதல் போன்ற நிகழ்வுகளில் இவர் பாடசாலை அழகுபடுத்தல், சுவர் ஓவியங்களை வரைதல், பெனர் எழுதல், பெயர் பலகை வரைதல், திரைச் சீலைகளில் சித்திரம் வரைதல் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கான விளையாட்டுக்களுடன் தொடர்பான சிறுவர் சித்திரங்களை வரைதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திரு. ஞானசிங்கம் ரவிச்சந்திரன் |
| முகவரி | : | பிரதான வீதி, ஆறுமுகத்தான் குடியிருப்பு |
| பிறந்த திகதி | : | 1977.10.28 |
| வயது | : | 35 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | ஆறுமுகத்தான் குடியிருப்பு – 02 |
| துறை | : | சித்திரம் |
| தொழில் | : | ஆசிரியர் |

- ❖ இவர் சின்ன ஊறணியைப் பிறப்பிடமாகவும், ஆறுமுகத்தான் குடியிருப்பை வசிப்பிடமாகவும் கொண்டவர்.
- ❖ இவர் தனது ஆரம்பக்கல்வியை ஊறணி சரஸ்வதி வித்தியாலயத்திலும் உயர்தரக்கல்வியை மட்/இந்துக்கல்லூரியிலும் கற்றார்.
- ❖ இவர் பாடசாலையில் படிக்கும் போது சித்திரப் போட்டிக்கு தோற்றி பரிசில்களை பெற்றுள்ளார்.
- ❖ இவர் சுவாமி படங்களை வரைதல், கோபுரங்களுக்கான வர்ணங்கள் பூசுதல், திரைச்சீலை வரைதல். இவரது திரைச்சீலைகள் இலங்கையில் பிரசித்தி பெற்ற முருகன் ஆலயமான கதிர்காமத்திலும், மன்னம்பிட்டி பிள்ளையார் ஆலயத்திலும் காணப்படுகின்றது. இப்போது 50க்கும் மேற்பட்ட திரைச்சீலைகளில் ஓவியங்கள் வரைந்துள்ளார்.
- ❖ இவர் பாடசாலைகளுக்கிடையிலான சுவர் சித்திர போட்டிகளில் மட்/இந்துக்கல்லூரியில் வரைந்து பரிசில்களும் பெற்றுள்ளார்.
- ❖ சிவதொண்டன் நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட சித்திர போட்டியில் பங்குபற்றி பரிசுகள் பெற்றுள்ளார்.
- ❖ அதுமட்டுமன்றி மாகாண, தேசிய மட்டத்தில் தோற்றி பரிசில்கள் பெற்றிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| **முழுப்பெயர்** | : | **திரு. சிவராசா மௌனேஸ்** |
| **முகவரி** | : | **ஏறாவூர் – 04** |
| **பிறந்த திகதி** | : | **1977.05.26** |
| **வயது** | : | **35** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | : | **ஏறாவூர் – 04** |
| **துறை** | : | **ஓவியம்** |
| **தொழில்** | : | **நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்** |

- ❖ ஏறாவூர் - 04 பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தனது ஆரம்பக் கல்வியை ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலயத்திலும் கா.பொ.த உயர் தரத்தினை மட்டக்களப்பு இந்துக்கல்லூரியிலும் கற்றார்.
- ❖ இவர் பாடசாலை படிக்கும் போது இடம்பெறுகின்ற ஓவியப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றிச் சான்றிதழ்களையும் பெற்று இருக்கின்றார்.
- ❖ சுவர் ஓவியம், அட்டைப்படம் வரைதல், திரைச்சீலை போன்றவற்றினை செய்து வருகின்றார்.
- ❖ பல்கலைக்கழக வெளியீட்டுச் சஞ்சிகைக்கு கோட்டு வர்ண சித்திரங்களை வரைதல்.
- ❖ மட்டக்களப்பில் இருந்து வரும் செங்கதிர் சஞ்சிகையின் ஓவிய ஆசிரியராகவும் திகழ்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.



| | | |
|---|---|---|
| **முழுப்பெயர்** | : | **திரு. கனகரெட்ணம் சிவநாதன்** |
| **முகவரி** | : | **உமாமில் வீதி, கொம்மாதுறை** |
| **பிறந்த திகதி** | : | **26.07.1978** |
| **வயது** | : | **34** |
| **கிராம சேவையாளர் பிரிவு** | : | **கொம்மாதுறை கிழக்கு** |
| **தொழில்** | : | **மாணவன்** |
| **துறை** | : | **வர்ணக்கலைஞர்** |

- ❖ இவர் உமாமில் வீதி, கொம்மாதுறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.
- ❖ இவர் செங்கலடி மத்திய கல்லூரியில் க.பொத. உயர்தரம் கற்றார்.
- ❖ இவர் இளமையில் இருந்து சித்திரம் வரைதல், போன்ற நிகழ்வுகளில் ஈடுபட்டு வருகின்றார்.
- ❖ பாடசாலையில் நடைபெறும் சித்திரப் போட்டிகளில் கலந்து கொண்டு பல பரிசில்களை பெற்றுள்ளார்.
- ❖ தற்போது வீட்டில் இருந்து கொண்டு பல அலங்கார வேலைகளைச் செய்து கொண்டு இருக்கின்றார்.
- ❖ அது மட்டுமன்றி பல சித்திரங்களை வரைந்து அதற்கு வர்ணம் பூசும் நிகழ்வில் ஈடுபட்டு வருமானம் பெற்று வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| **முழுப்பெயர்** | : | **திரு. சின்னத்தம்பி சிவநாதன் (வரதன்)** |
| **முகவரி** | : | **முருகன் கோவில் வீதி, சித்தாண்டி – 03** |
| **பிறந்த திகதி** | : | **1980.10.14** |
| **வயது** | : | **32** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | : | **சித்தாண்டி – 03** |
| **துறை** | : | **ஓவியத்துறை (வர்ணவேலை)** |
| **தொழில்** | : | **ஓவியர்** |

❖ இவர் சித்தாண்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர்.

❖ இவர் தனது ஆரம்பக் கல்வியை மட்/சித்தாண்டி இராமகிருஸ்ணமிஸன் பாடசாலையிலும், க.பொ.த. சா.தரம் வரை மட்/வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்திலும் கல்வி கற்றுள்ளார்.

❖ இவர் சிறுவயதில் இருந்து ஓவியக்கலை மீது அதித ஆர்வம் கொண்டவராகவும் பாடசாலைக்காலத்தில் இருந்து ஓவியங்களை சிறப்பாக வரையவும் கற்றுக் கொண்டார்.

❖ இவர் இந்தியாவைச் சேர்ந்த பாஸ்கர், பாலு என்பவரை தனது குருவாக கொண்டு 1996ம் ஆண்டு முதல் வர்ண வேலைகளைச் செய்து வருகிறார்.

❖ சுவர் ஓவியங்கள், ஆலய சிற்ப வர்ண வேலைகள், அவதார புராணக் கதைகளில் வரும் காட்சிகள் என்பவற்றை வரைந்து வருகிறார்.

❖ இவர் சித்தாண்டி ஸ்ரீசித்திரவேலாயுத சுவாமி ஆலய வர்ண வேலைகளை தனது ஆரம்பமாக கொண்டு அதன்பின் வல்வெட்டித்துறை சிவனாலயம், தம்பலகாமம் கோணேசர் கோயில், மாமாங்கேஸ்வரர் ஆலயம், கொம்மாதுறை நாகபூசணி அம்மன் ஆலயம், கொம்மாதுறை காளிகோயில், கண்டி கட்டுகஸ்தோட்டை காட்டுமாரியம்மன் கோயில், கட்டன் வட்டவளை ஆஞ்சநேயர் கோவில், மாத்தளை நத்தோட்ட சித்தி விநாயகர் கோவில், பெரிய கல்லாறு பிள்ளையார் கோவில், வாழைச்சேனை கலாசார மண்டபம், செங்கலடி பதுளை வீதி சர்வ சித்தி விநாயகர் ஆலயம் ஆகிய ஆலயங்களில் இவரது ஓவிய கைவண்ணங்களை காணக் கூடியதாக உள்ளது.

❖ இவருக்கு கிடைத்த விருதுகள்

1. சப்தரிஷி இந்து குருபீடம் - 2008.06.06ல் வர்ண கலை திலகம்
2. 2006ல் வந்தாறுமூலை மகா விஷ்ணு தேவஸ்தானம் வர்ணக்கலை மாமணி
3. 2008ல் வந்தாறுமூலை மகா விஷ்ணு தேவஸ்தானம் வர்ணக்கலை வாரிதி
4. 2008ல் கொம்மாதுறை மதுராபுரி அருள் மிகு அரசயடி ஸ்ரீ நாக பூசணி அம்மன் ஆலய பரிபாலன சபை வர்ண கலா ஜோதி
5. 2011ல் சித்தாண்டி ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலய பரிபாலன சபை வர்ண கலை திலகம் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திரு. சுசீமன் நிர்மலவாசன் |
| முகவரி | : | 2/1 கணபதிப்பிள்ளை நகர், செங்கலடி |
| பிறந்த திகதி | : | 03.07.1982 |
| வயது | : | 30 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | செங்கலடி |
| துறை | : | ஓவியம் |
| தொழில் | : | ஆசிரியர் |

❖ இவர் கணபதிப்பிள்ளை நகர் செங்கலடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இளமையில் இருந்து ஓவியங்களை வரைவதில் ஈடுபட்டு வருகின்றார்.

❖ இவர் இயல்பாகவே ஓவியங்களை வரையும் ஆற்றல் மிக்கவர்.

❖ பல்வேறு தலைப்பின் கீழ் ஓவியங்களை வரைந்துள்ளார். அவை பின்வருமாறு,

01. கருவாடு – 01 – 2004ம் ஆண்டு
02. கருவாடு – 02 – 2004
03. கருவாடுகளுடன் யுத்தம் - 2010
04. கருவாட்டுப்பானை – நடத்தல் - 2010
05. கருவாடுகளின் மேல் - நடத்தல் - 2010
06. அருபமாதல் - 01 - 2008
07. அருபமாதல் - 02 – 2010
08. பட்டாம் பூச்சியாதல் - 01 – 2010
09. பட்டாம் பூச்சியாதல் - 02 – 2010
10. தலைப்பிடாதது - 2010
11. மரங்கொத்தி – 2009
12. வெள்ளைக்கையுறை – 2009
13. வெள்ளைக்காராம் பசு – 2008
14. தலைப்பிடாதது - 2009
15. நாகாஸ்த்திரம் - 2010
16. அகராதித் தெரு – 2010
17. நேற்றைத்தேடுதல்
18. அலவாங்கை விழுங்குதல் - 2010
19. சொர்க்கத்தில் இரவு - 2010
20. என்னை தேடுதல் - 2009
21. வயிறுகளின் வரிசை - 2008
22. கெட்ட நேரம்

இவற்றினை மட்டக்களப்பு சாள்ஸ் மண்டபத்தில் 17.09.2010 கண்காட்சிக்கு வைத்திருந்தார்.

**தனிக் கண்காட்சி**

"தூசு"
2008 – ஓவிய தாபனக் கலை கண்காட்சி, Third Eye, மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2004 – "உணர்வுகளின் உரையாடல்" ஓவிய தாபனக்கலை கண்காட்சி கிழக்கு பல்கலைக்கழகம், மட்டக்களப்பு.

நுண்கலைப்பிரிவு

2003 – "துன்பத்திற்கான தூரிகையின் பிரதிபலிப்பு", ஓவிய தாபனக்கலை கண்காட்சி
2001 – ஓவிய கண்காட்சி புனித மிக்கேல் கல்லூரி, தேசிய பாடசாலை மடடக்களப்பு.

குழுக்கண்காட்சி

2007 – "வாழ்விடம்" ஓவியக்கண்காட்சி, Third Eye, மட்டக்களப்பு.
2007 – "பேசும் தூரிகை" ஓவியக்கண்காட்சி
தேசிய கல்வியல் கல்லூரி, யாழ்ப்பாணம்
2005 – "பேசும் தூரிகை" - ஓவிய, தாபனக்கலை கண்காட்சி
தேசிய கல்வியல் கல்லூரி, யாழ்ப்பாணம்
2004 – "Kala – Pola" ஓவியக்கண்காட்சி
George Keyte Founation கொழும்பு.
2003 – "Kala – Pola" ஓவியக்கண்காட்சி
George Keyte Founation கொழும்பு.
2003 – ஓவியக்கண்காட்சி ஒருங்கிணைப்பாளர்கள் :-
வடக்கு கிழக்கு மாகாண சபை, திருகோணமலை.
2003 – சர்வதேச நாடக மாநாடு Third Eye மட்டக்களப்பு
2002 – பொருண்மிய கண்காட்சி மட்டக்களப்பு
2002 – கல்வி கண்காட்சி ஒருங்கிணைப்பாளர்கள்:-
கல்வி திணைக்களம், கோறளைப்பற்று, செங்கலடி
2002 – மிலேனியம் கண்காட்சி கல்லாறு மட்டக்களப்பு போன்ற செயல்பாடுகளை செய்து வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திரு. மூத்ததம்பி சசிகுமார் |
| முகவரி | : | இல.147, கோயில் பின் வீதி, சித்தாண்டி–3 |
| பிறந்த திகதி | : | 20.04.1987 |
| வயது | : | 25 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | சித்தாண்டி–3 |
| துறை | : | ஓவியம் |
| தொழில் | : | ஓவியர் |

- ❖ மட் வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் க.பொ.த உயர்தரம் கற்று கிழக்குப் பல்கலைக் கழக சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் கட்புலக் கலைத்துறையில் இளங்கலைப் பட்டம் பெற்றமை.

- ❖ ஆறு வருடங்களாக ஓவியத்துறையில் ஈடுபாடு

- ❖ ஓவியம் தொடர்பான பயிற்சிப் பட்டறைகள் நடாத்தலும், க.பொ.த உயர் தரத்தில் சித்திரக்கலையை பயிலும் மாணவர்களுக்கு பிரத்தியேக வகுப்புக்களை நடாத்துதல

- ❖ பெற்றுக் கொண்ட விருதுகள்
  - இளைஞர் விருது - 2008
  - இளைஞர் விவகார அமைச்சின் ஓவியப் போட்டி (முதலாமிடம், மாவட்ட மட்டம்)
  - ஓவியப் போட்டி – தேசியமட்டம் முதலாமிடம் (2000)
  - சிறந்த ஓவியருக்கான விருது (Mines Risk Education)
  - AUS AID,CDF இணைந்து நடாத்திய ஓவியப் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலாமிடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திரு. சுசீமன் நிரோசன் |
| முகவரி | : | 2/1 கணபதிப்பிள்ளை நகர், செங்கலடி |
| பிறந்த திகதி | : | 19.03.1993 |
| வயது | : | 19 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | செங்கலடி |
| துறை | : | ஓவியம் |
| தொழில் | : | மாணவன் |

- ❖ இவர் கணபதிப்பிள்ளை நகர் செங்கலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர்.
- ❖ தனது ஆரம்பக் கல்வியை மட்/செங்கலடி மத்திய கல்லூரியிலும் க.பொ.த உயர்தரக்கல்வியை மெதடிஸ்த மத்திய கல்லூரியிலும் கற்று வருகின்றார்.
- ❖ இவர் பாடசாலையில் படிக்கும் போது இவ் ஓவியக்கலையில் மிகவும் ஈடுபாடுடையவராகக் காணப்பட்டு வருகின்றார்.
- ❖ பாடசாலையில் நடைபெறுகின்ற சகல சித்திர, ஓவியப் போட்டிகளிலும் பங்கு பற்றி பல சான்றிதழ்களையும் பெற்றுள்ளார்.
- ❖ 2011ம் ஆண்டு தேசிய மரவுரிமைகள் அமைச்சினால் நடாத்தப்பட்ட ஓவியக் கண்காட்சிப் போட்டியில் இவரது ஒவியம் தேசிய ரீதியில் தெரிவு செய்யப்பட்டது. குறிப்பிடத்தக்கது.



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திரு. உதயகுமார் உதயபிரகலாதன் |
| முகவரி | : | சவுக்கடி வீதி, தளவாய் |
| பிறந்த திகதி | : | 1997.03.03 |
| வயது | : | 15 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | தளவாய் |
| துறை | : | ஓவியம் |
| தொழில் | : | இல்லை |

- ❖ தளவாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர்.
- ❖ தளவாய் விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் தற்போது தரம் 10ல் கல்வி கற்று வருகின்றார்.
- ❖ சிறு வயது முதல் இயல்பாக ஓவியம் வரையும் திறமை கொண்டவராகத் திகழ்கின்றார்.
- ❖ பாடசாலை ரீதியான ஓவியப் போட்டிகளில் பங்கேற்று இருக்கிறார்.
- ❖ 2011 மற்றும் 2012ம் ஆண்டுகளில் வந்தாறுமூலை தேவபுரம் வேல்ட் விசன் நிறுவனத்தால் நடத்தப்பட்ட ஓவியப்போட்டிகளில் பங்கெடுத்து பரிசில்களை பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| **முழுப்பெயர்** | : | **அமரர் கலையப்பெருமாள் கோவிந்தசாமி** |
| **முகவரி** | : | **சித்தாண்டி – 03** |
| **பிறந்த திகதி** | : | **1909.02.05** |
| **இறந்த திகதி** | : | **2000.05.08** |
| **வயது** | : | **91** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | : | **சித்தாண்டி** |
| **துறை** | : | **சிற்பம்** |
| **தொழில்** | : | **சிற்பவேலை** |

- இவர் தஞ்சாவூரை பிறப்பிடமாகவும், சித்தாண்டியை வசிப்பிடமாகவும் கொண்டவர்.

- 1962ல் கண்டி புனித தலதா மாளிகைக்கு நிலத்தூண், அடித்தள கருங்கல் வேலைகள் என்பன நிர்மாணிக்க முதன்முதல் இலங்கை வந்தார்.

- பேராதனை வளாகத்தில் அடித்த கருங்கல் வேலைகள், சந்திரவட்டக்கல் என்பன அமைப்பதில் பங்கேற்றார்.

- 1938ல் அநுராதபுரத்தில் பிரசித்திபெற்ற 'றுவான்வெலிசாய' விகாரையின் கருங்கல்லிலான முகப்பு வேலைகள் - அடித்தளங்கள் போன்றவற்றை அமைப்பதிலும் பங்கேற்றார்.

- 1941ல் கொழும்பு, பேலியகொட வினாயகர் கோயிலில் கோமுகிக் கற்கள், கருங்கல் வேலைகளை மேற்கொண்டார்.

- 1956ல் சித்தாண்டி ஸ்ரீமுருகன் ஆலய இராஜகோபுர நிர்மாண வேலைகளுக்காக அழைக்கப்பட்டதன் பேரில் இங்கு வந்தார்.

- ஆனைப்பந்தி பிள்ளையார் கோயில், கல்முனை பிள்ளையார் கோவில், கொக்கட்டிச்சோலை தான்தோன்றிஸ்வரர் கோவில், பரமநயனார் கோவில், ஏறாவூர் 05ல் அமைந்துள்ள வீரபுத்திரர் கோவில் ஆகியவற்றின் மூலஸ்தான தளவேலைகள், அட்டபாலகர் திருவுருவச் சிலைகள், கோமுகிக் கற்கள், சிற்பங்கள் போன்றவற்றை கருங்கல்லில் வடிவமைத்துள்ளார்.

- அருகிப் போகும் இவ்வருங்கலையை வளர்ப்பதில் அயராது பாடுபட்டார், தற்போது அமரத்துவம் அடைந்து விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| முழுப்பெயர் | : திரு. வேலுப்பிள்ளை கனகசபாவதி |
| முகவரி | : சின்னக்கொலனி, பங்குடாவெளி |
| பிறந்த திகதி | : 1941.06.25 |
| வயது | : 71 |
| கிராமசேவையாளர் பிரிவு | : பங்குடாவெளி |
| துறை | : சிற்பத்துறை |
| தொழில் | : சிற்பவேலை |

❖ இவர் கொம்மாதுறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பங்குடாவெளியிலுள்ள சின்னக்கொலனியில் திருமணம் முடித்து வாழ்ந்து வருகின்றார். இவர் தனது ஆரம்பக் கல்வியை றோமன் கத்தோலிக்க பாடசாலையிலும் பின் தரம் 06 கற்றல் செயற்பாடுகளை செங்கலடி மத்திய கல்லூரிலும் கற்றார்.

❖ சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாற்பழக்கம் என்பதற்கேற்ப பாடசாலைப் பருவத்தில் கலைகளில் ஆர்வம் மிக்கவராகத் திகழ்ந்தார். ஓவியங்களைப் பார்த்து வரைதல், வர்ணம் தீட்டுதல் போன்றவற்றில் முக்கிய ஈடுபாடு கொண்டவராகக் காணப்பட்டார்.

❖ இவர் தனது சிற்ப வேலைகளுக்காக களிமண், சீமேந்து போன்றவற்றினைப் பயன்படுத்துகின்றார்.

❖ இவர் வார்ப்பு சிற்பங்களையும் தயாரிக்கும் வல்லமை கொண்டவராகத் திகழ்கின்றார்.

❖ இவர் வடிவமைக்கும் சிற்பங்கள் பிள்ளையார் வடிவம், சிவலிங்கம், மயில், அன்னம், கருடன், சிவன், உமை இணைந்த வடிவம் மற்றும் வீட்டு அலங்காரப் பொருட்களையும் வடிவமைத்துக் கொடுக்கின்றார்.

❖ இவரது சிற்பங்களான மயில் சித்தாண்டி முருகன் ஆலயத்திலும் நாகபாம்பின் வடிவம் மயிலவட்டுவான் ஆலயத்திலும் காணப்படுகின்றது.

❖ அன்னார் சிறந்த சிற்பக் கலைஞர் மாத்திரமன்றி அடிப்படை வர்ணங்களைக் கலந்து புதிய வர்ணங்கள் உருவாக்கும் வல்லமை கொண்டவராகத் திகழ்கின்றார்.

❖ இவருக்கு இந்த சிற்பக் கலையானது கைப்பணியாக மாற்றம் அடைந்து அது பொருளாதாரத்தினை ஈட்டிக் கொடுக்கின்ற அம்சமாகவும் திகழ்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திரு. செல்லையா கணபதிப்பிள்ளை |
| முகவரி | : | கணேசவித்தியாலய வீதி, வந்தாறுமூலை. |
| பிறந்த திகதி | : | 1948.07.16 |
| வயது | : | 64 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | வந்தாறுமூலை மேற்கு |
| துறை | : | சிற்பக்கலை |
| தொழில் | : | கமம் |

- ❖ இவர் வந்தாறுமூலையை வசிப்பிடமாக கொண்டவர்.ஆண்டு 08 வரை கல்வி பயின்று இருக்கின்றார். படித்த பாடசாலை மட்/வந்தாறுமூலை மகாவிஷ்ணு வித்தியாலயமாகும். 18 வயதில் சிற்ப வேலையில் ஈடுபாடு கொண்டவராக காணப்பட்டு வருகின்றார். சிற்பக்கலையை தானாகவே மேற்கொண்டு வருகின்றார். இச்சிற்பக்கலையை யார் ஊடாகவும் பயிலவில்லை. கண்கண்டதை கை செய்யும் என்பதற்கு ஏற்றதாற் போல் அதனை இன்றும் செய்து வருகின்றார்.
- ❖ இவர் இந்த சிற்ப வேலையினை சீமேந்து களி போன்றவற்றினால் வடிவம் அமைக்கின்றார். இவர் அமைக்கின்ற சிற்பங்கள், நந்தி, மயில், நாகபாம்பு, பிள்ளையார், சிவபெருமான், இலட்சுமி, காளி, போன்ற சிலைகளை வடிவமைக்கின்றார்.
- ❖ இவரால் அமைக்கப்பட்ட சிற்பங்கள் இப்பிரதேசத்தின் அநேகமான கோயில்களில் காணப்படுகின்றது. வந்தாறுமூலை பிள்ளையார் கோயில், வந்தாறுமூலை மகாவிஷ்ணு கோயில், கொம்மாதுறை போன்ற கோயில்களில் காணமுடிகின்றது.
- ❖ இவரது சிற்பங்கள் உள் ஊரில் மாத்திரமின்றி வெளி ஊர்களில் உள்ள ஆலயங்களில் காணப்படுகின்றது. பதுளை, திருகோணமலை மாவட்டத்தின் சாம்பல் தீவில் உள்ள சல்லி அம்மன் ஆலயத்தில் காணப்படுகின்ற அனேகமான சிற்பங்கள் இவரால் செதுக்கப்பட்டதாகும். அது மட்டுமன்றி நுவரெலியா, பண்டாரவளை போன்ற இடங்களிலும் காணப்படுகின்றது.



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திரு. விநாயகம் கலாதரன் |
| முகவரி | : | காரைக்காடு, வேப்பவெட்டுவான் |
| பிறந்த திகதி | : | 1966.02.04 |
| வயது | : | 46 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | வேப்பவெட்டுவான் |
| துறை | : | சிற்பம் |
| தொழில் | : | கமம் |

- ❖ இவர் மயிலம்பாவெளியைப் பிறப்பிடமாகவும், காரைக்காடு வேப்பவெட்டுவானை வசிப்பிடமாகவும் கொண்டவர்.
- ❖ இவர் சிற்பத்துறையில் சிறந்து விளங்குகின்றார்.
- ❖ தரம் 10 இல் கல்வி பயின்ற இவர் இளமையிலிருந்து இதில் நாட்டம் கொண்டவராகத் திகழ்ந்தார்.
- ❖ களிமண், சீமேந்து போன்ற பொருட்களைக் கொண்டு சிற்பங்களை செய்து வருகின்றார்.
- ❖ இவரது சிற்பங்கள் இப்பகுதியில் அநேகமான ஆலயங்களில் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திரு. பரஞ்சோதி குணவதனன் |
| முகவரி | : | எல்லை நகர் |
| பிறந்த திகதி | : | 1973.11.15 |
| வயது | : | 39 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | ஏறாவூர் – 04 |
| துறை | : | சிற்பம் |
| தொழில் | : | சிற்பவேலை |

- மூதூரிலே சேனையூர் என்னும் இடத்தில் பிறந்து ஏறாவூர் எல்லை நகரை வதிவிடமாகவும் கொண்டவர்.
- இவர் சேனையூர் மகா வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வியைக் கற்றார்.
- அதன் பிற்பாடு இக்கலையை அவருடைய அப்பா, அம்மாவினுடைய அப்பாவிடம் இதனை நன்றாகக் கற்றார்.
- இவர் ஏறாவூர் 05ம் குறிச்சி வீரபத்திரன் ஆலயத்தில் கொடித்தம்பம் செதுக்கிக் கொடுத்தார். சிவன் விக்கிரகம், அம்மன் விக்கிரகம் கல்வைத்து காளிகோயிலுக்கு காளியம்மன் சிலை செய்து கொடுத்தார். புன்னைச்சோலை காளிகோயிலுக்கு அம்மன் சிலை, சூலம் என்பன செய்து கொடுத்தார்.
- பஞ்சலோகத்திலான சிற்பங்கள் செய்து கொடுத்திருக்கிறார்.
- 2000,2005ம் ஆண்டு கிழக்குப் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்ட கண்காட்சியில் இவரது சிற்பங்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டன.
- கலசம், திருவாசி போன்றவற்றினைச் செய்து வருமானத்தினை ஈட்டி வருகின்றார்.
- தற்போது மூதூரில் தனது சிற்ப வேலைகள் செய்து வருகின்றார்.
- வெருகல் பகுதியில் தனது சிற்பம் சம்பந்தமான வேலைத் திட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்.
- இவரது சிற்ப வேலைப்பாட்டின் மகிமையின் காரணமாக மலேசியாவுக்கு செல்வதற்கு ஆயத்தமாகி கொண்டு இருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திரு. கதிர்காமநாதன் ரமேஸ்குமார் |
| முகவரி | : | பாரதிபுரம், ஐயன்கேணி, செங்கலடி |
| பிறந்த திகதி | : | 24.02.1976 |
| வயது | : | 36 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | ஐயன்கேணி |
| துறை | : | சிற்பம் |
| தொழில் | : | சிற்பவேலை |

- இவர் செங்கலடி ஐயன்கேணியை பிறப்பிடமகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர்.
- இவருக்கு 06.06.2008 வந்தாறுமூலை விஷ்ணு கோயில் நிர்வாகத்தினரால் அருட்கலை இளவரசு எனும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.
- ஷப்தரிஷி இந்து குருபீடம் இவருக்கு சிற்ப கலாவாரதி, திருக்கலைச்சுடர் எனும் பட்டங்கள் வழங்கி கௌரவித்தது.
- சித்தாண்டி ஸ்ரீசித்திரவேலாயுதர் தேவஸ்தானம் 15.07.2011 இவருக்கு ஆகம சிற்ப கலாசூரி எனும் பட்டம் வழங்கி கௌரவித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | தங்கராசா இராஜேந்திரன் |
| முகவரி | : | பிரதான வீதி, வந்தாறுமூலை |
| பிறந்த திகதி | : | 1988.11.11 |
| வயது | : | 24 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | வந்தாறுமூலை மேற்கு |
| துறை | : | சிற்பம் |
| தொழில் | : | சிற்ப வேலை |

இவர் வந்தாறுமூலையைப் பிறப்பிடமாகவும்,வசிப்பிடமாகவும் கொண்டவர். தரம் 10 வரை மட்/வந்தாறுமூலை கணேசவித்தியாலயத்தில் கற்றார். இவர் இந்த சிற்ப வேலையை இந்தியா சிப்பியான ராஜாராம் என்பரிடம் கற்றார்.இவர் ராஜா கோபுரங்களில் காணப்படுகின்ற புடைப்பு சிற்பங்களில் காணப்படுகின்ற மிக நுணுக்கமான அலங்கார வேலைகளை மேற்கொண்டு வருகின்றார். அதாவது கோபுரங்களில் காணப்படுகின்ற நாசித் தலை, திருவாசி பொம்மைகளில் காணப்படுகின்ற நுட்பமான அலங்கார வேலைப்பாடுகளை மேற்கொள்வதில் வல்லவராக திகழ்கிறார். இவர் ஆலய கோபுர வேலைகளாக ஆணைகட்டடியவெளி பிள்ளையார் ஆலயம், காக்காச்சி வெட்டை பிள்ளையார் ஆலயம',களுதாவளை பிள்ளையார் ஆலய மூலஸ்தான கோபுர வேலை, கொழும்பு பண்டராணாயக்க மாவத்தையிலுள்ள முருகன் ஆலய கோபுர வேலை,கொழும்பு தெமட்டகொடயில் உள்ள முருகன் ஆலய கோபுர வேலைகள் மற்றும் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் உள்ள முருகன் ஆலய கோபுர அலங்கார வேலைகள் போன்றவற்றினை செய்து வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| முழுப்பெயர் | : திரு. சின்னத்தம்பி கந்தப்போடி |
| முகவரி | : பிரதான வீதி, மயிலம்பாவெளி, தன்னாமுனை |
| பிறந்த திகதி | : 1937.06.07 |
| வயது | : 75 |
| கிராமசேவையாளர் பிரிவு | : 189 மயிலம்பாவெளி |
| துறை | : கலையும் கைவினையும் |
| தொழில் | : பல நோக்கு கூட்டுறவுச் சங்க முகாமையாளர், மயிலம்பாவெளி |

- ❖ இவர் மயிலம்பாவெளியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர். தனது கல்வியை மட்/விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் தரம் 07 வரை கற்றார்.
- ❖ இவர் 1961ம் ஆண்டு பல நோக்கு கூட்டுறவுச்சங்கம் மயிலம்பாவெளியில் முகாமையாளராக சுமார் 12 வருடங்கள் கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.
- ❖ 1995ம் ஆண்டு கிராம அபிவிருத்திச் சங்கத்தில் செயலாளராக தெரிவு செய்யப்பட்டார். அதன் நிமித்தம் வீதிகள் புனரமைப்பு மற்றும் கான்கள் கட்டுதல் போன்ற பணிகளைச் செய்துள்ளார். அதாவது மயிலம்பாவெளியில் ஊத்துமடு என்று அழைக்கப்படும் கானுக்கு கட்டு அமைப்பதற்காக பல வழிகளிலும் உதவி செய்து கட்டுக்கட்டினார். இப்பணியில் இருந்து 2006ம் ஆண்டு ஓய்வு பெற்றார்.
- ❖ தன்னுடைய ஓய்வு காலத்திலும் இவர் படைப்பாற்றலில் கவனம் செலுத்தினார். இத்துறையில் இருந்த ஆர்வத்தினால் பல பொருட்களை அழகாக வடிவமைத்து விற்பனை செய்துள்ளார்.
- ❖ குறிப்பாக கைத்தொழில் துறையில் இருந்த ஆர்வத்தினால் தும்புத்தடி கட்டுதல், விளக்குமாறு கட்டுதல், பிரம்புக் கூடை பின்னுதல், சுளகு, மரைக்கால் போன்றவற்றை செய்யும் ஆக்கத்திறன் உடையவராக காணப்பட்டதுடன் வீட்டுத் தோட்டம் செய்வதிலும் ஈடுபட்டு வருகின்றார்.



| | |
|---|---|
| முழுப்பெயர் | : அமரர். சின்னையா பொன்னு |
| முகவரி | : பிரதான வீதி, ஏறாவூர் – 05 |
| பிறந்த திகதி | : 1932.04.15 |
| இறந்த திகதி | : 2002.07.08 |
| வயது | : 70 |
| கிராமசேவையாளர் பிரிவு | : ஏறாவூர் – 05 |
| துறை | : கைவினை (மட்பாண்டம்) |
| தொழில் | : மட்பாண்ட வேலை |

- ❖ இந்தியாவைப் பிறப்பிடமாகவும், ஏறாவூரை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தற்போது இறந்து விட்டார்.
- ❖ இவர் மட்பாண்டக் கலையில் தடம் பதித்த ஒருவர்.
- ❖ இவர் ஏனையோருக்கு பயிற்றுவிற்பவராகவும் காணப்பட்டார். பல்வேறு சான்றிதழ்களையும் பெற்றவர்.
- ❖ சட்டி, பானை, குடம், உண்டியல், அடுப்பு வகைகள் அலங்காரப்பொருட்கள் என்பனவற்றினை உற்பத்தி செய்து கூடுதலான வருமானத்தினை ஈட்டி வந்து இருக்கிறார். தற்போது அமரத்துவம் அடைந்துவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| முழுப்பெயர் | : திரு. ஞானமுத்து சின்னராசா |
| முகவரி | : புன்னக்குடா வீதி, தளவாய் |
| பிறந்த திகதி | : 1944.04.27 |
| வயது | : 68 |
| கிராமசேவையாளர் பிரிவு | : 193 தளவாய் |
| துறை | : கலையும் கைவினையும் |
| தொழில் | : ஓய்வு பெற்ற பல நோக்கு கூட்டுறவுச் சங்க முகாமையாளர் |

- தளவாய் புன்னக்குடா வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர். இவர் ஏறாவூர் அலிகார் மகா வித்தியாலயத்தில் தரம் 09 வரை கற்றார்.

- 1971ம் ஆண்டு பல நோக்கு கூட்டுறவுச்சங்க முகாமையாளராக நியமனம் பெற்றார். சுமார் 08 வருட காலமாக இத் தொழிலில் ஈடுபட்டு வந்தார். அப்போது பிரம்புக் கைத்தொழில் கலையை கற்று அத்தொழிலை இன்றும் செய்து வருகின்றார்.

- இவர் இவ் அமைப்பினைப் பதிவு செய்து இன்னும் இவ் வேலைத்திட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார். அதுமட்டுமன்றி இப்பிரதேச மக்களுக்கு பயிற்சியும் கொடுத்து வருகின்றார்.

- இவர் பிரம்பினைக் கொண்டு கதிரைகள், கட்டில், சாய்மானைக் கதிரை, பல வகையான மீன் கூடைகள் அதாவது ஆழ்கடலில் மீன் பிடிக்கும் கூடைகள், கையில் கொண்டு செல்லும் கூடைகள், பணப்பை, பூக்கூடை, கைப்பிரம்பு, மீன் சுமக்கும் கூடை, தேயிலைக் கொழுந்து பறிக்கும் கூடை, உரவகைகளைச் சுமக்கும் கூடைகள். உணவுகளைப் பாதுகாக்கும் கூடைகள் மற்றும் கழிவுகளை அகற்றும் கூடைகள். பூத்தட்டு, சிறு இருக்கை, சிறுவட்ட மேசை என்பனவற்றினை பல வடிவங்களிலும் தயாரித்து கூடுதலான வருமானத்தினை ஈட்டி வருகின்றார்.

- அதுமட்டுமன்றி மிருகங்கள், பறவைகள், பாதுகாப்பாக அடைத்து வளர்க்கும் கூடுகள், புறாக்கூடு, கிளிக்கூடு, நாய் வளர்க்கும் கூடு, கோழிக்கூடு, எலிக்கூடு என்பனவற்றினையும் செய்து வருகின்றார். அடுத்து வீட்டு அலங்காரப் பொருட்களையும் பல வடிவங்களிலும் வர்ணங்களிலும் செய்து வருகின்றார்.

- இவர் ஆலயத் தலைவராகவும் விவசாய அமைப்பின் தலைவராகவும் முதியோர் சங்கத்தின் தலைவராகவும் திகழ்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| **முழுப்பெயர்** | **: திரு. ஆறுமுகம் தில்லையம்பலம்** |
| **முகவரி** | **: போதகர் வீதி, செங்கலடி** |
| **பிறந்த திகதி** | **: 12.11.1949** |
| **வயது** | **: 63** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | **: குமாரவேலியார் கிராமம்** |
| **துறை** | **: கலையும் கைவினையும்** |
| **தொழில்** | **: கமம்** |

- இவர் ஏறாவூர் - 05ஐ பிறப்பிடமாகவும் போதகர் வீதி குமாரவேலியார் கிராமத்தினை வதிவிடமாகவும் கொண்டவர்.
- தனது ஆரம்பக் கல்வியை ஏறாவூர் மெதடிஸ்த வித்தியாலயத்திலும், க.பொ.சா. தரத்தினை வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்திலும் கற்றார்.
- இவர் 30 வருட காலமாக இக் கைவினை கலையில் ஈடுபட்டு வருகின்றார்.
- இக்கலையினை தனது சுயமுயற்சியின் பயனாக மேற்கொண்டார்.
- இவர் விளக்குமாறு, தும்புத்தடி, கயிறு திரித்தல் போன்ற கைப்பணி வேலைகளைச் செய்து வருகின்றார்.



| | |
|---|---|
| **முழுப்பெயர்** | **: திரு. நல்லையா இராஜேந்திரன்** |
| **முகவரி** | **: இந்திராணி ஸ்றோர்ஸ், பிரதானவீதி, சித்தாண்டி** |
| **பிறந்த திகதி** | **: 08.08.1952** |
| **வயது** | **: 60** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | **: சித்தாண்டி – 03** |
| **துறை** | **: ஒப்பனைக் கலை** |
| **தொழில்** | **: கமம்** |

- இவர் சித்தாண்டியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர்.
- இவர் மட்/வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலயத்தில் க.பொ. சா.தரம் வரை கல்வி கற்றுள்ளார்.
- இவர் கவிதைகள் பாடியுள்ளார். சிறுகதைகள் எழுதியுள்ளார்.
- இவர் கட்டுரை, நாடகம், மேடைப்பேச்சு, வீரகேசரி பத்திரிகையில் சினிமா பாடல்கள், பஜனைப்பாடல்கள், வசந்தன்கூத்து, அரசநாடகங்கள் நடித்துள்ளார்.
- இவர் மங்கள நிகழ்வுகளுக்கு மாத்திரமன்றி அமங்கல நிகழ்வுகளுக்கான ஆடை அலங்காரங்களை செய்வதில் வல்லவர்.
- மாணவர்களுக்கு தேவையான ஒப்படைக்குரிய கைவினைப் பொருட்களை செய்வதில் கைவந்த கலை வண்ணர் ஆவார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | சோமசுந்தரம் தாமோதரம் |
| முகவரி | : | குமாரவேலியார் கிராமம் |
| பிறந்த திகதி | : | 1952.11.16 |
| வயது | : | 60 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | குமாரவேலியார் கிராமம் |
| துறை | : | கலையும், கைவினையும் |
| தொழில் | : | தென்னை ஆராய்ச்சி நிலைய ஊழியர் |

மயிலம்பாவெளியை பிறப்பிடமாகவும், குமாரவேலியார் கிராமத்தை வசிப்பிடமாக கொண்டவர். இவர் தன்னாமுனை புனித வளனார் வித்தியாலயத்தில் க.பொ.த (சா/த) வரை கல்வி கற்றுள்ளார். இவர் கழிவுப் பொருட்களைக் கொண்டு பல வகையான வர்ண வேலைப்பாடுடைய பொருட்களை செய்து வருகின்றார். பனம் விதை, பனமட்டை, கம்புத்துண்டு, சிரட்டை, குரும்பட்டி, கடதாசிகள், மரக்கொப்பு, மஞ்சவனா மரம் இவற்றினைக் கொண்டு மான், எருது, முயல், குருவி, பூக்கள், இதய வடிவம், கீடெக் முதலியவற்றை செய்கின்றார். புச்சித்தேங்காய் மூலம் குரங்கும், பூக்கநெட்டு மூலம் கொக்கும், பனம் விதையில் ஆமையும், அழகாக செய்துவருகிறார். இவரது பொருட்களை கூடுதலாக பாடசாலையில் மாணவர்கள் பயன்படுத்துகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முழுப்பெயர் : திருமதி கனகசூரியம் கிருபைமலர்
முகவரி : பாடசாலை வீதி, மாவடிவேம்பு – 01
பிறந்த திகதி : 24.02.1955
வயது : 57
கிராமசேவையாளர் பிரிவு : மாவடிவேம்பு – 01
துறை : கலையும் கைவினையும்
தொழில் : கைத்தொழில் (பிரம்பு பின்னல்)

- இவர் முத்துக்கல்லினை பிறப்பிடமாகவும் தற்போது மாவடிவேம்பு - 01 இனை வசிப்பிடமாகவும் கொண்டவர்.

- இவர் ஆண்டு 05 வரை கல்வி கற்று இருக்கின்றார்.

- இவர் தனது மானசீக குருவான முத்துக்கல்லில் வாழ்ந்த பொட்டு ஐயா என்பவரிடம் இக்கலையை முறையாகப் பயின்றார்.

- இவர் 18 வயதிலிருந்து பிரம்பால் ஆன வேலைகளை அழகுறப் புனைவதில் கைவந்தவராக காணப்படுகின்றார்.

- இவ்வேலையினை முழுநேரப் பணியாகவும் செய்து வருகின்றார். இவர் பின்னல் வேலைகளை அப்பிரதேச இளைஞர், யுவதிகளுக்கும் பயிற்றுவித்து வருகின்றார்.

- இவர் இவ்வேலைத்திட்டத்தினை ஒரு சமூக அமைப்பாகப் பதிந்து இன்றும் தொடர்ந்து இவ் வேலைத் திட்டத்தில் ஈடுபட்டு கொண்டு வருகின்றார்.

- இவர் பிரம்பால் ஆன வேலைத்திட்டங்களில் அதிகமாக ஈடுபட்டு வருகின்றார்.

- இவர் பிரம்பினைக் கொண்டு கதிரைகளை வடிவமைக்கின்றார். அத்துடன் படுத்து உறங்கும் கட்டில்கள், சாய்ந்து உறங்கும் கதிரைகள், வெற்றிலை உண்ணும் தட்டா, பூப்பறிக்கும் கூடைகள், போன்றவற்றினை பல்வேறு வடிவங்களில் வடிவமைக்கும் திறமை மிக்கவர்.

- பிரம்புத்தடி (யோகித்தடி) மண் பொருட்களை சுமக்கும் கூடைகள், வீட்டினை அலங்கரிக்கும் அலங்காரப் பொருட்கள், கடகம், மீன்பிடிக்கின்ற மீன்கூடைகள் என்பவற்றினை அழகிய கலை வடிவத்தில் தயாரித்து வழங்கும் திறமை மிக்கவராக காணப்பட்டு வருகின்றார்.

- இந்த கைப்பணி வேலையினால் அவரது குடும்பம் மாத்திரமன்றி அவரைச் சார் சமூகமும் உயிர் வாழ்ந்து வருகின்றது.இதன்மூலம் அதிக வருமானத்தையும் பெற்று வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திருமதி. செல்[illegible]சா பரஞ்சோதி |
| முகவரி | : | காளிகோயில் வீதி, ஏறாவூர் – 04 |
| பிறந்த திகதி | : | 1956.07.29 |
| வயது | : | 56 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | எல்லை நகர் |
| துறை | : | மட்பாண்டக்கலை |
| தொழில் | : | ஆசிரியர் |

- இவர் ஏறாவூர் - 04 பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர்.
- இவர் இக்கலையினை முத்துக்கல்லிலுள்ள ஒரு ஆசிரியரிடம் கற்றார். அதன் பிற்பாடு 1972ம் ஆண்டு இவ்வாசிரியர் தொழில் உள் வாங்கப்பட்டார்.
- இவர் ஏறாவூர் - 04 இல் உள்ள மட்பாண்ட அருங்கலைக் காட்சியகத்தில் மாணவர்களுக்கு கல்வி புகட்டி வருகின்றார்.
- இக்கிராமத்து மாதர் சங்கத்தலைவியாகவும் செயற்பட்டு வருகின்றார். அத்துடன் களி மண்ணால் ஆன, சட்டி, பானை, குடம், முட்டி, அடுப்பு வகைகள், நீர் சேமிக்கும் கூசா வகைகள் என்பனவற்றினை பல வடிவங்களில் தயாரிப்பது பற்றி மாணவர்களுக்கு பயிற்சி கொடுத்துக் கொண்டு இருக்கின்றார் இவருடைய பயிற்சியின் மூலம் அநேகர் இக்கைப் பணிக் கலையில் ஈடுபட்டு பணம் சம்பாதிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| **முழுப்பெயர்** | : | **திருமதி. லோகேஸ்வரன் கோமளாதேவி** |
| **முகவரி** | : | **மயிலம்பாவெளி, தன்னாமுனை** |
| **பிறந்த திகதி** | : | **1963.07.03** |
| **வயது** | : | **49** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | : | **மயிலம்பாவெளி** |
| **துறை** | : | **கலையும் கைவினையும்** |
| **தொழில்** | : | **ஆசிரியர்** |

- இவர் மயிலம்பாவெளியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர்.

- மயிலம்பாவெளி விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் நான்காம் தரம் வரையும் தன்னாமுனை புனித வளநாதர் வித்தியாலயத்தில் தரம் 10 வரையும் மட்/ வின்சன்ட் மகளிர் உயர்தர பாடசாலையில் உயர் தரம் வரையும் தனது கற்றல்ச் செயற்பாடுகளைப் பூர்த்தி செய்தார்.

- பின்னர் 2000ம் ஆண்டளவில் மயிலம்பாவெளியில் உள்ள இலங்கை கைப்பணி சபையால் நடத்தப்பட்ட கடதாசியிலான அலங்கார வேலை (பொம்மை வேலை) ஒரு வருட கற்கை நெறியைத் தொடந்தார்.

- பின் 2004 வரை அந்நிறுவனத்தில் இணைந்து இன்று செங்கலடி கடதாசி வினோத நிலையத்தின் பொறுப்பாளராக கடமை புரிகின்றார்.

- வடக்கு, கிழக்கு மாகாண மட்டத்தில் தொழில் திணைக்களத்தால் 2002 நடத்தப்பட்ட கைத்தறி ஆடைகள் மற்றும் கைப்பணிப் பொருட்களின் கண்காட்சிகளில் இவரது கடதாசி பொம்மை வேலைக்கு முதலாம் பரிசு கிடைத்தது.

- வடக்கு, கிழக்கு மாகாண மட்டத்தில் தொழில் திணைக்களத்தால் 2004ல் நடத்தப்பட்ட கைத்தறி ஆடைகள் மற்றும் கைப்பணிப் பொருட்களின் கண்காட்சியில் இவரால் அமைக்கப்பட்ட மரக்கறி தட்டிற்கு இரண்டாம் பரிசும் புலி பொம்மைக்கு மூன்றாம் பரிசும் கிடைத்தது.

- மட்டக்களப்பு மாவட்ட மட்டத்தில் தொழில் திணைக்களத்தால் 2004ல் கைத்தறி ஆடைகள் மற்றும் கைப்பணி பொருட்களின் கண்காட்சியில் இவரால் அமைக்கப்பட்ட மரக்கறி தட்டிற்கு மூன்றாம் பரிசும் கைப்பணி கடதாசி பொம்மை வேலைக்கு மூன்றாம் பரிசும் கிடைத்தது.

- கிராமிய கைப்பணி அபிவிருத்தி திணைக்களத்தினால் 2008ல் நடத்தப்பட்ட மாகாண மட்ட கைத்தறி ஆடைகள் மற்றும் கைப்பணிப் பொருட்களின் கண்காட்சியில் இவரது மரக்கறித் தட்டிற்கு முதலாம் பரிசு கிடைத்தது.

- கைத் தொழில் திணைக்களத்தால் 2011ல் நடத்தப்பட்ட மாகாண மட்டத்திலான கைத்தறி ஆடைகள் மற்றும் கைப்பணிப் பொருட்களின் கண்காட்சியில் இவரால் அமைக்கப்பட் மரக்கறி தட்டிற்கு மூன்றாம் பரிசு கிடைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| **முழுப்பெயர்** | : | **திரு. பொன்னு யோகராசா** |
| **முகவரி** | : | **பிரதான வீதி, ஏறாவூர் – 05** |
| **பிறந்த திகதி** | : | **1973.07.24** |
| **வயது** | : | **39** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | : | **ஏறாவூர் – 05** |
| **துறை** | : | **கலையும் கைவினையும் (மட்பாண்டம்)** |
| **தொழில்** | : | **மண்பாண்ட வேலை** |

- ❖ ஏறாவூர் - 05ஐ பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தனது ஆரம்பக்கல்வியை ஆண்டு - 08 வரை ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலயத்தில் கற்றார்.

- ❖ இவர் இக்கலையை தனது தகப்பனாரிடம் இருந்து கற்றார்.

- ❖ இதற்கான பயிற்சியை 1996ம் ஆண்டு கண்டியில் பெற்றார். இதன் பயனாக பல வகையான சட்டிகள், பானைகள் , பல வகையான அடுப்பு வகைகள், அணகி அடுப்பு விறகு அடுப்பு, தூண் அடுப்பு என்பனவற்றினை வடிவமைக்கிறார்.

- ❖ முட்டி, ரொட்டியோடு, பானை, கூசா, குடம் அலங்கார உருவங்கள் என்பனவற்றினையும் வடிவமைக்கின்றார். இதன் மூலம் வருமானத்தையும் பெற்று வருகின்றார்.



| | | |
|---|---|---|
| **முழுப்பெயர்** | : | **தவம் தர்மலிங்கம்** |
| **முகவரி** | : | **பாடசாலைவீதி, ஏறாவூர் – 05** |
| **பிறந்த திகதி** | : | **1978.09.04** |
| **வயது** | : | **34** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | : | **ஏறாவூர் – 05** |
| **துறை** | : | **கலையும் கைவினையும்** |
| **தொழில்** | : | **கமம்** |

சித்தாண்டியைப் பிறப்பிடமாகவும், ஏறாவூர் - 05 இனை வசிப்பிடமாகவும் கொண்டவர். சித்தாண்டி மத்திய மகா வித்தியாலயத்தில் தரம் 05 வரை கல்வி கற்றுள்ளார். இவர் கழிவுப் பொருட்களைக் கொண்டு அழகிய கைவினைப் பொருட் செய்து வருகிறார். சிரட்டை, தும்பு, மரத்துண்டுகள் முதலியவற்றை கொண்டு பூச்சட்டி, இதய வடிவிலான அலங்கார வடிவங்களான நீரைச்சேமித்து வைக்கும் பாத்திரம், திருநீறு, சந்தணம், குங்குமம் பரி மாறும் பாத்திரம் மற்றும் அலங்கார உருவங்களைப் படைத்துவருகின்றார். இக் கைப்பணிப் பொருட்களில் பதிப்பதற்காக செப்புக் கம்பிகளை பயன்படுத்தியுள்ளார். மிகவும் அழகாகவும் நுணுக்கமாகவும் இவர் இக் கைப்பொருட்களை உருவாக்குகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுப்பெயர் : அமரர். வேலன் பொன்னையா
முகவரி : பிரதான வீதி களுவன்கேனி – 02
பிறந்த திகதி : 1915.04.21
இறப்பு : 2011.08.04
வயது : 96
கிராமசேவையாளர் பிரிவு : களுவன்கேனி
துறை : பூத வைத்தியம்
தொழில் : பரிகாரி

இவர் களுதாவளையை பிறப்பிடமாகவும் களுவன் கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் பூதவைத்தியம் என்று சொல்லப் படுகின்ற பில்லி சூனியம் காய் வெட்டுதல் திருநீறு போடுதல் சுழுக்குப் பார்த்தல் பேய் ஓட்டுதல் போன்ற வைத்திய முறைகளில் ஈடுபட்டு வந்து இருக்கின்றார் இவர் ஒரு சிறந்த மந்திரவாதியும் கூட, பல வகையான மந்திரங்களை தன்னகத்தே வைத்திருந்தார் என்பது அறிய முடிகின்றது. தற்போது அமரத்துவம் அடைந்து விட்டார்.



முழுப்பெயர் : திரு. ரன்கொட்டி பண்டார லாகே சிறிவர்த்தன
முகவரி : 25ம் கட்டை மங்களகம
பிறந்த திகதி : 1923.07.10
வயது : 94
கிராமசேவையாளர் பிரிவு : மங்களகம (135A)
துறை : பூத வைத்தியம்
தொழில் : கமம்

❖ இவர் அக்கிரியன் கும்பரே பிறப்பிடமாகவும், கெமுணுபுர மங்களகம வசிப்பிடமாகவும் கொண்டவர்.

❖ தரம் 02 இல் கல்வி பயின்ற இவர் தொடர்ந்தும் இவ் வைத்தியத் துறையில் ஈடுபட்டு வருகின்றார்.

❖ தற்போது முதுமையின் காரணமாக எதுவித செயற்பாடும் செய்ய முடியாமல் இருக்கிறார்.

❖ இவர் தண்ணீர் ஓதிக் கொடுத்தல், பில்லி, சூனியம், வீடு காவல் பண்ணுதல், மிருகங்களை அடக்குதல் போன்ற வைத்திய முறைகளைச் செய்து வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | அமரர். விளங்கர் – தம்பிப்பிள்ளை |
| முகவரி | : | V.C வீதி, வந்தாறுமூலை |
| பிறந்த திகதி | : | 1919.04.19 |
| வயது | : | 93 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | வந்தாறுமூலை |
| துறை | : | முறிவு வைத்தியம் |
| தொழில் | : | முறிவு வைத்தியர் |

இவர் வந்தாறுமூலையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தரம் 9ல் கல்வி பயின்ற இவர் சுமார் 35 வருட காலமாக இவ் முறிவு வைத்திய தொழிலை செய்து வருகின்றார் இவர் முறிவு வைத்தியத்திற்கான எண்ணெய் வகைகள் மூலிகைகள் போன்றவற்றை தாமே தயாரித்து வைத்தியம் செய்து வருகின்றார் அனேகமாக இவரது வைத்தியத்தை நாடி வெளி இடங்களிலும் இருந்து மக்கள் பயனடைந்து இருக்கின்றனர், இவர் தற்போது அமரத்துவம் அடைந்துவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திருமதி. கந்தன் கனகம்மா |
| முகவரி | : | களுவன்கேணி – 02 |
| பிறந்த திகதி | : | 1921.05.24 |
| வயது | : | 91 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | களுவன்கேணி – 02 (198A) |
| துறை | : | மகப்பேற்று மருத்துவம் |
| தொழில் | : | மருத்துவிச்சி |

இவர் களுவன்கேணி சிரட்டையன் குடாவில் வேட்டுவ பரம்பரையைச் சேர்ந்த வெல்லாயன் குடியில் கந்தன் முத்து தம்பதியினருக்கு 1921ம் ஆண்டு வைகாசி மாதம் இருபத்தி நான்காம் திகதி பிறந்தார்.

- ❖ இவரது ஆரம்பக் கல்வியானது களுவன்கேணி மெதடிஸ்த மிசன் பாடசாலையில் ஆண்டு மூன்று வரை பயின்றார்.
- ❖ தற்போது 51 வருட காலமாக இந்த மருத்துவிச்சித் தொழிலை செய்து வந்திருக்கின்றார்.
- ❖ இவரது தாய், தந்தையர்கள் அம் மருத்துவிச்சித் துறையில் விற்பன்னர்கள். இவர்களிடமிருந்து தான் இவர் இம்மருத்துவத் துறையினைக் கற்றுக் கொண்டார்.
- ❖ இவரது குலத்தொழிலாகவே இதனை மேற்கொண்டு வருகின்றார்.
- ❖ இவர் மகப்பேற்று முறைமைகளுக்கு தனது வேடுவ மாந்தீரிகத்தையே பயன்படுத்துவது ஒரு சிறப்பம்சமாகும்.
- ❖ கர்ப்பிணிப் பெண் ஒருவருக்கு எப்போது பிள்ளை பிறக்கும், அந்தப் பிள்ளை ஆண் பிள்ளையா, பெண் பிள்ளையா என்பதையெல்லாம் முன்கூட்டியே அறிவிக்கும் பரீட்சயமுள்ள மருத்துவிச்சியாக காணப்படுகின்றார்.
- ❖ இவரது சேவையால் அனேக மக்கள் குழந்தை பிரசவத்தினைப் பெற்று இருக்கிறார்கள். இதுவரையில் இவரது வைத்திய சேவையில் சிசுவுக்கோ, தாய்க்கோ எந்த விதமான இடையூறுகளுமின்றி சுகப்பிரசவத்துடன் பிள்ளைகளைப் பெற்று எடுத்து இருக்கிறார்கள்.
- ❖ இவர் ஒரு மருத்துவிச்சி மட்டுமன்றி, நோய் தீர்க்கும் பரிசாரியாகவும் செயற்பட்டு வந்துள்ளார்.
- ❖ பிள்ளைகளைப் பெற்ற தாய்மார்கள் உண்ணுகின்ற உணவு வகைகளைத் தயாரித்தல், அவர்களுக்கான மருந்துகளைத் தயாரித்தல் போன்ற சேவைகளையும் வழங்கிக் கொண்டு வருகின்றார்.
- ❖ இவர் தீர்க்க முடியாத சில நோய்களையும் தனது வேட மாந்தீரிக வழிபாட்டின் மூலம் தீர்த்து வைத்து இருக்கின்றார்.
- ❖ இவர் ஒரு மருத்துவிச்சியாகவும் வேடுவ மாந்தீரிகக்கலையில் கைதேர்ந்தவராகவும் சிறந்த ஒரு நோய் தீர்க்கும் பரிகாரியாகவும் திகழ்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திரு. கணபதி காத்தமுத்து |
| முகவரி | : | களுவன்கேணி – 02 |
| பிறந்த திகதி | : | 1922.07.12 |
| வயது | : | 90 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | களுவன்கேணி – 02 (198A) |
| துறை | : | பூத வைத்தியம் |
| தொழில் | : | இல்லை |

களுவன்கேணி கிராமத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர் தரம் 2ல் கல்விகற்றவர். இவர் பூதவைத்தியம் என்று சொல்லப் படுகின்ற பில்லி சூனியம் கழிப்பு காவல் பண்ணுதல் போன்ற வைத்தியத்திலும் சிறந்து விளங்குகிறார், இவர் இத் தொழிலை இருபது வருடகாலத்தில் ஆரம்பித்து இன்று வரையும் செய்து வருகின்ற மந்திர மாந்திரிகங்களையும் நன்றாக கற்று இருக்கின்றார்.

| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | அமரர். கொம்பர் சுப்பிரமணியம் |
| முகவரி | : | களுவன்கேணி – 02 |
| பிறந்த திகதி | : | 1901.05.21 |
| இறப்பு | : | 1990.01.13 |
| வயது | : | 89 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | களுவன்கேணி |
| துறை | : | விச வைத்தியம் |
| தொழில் | : | பரிகாரி |

இவர் களுவன்கேணியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தரம் எஸ்.எஸ்.சி கல்விகற்றவர். இவர் விச வைத்தியம் என்று சொல்லப்படுகின்ற பாம்பு, கீரி, தேள், குழவி, நாய், பூனை, முதலை, போன்ற விச மிருகங்களுக்குரிய வைத்திய முறைகளையும் செய்து வந்து இருக்கின்றார், இவர் இக்கிராமத்தில் ஆரம்ப கால விச வைத்தியர் ஆவார். இவர் விசம் தீண்டியவர்களுக்கான மருந்துகள், மூலிகைகள், மற்றும் வாகடங்கள் தயாரித்து வழங்கும்வதிலும் சிறப்பு மிக்கவராகக் காணப்பட்டு இருக்கின்றார், இவர் தற்போது அமரத்துவம் அடைந்து விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திரு. பிள்ளையான் காத்தமுத்து |
| முகவரி | : | விஷ்ணு வித்தியாலய வீதி, வந்தாறுமூலை |
| பிறந்த திகதி | : | 1924.02.09 |
| வயது | : | 88 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | வந்தாறுமூலை |
| துறை | : | விச வைத்தியத்துறை |
| தொழில் | : | கிராமிய வைத்தியம் |

இவர் வந்தாறுமூலையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர் விச வைத்தியரான வீரக்குட்டி வெள்ளையாப்போடி என்ற விச வைத்தியரிடம் குருவாகக் கொண்டு கற்றுக்கொண்டார். இவர் 24 வயது தொடக்கம் இன்று வரையும் இத் தொழிலை செய்து வருகின்றார். இவர் 9 விச ஆருடங்களின் விதிகளுக்கும் இலட்சனங்களுக்கும் அமைய சித்தர்களினால் அருளிச் செய்யப்பட்ட பச்சிலை மூலிகைகளின் வைத்தியத்தை கற்றுக் கொண்டார். இவர் ஏடுகளில் காணப்பட்ட வைத்திய முறைகளை கையெழுத்து பிரதிகளாக்கி பாதுகாத்து வருகின்றார் இவர் இப் பிரதேசத்தில் விசத்தால் தீண்டிய அனேகரின் உயிரை காப்பாத்தி வந்திருக்கின்றார்.



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | அமரர். பத்தினியன் சின்னாங்குட்டி |
| முகவரி | : | விஷ்ணு வித்தியாலய வீதி, வந்தாறுமூலை |
| பிறந்த திகதி | : | 1917.04.15 |
| இறப்பு | : | 2005.06.12 |
| வயது | : | 88 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | வந்தாறுமூலை |
| துறை | : | சருவாங்கம், பூத வைத்தியம் |
| தொழில் | : | வைத்தியம் |

இவர் வந்தாறுமூலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தரம் 5ல் கல்வி கற்றவர். இவர் சருவாங்கம் வைத்தியம் என்று கூறப்படுகின்ற பித்தம், சளி, சிலேற்பனம் போன்ற வியாதிகளுக்கும் மற்றும் பூத வைத்தியம் என்று கூறப்படுகின்ற மந்திரம், சுளுக்கு, திருநீறு போடுதல், காய் வெட்டுதல், களிப்பு, நூல் போடுதல், சூனியம், பில்லி போன்ற வைத்திய முறைகளையும் முறிவு வைத்திய துறையிலும் மிகவும் பிரகாசித்து வந்திருக்கின்றார், இவருடைய வைத்திய சேவையின் நிமிர்த்தம் சிறியோர் முதல் பெரியோர் வரை பயன்பெற்று இருக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| **முழுப்பெயர்** | : | **திரு. மாரிமுத்து கந்தையா** |
| **முகவரி** | : | **வைத்தியர் வீதி, சித்தாண்டி – 03** |
| **பிறந்த திகதி** | : | **14.11.1927** |
| **இறந்த திகதி** | : | **30.11.2011** |
| **வயது** | : | **84** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | : | **சித்தாண்டி – 03** |
| **துறை** | : | **சித்தவைத்தியம், ஓவியம்** |
| **தொழில்** | : | **வைத்தியர்** |

- இவர் சித்தாண்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர்.
- ஆங்கில வைத்தியர்களால் கைவிடப்பட்ட பாரிசவாத நோயாளிகளை குணப்படுத்தியமை சிறப்பம்சம்.
- பாடசாலையில் கற்கும் போது சித்திரம் வரைவதில் மிகுந்த ஆர்வம் கொண்டு மதறாஸ் நகரிலுள்ள "பாலு சகோதரர் நிறுவனம்" எனப்படும் தனியார் நிறுவனத்தில் மூன்று வருடம் ஓவியக்கலை பயின்று தேறினார்.
- திரைச்சீலை ஓவியங்கள், அட்டைப்படங்கள் என்பன இவர் வரைந்தவற்றுள் சில. "மட்டக்களப்பு மான்மியம்", 'மட்டக்களப்புத் தமிழகம்' போன்ற புத்தகங்களின் அட்டைப்படங்களும் இவரது கைவண்ணமே.
- சித்த வைத்தியப் பரம்பரையில் வந்ததால் ஓவியத்தில் அவ்வளவாக நாட்டங் கொள்ளவில்லை வைத்தியத் துறையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.



| | | |
|---|---|---|
| **முழுப்பெயர்** | : | **அமரர். சின்னையா நாகமணி** |
| **முகவரி** | : | **சேனைக் குடியிருப்பு** |
| **பிறந்த திகதி** | : | **1922.02.02** |
| **இறப்பு** | : | **2005.10.15** |
| **வயது** | : | **83** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | : | **குமாரவேலியார் கிராமம்** |
| **துறை** | : | **விசக்கடி, பூத வைத்தியம்** |
| **தொழில்** | : | **பரிகாரி** |

செங்கலடி பிறப்பிடமாகவும், சேனைக் குடியிருப்பை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தரம் 8ல் கல்வி பயின்றார். இவர் விசக்கடி வைத்தியமான பாம்பு தேள் குழவி கீரி முதலை நாய் போன்ற விச மிருகங்களுக்குரிய வைத்திய முறைகளையும் பூதவைத்தியம் என்று சொல்லப் படுகின்ற பில்லி, சூனியம், கழிப்பு, காவல் பண்ணுதல் போன்ற வற்றிலும் சிறந்து விளங்கியிருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | அமரர். வைரமுத்து கந்தக்குட்டி |
| முகவரி | : | ஆண்டியார் வீதி, ஆறுமுகத்தான் குடியிருப்பு |
| பிறந்த திகதி | : | 1916.04.09 |
| இறந்த திகதி | : | 1999.03.16 |
| வயது | : | 83 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | ஆறுமுகத்தான் குடியிருப்பு |
| துறை | : | ஆயுள் வேதம், சித்த வைத்தியம் |
| தொழில் | : | சித்த வைத்தியர் |

இவர் தேற்றாத் தீவினை பிறப்பிடமாகவும், ஆறுமுகத்தான் குடியிருப்பை வசிப்பிடமாகவும் கொண்டவர். இவர் தனது தந்தையான வையன் வைத்தியரிடமிருந்து சித்த வைத்திய முறையினை கற்றார். 15 வருடங்கள் தனது தந்தையிடம் செய்பாகம், கைபாகம், மூலிகை வகை விதிகளைப் படித்து தேறினார். அத்தோடு உத்தரவுப் பத்திரம் பெற்ற சித்த வைத்தியர் என்பது குறிப்பிடத்தக்கது. இதனோடு அபின் அனுமதிப்பத்திரம் பெற்றுள்ளார். 06 தலைமுறையாக இவர்களது பரம்பரை ஆயுள் வேத வைத்தியம் செய்துவருவது சிறப்பம்சமாகும். நாட்டின் ஏனைய பாகங்களிலும் வைத்தியம் செய்வது சிறப்பம்சமாகும்.

| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | அமரர். பத்தினியன் தங்கராசா |
| முகவரி | : | வந்தாறுமூலை |
| பிறந்த திகதி | : | 1920.06.10 |
| இறப்பு | : | 2003.04.15 |
| வயது | : | 83 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | வந்தாறுமூலை |
| துறை | : | விச வைத்தியம், சருவாங்கம், பூத வைத்தியம் |

இவர் வந்தாறுமூலையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தரம் 5ல் கல்வி கற்றவர். இவர் விசக்கடி, சர்வாங்க வைத்தியம் என்று கூறப்படுகின்ற பித்தம், சளி, சிலேற்பனம் போன்ற நோய்களுக்குரிய வைத்திய முறைகளையும் பூத வைத்தியம் என்று சொல்லப்படுகின்ற பேய் ஓட்டுதல், காய் வெட்டுதல், நூல் போடுதல், திருநீறு போடுதல் போன்ற நோய்களுக்கான பரிகாரங்களை செய்து வந்திருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுப்பெயர் : அமரர். சூசைப்பிள்ளை யோசப் லீலி
முகவரி : யோசப் வீதி, தன்னாமுனை
பிறந்த திகதி : 1912.01.10
இறப்பு : 1992.10.10
வயது : 80
கிராமசேவையாளர் பிரிவு : தன்னாமுனை
துறை : சருவாங்க வைத்தியம்
தொழில் : பரிகாரி

தன்னாமுனையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தரம் 03ல் கல்வி கற்றுள்ளார். இவர் சருவாங்க வைத்தியம் என்று சொல்லப் படுகின்ற பித்தம், சளி, சிலேற்பனம் போன்ற வைத்திய முறைகளில் ஈடுபட்டு வருவதோடு இவ் வைத்தியத்திற்கான மூலிகைகளை கொண்டு மருந்து தயாரித்து வந்திருக்கின்றார். இவர் தற்போது இறந்து விட்டார்.



முழுப்பெயர் : அமரர் வைத்திலிங்கம் அருணாச்சலம்
முகவரி : சித்தாண்டி – 04
பிறந்த திகதி : 1923.03.02
இறப்பு : 2002.03.02
வயது : 79
கிராமசேவையாளர் பிரிவு : சித்தாண்டி – 04
துறை : சருவாங்கம், சோதிடம்
தொழில் : பரிகாரி

சித்தாண்டியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தரம் 8ல் கல்வி பயின்றவர். இவர் சர்வாங்க வைத்தியம் என்று சொல்லப்படுகின்ற பித்தம், சளி, சிலேற்பனம் போன்ற நோய்களுக்கு சிறியோர் முதல் பெரியோர் வரை வைத்தியம் செய்து வந்திருக்கின்றார். அத்துடன் சோதிட கலைகளான வெற்றிலை வைத்து பார்த்தல், கெடுதிகேட்டல், பிறந்த பிள்ளைகளின் பலன், ருது ஆன பிள்ளைகளின் பலன்கள், திருமண பொருத்தம், சாதக குறிப்பு எழுதுதல், வீடு கட்டுவதற்கான நிலையம் எடுத்தல், கிணறு கட்டுவதற்கான நிலையம் எடுத்தல், ராசி பலன் போன்ற கருமங்கள் பற்றி கூறுதல் போன்ற கலைகளில் சிறந்து விளங்குகின்றார். இவர் தற்போது இறந்து விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| **முழுப்பெயர்** | : | **பிள்ளையான் – பொன்னுத்துறை** |
| **முகவரி** | : | **கிராம சேவகர் வீதி, வந்தாறுமூலை** |
| **பிறந்த திகதி** | : | **1935.11.08** |
| **வயது** | : | **77** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | : | **வந்தாறுமூலை** |
| **துறை** | : | **சருவாங்க வைத்தியம், பூத வைத்தியம், சிற்பம்** |
| **தொழில்** | : | **பூசகர்** |

வந்தாறுமூலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தரம் 5ல் கல்வி பயின்றவர். இவர் சர்வாங்க வைத்தியம் என்று சொல்லப்படுகின்ற பித்தம், சளி, சிலேற்பனம் போன்ற நோய்களுக்கு சிறியோர் முதல் பெரியோர் வரை வைத்தியம் செய்து வருகின்றார். பூத வைத்தியம் என்று சொல்லப்படுகின்ற பில்லி, சூனியம், திருநீறு போடுதல், சுளுக்கு பார்த்தல், காய் வெட்டுதல், வளவு காவல் பண்ணுதல் போன்ற பரிகாரங்களை செய்து வருகின்றார். இவர் ஒரு சிற்ப கலைஞருமாவார். இவருக்கு எமது ஏறாவூர் பற்று கலாசார பேரவையினால் கலைஞர்களுக்கான கௌரவ விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.



| | | |
|---|---|---|
| **முழுப்பெயர்** | : | **சபாவதி பத்தினியன்** |
| **முகவரி** | : | **வி.சி வீதி, வந்தாறுமூலை** |
| **பிறந்த திகதி** | : | **1936.09.21** |
| **வயது** | : | **76** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | : | **வந்தாறுமூலை** |
| **துறை** | : | **சருவங்கம், சோதிடம்** |
| **தொழில்** | : | **அதிபர்** |

இவர் வந்தாறுமூலையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இவர் எஸ்.எஸ்.சி கல்வி பயின்ற இவர் சருவாங்கம் வைத்தியம், சோதிடம் போன்ற துறைகளில் சிறந்து விளங்குகிறார் இவர் வைத்திய பரம்பரையான பத்தினியர் சின்னாங்குட்டி பரம்பரையில் இருந்து வந்த 11வது தலைமுறையாக தன்னை இணைத்துக் கொண்டார். இவர் குளிசை வகைகள், எண்ணெய் வகைகள் என்பவற்றையும் செய்து வருவதோடு சிறந்த சோதிடருமாவார். கிழக்கு மாகாணம் சித்த வைத்திய சங்கத்தில் அங்கத்தவராகவும் காணப்படுகின்றார். சிறந்த சித்த மருத்துவ கலவை தயாரிப்பாளராகவும் காணப்படுகின்றார். இவரது சேவையை பெறுவதற்காக எல்லா பிரதேசங்களிலிருந்தும் மக்கள் வருகை தந்து இவரது சேவையை பெற்று பயனடைகின்றனர். இவர் மூலிகைகளைக் கொண்டு வாகடம் தயாரிப்பதிலும் சிறந்து விளங்கினார், இவரது வைத்திய நிலையம் ஆயுள்வேத திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுப்பெயர் : அமரர். பாலிப்போடி சிவலிங்கம்
முகவரி : பிரதான வீதி, ஏறாவூர் – 04
பிறந்த திகதி : 1910.10.01
இறந்த திகதி : 1985.04.20
வயது : 75
கிராமசேவையாளர் பிரிவு : ஏறாவூர் – 04
துறை : சித்த ஆயுள்வேதம்
தொழில் : பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை முகாமையாளர் மற்றும் விவசாயம்

இவர் ஏறாவூர் - 04 இனைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர். பாலிப்போடி, ஆத்மபிள்ளை தம்பதியினரின் மகனாவார். சித்த ஆயுள்வேத மருத்துவர்களில் சிறந்த ஒரு மருத்துவராவார். அத்தோடு இவர் ஆறுமுகத்தான் குடியிருப்பு மாரியம்மன் கோயில் ஸ்தாபகரும் தலைவருமாவார். அத்துடன் சருவாங்க வைத்தியம் என்று கூறப்படுகின்ற பித்தம், சளி, சிபேற்பனம் போன்ற நோய்களுக்கு பெரியோர் முதல் சிறுவர் வரை வைத்தியம் செய்து வந்து இருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

முழுப் பெயர் : அமரர். தம்பிமுத்து வைரமுத்து
முகவரி : பிரதான வீதி, ஏறாவூர் – 05
பிறந்த திகதி : 1916.01.16
இறந்த திகதி : 1991.01.07
வயது : 75
கிராமசேவையாளர் பிரிவு : ஏறாவூர் 05
துறை : பூத வைத்தியம்
தொழில் : கமம்

இவர் ஏறாவூர் 05 இனை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர். இவர் ஏறாவூர் 05 மிஷன் பாடசாலையில் 5ம் தரம் வரை கல்வி கற்றுள்ளார். இவர் ஓர் விவசாய குடும்பத்தில் பிறந்தவர். சிறு வயது முதல் விவசாயத்தில் கொண்டிருந்த ஈடுபாடு காரணமாக இத் தொழிலை செய்து வந்தார். இவர் ஓர் பூசாரி ஆவார். தண்ணீர் ஓதுதல், நூல் போடுதல் முதலிய வேலைகளை செய்து வந்துள்ளார். இவர் ஓர் வட்டவிதானை ஆவார். அத்தோடு காளிகாமடு கர்ப்ப விநாயகர் ஆலயத்தில் மிக நீண்ட காலம் பணியாற்றினார். ஆறுமுகத்தான் குடியிருப்பு ஏறாவூர் - 01, ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலயம் ஏறாவூர் - 01, அரசடி விநாயகர் ஆலய தலைவராகவும் இருந்துள்ளார். என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| முழுப்பெயர் | : அமரர். கதிர்காமத்தம்பி சாமித்தம்பி |
| முகவரி | : குமாரவேலியர் கிராமம் |
| பிறந்த திகதி | : 1932.03.22 |
| இறப்பு | : 2006.11.15 |
| வயது | : 74 |
| கிராமசேவையாளர் பிரிவு | : குமாரவேலியார் கிராமம் |
| துறை | : பூதவைத்தியம் |

குமாரவேலியார் கிராமத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர் தரம் 6ல் கல்விகற்றவர். இவர் பூதவைத்தியம் என்று சொல்லப் படுகின்ற பில்லி, சூனியம், கழிப்பு காவல் பண்ணுதல் போன்ற வைத்தியத்திலும் சிறந்து விளங்கியிருக்கின்றார். இவர் தற்போது இறந்து விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.



| | |
|---|---|
| முழுப்பெயர் | : அமரர் நீலக்குட்டி கணபதிப்பிள்ளை |
| முகவரி | : பிரதான வீதி, ஆறுமுகத்தான் குடியிருப்பு |
| பிறந்த திகதி | : 1933.10.08 |
| இறப்பு | : 2005.05.28 |
| வயது | : 72 |
| கிராமசேவையாளர் பிரிவு | : ஆறுமுகத்தாக் குடியிருப்பு |
| துறை | : விசக்கடி |
| தொழில் | : வைத்தியம் |

ஆறுமுகத்தான் குடியிருப்பை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தரம் 5ல் கல்வி பயின்றவர். இவர் விச ஆருடத்தின் விதிகளுக்கும் இலட்சனங்களுக்கும் அமைய சித்தர்களினால் அருளிச் செய்யப்பட்ட பச்சிலை மூலிகைகளின் வைத்தியத்தை கற்றுக் கொண்டார். இவர் இப் பிரதேசத்தில் விசத்தால் தீண்டிய அனேகரின் உயிரை காப்பாத்தி வந்திருக்கின்றார். இவர் தற்போது இறந்து விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திரு. கோவிந்தன் கணேசமூர்த்தி |
| முகவரி | : | பிரதான வீதி, கொம்மாதுறை |
| பிறந்த திகதி | : | 1941.11.01 |
| வயது | : | 71 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | கொம்மாதுறை |
| துறை | : | நாடகம், சருவாங்கம் |
| தொழில் | : | பரிகாரி |

பாண்டிருப்பை பிறப்பிடமாகவும், கொம்மாதுறையை, வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தரம் 8ல் கல்வி பயின்றுள்ளார் இவர் பாடசாலையில் படிக்கும் போது கலை ஆர்வம் மிக்கவராகக் காணப்பட்டார் இதற்கு சான்றாக "ஆயிரம் ரூபாய்" என்ற நாடகதத்தினையும், அனாக்கலி என்ற நாடகத்தினையும், 1970ம் ஆண்டு சருவாங்க வைத்தியத்தினைக் கற்று வந்தார் இவரது தந்தையார் ஒரு வைத்தியர் இவரது சேவையினைப் பெறுவதற்கு உள்நாட்டில் இருந்தும் மற்றும் வெளி நாடுகளில் இருந்தும் இவரது சேவையினைப் பெறுகின்றானர் இவர் பலரிடம் இருந்து பல நாட்டுக்களையும் பெற்று இதரக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது ஆயுள் வேத திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவரது வைத்திய முறையானது நோயாளிக்கு நாடி பிடித்ததுப் பார்த்தல், குறிபார்த்தல், மந்திரம் மருந்து என்பன கொடுக்கப்படும். வாதம், பித்தம், சிலேப்பனம் போன்ற நோய்களக்கு மருந்து கொடுத்து வருகின்றார். இதனை எண்ணைய் குழிசை, லேகியம் போன்ற வகைகளில் வழங்குகின்றார். வைத்திய முறைகளில் சிறந்து விளங்குகின்றார்.



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திரு. யோசப் கனகரெட்ணம் |
| முகவரி | : | உமாமில் வீதி, கொம்மாதுறை |
| பிறந்த திகதி | : | 1941.06.06 |
| வயது | : | 71 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | கொம்மாதுறை |
| துறை | : | விச வைத்தியம் சருவாங்கம், சோதிடம் |
| தொழில் | : | பரிகாரி |

கொம்மாதுறையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தரம் 8இல் கல்வி பயின்றுள்ளார். இவர் சருவாங்கம் வைத்தியம் என்று கூறப்படுகின்ற பித்தம், சளி, சிலேற்பனம் போன்ற வியாதிகளுக்கும் மற்றும் விசக்கடி வைத்தியமான பாம்பு, தேள், குழவி, கீரி, முதலை, நாய், போன்ற விச மிருகங்களுக்குரிய வைத்திய முறைகளிலும் சிறந்து விளங்குகின்றார். இவரது சேவையானது சுமார் 1998ம் ஆண்டிலிருந்து இன்றுவரையும் இத் தொழிலை செய்து வருகின்றார். இவரது வைத்திய நிலையம் ஆயுள் வேத திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவரது சேவையினைப் பெறுவதற்காக சகல இடங்களில் இருந்தும் மக்கள் வருகைதந்து கொண்டு இருக்கின்றனர். இவர் தனது வீட்டுத் தோட்டத்தில் இருந்து வைத்தியத்துக்கான மூலிகைச் செடிகளைப் பெற்றுக்கொள்கின்றார்.

இவரது வைத்திய தொழில் நூட்பமுறையானது பலவேறு வடிவங்களில் பரிணாமித்து இருப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது. அந்த வகையில் புடையன், நாகம், விரி புடையன், கரி நாகம், இரத்தப் புடையம் சுருட்டை போன்ற பாம்புகளுக்குரிய மந்திர வகைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளார். இவர் ஒரு சோதிடரும் கூட.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | அமரர் பூபால பிள்ளை சுப்பிரமணியம் |
| முகவரி | : | வந்தாறுமூலை |
| பிறந்த திகதி | : | 1911.05.16 |
| இறப்பு | : | 1980.04.15 |
| வயது | : | 69 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | வந்தாறுமூலை |
| துறை | : | சருவாங்கம் |
| தொழில் | : | பரிகாரி |

வந்தாறுமூலை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தரம் 05ல் கல்வி பயின்றவர். இவர் சர்வாங்க வைத்தியம் என்று பித்தம், சளி, சிலேற்பனம் போன்ற நோய்களுக்கு வைத்தியம் செய்து வந்து இருக்கின்றார். இவரிடம் இருந்து அநேகர் வைத்தியம் பற்றி கற்று இருக்கின்றனர் இவர் தற்போது இறந்து விட்டார் இவருடைய வைத்திய சேவையினால் இப் பிரதேச மக்கள் அநேகர் சுகவாழ்வு பெற்று இருக்கின்றனர்.

| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | அமரர் கணபதிப்பிள்ளை கண்ணகை |
| முகவரி | : | குமாரவேலியார் கிராமம் |
| பிறந்த திகதி | : | 1935.05.02 |
| இறப்பு | : | 2004.04.01 |
| வயது | : | 69 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | குமாரவேலியார் கிராமம் |
| துறை | : | சருவாங்கம் |

குமாரவேலியார் கிராமத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர் தரம் 5ல் கல்விகற்றவர் இவர் சருவாங்க வைத்தியம் என்று சொல்லப் படுகின்ற பித்தம் சளி சிலேற்பனம் போன்ற வைத்திய முறைகளில் ஈடுபட்டு வருவதோடு இவ் வைத்தியத்திற்கான மூலிகைகளை கொண்டு மருந்து தயாரித்து வந்திருக்கின்றர். இவர் தற்போது இறந்து விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| முழுப்பெயர் | : அமரர். செம்பாகுட்டி கிருஸ்ணபிள்ளை |
| முகவரி | : சித்தாண்டி – 03 |
| பிறந்த திகதி | : 1919.09.25 |
| இறந்த திகதி | : 1987.07.14 |
| கிராமசேவையாளர் பிரிவு | : சித்தாண்டி – 03 |
| துறை | : ஆயுள்வேதம் |
| தொழில் | : வைத்தியதுறை |

இவர் சித்தாண்டியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர். இவர் சித்தாண்டி இராம கிருஸ்ண மிஷன் பாடசாலையில் தரம் 8 வரை கல்வி கற்றவர். இவர் ஒரு ஆயுள்வேத வைத்தியர். சருவாங்க வைத்தியம், விச வைத்தியம், பூத வைத்தியம் போன்ற துறைகளில் சிறந்து விளங்கியிருக்கிறார். இவரது தந்தை ஒரு விச வைத்தியர் இவர் தனது தந்தையிடம் இவ் வைத்திய நுட்பங்களை கற்றறிந்தார். சித்தாண்டி ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலய பரிபாலன சபை போசகராகவும் இருந்திருக்கின்றார். 18 வருட காலமாக வட்ட விதானையராகவும் சேவையாற்றியுள்ளார். கோராவெளி கண்ணகியம்மன் ஆலய ஸ்தாபகராகவும், பல நோக்கு கூட்டுறவு சங்க தலைவராகவும், கிராம அபிவிருத்தி சங்க தலைவராகவும், ஆலய தொண்டர் படையணி தலைவராகவும், சமாதான நீதவானாகவும் இருந்துள்ளார்.



| | |
|---|---|
| முழுப்பெயர் | : அமரர் காத்தான் சீனித்தம்பி |
| முகவரி | : முருகன் ஆலய வீதி, சவுக்கடி |
| பிறந்த திகதி | : 1930.04.13 |
| வயது | : 82 |
| கிராமசேவையாளர் பிரிவு | : சவுக்கடி |
| துறை | : பூத வைத்தியம் |
| தொழில் | : பரிகாரி |

சவுக்கடியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர் இவர் பூதவைத்தியம் என்று சொல்லப்படுகின்ற பில்லி, சூனியம், கழிப்பு, காவல் பண்ணுதல் போன்றவற்றிலும் சிறந்து விளங்குகிறார். அத்துடன் இவர் சவுக்கடியில் ஆரம்பகால வைத்தியர் ஆவார். இவர் ஒரு சிறந்த பூசாரியும், மந்திர மாந்தீரியங்களை பூரணமாக கற்று அவ் மந்திரங்களை தேவையான நேரத்தில் தேவையானவற்றிக்குப் பயன்படுத்தி வந்திருக்கின்றார், என்பது குறிப்பிடத்தக்கது.



| | |
|---|---|
| முழுப்பெயர் | : அமரர். நல்லையா கமலாவதி |
| முகவரி | : சேனைக்குடியிருப்பு |
| பிறந்த திகதி | : 1941.02.03 |
| இறப்பு | : 2010.07.01 |
| வயது | : 79 |
| கிராமசேவையாளர் பிரிவு | : குமாரவேலியார் கிராமம் |
| துறை | : பூத வைத்தியம் |
| தொழில் | : பரிகாரி |

சேனைக் குடியிருப்பை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர் தரம் 05ல் கல்விகற்றவர். இவர் பூதவைத்தியம் என்று சொல்லப் படுகின்ற பில்லி சூனியம் கழிப்பு காவல் பண்ணுதல் போன்ற வைத்தியத்திலும் சிறந்து விளங்கியிருக்கின்றார். இவர் தற்போது இறந்து விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திரு. ஆபரணம் வரதராஜன் |
| முகவரி | : | இலுப்படிச்சேனை |
| பிறந்த திகதி | : | 1944.07.13 |
| வயது | : | 68 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | இலுப்படிச்சேனை |
| துறை | : | விசக்கடி |
| தொழில் | : | இலிகிதர் |

இவர் பங்குடாவெளியை பிறப்பிடமாகவும், இலுப்படிசேனையை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் கா.பொ.சாதாரன தரம் கல்வி பயின்றுள்ளார். இவர் விசக்கடி வைத்தியமான பாம்பு, தேள், குழவி, கீரி, முதலை, நாய் போன்ற விச மிருகங்களுக்குரிய வைத்திய முறைகளையும் செய்து வருகின்றார். இவர் ஒரு சமூக சேவையாளரும் கூட அவ்வூர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவராகவும் ஆலய நிருவாகச் சபைத் தலைவராகவும் செயல்பட்டு வருகின்றார்.

| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திரு. மார்கண்டு சுந்தரமுர்த்தி |
| முகவரி | : | பங்குடாவெளி |
| பிறந்த திகதி | : | 1944.09.16 |
| வயது | : | 68 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | பங்குடாவெளி |
| துறை | : | சருவாங்கம் |
| தொழில் | : | கமம் |

பங்குடாவெளியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர் கா.பொ.உயர்தரம் கற்ற இவர் சருவாங்க வைத்தியம் என்று சொல்லப் படுகின்ற பித்தம், சளி, சிலேற்பனம் போன்ற வைத்திய முறைகளில் ஈடுபட்டு வருவதோடு இவ் வைத்தியத்திற்கான மூலிகைகளை கொண்டு மருந்து தயாரித்து வருகின்றார். இவர் தற்போது ஏடுகளில் உள்ள வைத்திய முறைகளை எல்லாம் தொகுத்து அவற்றினை இறுவெட்டு வடிவில் தயாரித்து பாதுகாத்து வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | அமரர் கதிர்காமத்தம்பி ஞானமுத்து |
| முகவரி | : | விஷ்ணு வித்தியாலய வீதி, வந்தாறுமூலை |
| பிறந்த திகதி | : | 1938.05.18 |
| இறப்பு | : | 2005.04.12 |
| வயது | : | 67 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | வந்தாறுமூலை |
| துறை | : | சருவாங்கம், சோதிடம் |
| தொழில் | : | பரிகாரி |

இவர் வந்தாறுமூலையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தரம் 8ல் கல்வி பயின்ற இவர் சருவாங்கம் வைத்தியம், சோதிடம் போன்ற துறைகளில் சிறந்து விளங்கினார் இவர் தற்போது இறந்து விட்டார். இவரது சேவையை பெறுவதற்காக எல்லா பிரதேசங்களிலிருந்தும் மக்கள் இவரது சேவையை பெற்று பயனடைந்துள்ளனர் இவர் மூலிகைகளைக் கொண்டு வாகடம் தயாரிப்பதிலும் சிறந்து விளங்கினார்.



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திரு. சுப்ரமணியம் கோபாலபிள்ளை |
| முகவரி | : | சங்கர் மில் வீதி, வந்தாறுமூலை |
| பிறந்த திகதி | : | 1945.09.17 |
| வயது | : | 67 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | வந்தாறுமூலை |
| துறை | : | விசக்கடி வைத்தியம் |
| தொழில் | : | பரிகாரி |

இவர் வந்தாறுமூலையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இவர் பிறப்பிலிருந்து இன்று வரை இத் தொழிலை செய்து வருகின்றார். இவர் தரம் 5ல் கல்வி கற்றவர். 9 விச ஆரடந்களின் விதிகளுக்கும் இலட்சனங்களுக்கும் அமைய சித்தர்களினால் அருளிச் செய்யப்பட்ட பஞ்சிலை மூலிகைகளின் வைத்தியத்தை கற்றுக் கொண்டார். இவர் இப் பிரதேசத்தில் விசத்தால் தீண்டிய அனேகரின் உயிரை காப்பாத்தி வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | அமரர் சங்கரப்பிள்ளை நல்லதம்பி |
| முகவரி | : | சித்தாண்டி – 03 |
| பிறந்த திகதி | : | 1938.03.10 |
| இறப்பு | : | 2005.10.12 |
| வயது | : | 67 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | சித்தாண்டி – 03 |
| துறை | : | விசக்கடி வைத்தியம் |
| தொழில் | : | பரிகாரி |

சித்தாண்டியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தரம் 8ல் கல்வி பயின்றவர். இவர் விசக்கடி வைத்தியமான பாம்பு, தேள், மூட்டை, பூரான், முதலை, பல்லி, விசம் உள்ள பிராணிகளுள் அடக்கப்படுகின்றது இவற்றுக்கு பரிகாரம் செய்து வந்திருக்கின்றார். இவர் தற்போது இறந்து விட்டார்.



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திரு. முத்துப்பிள்ளை கணபதிப்பிள்ளை |
| முகவரி | : | விஷ்ணு வித்தியாலய முன் வீதி, வந்தாறுமூலை |
| பிறந்த திகதி | : | 1946.02.16 |
| வயது | : | 66 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | வந்தாறுமூலை |
| துறை | : | சருவாங்கம், பூத வைத்தியம், முறிவு |
| தொழில் | : | பூசகர் |

இவர் வந்தாறுமூலையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இவர் சருவாங்கம் வைத்தியம் என்று கூறப்படுகின்ற பித்தம் சளி, சிலேற்பனம் போன்ற வியாதிகளுக்கும் மற்றும் பூத வைத்தியம் என்று கூறப்படுகின்ற மந்திரம், சுளுக்கு, திருநீறு போடுதல், காய் வெட்டுதல், களிப்பு, நூல் போடுதல், சூனியம், பில்லி போன்ற வைத்திய முறைகளையும் முறிவு வைத்திய துறையிலும் மிகவும் பிரகாசித்து வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முழுப்பெயர் : அமரர் கந்தக்குட்டி நாகலிங்கம்
முகவரி : துரைசாமி வீதி, ஆறுமுகத்தான் குடியிருப்பு
பிறந்த திகதி : 1937.06.26
இறப்பு : 2002.06.25
வயது : 65
கிராமசேவையாளர் பிரிவு : ஆறுமுகத்தான் குடியிருப்பு
துறை : பூத வைத்தியம்
தொழில் : வைத்தியம்

ஆறுமுகத்தான் குடியிருப்பை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தரம் 02ல் கல்வி பயின்றவர் இவர் பூத வைத்திய துறைகளான மந்திரம், சுளுக்கு, திருநீறு போடுதல், காய் வெட்டுதல், களிப்பு, நூல் போடுதல், சூனியம், பில்லி போன்றவற்றில் ஈடுபட்டு வந்திருக்கின்றார். இவர் தற்போது இறந்து விட்டார்.

முழுப்பெயர் : அமரர் கற்பூரம் ஞானமுத்து.
முகவரி : சின்னத்தம்பி வீதி, தளவாய்
பிறந்த திகதி : 1915.07.25
இறப்பு : 1980.04.12
வயது : 65
கிராமசேவையாளர் பிரிவு : தளவாய்
துறை : விசக்கடி, பூதம்
தொழில் : பரிகாரி

காரைதீவை பிறப்பிடமாகவும் தளவாயை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தரம் 8ல் கல்வி பயின்றவர். இவர் விசக்கடி வைத்தியமான பாம்பு, தேள், குழவி, கீரி, முதலை, நாய் போன்ற விச மிருகங்களுக்குரிய வைத்திய முறைகளையும் பூதவைத்தியம் என்று சொல்லப் படுகின்ற பில்லி, சூனியம், கழிப்பு, காவல் பண்ணுதல் போன்ற வற்றிலும் சிறந்து விளங்கினார். இவர் தற்போது இறந்து விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| முழுப்பெயர் | : திரு. சீனித்தம்பி கனகசபை |
| முகவரி | : காளி கேவில் வீதி, மாவடிவேம்பு |
| பிறந்த திகதி | : 1947.04.05 |
| வயது | : 65 |
| கிராமசேவையாளர் பிரிவு | : மாவடிவேம்பு |
| துறை | : சருவாங்கம், பூத வைத்தியம் |
| தொழில் | : கமம் |

இவர் களுவாங்சிக்குடியை பிறப்பிடமாகவும், காளிகோயில் வீதி மாவடிவேம்பை வசிப்பிடமாகவும் கொண்டவர். இவர் கா.பொ.சாதாரன தரம் கல்வி பயின்றுள்ள இவர் சருவாங்க வைத்தியம் என்று சொல்லப்படுகின்ற பித்தம், சளி, சிலேற்பனம், பூதவைத்தியம் என்று சொல்லப்படுகின்ற சூனியம், பில்லி, காய் வெட்டதல், குழையடித்தல், காவல் பண்ணுதல் போன்ற வைத்தியங்களில் சிறந்து விளங்குகின்றார்.

| | |
|---|---|
| முழுப்பெயர் | : அமரர். வைத்திலிங்கம் சின்னத்துரை |
| முகவரி | : ஏறாவூர் – 05 |
| பிறந்த திகதி | : 1925.04.10 |
| இறப்பு | : 1990.04.15 |
| வயது | : 65 |
| கிராமசேவையாளர் பிரிவு | : ஏறாவூர் – 05 |
| துறை | : பூத வைத்தியம் |
| தொழில் | : பூசாரி |

ஏறாவூர் 05ஐ பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர் தரம் 3ல் கல்விகற்றவர். இவர் பூதவைத்தியம் என்று சொல்லப்படுகின்ற பில்லி, சூனியம், கழிப்பு, காவல் பண்ணுதல் போன்ற வைத்தியத்திலும் சிறந்து விளங்கியிருக்கின்றார். இவர் தற்போது இறந்து விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| **முழுப்பெயர்** | : | **திரு. செம்பாப்போடி பொன்னம்பலம்** |
| **முகவரி** | : | **பழைய ஊர், செங்கலடி** |
| **பிறந்த திகதி** | : | **1947.09.10** |
| **வயது** | : | **65** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | : | **செங்கலடி** |
| **துறை** | : | **விச வைத்தியம்** |
| **தொழில்** | : | **பூசாரி** |

செங்கலடியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தரம் 8இல் கல்வி பயின்றுள்ளார் இவர் விசக்கடி வைத்தியமான பாம்பு, தேள், குழவி, கீரி, முதலை, நாய் போன்ற விச மிருகங்களுக்குரிய வைத்திய முறைகளில் சிறந்து விளங்குகின்றார். இவர் சுமார் 32 வருட காலமாக நாட்டு வைத்தியத் துறையில் விசக்கடி வைத்தியம் செய்து வருகின்றார். இவர் இவ் வைத்திய முறைகளை மன்னம் பிட்டியைச் சேர்ந்த குரு என்பவரிடம் பயின்று வந்து இருக்கின்றார். இவரது வைத்திய சேவையை நாடி ஏறாவூர்ப் பற்று, கோரளைப் பற்று, மண்முனைப் பற்று அத்துடன் வெளி மாவட்டங்களிலிருந்தும் மக்கள் வைத்திய சேவையினைப் பெறுகின்றனர்.

இவரது வைத்திய முறையானது பல்வேறு வடிவங்களில் பரினாமித்து இருக்கின்றது பாம்புக்கடியில் புடையன், நாகம், கரி நாகம், விரி புடையன், இரத்தப் புடையன், சுருட்டை போன்ற மந்திர வகைகளையும் அதற்கான குணப்படுத்தல் முறைகளையும் செய்து வருகின்றார்.

| | | |
|---|---|---|
| **முழுப்பெயர்** | : | **திருமதி. நாகராஜா சாராதாதேவி** |
| **முகவரி** | : | **பத்தினியம்மன் ஆலயவீதி, தேவாபுரம், வந்தாறுமூலை** |
| **பிறந்த திகதி** | : | **1948.10.01** |
| **வயது** | : | **64** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | : | **வந்தாறுமூலை** |
| **துறை** | : | **சருவாங்கம் வைத்தியம்** |
| **தொழில்** | : | **இல்லை** |

வந்தாறுமூலை தேவாபுரத்தினை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தரம் 3ல் கல்வி பயின்றவர். இவர் சர்வாங்க வைத்தியம் என்று சொல்லப்படுகின்ற பித்தம், சளி, சிலேற்பனம் போன்ற நோய்களுக்கு சிறியோர் முதல் பெரியோர் வரை வைத்தியம் செய்து வருகின்றார். இவர் இந்த வைத்திய முறையினை தனது தந்தையாரிடம் கற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| **முழுப்பெயர்** | : | **திரு. செல்லையா கந்தவேல்** |
| **முகவரி** | : | **சவுக்கடி வீதி, தளவாய்** |
| **பிறந்த திகதி** | : | **1948.01.31** |
| **வயது** | : | **64** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | : | **தளவாய்** |
| **துறை** | : | **விச வைத்தியம், பூத வைத்தியம்** |
| **தொழில்** | : | **பரிகாரி** |

தளவாயை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தரம் 5ல் கல்வி பயின்றார். இவர் விசக்கடி வைத்தியமான பாம்பு, தேள், குழவி, கீரி, முதலை, நாய் போன்ற விச மிருகங்களுக்குரிய வைத்திய முறைகளையும் பூதவைத்தியம் என்று சொல்லப்படுகின்ற பில்லி, சூனியம், கழிப்பு, காவல் பண்ணுதல் போன்ற வற்றிலும் சிறந்து விளங்குகின்றார்.



| | | |
|---|---|---|
| **முழுப்பெயர்** | : | **அமரர் சீனித்தம்பி ஆறுமுகம்** |
| **முகவரி** | : | **முருகன் ஆலயவீதி, சித்தாண்டி - 03** |
| **பிறந்த திகதி** | : | **1936.00.22** |
| **இறப்பு** | : | **2000.05.15** |
| **வயது** | : | **64** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | : | **சித்தாண்டி - 03** |
| **துறை** | : | **சருவாங்கம்** |
| **தொழில்** | : | **பரிகாரி** |

சித்தாண்டியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தரம் 3ல் கல்வி பயின்றவர். இவர் சர்வாங்க வைத்தியம் என்று சொல்லப்படுகின்ற பித்தம், சளி, சிலேற்பனம் போன்ற நோய்களுக்கு சிறியோர் முதல் பெரியோர் வரை வைத்தியம் செய்து வந்திருக்கின்றார் இவர் தற்போது இறந்து விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| முழுப்பெயர் | : அமரர் சுப்பிரமணியம் நாகராஜா |
| முகவரி | : தேவபுரம், வந்தாறுமூலை |
| பிறந்த திகதி | : 1947.12.10 |
| இறப்பு | : 2008.08.13 |
| வயது | : 61 |
| கிராமசேவையாளர் பிரிவு | : வந்தாறுமூலை |
| துறை | : விச வைத்தியம், சருவாங்கம், பூதவைத்தியம், முறிவு |
| தொழில் | : பூசகர் |

இவர் வந்தாறுமூலையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இவர் எஸ்.எஸ்.சி பயின்றுள்ளார். சருவாங்கம் வைத்தியம் என்று கூறப்படுகின்ற பித்தம், சளி, சிலேற்பனம் போன்ற வியாதிகளுக்கும் மற்றும் பூத வைத்தியம் என்று கூறப்படுகின்ற மந்திரம், சுளுக்கு, திருநீறு போடுதல், காய் வெட்டுதல், களிப்பு, நூல் போடுதல், சூனியம், பில்லி போன்ற வைத்திய முறைகளிலும் பிரகாசித்து வந்திருக்கின்றார். அத்துடன் விசக்கடி, முறிவு வைத்திய துறையிலும் சிறந்து விளங்குகின்றார். தற்போது இறந்து விட்டார்.



| | |
|---|---|
| முழுப்பெயர் | : திரு. பொன்னுத்துரை தேவசிங்கம் |
| முகவரி | : கித்துள்வெவ, கறுடியனாறு |
| பிறந்த திகதி | : 1951.01.14 |
| வயது | : 61 |
| கிராமசேவையாளர் பிரிவு | : கித்துள்வெவ |
| துறை | : விசவைத்தியம் |
| தொழில் | : பரிகாரி |

கிரான்குளத்தை பிறப்பிடமாகவும், கித்துள்வெவவை வசிப்பிடமாகவும் கொண்டவர் தரம் 8ல் கல்வி பயின்றுள்ளார் இவர் விசக்கடி வைத்தியமான பாம்பு, தேள், குழவி, கீரி, முதலை, நாய் போன்ற விச மிருகங்களுக்குரிய வைத்திய முறைகளில் சிறந்து விளங்குகின்றார். இவர் தனது வீட்டுத் தோட்டத்தில் வைத்தியம் செய்வதற்கான மூலிகைகளையும் வளர்த்து பாதுகாத்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முழுப்பெயர் : திரு. வீரபத்திரன் வைகாலிப்போடி
முகவரி : குமாரவேலியர் கிராமம்
பிறந்த திகதி : 1952.10.11
வயது : 60
கிராமசேவையாளர் பிரிவு : குமாரவேலியார் கிராமம்
துறை : பூத வைத்தியம்
தொழில் : பூசாரி

குமாரவேலியார் கிராமத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர் தரம் 5ல் கல்விகற்றவர். இவர் பூதவைத்தியம் என்று சொல்லப்படுகின்ற பில்லி, சூனியம், கழிப்பு, காவல் பண்ணுதல் போன்ற வைத்தியத்திலும் சிறந்து விளங்குகிறார்.



முழுப்பெயர் : திரு. செல்லப்பா மயில்வாகனம்
முகவரி : ஏறாவூர் – 05
பிறந்த திகதி : 1952.04.12
வயது : 60
கிராமசேவையாளர் பிரிவு : ஏறாவூர் – 05
துறை : பூதவைத்தியம்
தொழில் : பூசகர்

சித்தாண்டியைப் பிறப்பிடமாகவும், ஏறாவூர் - 05ஐ வசிப்பிடமாகவும் கொண்ட இவர் பூதவைத்தியம் என்று சொல்லப்படுகின்ற பில்லி, சூனியம், கழிப்பு, காவல் பண்ணுதல் போன்ற வைத்தியத்திலும் சிறந்து விளங்குகிறார். அத்துடன் வீடு காவல் பண்ணுதல், காய் வெட்டுதல், திருநீறு போடுதல், மாந்தீகம் மற்றும் பேய் ஓட்டுதல் மற்றம் ஆலயப் பூசகராகவும் இவர் திகழ்கின்றார்.

முழுப்பெயர் : அமரர் காளிக்குட்டி அரசரைத்தினம்
முகவரி : ஏறாவூர் – 04
பிறந்த திகதி : 1931.03.21
இறப்பு : 1997.05.15
வயது : 66
கிராமசேவையாளர் பிரிவு : ஏறாவூர் – 04
துறை : பூத வைத்தியம்
தொழில் : பூசாரி

ஏறாவூர் 04ஐ பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர் தரம் 05ல் கல்விகற்றவர். இவர் பூதவைத்தியம் என்று சொல்லப்படுகின்ற பில்லி, சூனியம், கழிப்பு, காவல் பண்ணுதல் போன்ற வைத்தியத்திலும் சிறந்து விளங்கியிருக்கின்றார். இவர் தற்போது இறந்து விட்டார். அது மட்டுமன்றி மாந்திரிகத் துறையில் தன்னை தடம் பதித்துக் கொண்டது மட்டுமன்றி நூல் போடுதல், வளவு காவல் பண்ணுதல், தண்ணீர் ஓதிக் கொடுத்தல், திருநீறு போடுதல், பேய் ஓட்டுதல் போன்ற செயல்பாடுகளில் ஈடுபட்டு வந்து இருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| **முழுப்பெயர்** | : | **அமரர் சீனித்தம்பி கந்தப்பன்** |
| **முகவரி** | : | **பிரதான வீதி, மாவடி வேம்பு** |
| **பிறந்த திகதி** | : | **1922.01.12** |
| **இறப்பு** | : | **1980.04.12** |
| **வயது** | : | **62** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | : | **மாவடிவேம்பு** |
| **துறை** | : | **சருவாங்கம், பூத வைத்தியம்** |
| **தொழில்** | : | **பரிகாரி** |

இவர் சித்தாண்டியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர் தரம் 8இல் கல்வி பயின்ற இவர் சருவாங்க வைத்தியம் என்று சொல்லப்படுகின்ற பித்தம், சளி, சிலேற்பனம் பூத வைத்தியம் என்று சொல்லப்படுகின்ற பில்லி, சூனியம், காய் வெட்டுதல், கழிப்புச் சடங்கு, காவல் பண்ணுதல், பேய் ஓட்டுதல், திருநீறு போடுதல், சுளுக்கு பார்த்தல் போன்ற வைத்தியங்களை செய்து வந்திருக்கின்றார்.



| | | |
|---|---|---|
| **முழுப்பெயர்** | : | **திரு. கோபால் சந்திரசேகரம்** |
| **முகவரி** | : | **பாரதி வீதி, ஆறுமுகத்தான் குடியிருப்பு** |
| **பிறந்த திகதி** | : | **1954.08.03** |
| **வயது** | : | **58** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | : | **ஆறுமுகத்தான் குடியிருப்பு** |
| **துறை** | : | **விச வைத்தியம், சருவாங்க வைத்தியம்** |
| **தொழில்** | : | **வைத்தியம்** |

ஆறுமுகத்தான் குடியிருப்பை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தரம் 8ல் கல்வி பயின்றவர் இவர் சர்வாங்க வைத்தியம் என்று சொல்லப்படுகின்ற பித்தம், சளி, சிலேற்பனம் போன்ற நோய்களுக்கு சிறியோர் முதல் பெரியோர் வரை வைத்தியம் செய்து வருகின்றார் இவர் விசக்கடி வைத்தியமான பாம்பு, தேள், மூட்டை, பூரான், முதலை, பல்லி, விசம் உள்ள பிராணிகளுள் அடக்கப்படுகின்றது இவற்றுக்கு பரிகாரம் செய்து வருகின்றார்.

| | | |
|---|---|---|
| **முழுப்பெயர்** | : | **திரு. சீனித்தம்பி நடராசா** |
| **முகவரி** | : | **துரைசாமி வீதி, ஆறுமுகத்தான் குடியிருப்பு** |
| **பிறந்த திகதி** | : | **1954.01.12** |
| **வயது** | : | **58** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | : | **ஆறுமுகத்தான் குடியிருப்பு** |
| **துறை** | : | **பூத வைத்தியம** |
| **தொழில்** | : | **பூசாரி** |

ஆறுமுகத்தான் குடியிருப்பை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தரம் 05ல் கல்வி பயின்றவர். இவர் பூத வைத்திய துறைகளான மந்திரம், சுளுக்கு, திருநீறு போடுதல், காய் வெட்டுதல், களிப்பு, நூல் போடுதல், சூனியம், பில்லி போன்றவற்றில் ஈடுபட்டு வருகின்றார். இவரது சேவையினால் அநேகர் குணம் அடைந்து வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முழுப்பெயர் : திருமதி. கந்தப்பன் தங்கம்
முகவரி : பிரதான வீதி, மாவடி வேம்பு
பிறந்த திகதி : 1954.06.14
வயது : 58
கிராமசேவையாளர் பிரிவு : மாவடிவேம்பு
துறை : விச வைத்தியம்
தொழில் : விச வைத்தியம்

இவர் சித்தாண்டியை பிறப்பிடமாகவும், மாவடி வேம்பை வசிப்பிடமாகவும் கொண்டவர் தரம் 8இல் கல்வி பயின்றுள்ளார். இவர் விசக்கடி வைத்தியமான பாம்பு, தேள், குழவி, கீரி, முதலை, நாய், போன்ற விச மிருகங்களுக்குரிய வைத்திய முறைகளையும் செய்து வருகின்றார். இவர் ஒரு பெண் பரிகாசியும் ஆவார்.



முழுப்பெயர் : அமரர். செல்லையா சுப்பிரமணியம்
முகவரி : விஷ்ணு வித்தியாலய வீதி, வந்தாறுமூலை
பிறந்த திகதி : 1951.08.02
இறப்பு : 2008.08.17
வயது : 57
கிராமசேவையாளர் பிரிவு : வந்தாறுமூலை
துறை : சருவாங்கம், சோதிடம்
தொழில் : சருவாங்க வைத்தியம்.

இவர் வந்தாறுமூலையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தரம் 5ல் கல்வி பயின்ற இவர் சருவாங்கம் வைத்தியம், சோதிடம் போன்ற துறைகளில் சிறந்து விளங்கினார் இவர் தற்போது இறந்து விட்டார். இவரது சேவையை பெறுவதற்காக எல்லாப் பிரதேசங்களிலிருந்தும் மக்கள் இவரது சேவையை பெற்று பயனடைந்துள்ளனர் இவர் மூலிகைகளைக் கொண்டு வாகடம் தயாரிப்பதிலும் சிறந்து விளங்கினார்.



முழுப்பெயர் : திரு. சுப்பிரமணியம் பாலசிங்கம்
முகவரி : உதயன்மூலை, சித்தாண்டி – 04
கிராமசேவையாளர் பிரிவு : சித்தாண்டி
பிறந்த திகதி : 1955.07.08
வயது : 57
துறை : விசம், முறிவு
தொழில் : விவசாயம்

இவர் சித்தாண்டியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர் தரம் 5இல் கல்வி பயின்றார் இவர் விசக்கடி வைத்தியமான பாம்பு, தேள், குழவி, கீரி, முதலை, நாய் போன்ற விச மிருகங்களுக்குரிய வைத்திய முறைகளையும் அத்துடன் முறிவு வைத்தியத்திலும் சிறந்து விளங்குகின்றார். இவரது வைத்திய சேவையினை நாடி உள்ளூரில் மட்டுமன்றி வெளி ஊரிலும் இருந்து மக்கள் இவரது சேவையினைப் பெறுகின்றனர், இவர் பாம்புக்கடியில் பல்வேறு பாம்புகளுக்கு வைத்தியம் செய்து வருகின்றார், புடையன், நாகம், கரி நாகம், சுருட்டை போன்ற பாம்புகளுக்கு வைத்தியம் செய்து வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுப்பெயர் : அமரர். சண்முகம் நாகராசா
முகவரி : ஏறாவூர் – 04
பிறந்த திகதி : 1926.07.10
இறப்பு : 1983.12.18
வயது : 57
கிராமசேவையாளர் பிரிவு : ஏறாவூர் – 04
துறை : சருவாங்கம்
தொழில் : ஆசிரியர்

ஏறாவூர் - 04ஐ பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இவர் எஸ்.எஸ்.சி கல்விகற்றவர் இவர் சருவாங்க வைத்தியம் என்று சொல்லப்படுகின்ற பித்தம், சளி, சிலேற்பனம் போன்ற வைத்திய முறைகளில் ஈடுபட்டு வருவதோடு இவ் வைத்தியத்திற்கான மூலிகைகளை கொண்டு மருந்து தயாரித்து வந்திருக்கின்றார். இவர் தற்போது இறந்து விட்டார். இவர் நாடி பிடித்துப் பார்த்தல், குறிபார்த்தல், மருந்துகள் தயாரித்தல் போன்ற துறைகளில் ஈடுபட்டு வருக்னிறார்.



முழுப்பெயர் : திரு. வண்ணமணி தவராசா
முகவரி : பதுளை வீதி, இலுப்படிச்சேனை
பிறந்த திகதி : 1955.04.02
வயது : 57
கிராமசேவையாளர் பிரிவு : இலுப்படிச்சேனை
துறை : மாந்திரீகக்கலை, பூத வைத்தியம்
தொழில் : கமம்

- இவர் பதுளை வீதி, இலுப்படிச்சேனையை வசிப்பிடமாகக் கொண்டவர். இவர் தரம் 5 இல் கல்வி பயின்றார்.
- இவர் 30 வருட காலமாக இம் மாந்திரீகக் கலையைச் செய்து வருகின்றார்.
- இதில் பில்லி, சூனியம், காய் வெட்டுதல் என்பனவற்றினை செய்து வருகின்றார்
- இவர் அம்மன் காவியம், தாலாட்டு, காவடிச்சிந்து போன்ற பாடல்களைப் பாடும் வல்லமையுள்ளவர்.
- இவர் ஆலய பரிபாலன சபையினரனால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முழுப்பெயர் : திரு. வேலுப்்பிள்ளை செல்லத்துரை
முகவரி : பிரதான வீதி, ஆறுமுகத்தான் குடியிருப்பு
கிராமசேவையாளர் பிரிவு : ஆறுமுகத்தான் குடியிருப்பு
பிறந்த திகதி : 1956.02.15
வயது : 56
துறை : விசக்கடி, பூதவைத்தியம்
தொழில் : வைத்தியம்

ஆறுமுகத்தான் குடியிருப்பை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தரம் 5ல் கல்வி பயின்றவர். இவர் விசக்கடி வைத்தியமான பாம்பு, தேள், மூட்டை, பூரான், முதலை, பல்லி, விசம் உள்ள பிராணிகளுள் அடக்கப்படுகின்றது. இவற்றுக்கு பரிகாரம் செய்து வருகின்றார். பூத வைத்தியத்திலும் சிறந்து விளங்குகின்றார்.



முழுப்பெயர் : திரு. பொன்னுச்சாமி சுந்தரமூர்த்தி
முகவரி : கோயில் முச்சந்தி வீதி, சித்தாண்டி – 02
பிறந்த திகதி : 1956.06.13
வயது : 56
கிராமசேவையாளர் பிரிவு : சித்தாண்டி
துறை : விசக்கடி, பூதவைத்தியம், சருவாங்கம்
தொழில் : பரிசாரி

கிரானை பிறப்பிடமாகவும், சித்தாண்டி 02ஐ வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தரம் 6ல் கல்வி பயின்றவர். இவர் விசக்கடி வைத்தியமான பாம்பு, தேள், குழவி, கீரி, முதலை, நாய் போன்ற விச மிருகங்களுக்குரிய வைத்திய முறைகளையும் பூதவைத்தியம் என்று சொல்லப்படுகின்ற பில்லி, சூனியம், கழிப்பு, காவல் பண்ணுதல் போன்றவற்றையும் பித்தம், சளி, சிலேற்பனம் போன்ற வைத்திய முறைகளையும் செய்து வருகின்றார்.



முழுப்பெயர் : திரு. கணபதிப்பிள்ளை தங்கவேல்
முகவரி : சவுக்கடி வீதி, தளவாய்
பிறந்த திகதி : 1957.11.12
வயது : 55
கிராமசேவையாளர் பிரிவு : தளவாய்
துறை : பூத வைத்தியம்
தொழில் : கடற்தொழில்

இவர் தளவாயினை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர். கடந்த 45 வருடங்களாக ஆலய பணி செய்து வரும் இவர் ஓர் தெய்வக்காரன் ஆவார். இவரது குரு வீரக்குட்டி சின்னவன் ஆவார். இவர் தளவாய் குமராலய பூசகரும் ஆவார். தெய்வ பாடல்கள் பாடுவதில் திறமையானவராய் உள்ளார். மாந்திரிக வேலைகள் செய்வதிலும் உருவேற்றி தெய்வ வழிபாடுகள் செய்வதிலும் ஈடுபட்டு வருகிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| முழுப்பெயர் | : திரு. பொன்னுத்துரை கருணாகரன் |
| முகவரி | : சித்தாண்டி – 04 |
| பிறந்த திகதி | : 1957.06.27 |
| வயது | : 55 |
| கிராமசேவையாளர் பிரிவு | : சித்தாண்டி |
| துறை | : முறிவு வைத்தியம், சருவாங்கம் |
| தொழில் | : சிற்றூழியம் |

சித்தாண்டியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இவர் கா.பொ.த சாதாரண தரத்தில் கல்வி பயின்றவர். இவர் சர்வாங்க வைத்தியம் என்று சொல்லப்படுகின்ற பித்தம், சளி, சிலேற்பனம் போன்ற நோய்களுக்கு சிறியோர் முதல் பெரியோர் வரை வைத்தியம் செய்து வந்திருக்கின்றார். இத்துடன் முறிவு வைத்தியத்திலும் சிறந்து விளங்குகின்றார். இவரது சேவையை பெறுவதற்கு கிழக்கு மாகாணத்திலுள்ள எல்லா பகுதிகளில் இருந்தும் மக்கள் வருகை தருகின்றனர். இவர் தனது தந்தையிடம் இளமையில் இருந்து இவ் வைத்திய நுட்டங்களைக் கற்றுக் கொண்டார், 18 வயதில் இருந்து இவ் வைத்திய முறையினை செய்து வருகின்றார். இவர் எலும்பு முறிவு சுளுக்கு போன்ற துறைகளில் மட்டுமன்றி ஏனைய தோல், சிரங்கு, பித்தம் போன்ற நோய்களையும் குணப்படுத்தி வருகின்றார், இவரது திணைக்களமும் ஆயுள் வேத திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகின்றது.



| | |
|---|---|
| முழுப்பெயர் | : திரு. ஆறுமுகம் கமலசேகரம் |
| முகவரி | : பாரதி வீதி, ஆறுமுகத்தான் குடியிருப்பு |
| பிறந்த திகதி | : 1958.04.10 |
| வயது | : 54 |
| கிராமசேவையாளர் பிரிவு | : ஆறுமுகத்தான் குடியிருப்பு |
| துறை | : சருவாங்கம் |
| தொழில் | : வைத்தியம் |

ஆறுமுகத்தான் குடியிருப்பை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தரம் 8ல் கல்வி பயின்றார்கள். இவர் சர்வாங்க வைத்தியம் என்று சொல்லப்படுகின்ற பித்தம், சளி, சிலேற்பனம் போன்ற நோய்களுக்கு சிறியோர் முதல் பெரியோர் வரை வைத்தியம் செய்து வருகின்றார்.

| | |
|---|---|
| முழுப்பெயர் | : அமரர். கண்ணமுத்து வேலுப்பிள்ளை |
| முகவரி | : குமாரவேலியர் கிராமம் |
| பிறந்த திகதி | : 1921.04.10 |
| இறப்பு | : 1975.03.22 |
| வயது | : 54 |
| கிராமசேவையாளர் பிரிவு | : குமாரவேலியார் கிராமம் |
| துறை | : சருவாங்கம் |
| தொழில் | : நிலஅளைவையாளர் |

காரைதீவை பிறப்பிடமாகவும், குமாரவேலியர் கிராமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் எஸ்.எஸ்.சி கல்விகற்றவர். இவர் சருவாங்க வைத்தியம் என்று சொல்லப்படுகின்ற பித்தம், சளி, சிலேற்பனம் போன்ற வைத்திய முறைகளில் ஈடுபட்டு வருவதோடு இவ் வைத்தியத்திற்கான மூலிகைகளை கொண்டு மருந்து தயாரித்து வந்திருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுப்பெயர் : அமரர். இளையவன் வைரி
முகவரி : களுவன்கேணி – 02
பிறந்த திகதி : 1912.05.04
இறப்பு : 1965.04.10
வயது : 53
கிராமசேவையாளர் பிரிவு : களுவன்கேணி
துறை : சருவாங்கம் பூத வைத்தியம்
தொழில் : மருத்துவிச்சி

செட்டிபாளையத்தை பிறப்பிடமாகவும், களுவன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தரம் 2ல் கல்வி பயின்றுள்ளார். இவர் சருவாங்க வைத்தியம் என்று சொல்லப்படுகின்ற பித்தம், சளி, சிலேற்பனம் பூதவைத்தியம் என்று சொல்லப்படுகின்ற பில்லி, சூனியம், காய் வெட்டுதல், கழிப்புச் சடங்கு, ஓட்டுதல், காவல் பண்ணுதல், பேய் ஓட்டுதல், திருநீறு போடுதல், சுளுக்கு பார்த்தல் போன்ற வைத்தியங்களை செய்து வந்திருக்கின்றார். இவர் தற்போது இறந்து விட்டார்.

முழுப்பெயர் : அமரர் காசிநாதன் செல்லத்தம்பி
முகவரி : கணேச வித்தியாலய வீதி, வந்தாறுமூலை
பிறந்த திகதி : 1928.01.02
இறப்பு திகதி : 1980.05.04
வயது : 52
கிராமசேவையாளர் பிரிவு : வந்தாறுமூலை
துறை : பூத வைத்தியத்துறை

இவர் வந்தாறுமூலையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர். இவர் தரம் 5ல் கல்வி பயின்றவர். இவர் பூத வைத்தியத்துறையில் சிறந்து விளங்கினார். பூத வைத்தியமான பேயோட்டுதல், சூனியம் எடுத்தல், வளவு காவல் பண்ணுதல், சுளுக்கு பார்த்தல், காய் வெட்டுதல், களிப்பு சடங்கு போன்றவைகளை செய்து பிரபல்யம் பெற்று விளங்கினார்.

முழுப்பெயர் : அமரர் வேலாப்போடி மாரிமுத்து
முகவரி : சித்தாண்டி – 03
பிறந்த திகதி : 1917.06.04
இறப்பு : 1968.01.18
வயது : 51
கிராமசேவையாளர் பிரிவு : சித்தாண்டி – 03
துறை : சருவாங்கம்
தொழில் : பரியாரி

திருப்பெருந்துறையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தரம் 8ல் கல்வி பயின்றவர். இவர் சர்வாங்க வைத்தியம் என்று சொல்லப்படுகின்ற பித்தம், சளி, சிலேற்பனம் போன்ற நோய்களுக்கு சிறியோர் முதல் பெரியோர் வரை வைத்தியம் செய்து வந்திருக்கின்றார். இவர் தற்போது இறந்து விட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| முழுப்பெயர் | : திரு. சாமித்தம்பி பரமசிவம் (நாகராசா) |
| முகவரி | : முருகன் ஆலயவீதி, சித்தாண்டி – 03 |
| பிறந்த திகதி | : 1961.12.30 |
| வயது | : 51 |
| கிராமசேவையாளர் பிரிவு | : சித்தாண்டி |
| துறை வைத்தியம் | : சருவாங்க வைத்தியம், விசக்கடி |
| தொழில் | : கமம் |

சித்தாண்டியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தரம் 3ல் கல்வி பயின்றவர். இவர் சர்வாங்க வைத்தியம் என்று சொல்லப்படுகின்ற பித்தம், சளி, சிலேற்பனம் போன்ற நோய்களுக்குப் பாம்பு போன்ற விச பிராணிகளின் விச கடிக்கும் சிறியோர் முதல் பெரியோர் வரை வைத்தியம் செய்து வருகின்றர்.

| | |
|---|---|
| முழுப்பெயர் | : திரு. நாகராசா சிறிஸ்கந்தராசா |
| முகவரி | : காளி கோவில் வீதி, ஏறாவூர் – 04 |
| பிறந்த திகதி | : 1961.07.07 |
| வயது | : 51 |
| கிராமசேவையாளர் பிரிவு | : ஏறாவூர் – 04 |
| துறை | : சருவாங்கம், பூத வைத்தியம் |
| தொழில் | : பூசாரி |

இவர் ஏறாவூர் 04ஐ பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர் இவர் க.பொ.த. உயர்தரம் வரை பயின்றார், இவர் சருவாங்க வைத்தியம் என்று சொல்லப்படுகின்ற பித்தம், சளி, சிலேற்பனம், பூத வைத்தியம் என்று சொல்லப்படுகின்ற பில்லி, சூனியம், காய் வெட்டுதல், கழிப்புச் சடங்கு, ஓட்டுதல், காவல் பண்ணுதல், பேய் ஓட்டுதல், திருநீறு போடுதல், சுளுக்கு பார்த்தல் போன்றவற்றையும் செய்து வருகின்றார்.



| | |
|---|---|
| முழுப்பெயர் | : திரு. நாகலிங்கம் இராசதுரை |
| முகவரி | : துரைசாமி வீதி, ஆறுமுகத்தான் குடியிருப்பு |
| பிறந்த திகதி | : 1962.10.26 |
| வயது | : 50 |
| கிராமசேவையாளர் பிரிவு | : ஆறுமுகத்தான் குடியிருப்பு |
| துறை | : பூத வைத்தியம் |
| தொழில் | : ஆசிரியர் |

ஆறுமுகத்தான் குடியிருப்பை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இவர் உயர் தரத்தில் கல்வி பயின்றவர். தற்போது ஆசிரியராக கடமையாற்றி வருவதோடு பூத வைத்திய துறைகளான மந்திரம், சுளுக்கு, திருநீறு போடுதல், காய் வெட்டுதல், களிப்பு, நூல் போடுதல், சூனியம், பில்லி போன்றவற்றில் ஈடுபட்டு வருகின்றார். இவர் ஆங்கில வைத்திய முறையினால் தீர்க்க முடியாத சில நோய்களை தீர்த்து வைத்து இருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| **முழுப்பெயர்** | : | **திரு. கனகரெத்தினம் வசந்தக்குமார்** |
| **முகவரி** | : | **தோம்புதர் வீதி, ஏறாவூர் – 05** |
| **பிறந்த திகதி** | : | **1963.06.20** |
| **வயது** | : | **49** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | : | **ஏறாவூர் – 05** |
| **துறை** | : | **பூத வைத்தியம்** |
| **தொழில்** | : | **வாகனம் திருத்துனர்** |

ஏறாவூர் - 05ஐ பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர். தரம் 3ல் கல்விகற்றவர். இவர் பூதவைத்தியம் என்று சொல்லப்படுகின்ற பில்லி, சூனியம், கழிப்பு, காவல் பண்ணுதல் போன்ற வைத்தியத்திலும் சிறந்து விளங்குகிறார். இவர் சிறந்த மந்திரவாதியும் ஆவார். அத்துடன் ஆலயப் பூசகராகவும் செயல்பட்டு வருகின்றார்.



| | | |
|---|---|---|
| **முழுப்பெயர்** | : | **வைசியன் யோசப் மேரி** |
| **முகவரி** | : | **யோசப் வீதி, தன்னாமுனை** |
| **பிறந்த திகதி** | : | **1963.04.13** |
| **வயது** | : | **49** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | : | **தன்னாமுனை** |
| **துறை** | : | **சருவாங்க வைத்தியம்** |
| **தொழில்** | : | **பரிகாரி** |

தன்னாமுனையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இவர் கா.பொ.த.உயர்தரம் வரை கற்றுள்ளார். இவர் சருவாங்க வைத்தியம் என்று சொல்லப்படுகின்ற பித்தம், சளி, சிலேற்பனம் போன்ற வைத்திய முறைகளில் ஈடுபட்டு வருவதோடு இவ் வைத்தியத்திற்கான மூலிகைகளை கொண்டு மருந்தும் தயாரித்து வருகின்றார்.



| | | |
|---|---|---|
| **முழுப்பெயர்** | : | **திரு. தம்பிராசா யோகராசா (சின்னவன்)** |
| **முகவரி** | : | **உலக உணவுத்திட்டம் வீதி** |
| **பிறந்த திகதி** | : | **1963.07.05** |
| **வயது** | : | **49** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | : | **ஐயங்கேணி** |
| **துறை** | : | **பூத வைத்தியம்** |
| **தொழில்** | : | **பூசகர்** |

வந்தாறுமூலையைப் பிறப்பிடமாகவும், ஐயங்கேணியை வசிப்பிடமாகவும் கொண்டவர், தரம் 02ல் கல்விகற்றவர். இவர் பூதவைத்தியம் என்று சொல்லப்படுகின்ற பில்லி, சூனியம், கழிப்பு, காவல் பண்ணுதல் போன்ற வைத்தியத்திலும் சிறந்து விளங்குகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுப்பெயர் : அமரர் சின்னத்தம்பி மூத்தான்
முகவரி : களுவன்கேணி – 02
பிறந்த திகதி : 1913.04.15
இறப்பு : 1960.03.04
வயது : 47
கிராமசேவையாளர் பிரிவு : களுவன்கேணி
துறை : சருவாங்கம்
தொழில் : பரிகாரி

இவர் களுவன்கேணியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர். தரம் 3இல் கல்வி பயின்றவர் சருவாங்க வைத்தியம் என்று சொல்லப்படுகின்ற பித்தம், சளி, சிலேற்பனம் போன்ற நோய்களுக்கு சிறுவர் முதல் பெரியோர் வரை வைத்தியம் செய்து வந்து இருக்கிறார்

முழுப்பெயர் : அமரர். வீரகத்தி காசுபதி
முகவரி : வேக்கவுஸ் வீதி, வந்தாறுமூலை
பிறந்த திகதி : 1954.04.08
இறப்பு : 2000.04.15
வயது : 46
கிராமசேவையாளர் பிரிவு : வந்தாறுமூலை
துறை : சருவாங்கம், பூத வைத்தியம், முறிவு

இவர் வந்தாறுமூலையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர். சருவாங்கம் வைத்தியம் என்று கூறப்படுகின்ற பித்தம் சளி, சிலேற்பனம் போன்ற வியாதிகளுக்கும் மற்றும் பூத வைத்தியம் என்று கூறப்படுகின்ற மந்திரம், சுளுக்கு, திருநீறு போடுதல், காய் வெட்டுதல், களிப்பு, நூல் போடுதல், சூனியம், பில்லி போன்ற வைத்திய முறைகளையும் முறிவு வைத்திய துறையிலும் மிகவும் பிரகாசித்து வந்திருக்கின்றார்.



முழுப்பெயர் : திரு. அரசு சிறிதரன்
முகவரி : காந்தி வீதி, ஆறுமுகத்தான் குடியிருப்பு
பிறந்த திகதி : 1967.09.03
வயது : 45
கிராமசேவையாளர் பிரிவு : ஆறுமுகத்தான் குடியிருப்பு
துறை : பூத வைத்தியம்
தொழில் : இல்லை

ஆறுமுகத்தான் குடியிருப்பை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தரம் 11ல் கல்வி பயின்றவர். பூத வைத்தியம் என்று கூறப்படுகின்ற மந்திரம், சுளுக்கு, திருநீறு போடுதல், காய் வெட்டுதல், களிப்பு, நூல் போடுதல், சூனியம், பில்லி போன்ற வைத்திய துறையில் மிகவும் பிரகாசித்து வருகின்றார். இவர் ஒரு இளம் கலைஞர் ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**முழுப்பெயர்** : **திரு. சீனித்தம்பி சந்திரன்**
**முகவரி** : **முருகன் கோவில் வீதி, சவுக்கடி**
**பிறந்த திகதி** : **1967.10.18**
**வயது** : **45**
**கிராமசேவையாளர் பிரிவு** : **சவுக்கடி**
**துறை** : **சருவாங்கம், விசக்கடி, கட்டு, வைத்தியம்**
**தொழில்** : **பரிகாரி**

சவுக்கடியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தரம் 3ல் கல்வி பயின்றார். இவர் சருவாங்கம் வைத்தியம் என்று கூறப்படுகின்ற பித்தம், சளி, சிலேற்பனம் போன்ற வியாதிகளுக்கும் மற்றும் விசக்கடி வைத்தியமான பாம்பு, தேள், குழவி, கீரி, முதலை, நாய் போன்ற விச மிருகங்களுக்குரிய வைத்திய முறைகளையும் மற்றும் கட்டு வைத்திய துறையிலும் சிறந்து விளங்குகின்றார்.



**முழுப்பெயர்** : **திரு. சுப்பிரமணியம் இராமகிருஷ்ணன்**
**முகவரி** : **காளி கோவில் வீதி, ஏறாவூர் – 04**
**பிறந்த திகதி** : **1968.03.11**
**வயது** : **44**
**கிராமசேவையாளர் பிரிவு** : **ஏறாவூர் – 04**
**துறை** : **பூத வைத்தியம்**
**தொழில்** : **பரிகாரி**

ஏறாவூர் 04ஐ பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர். தரம் 10ல் கல்விகற்றவர். இவர் பூதவைத்தியம் என்று சொல்லப்படுகின்ற பில்லி, சூனியம், கழிப்பு, காவல் பண்ணுதல் போன்ற வைத்தியத்திலும் சிறந்து விளங்குகிறார். இவர் பிரபலியமாக குறிபார்த்தல், வெற்றிலைக்குறி, மட்டைக்குறி, சுளகுக்குறி போன்ற குறி வகைகளைப் பார்ப்பதில் சிறந்து விளங்குகின்றார்.

**முழுப்பெயர்** : **திரு. சிதம்பரப்பிள்ளை கலைச்செல்வன்**
**முகவரி** : **வைத்தியர் வீதி, சித்தாண்டி – 03**
**பிறந்த திகதி** : **1969**
**வயது** : **43**
**கிராமசேவையாளர் பிரிவு** : **சித்தாண்டி**
**துறை** : **சருவாங்கம்**
**தொழில்** : **கமம்**

சித்தாண்டியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இவர் கா.பொ.த உயர் தரத்தில் கல்வி பயின்றவர். இவர் சர்வாங்க வைத்தியம் என்று சொல்லப்படுகின்ற பித்தம், சளி, சிலேற்பனம் போன்ற நோய்களுக்கு சிறியோர் முதல் பெரியோர் வரை வைத்தியம் செய்து வந்திருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| முழுப்பெயர் | : அமரர் அருணந்தி வைத்திலிங்கம் |
| முகவரி | : சித்தாண்டி – 04 |
| பிறந்த திகதி | : 1923.04.15 |
| இறப்பு | : 1965.02.03 |
| வயது | : 42 |
| கிராமசேவையாளர் பிரிவு | : சித்தாண்டி – 04 |
| துறை | : சருவங்கம், சோதிடம் |
| தொழில் | : பரிகாரி |

சித்தாண்டியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தரம் 5ல் கல்வி பயின்றவர். இவர் சர்வாங்க வைத்தியம் என்று சொல்லப்படுகின்ற பித்தம், சளி, சிலேற்பனம் போன்ற நோய்களுக்கு சிறியோர் முதல் பெரியோர் வரை வைத்தியம் செய்து வந்திருக்கின்றார். அத்துடன் சோதிட கலைகளான வெற்றிலை வைத்து பார்த்தல், கெடுதிகேட்டல், பிறந்த பிள்ளைகளின் பலன், ருதுவான பிள்ளைகளின் பலன்கள், திருமண பொருத்தம், சாதக குறிப்பு எழுதுதல், வீடு கட்டுவதற்கான நிலையம் எடுத்தல், கிணறு கட்டுவதற்கான நிலையம் எடுத்தல், ராசி பலன் போன்ற கருமங்கள் பற்றி கூறுதல் போன்ற கலைகளில் சிறந்து விளங்குகின்றார். இவர் தற்போது இறந்து விட்டார்.



| | |
|---|---|
| முழுப்பெயர் | : திரு. இடமே கெரத் முதியான்சலகே அமரசிங்க |
| முகவரி | : 25ம் கட்டை மங்களகம அம்பாறை |
| பிறந்த திகதி | : 1970.01.05 |
| வயது | : 42 |
| கிராமசேவையாளர் பிரிவு | : மங்களகம (135 A) |
| துறை | : பூத வைத்தியம் |
| தொழில் | : கமம் |

- ❖ இவர் அக்கிரியன்கும்பரே பிறப்பிடமாகவும், கெமுணுபுர மங்களகமயை வசிப்பிடமாகவும் கொண்டவர்.
- ❖ தரம் 06 இல் கல்வி பயின்ற இவர் 12 வருட காலமாக இவ்வைத்தியத் துறையில் ஈடுபட்டு வருகின்றார்.
- ❖ இவர் பூதவைத்தியம் என்று கூறப்படுகின்ற தண்ணீர் ஓதிக்கொடுத்தல், வளவு காவல் பண்ணுதல், நூல் போடுதல், வயிற்றுக்குப் பார்த்தல், அச்சிரம் போடுதல், பில்லி, சூனியம் மற்றும் விலங்குளைக் கட்டும் மந்திரம் என்பனவற்றினை செய்து வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| **முழுப்பெயர்** | : | **திரு. கதிரவேல் சிவலிங்கம்** |
| **முகவரி** | : | **மாவளையாறு, கரடியனாறு** |
| **பிறந்த திகதி** | : | **1970.11.28** |
| **வயது** | : | **42** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | : | **கரடியனாறு** |
| **துறை** | : | **விசக்கடி, பூதவைத்தியம், கட்டு வைத்தியம்** |
| **தொழில்** | : | **பரிகாரி** |

மாத்தளையை பிறப்பிடமாகவும், கரடியனாறை வசிப்பிடமாகவும் கொண்டவர். தரம் 8இல் கல்வி பயின்றுள்ளார். இவர் விசக்கடி வைத்தியமான பாம்பு, தேள், குழவி, கீரி, முதலை, நாய், போன்ற விச மிருகங்களுக்குரிய வைத்திய முறைகளையும் பூதவைத்தியம் என்று சொல்லப்படுகின்ற பில்லி, சூனியம், கழிப்பு, காவல் பண்ணுதல், போன்றவற்றிலும் அத்துடன் கட்டு வைத்தியத்திலும் சிறந்து விளங்குகின்றார்.



| | | |
|---|---|---|
| **முழுப்பெயர்** | : | **திரு. பொன்னம்பலம் சுசீலன்** |
| **முகவரி** | : | **பழைய ஊர், செங்கலடி** |
| **பிறந்த திகதி** | : | **1971.03.27** |
| **வயது** | : | **41** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | : | **செங்கலடி** |
| **துறை** | : | **விசக்கடி, பூத வைத்தியம்** |
| **தொழில்** | : | **பால் சுத்திகரிப்பு உத்தியோகத்தர்** |

செங்கலடியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இவர் க.பொ.த.சாதாரண தரம் வரை கல்வி கற்றவர். இவர் விசக்கடி வைத்தியமான பாம்பு, தேள், குழவி, கீரி, முதலை, நாய் போன்ற விச மிருகங்களுக்குரிய வைத்திய முறைகளையும் பூதவைத்தியம் என்று சொல்லப்படுகின்ற பில்லி, சூனியம், கழிப்பு, காவல் பண்ணுதல், போன்ற வற்றிலும் சிறந்து விளங்குகின்றார்.



| | | |
|---|---|---|
| **முழுப்பெயர்** | : | **திரு. கந்தசாமி இராசு** |
| **முகவரி** | : | **குமாரவேலியர் கிராமம்** |
| **பிறந்த திகதி** | : | **1971.06.16** |
| **வயது** | : | **41** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | : | **குமாரவேலியார் கிராமம்** |
| **துறை** | : | **பூத வைத்தியம்** |
| **தொழில்** | : | **பூசாரி** |

குமாரவேலியார் கிராமத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர். தரம் 2ல் கல்விகற்றவர். இவர் பூதவைத்தியம் என்று சொல்லப்படுகின்ற பில்லி, சூனியம், கழிப்பு, காவல் பண்ணுதல் போன்ற வைத்தியத்திலும் சிறந்து விளங்குகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| **முழுப்பெயர்** | : | **செல்வி. பொன்னுத்துறை – யாழினி** |
| **முகவரி** | : | **நாகதம்பிரான் ஆலய வீதி, வந்தாறுமூலை** |
| **பிறந்த திகதி** | : | **1972.06.29** |
| **வயது** | : | **40** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | : | **வந்தாறுமூலை** |
| **துறை** | : | **சருவாங்கம்** |
| **தொழில்** | : | **இல்லை** |

வந்தாறுமூலை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தரம் 11ல் கல்வி பயின்றவர். இவர் சர்வாங்க வைத்தியம் என்று சொல்லப்படுகின்ற பித்தம், சளி, சிலேற்பனம் போன்ற நோய்களுக்கு சிறியோர் முதல் பெரியோர் வரை வைத்தியம் செய்து வருகின்றார். இவர் கிராமிய வைத்திய கலைஞர்களில் இளம் கலைஞருமாவார்.



| | | |
|---|---|---|
| **முழுப்பெயர்** | : | **இளையதம்பி கோமளேஸ்வரி** |
| **முகவரி** | : | **சேனைக் குடியிருப்பு** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | : | **குமாரவேலியார் கிராமம்** |
| **பிறந்த திகதி** | : | **1975.07.10** |
| **வயது** | : | **37** |
| **துறை** | : | **சருவாங்க வைத்தியம்** |
| **தொழில்** | : | **பரிகாரி** |

சேனைக் குடியிருப்பை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர் ஒரு பட்டதாரி ஆவார். இவர் சருவாங்க வைத்தியம் என்று சொல்லப்படுகின்ற பித்தம், சளி, சிலேற்பனம் போன்ற வைத்திய முறைகளில் ஈடுபட்டு வருவதோடு, இவ் வைத்தியத்திற்கான மூலிகைகளை கொண்டு மருந்து தயாரித்தும் வருகின்றார்.



| | | |
|---|---|---|
| **முழுப்பெயர்** | : | **திரு. தம்பிராசா விஜிசுதன்** |
| **முகவரி** | : | **வி.சி வீதி, வந்தாறுமூலை** |
| **பிறந்த திகதி** | : | **1977.11.29** |
| **வயது** | : | **35** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | : | **வந்தாறுமூலை** |
| **துறை** | : | **முறிவு வைத்தியம்** |
| **தொழில்** | : | **பரிகாரி** |

இவர் வந்தாறுமூலையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர் கா.பொ.த உயர்தர கல்வியை செங்கலடி மத்திய கல்லூரியில் பயின்ற இவர் தற்போது முறிவு வைத்திய துறையில் ஈடுபட்டு வருகின்றார். இவர் முறிவு வைத்தியத்திற்கான எண்ணெய் வகைகள் மூலிகைகள் போன்றவற்றை தாமே தயாரித்து வைத்தியம் செய்து வருகின்றார் அனேகமாக இவரது வைத்தியத்தை நாடி வெளி இடங்களிலும் இருந்து மக்கள் பயனடைகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| முழுப்பெயர் | : அமரர். வெள்ளையர் கிருஷ்ணபிள்ளை |
| முகவரி | : சித்தாண்டி – 03 |
| பிறந்த திகதி | : 1947.07.17 |
| இறப்பு | : 1980.05.04 |
| வயது | : 33 |
| கிராமசேவையாளர் பிரிவு | : சித்தாண்டி – 03 |
| துறை | : விச வைத்தியம், சருவங்கம் |
| தொழில் | : பரிகாரி |

சித்தாண்டியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர் தரம் 5ல் கல்வி பயின்றவர். இவரை பிரதேச மக்கள் "பரிகாரி கிட்ணன்" எனவும் புனை பெயரால் அழைத்தனர். இவர் சர்வாங்க வைத்தியம் என்று சொல்லப்படுகின்ற பித்தம், சளி, சிலேற்பனம் போன்ற நோய்களுக்கு சிறியோர் முதல் பெரியோர் வரை வைத்தியம் செய்து வந்திருக்கின்றார். இவர் விசக்கடி வைத்தியமான பாம்பு, தேள், மூட்டை, பூரான், முதலை, பல்லி, போன்ற விசம் உள்ள பிராணிகள் கடித்தவர் பரிகாரம் செய்து வந்திருகின்றார். இவர் தற்போது இறந்து விட்டார்.



| | |
|---|---|
| முழுப்பெயர் | : அமரர். இராமக்குட்டி தம்பியப்பா |
| முகவரி | : கண்ணகையம்மன் ஆலய வீதி, களுவன்கேணி – 02 |
| கிராமசேவையாளர் பிரிவு | : களுவன்கேணி |
| பிறந்த திகதி | : 1954.12.07 |
| இறப்பு | : 1986.11.21 |
| வயது | : 32 |
| துறை | : சருவாங்கம், பூத வைத்தியம் |
| தொழில் | : கிராம சேவகர் |

களுதாவளையை பிறப்பிடமாகவும், களுவன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தரம் 5ல் கல்வி பயின்றுள்ளார். இவர் சருவாங்க வைத்தியம் என்று சொல்லப்படுகின்ற பித்தம், சளி, சிலேற்பனம் பூத வைத்தியம் என்று சொல்லப்படுகின்ற பில்லி, சூனியம், காய் வெட்டுதல், கழிப்புச் சடங்கு, ஓடுதல், காவல் பண்ணுதல், பேய் ஓட்டுதல், திருநீறு போடுதல், சுளுக்கு பார்த்தல் போன்ற வைத்தியங்களை செய்து வந்திருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திரு. செல்லத்துரை மோகன் |
| முகவரி | : | பிரதான வீதி, ஆறுமுகத்தான் குடியிருப்பு |
| பிறந்த திகதி | : | 1981.12.18 |
| வயது | : | 31 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | ஆறுமுகத்தான் குடியிருப்பு |
| துறை | : | சருவாங்க வைத்தியம், பூத வைத்தியம் |
| தொழில் | : | பூசாரி |

ஆறுமுகத்தான் குடியிருப்பை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தரம் 11ல் கல்வி பயின்றவர். இவர் சர்வாங்க வைத்தியம் என்று சொல்லப்படுகின்ற பித்தம், சளி, சிலேற்பனம் போன்ற நோய்களுக்கு சிறியோர் முதல் பெரியோர் வரை வைத்தியம் செய்து வருகின்றார். அத்துடன் பூத வைத்தியம் என்று சொல்லப்படுகின்ற பில்லி, சூனியம், திருநீறு போடுதல், சுளுக்கு பார்த்தல், காய் வெட்டுதல், வளவு காவல் பண்ணுதல் போன்ற பரிகாரங்களை செய்து வருகின்றார். இவர் ஒரு இளம் கலைஞர் இவருடைய சேவையை பெறுவதற்காக சகல பிரதேசங்களிலிருந்தும் மக்கள் வருகை தந்து கொண்டிருக்கின்றனர்.



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திரு. நாகராஜா சந்திரமோகன் |
| முகவரி | : | பத்தினியம்மன் ஆலய வீதி, களுவன்கேணி – 02 |
| பிறந்த திகதி | : | 1983.03.06 |
| வயது | : | 29 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | களுவன்கேணி |
| துறை | : | விச வைத்தியம், சருவாங்கம் |
| தொழில் | : | பூசாரி |

இவர் களுவன்கேணியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர் க.பொ.த. சாதாரண தரம் வரை கல்வி பயின்றவர் விச வைத்தியங்களான பாம்புக்கடி, முதைலக்கடி, குழவி, தேள் கொட்டு, மற்றும் சருவாங்க வைத்தியமான பித்தம், சளி, சிலேற்பனம் போன்ற நோய்களுக்கும் வைத்தியம் செய்து வருகின்றார்.



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திரு. கணேசமூர்த்தி புருசோத்மன் |
| முகவரி | : | பிரதான வீதி, கொம்மாதுறை |
| பிறந்த திகதி | : | 1985.07.23 |
| வயது | : | 27 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | கொம்மாதுறை |
| துறை | : | சருவாங்கம், பூத வைத்தியம் |
| தொழில் | : | பரிகாரி |

கொம்மாதுறையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர் இவர் க.பொ.த. சாதாரண தரம் பயின்றவர் இவர் சருவாங்க வைத்தியம் என்று சொல்லப்படுகின்ற பித்தம், சளி, சிலேற்பனம் பூத வைத்தியம் என்று சொல்லப்படுகின்ற பில்லி, சூனியம், காய் வெட்டுதல், கழிப்புச் சடங்கு, ஓடுதல், காவல் பண்ணுதல், பேய் ஓட்டுதல், திருநீறு போடுதல், சுளுக்கு பார்த்தல் போன்ற வைத்தியங்களை செய்து வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| முழுப்பெயர் | : திரு. பணிக்கர் மயில்வாகனம் |
| முகவரி | : பாடசாலை வீதி,சித்தாண்டி – 03, |
| பிறந்த திகதி | : 03.05.1942 |
| வயது | : 70 |
| கிராமசேவையாளர் பிரிவு | : சித்தாண்டி – 03 |
| துறை | : ஊடகம் |
| தொழில் | : ஓய்வு பெற்ற (செயலாற்றுகை) உதவி முகாமையாளர் |

❖ இவர் சித்தாண்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர். இவர் தனது ஆரம்பக் கல்வியை மட்/இ.கி.மி.த.க பாடசாலை, சித்தாண்டியிலும் ஆண்டு 08 வரை கற்றார். அதன் பின்பு 09 வரை மட்/வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்திலும் (SSC) சிரேஷ்ட தராதரப் பரீட்சையில் தேறினார்.

❖ அதன் பிற்பாடு திருவருள் நாடக மன்றத்தினை ஆரம்பித்ததுடன் ஸ்ரீமுருகன் முன்னேற்றச் சங்கம் சனசமூகநிலையம் என்பவற்றினைத் தாபித்து சமூக சேவையில் ஈடுபட்டார்.

❖ 1964களில் விவசாயப் பாடசாலைக்கு தெரிவானார்.அதன் பின்னர் கண்டி தென்னம் கும்பற பண்ணைக்கு பயிற்சியாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

❖ 1968ம் ஆண்டு இலங்கைப் போக்குவரத்து சபையில் பஸ் வழிநடாத்துனராகப் பதவியேற்றார். சாலைப்பரிசோதகர் சேவைகள் காப்பாளராக 36 வருடம் சேவையாற்றினார்.

❖ அது மட்டுமன்றி திருவருள் நாடக மன்றத்தில் நிகழ்த்துகைகளில் தன்னை இணைத்துக் கொண்டார்.அந்த வகையில் நாட்டுக்கூத்தில் சுபத்திரை கலியாணம் இதில் அர்ச்சுனன் பாத்திரம் ஏற்று நடித்தார்.

❖ இந்த நாட்டுக்கூத்தானது 1969ம் ஆண்டு திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரின் அழைப்பின் பேரில் திருகோணமலையில் திறந்த வெளியரங்கில் நிகழ்த்துகை செய்யப்பட்டது.

❖ இவர் பத்திரிகைத் துறைக்கு தன்னை 1968ம் ஆண்டு இணைத்துக் கொண்டார்.அந்த வகையில் வீரகேசரி பத்திரிகையின் நிருபராக (சித்தாண்டி) செய்திகளை சேகரிப்பதும் அதனை பிரசுரிப்பதிலும் ஆர்வம் மிக்கவராகத் திகழ்ந்தார்.

❖ அன்னார் தற்போது சேவையில் இருந்து ஓய்வு பெற்று தன்னை முழுநேர ஆலயத்தொண்டராக இணைத்துக் கொண்டார்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | அமரர். செல்லத்தம்பி ஸ்ரீ கோவிந்தசாமி |
| முகவரி | : | விஷ்ணு மகா வித்தியாலய வீதி, வந்தாறுமூலை |
| பிறந்த திகதி | : | 08.03.1949 |
| வயது | : | 63 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | வந்தாறுமூலை கிழக்கு |
| துறை | : | ஊடகத்துறை |
| தொழில் | : | ஓய்வு பெற்ற காகித ஆலை ஊழியர் |



- கடந்த 35 வருடமாக வீரகேசரிப் பத்திரிகையின் செங்கலடி நிருபராக இருந்து வருகிறார்.

- அதுமட்டுமன்றி Weekend Express, மித்திரன், உலகத் தமிழர் (கனடா) ஆகிய பத்திரிகைகளில் நிருபராக இருந்து வருகிறார்.

- இவர் ஒரு சித்திரக் கலைஞராகவும் இருந்து வருகிறார்.இவர் வீரகேசரி,மித்திரன் போன்ற பத்திரிகைகளுக்கு கேலிச்சித்திரங்கள் வரைபவராகவும் இருந்து வருகிறார். உதாரணமாக : வீரகேசரிப் பத்திரிகைகளில் வெளியாகும் "சின்னக்குட்டிப் போடியாரும் சிங்காரச் சின்னாச்சியும்" என்ற கேலிச்சித்திரத்தினை வரைந்த பெருமைக்குரியவர்.

- வாழைச்சேனை காகித ஆலையில் இவர் கடமைபுரியும் போது அங்கு மாதா மாதம் வெளியிடப்படும் காகிதமலர் என்ற சஞ்சிகைக்கு இவர் பிரதம ஆசிரியராக இருந்து வருகிறார்.அது மட்டுமன்றி அட்டைப்படத்தினை வரையும் ஓவியராகவும் இருந்து வருகிறார். அதுமட்டுமன்றி மட்டக்களப்பில் இருந்து வெளியாகும் நகைச்சுவை ஏடான சுவைத்திரனின் ஓவியராகவும் இருந்து வருகிறார்.

- இவர் சிறந்த சிற்பக்கலைஞராகவும் இருக்கிறார்.இவர் தனது பொழுது போக்கு நேரமாக களிமண்,சீமேந்து பிளோய்ரரோபகிய் போன்றவற்றைப் பயன்படுத்தி சிலைகளை வடிக்கும் இயல்பு கொண்டவர்.

- இவர் சிறந்த புகைப்படப்பிடிப்பாளர்.கடந்த 35 வருடகாலமாக பத்திரிகை துறை படப்பிடிப்பாளராகவும் மற்றும் உள்ளக,வெளிக்கள பிரத்தியேக படப்பிடிப் பாளராகவும். மற்றும் கணணி முறையில் அமைந்த டிஜிற்டல் முறைப் படப்பிடிப்பாளராகவும் திகழ்கிறார்.

- எனவே இவர் ஓர் பல்துறை கலைஞராக திகழ்கின்றார்.என்பது அவரது சேவையின் மூலம் எமக்குப் புலனாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| முழுப்பெயர் | : திரு. கதிர்காமத்தம்பி வாமதேவன் |
| முகவரி | : செங்கலடி – 02 |
| பிறந்த திகதி | : 02.12.1950 |
| வயது | : 62 |
| கிராமசேவையாளர் பிரிவு | : செங்கலடி – 02 |
| துறை | : ஊடகவியலாளர் |
| தொழில் | : கிராம உத்தியோகத்தர் |

- சர்வதேச தமிழ் பத்திரிகையான "வீரகேசரி" யின் சித்தாண்டி நிருபராக இருந்து வருகின்றார்.
- கிழக்கிலங்கை ஊடகவியலாளர் சங்கம், மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி நிலையம் என்பவைகளின் அங்கத்தவர்.
- மட்டக்களப்பு மாவட்ட சமாதான நீதிவான்.
- செங்கலடி மத்திய கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர்.
- செங்கலடி அஞ்சல் அலுவலகத்தின் ஆலோசனைச் செயலாளர்.
- வடக்கு, கிழக்கு மாகாண கிராம உத்தியோகத்தர்.
- ஏறாவூர் பற்று பிரதேச பிரஜைகள் குழுவின் செயலாளர்.
- ஏறாவூர் வடக்கு மேற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் செங்கலடி கிளை உறுப்பினர்.
- அரச சேவையில் கிராம சேவையாளராக 28 வருடங்கள் கடமையாற்றி வருகின்றார்.
- செங்கலடியில் கடமையாற்றும் போது கடந்த 1990ம் ஆண்டு யுத்த சூழ்நிலையினால் செங்கலடி நகரம் முற்றாக செயலிழந்த போது 1991ம் ஆண்டு செங்கலடியில் பிரதேச செயலகம், செங்கலடி வைத்தியசாலை, மற்றும் அரச அலுவலகங்கள், கூட்டுறவு நிலையம், நவீனசந்தை, வர்த்தக நிலையங்கள், மக்கள் மீள் குடியேற்றம் என்பன வழமைக்கு திரும்புவதற்காக இரவு பகலாக பாடுபட்டதன் பரிசாக மட்டக்களப்பு மாவட்டத்திலே முதலாவது சிறந்த கிராம சேவையாளராகத் தெரிவு செய்யப்பட்டு தற்போதைய பிரதமரும், அப்போதைய உள்நாட்டு அலுவலக அமைச்சருமான ரத்னசிறி விக்கிரநாயக்க அவர்களினால் இலங்கை மன்ற கல்லூரியில் வைத்து கௌரவிக்கப்பட்டு சிறந்த கிராம சேவையாளருக்கான பரிசும், சான்றிதழும் பெற்றவர். இதனால் செங்கலடிக்கும், ஏறாவூர் பற்று பிரதேச செயலகத்திற்கும் பெருமை தேடிக் கொடுத்தவர்.
- ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் பிரிவிலே 09க்கும் அதிகமான கிராம சேவையாளர் பிரிவுகளில் பதில் கடமையாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.
- ஸ்ரீமுருகன் ஆலயம், செங்கலடி ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயம், காளிகாமடு ஸ்ரீ கற்பக விநாயகர், ஏறாவூர் - 04 ம் குறிச்சி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயம், புன்னைச்சோலை ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலயம், கல்லடி உப்போடை பேச்சி அம்மன் ஆலயம், மட்டக்களப்பு ஆனைபந்தி சித்தி விநாயகர், அமிர்தகழி ஸ்ரீ மாமாங்கப்பிள்ளையார் ஆலயம் போன்ற பிரசித்தி பெற்று விளங்குகின்ற ஆலயங்களில் வருடாந்த உற்சவ காலங்களில் இவர் சார்ந்து இருக்கும் "வீரகேசரி" பத்திரிகையிலே விசேடமாக பல சிறப்பு கட்டுரைகள் எழுதி சைவ அடியார்கள் பலருடைய பாராட்டுக்களையும், ஏறாவூர் பற்றிலும் மட்டக்களப்பிலும் பெற்று விளங்குபவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| முழுப்பெயர் | : பேரின்பராசா சபேஷ் |
| முகவரி | : பிள்ளையார் ஆலய வீதி, செங்கலடி |
| பிறந்த திகதி | : 1982.10.01 |
| வயது | : 30 |
| கிராமசேவையாளர் பிரிவு | : செங்கலடி |
| துறை | : ஊடகம் |
| தொழில் | : ஊடகவியலாளர் |

இவர் வாழைச்சேனையைப் பிறப்பிடமாகவும், செங்கலடியை வசிப்பிடமாகவும் கொண்டவர். தனது ஆரம்பக் கல்வியை வாழைச்சேனை வாணி வித்தியாலயத்திலும், அதன் பின்பு செங்கலடி மத்திய கல்லூரியிலும் பயின்றார். அதன் பிற்பாடு ஏறாவூர் பற்று ஊடகவியலாளராக சுமார் 5 வருட காலமாக செங்கலடி நிருபராக செயற்பட்டு வருகிறார். உடனுக்குடன் பிரதேச செய்திகளை வெளியிடுவதில் சிறந்து விளங்குகிறார். இவர் வீரகேசரி நாளேடு வாரப் பத்திரிகைகளுக்கு செய்தியை வழங்கிக் கொண்டு இருக்கின்றார். செய்தி மாத்திரம் மன்றி, கட்டுரை, ஆக்கம் மற்றும் செய்தி சேகரிப்பு, படப்பிடிப்பு போன்றவற்றினையும் செய்து வருகின்றார். அத்துடன் இலங்கை பத்திரிகைப் பேரவையில் ஊடகம் சம்மந்தமான பயிற்சிகளைப் பெற்று இருக்கின்றார். அத்துடன் தொழில் பயிற்சி அதிகார சபையில் தர முகாமைத்துவப் பயிற்சி நெறியையும் மேற்கொண்டு இருப்பதோடு உழவியல் சம்மந்தமான பயிற்சி நெறியினையும் தனியார் நிறுவனம் ஒன்றில் பெற்று இருக்கின்றார்.

இவர் பிராந்தியத்தில் அவ் அப்போது நடை பெறுகின்ற சகல நிகழ்வுகளையும் கட்டுரை வடிவிலும் புகைப்படம் வாயிலாகவும் வெளியிட்டு வருவது குறிப்பிடத்தக்கது ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திரு. செல்வக்குமார் நிலாந்தன் |
| முகவரி | : | 44, ரமேஷ்புரம் செங்கலடி. |
| பிறந்த திகதி | : | 1983.04.29 |
| வயது | : | 29 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | செங்கலடி–01 |
| துறை | : | ஊடகம் |
| தொழில் | : | ஊடகவியலாளர் |

❖ ஏறாவூர் ஐந்தாம் குறிச்சியை பிறப்பிடமாகவும் செங்கலடியை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் கடந்த 2001ம் - 2003ம் ஆண்டு பிராந்திய பத்திரிகையின் அலுவலகச் செய்தியாளராக பணியாற்றியதுடன் இதே காலப்பகுதியில் வீரகேசரி வாரவெளியீட்டுப் பத்திரிகையில் அரசியல் கட்டுரைகளையும் எழுதிவந்தார்.

❖ இவர் பல நெருக்கடியான காலகட்டத்திலும் மட்டக்களப்பு மாவட்ட செய்திகளை வெளிக்கொண்டுவருவதில் முன்நின்று பணியாற்றியவர்.

❖ இவர் தற்போது மட்டக்களப்பு இணையச் செய்தியாளராக கடமையாற்றிவருவதுடன், சுயாதீன சுதந்திர ஊடகவியலாளராக மட்டக்களப்பு மாவட்ட செய்திகளை ஊடகங்களில் வெளிக்கொண்டுவருவதில் முன்நின்று பணியாற்றிவருகின்றார்.

❖ செங்கலடி மத்திய கல்லூரியின் பழையமாணவரான இவர் ஊடகத்துறையில் டிப்ளோமா பாடநெறியை நிறைவுசெய்துள்ளார்.

❖ சினிமா இயக்குனர் பயிற்சிநெறியை நிறைவுசெய்துள்ள இவர் சில காலம் சினிமா சம்பந்தமான விமர்சனக் கட்டுரைகளை பத்திரிகைகளில் எழுதிவந்தார் அத்தோடு தொண்டர் நிறுவனம் ஒன்றின் மாதாந்த செய்தித்தாளில் சமூகசேவைப் பணிகளை செய்திகளாக சேகரித்து வெளியிட்டுவந்தார்.

❖ இவர் ஒரு சிறந்த சமூகசேவையாளரும் கூட 2005ம் ஆண்டு தன்னை சமூகசேவைப்பணியில் இணைத்துக்கொண்ட இவர் தற்போது "சேவகம்" என்ற தொண்டர் நிறுவனத்தை உருவாக்கி அதன் ஊடாக மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவும், சமூக அபிவிருத்திக்காகவும் பணியாற்றிவருகின்றார்.

❖ இதேநேரம் இவர் செங்கலடி கிராம சிறுவர் உரிமை கண்காணிப்புக் குழுவின் தலைவராகவும்,செங்கலடி பசுந்தளிர் இளைஞர் கழகத்தின் ஆலோசகராகவும், செங்கலடி இளம்நிலா கலாமன்றத்தின் தலைவராகவும், ரமேஸ்புரம் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தின் செயலாளராகவும் தற்போது பதவிவகித்து வருகின்றார்.

❖ இவர் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் கழகத்தின் மாவட்ட சம்மேளத்தின் முன்னாள் செயலாளராகவும், செங்கலடி வர்த்தக சங்கத்தின் முன்னாள் அமைப்பாளராகவும், செங்கலடி கிராம அபிவிருத்திச்சங்கத்தின் முன்னாள் உபசெயலாளராகவும், செங்கலடி வாசகர் வட்டத்தின் முன்னாள் உபதலைவராகவும் பதவிவகித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| **முழுப்பெயர்** | **: திரு. கதிர்காமத்தம்பி மயில்வாகனம்** |
| **முகவரி** | **: பிரதானவீதி, வந்தாறுமூலை** |
| **பிறந்த திகதி** | **: 06.05.1936** |
| **வயது** | **: 76** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | **: வந்தாறுமூலை கிழக்கு** |
| **துறை** | **: வாய்மொழி இலக்கியம்** |
| **தொழில்** | **: கமம்** |

❖ இவர் வந்தாறுமூலையை பிறப்பிடமாக கொண்டவர். தனது இளமைக் கல்வியை வந்தாறுமூலை G.T.M.Sலும் வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலயத்திலும் கல்வி கற்றார்.

❖ இளமையில் இருந்து வாய்மொழிப் பாடல்களைப் பாடுவதிலும் கவிதை எழுதுவதிலும் ஈடுபாடு கொண்டவராக காணப்பட்டார்.

❖ இவர் ஓர் ஏழைப் பையனுக்கும் பணக்கார பொண்ணுக்கும் ஏற்பட்ட ஒரு உறவு பற்றிய செய்திகளை பலவகையாக பாடி இருக்கிறார்.

"சிரசெட்டும் வரை அணிந்து பொன்னரங்கள்
திசை எட்டும் ஒளிவீசும் மதிமுகத்தான்
கரை திரட்டும் அலைவிட்ட நுரையுமோ
அந்தக் கனகத்திலே வார்த்தெடுத்த சிலையின் பற்கள்
தழை விட்டுவளர்ந்து வரும் கதலி வாழை
தண்டயவளின் கதலி வனப்பும்
அலை கட்டும் மேகலையின் வனப்பும் - கண்டால்
ஆடவனின் நெஞ்சத்தை பிளிந்து எடுக்கும்"

❖ அடுத்து உழவர்களின் வாழ்க்கையையும் அவர்களது பண்பாட்டுத் தன்மை பற்றியும் சிறப்பாக பாடி இருக்கிறார். அதாவது 1992ம் ஆண்டு வந்தாறுமூலையிலே நடைபெற்ற உழவர் தின விழாவிலே பாடல் பாடி இருக்கிறார்.

"வாழ்க உழவர் வாழ்கவே
வாழ்க இனிது வாழ்கவே
மலைகள் தோறும் பொங்கல் இட்டு
மனை மகிழ்ந்து வாழ்கவே"

❖ சிவதொண்டன் நிலையத்தினை ஸ்தாபித்த செல்லப்பா சுவாமிகள் இறைவனடி சேர்ந்த பின்பு அவரது வாழ்க்கை குறிப்புச் சம்பவங்களை வாய்மொழியாகப் பாடியிருக்கின்றார். அதில் சில அடிகள் வருமாறு :-

"கார்த்திகை வருடம் பங்குனித் திங்கள்
பகரும் இருபத் தொம்பதில் நேர்த்தியாய்......."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மட்டக்களப்பில் மிகவும் பிரசித்தி பெற்றது சித்தாண்டி ஸ்ரீசித்திரவேலாயுத சுவாமியின் வரலாறு பற்றியும் அதன் மகிமை பற்றியும் சிறப்பாக பாடி இருக்கிறார்.

- வந்தாறுமூலை மகா விஷ்ணு ஆலய சிறப்பு பற்றியும் சிறப்பாக பாடி இருக்கிறார்.

"வரம் தர வேண்டும் திருமாலே
வாழ்நாள் முழுவதும் உனது மனமார இருக்க"

- இவர் சிவபெருமானின் லீலைகளை பாடல் வடிவில் எழுதி வைத்து இருந்தார். இத்திறமையினை கண்ட இவரது நண்பர் ஒருவர் கூறுகின்றார், க. மயில்வானம் அவர்கள் இலைமறை காயாக இருக்கும் கலைஞர்களில் ஒருவர் எனவும், அவர் இலைமறை காயாய் இருக்கும் காய்களில் பழம் எனவும் நல்லதோர் வீணை நலம் கெட புழுதியில் கிடக்கிறதே என்று கூறுகிறார். இவரது கவித்துவ தன்மைக்கு நிகர் எது என்று கூறி இவரது சிவன் பற்றிய லீலைப்பாடல்களைத் தொகுத்து வெளியிட்டார். இது இவரது வாய்மொழி இலக்கியத்திற்கு வித்திட்ட களமே என்று கூறத் தோன்றுகின்றது.

- திருவாளர் கே. செல்வராசா அவர்கள் இந்த நூலினை இலங்கையிலே வெளியிட்டதும் புலம் பெயர்ந்து வாழ்கின்ற ஈழத் தமிழ் உள்ளங்களிலும் (அவுஸ்திரேலியா) பரிணமித்ததைக் காணக்கூடியதாய் உள்ளது.

- பொதுச்சேவையிலும் ஈடுபாடு கொண்டு திகழ்கின்றார். அதாவது சிவதொண்டன் நிலையத்தின் முழு நேரப் பொறுப்பாளராகவும் இருந்து வருகின்றார்.

- இங்கு பாடப்படும் பஜனைப் பாடல்களுக்கும் மெட்டு அமைத்தும் பாடல்களை பாடியும் வருகின்ற ஒரு சேவையாளனாக தன்னை தடம் பதித்துள்ளார்.

- இவரது அனேகமான பாடல்கள் வாய்மொழியாகவே பாடப்பட்டு இருக்கின்றது. அதனால் அவை எழுத்துருவில் இல்லை.ஒரு சில பாடல்களை மாத்திரம் தொகுத்து நூல் உருப்பெற்று அமைக்க முடிந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திரு. சின்னவன் காளிமுத்து |
| முகவரி | : | பங்குடாவெளி |
| பிறந்த திகதி | : | 1942.08.12 |
| வயது | : | 70 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | பங்குடாவெளி |
| துறை | : | வாய்மொழிப்பாடல் |
| தொழில் | : | கமம் |

- இவர் பங்குடாவெளியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் இளமைக் கல்வியை பங்குடாவெளி அ.த.க பாடசாலையில் கற்றார்.
- இளமையில் இருந்து வாய்மொழிப் பாடல்களைப் பாடுவதிலும், கவி வடிப்பதிலும் ஈடுபாடு கொண்டவராகக் காணப்பட்டார்.
- இவர் உழவர்களின் பண்பாட்டு வாழ்க்கை பற்றியும் சிறப்பாகக் கவி பாடி இருக்கிறார். அந்த வகையில் இவர் பாடிய பாடல்களில் ஒரு சில வரிகளைத் தருகின்றோம்.

பொலி பொலி தாயே
பொலி தம்பிரானே பொலி
பொலி சிறகு இரண்டும் பொன்னாய் ஓவ்
பால் போல் நிலாவாரே ஒவ்.........தாயே
பொலி பகல் எல்லாம் எங்கிருந்தாய் ஒவ்
அந்தி மலை இந்த மலை ஒவ் தாயே
பொலி அண்ணாந்து பாத்த மலை ஒவ்........
மாவிலுப்பை தோணி வெட்டி ஒவ்...........தாயே
பொலி கந்தர் மாமங்கம் போரராம் ஒவ்

- இவர் தனது ஊர் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தில் நீண்ட நாள் மத போதகராகவும் ஆலயத் தலைவராகவும் திகழ்ந்தார்.
- இவர் ஆலயத்தில் சிறப்பாக கவி வடிப்பதிலும் வல்லவராகத் திகழ்கின்றார்.
- அருவி வெட்டும் பாடல்கள், சூட்டுக்களம் பற்றிய பாடல்கள், மீனவர் பற்றிய பாடல்கள், ஆலயத் தோத்திரப் பாடல்கள், கவிப் பாடல்கள், காவடிப் பாடல்கள் என்பன இவரது கைவந்த கலையாகும்.
- அன்னாரின் இவ்வகையான பாடல்கள் எழுத்து வடிவில் இல்லை. இவை அனைத்தும் பேச்சு வழக்கிலே பேணப்பட்டு இருக்கின்றன.
- இவர் தனது கிராமத்தில் கலை மன்றத்தினை ஸ்தாபித்து அதனூடாக தனது பிரதேச கலாசார அம்சங்களை வளர்த்த பெருமகன் என்றே கூறத் தோன்றுகிறது.
- அந்த வகையில் தன்னை நாட்டுக் கூத்துக்கலையிலும் இணைத்துள்ளார். மகாபாரதத்தில் 13ம் போரில் துரோணர் பாத்திரம் ஏற்று நடித்தார். 14ம் போரில் கர்ணன் பாத்திரம் ஏற்று நடித்தார்.
- அந்த வகையில் அன்னார் தன்னை கவித்துவத்திற்கு மட்டுமன்றி நாட்டுக்கூத்துக்கும் தன்னை அர்ப்பணித்துள்ளார் என்றே கூறத்தோன்றுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திரு. காத்தமுத்து நடராசா |
| முகவரி | : | சவுக்கடி வீதி, தளவாய் |
| பிறந்த திகதி | : | 1947.04.19 |
| வயது | : | 65 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | தளவாய் |
| துறை | : | வாய் மொழிப் பாடல் |
| தொழில் | : | கமம் |

தளவாயை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தரம் 5 வரை தளவாய் ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் கற்றார். 40 வருட காலமாக வாய் மொழிப் பாடல்களை பாடி வருகிறார். இவர் முருகன் ஆலய உற்சவத்தின் பொருட்டு அவ் ஆலயத்தில் நடை பெறுகின்ற வேட உத்தியாக்கள், சடங்கு முறைகளையும் அதனோடு இணைந்த பாடல்களையும் பாடி வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முழுப்பெயர் : திரு. தம்பிராசா சேனாதிராசா
முகவரி : 339/1 மாணிக்க விநாயகர் வீதி, செங்கலடி
பிறந்த திகதி : 18.06.1949
வயது : 63
கிராமசேவையாளர் பிரிவு : 195, செங்கலடி – II
துறை : வாய்ப்பாட்டு, கிராமிய இலக்கியங்கள், வசந்தன், நாட்டுக்கூத்து, அம்மானை பாடல்கள், எண்ணெய்ச்சிந்து
தொழில் : கிராம சேவை உத்தியோகத்தர்

- கல்வி கற்கும் காலங்களில் இருந்து அதாவது 1964ம் ஆண்டிலிருந்து சித்தாண்டி திருவருள் நாடகமன்ற உறுப்பினராக இருந்து சித்தாண்டி ஸ்ரீசித்திர வேலாயுத சுவாமி தேவஸ்தான முன்றலில் மகோற்சவ மயில்க்கட்டுத்திருவிழா காலங்களில் பக்திப் பாடல்கள் இசைத்தல், மற்றும் சூரன்போர் கண்விழிப்புக் காலங்களில் பக்தி நாடகங்களையும் அரங்கேற்றி, பல பாராட்டுக்களையும் பெற்றுள்ளார்.

- 1968ம் ஆண்டு திருவருள் நாடக மன்றத்தினர் அரங்கேற்றிய "சுபத்திரா கல்யாணம்" நாட்டுக்கூத்து பிரதேச மட்டத்தில் முதன்மை பெற்று மாவட்ட மட்டத்தில் உள்ளீர்க்கப்பட்டு மட்டக்களப்பு முற்றவெளி (வெபர் அரங்கு) அரங்கில் மேடையேற்றி அரச அதிபர் திரு. செல்வரெட்ணம் அவர்களினால் முதற்பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

- அதன் பிற்பாடு 1969ம் ஆண்டு திருகோணமலை பொது மைதான அரங்கில் மேடையேற்றிப் பரிசு பெறப்பட்டது. இந்நாட்டுக்கூத்தில் பலராமர் வேடந்தாங்கி பாத்திரச் சிறப்பைத்தந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

- 1955ம் ஆண்டிலிருந்து கொம்மாதுறை விபுலானந்தா அறநெறிப்பாடசாலையின் தலைமைப் பொறுப்பினையேற்று நிர்வகிப்பதோடு ஊதியம் ஏதும் பெற்றுக்கொள்ளாமல் கற்பித்தும் வருகின்றார்.

- அறநெறிப்பாடசாலை மாணவர்களைக் கொண்டு பஜனை செய்தல், எண்ணெய்ச்சிந்து, மரண வீடுகளில் வைகுந்த அம்மானை பாடல் போன்ற ஆன்மீகப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றார்.

- இவரது இன்னோரன்ன சமயப் பணிகளுக்காக செங்கலடி மத்திய கல்லூரி – அதிபர் திரு.க.சிறிதரன் மற்றும் மாணவ சமுகத்தினரால் கௌரவிக்கப்பட்டடார்.

- அடுத்து கிராம உத்தியோகத்தர் சேவை மற்றும் பொதுமக்கள் சேவையின் தலைசிறந்த மாவட்ட மட்டத்தினால் சேவையாளராக கணிக்கப்பட்டு ரோட்டறிக் கழகத்தினரால் அதன் தலைவர் திரு.க.மகேசன் அவர்களின் ஆலோசனையின் நிமித்தம் மாவட்ட செயலாளர் திரு. சுந்தரம் அருமைநாயகம் அவர்களினால் நினைவுச் சின்னம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார் (29.04.2007).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திரு. செல்லத்தம்பி சந்திரகுமார் |
| முகவரி | : | V.C வீதி, வந்தாறுமூலை |
| பிறந்த திகதி | : | 13.03.1957 |
| வயது | : | 55 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | வந்தாறுமூலை கிழக்கு |
| துறை | : | வாய்மொழிப்பாடல் |
| தொழில் | : | புகையிரத நிலைய உத்தியோகத்தர் |

- ❖ வந்தாறுமூலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர். வந்தாறுமூலை மத்தியமகா வித்தியாலயத்தில் கலைத்துறையில் கல்வி கற்றவராவார்.

- ❖ இவர் இளமையிலிருந்து வாய்மொழிப்பாடல்கள் பாடுவதிலும் ஈடுபாடுடையவர். அத்தோடு இவர் இந்து சமயப் பிரச்சாரங்களிலும் ஈடுபாடு கொண்டவர்.

- ❖ இந்து கிராமங்களில் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளிலும், ஆலய வருடாந்த உற்சவங்களிலும் தனது கலைத்திறமைகளை காட்டி வருகின்றார்.

- ❖ இவர் இந்து சமய வளர்ச்சிப் பிரச்சாரங்களில் வல்லவராக உள்ளார். தற்போது வந்தாறுமூலை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய தலைவராகவும், சிறந்த பூசகராகவும், சக்தி விளையாட்டுக்கழக ஆலோசகராகவும், ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய நிர்வாக சபைத் தலைவராகவும் கடமையாற்றுகின்றார்.

- ❖ கும்மிபாடல், அம்மன்பாடல், சிந்துபாடல், காவியச்சிந்து என்பனவற்றினை செய்து வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திரு. வடிவேல் ஆனந்தசங்கர் |
| முகவரி | : | 247 பிரதான வீதி, ஏறாவூர் – 05 |
| பிறந்த திகதி | : | 1972.04.10 |
| வயது | : | 40 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | ஏறாவூர் – 05 |
| துறை | : | வாய்மொழிப் பாடல் |
| தொழில் | : | உடுக்கை அடித்தல் |

- ❖ இவர் ஏறாவூர் – 05ஐ பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர் ஆவார்
- ❖ உடுக்கைக் கலைஞர்
- ❖ கடந்த பல வருடங்களாக கிழக்கிலங்கையில் உள்ள இந்து ஆலயங்களில் நடைபெறும் பெருமைமிகு திருவிழாச் சடங்குகளில் பூசகராகவும், உடுக்கைக் கலைஞராகவும் பங்காற்றி வருகின்றார்.
- ❖ ஏறாவூர்பற்றிலுள்ள ஆலயங்களான மகாசக்தி காளி அம்மாள் (ஏறாவூர் - 05ம் குறிச்சி) கருமாரி அம்மாள் (ஆறுமுகத்தான் குடியிருப்பு) ஆற்றோர மகாமாரி அம்மாள் (ஏறாவூர் - 05ம் குறிச்சி) ஸ்ரீமகா பெரிய தம்பிரான் (வந்தாறுமூலை) ஸ்ரீ மகா பெரிய தம்பிரான் (சித்தாண்டி) ஸ்ரீ மகா பெரிய தம்பிரான் (தம்பிலுவில்) அக்கரைப்பற்று போன்ற கிராமங்களில் உள்ள ஆலயங்களில் வருடாந்த விழாக்களின் போது உடுக்கை அடித்து பாடல்கள் பாடி வருகின்ற சிறப்பு மிக்க கலைஞர்.
- ❖ ஆலயங்களிலே வருடாந்த உற்சவத்தினையொட்டி உடுக்கைக் கலைஞர்களுக் கிடையே போட்டிகளை ஏற்பாடு செய்வது வழக்கமாகும். அந்த வகையில் போட்டியில் வெற்றி கொண்டு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | சோமநாதன் நவரெட்ணம் |
| முகவரி | : | சேனை குடியிருப்பு, செங்கலடி |
| பிறந்த திகதி | : | 1943.07.18 |
| வயது | : | 69 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | குமாரவேலியார் கிராமம் |
| துறை | : | சோதிடம் |
| தொழில் | : | கமம் |

கொம்மாதுறையை பிறப்பிடமாகவும், குமாரவேலியார் கிராமத்தை வசிப்பிடமாகவும் கொண்டவர். கொம்மாதுறை அ.த.க. பாடசாலையில் தரம் 04 வரையும் பயின்றார் வந்தாறுமூலை மகா வித்தியாலாத்தில் சாதாரண தரம் வரை கல்வி கற்றுள்ளார். ஏறாவூர் 05ஐச் சேர்ந்த நல்லையா சோதிடரிடமிருந்து இக் கலையை கற்றுக் கொண்டார். 14 வயதில் இக் கலை இயல்பாகவே இவரிடம் இருந்தது. ஆரம்பத்தில் தனது உறவினர்களுக்கு சோதிடம் பார்த்த இவர் நாளடைவில் அனைவருக்கும் சோதிடம் பார்த்துள்ளார். 60 வருட சோதிட துறையில் இவர் தனது பங்களிப்பை செய்து வருகிறார். கைரேகை பார்ப்பது, ஜாதகம் பார்த்தல், பொருத்தம் பார்த்தல், பெயர் வைத்தல், பெயர்களுக்கான இலக்கங்கள் என்பவற்றை தெரிவு செய்தல், நிலையம் எடுத்தல், சுப நிகழ்வுகளுக்கு நாள் குறித்தல் என்பவற்றை செய்து வருகிறார். ஏறாவூர் 05 வீரபத்திர சுவாமி ஆலய நிர்வாக சபை உறுப்பினராக 40 வருடங்களும், ஏறாவூர் 05 மாரியம்மன் ஆலயத்தின் உப தலைவராக 33 வருடங்களாகவும், குமார வேலியார் கிராம அபிவிருத்தி சங்க செயலாளராகவும், குமார வேலியார் கிராம செல்வ விநாயகர் ஆலய ஸ்தாபகராகவும் அதன் தலைவராகவும், குமார வேலியார் கிராம விநாயகர் வித்தியாலய ஸ்தாபகராகவும் இருந்துள்ளார். அத்தோடு இக் கிராமத்தில் இருந்த கஷ்டப்பட்ட மக்களுக்காக பல சேவைகளை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| **முழுப்பெயர்** | : | **திரு. பொன்னையா கணபதிப்பிள்ளை** |
| **முகவரி** | : | **மாவடிவேம்பு – 02, சித்தாண்டி** |
| **பிறந்த திகதி** | : | **03.07.1947** |
| **வயது** | : | **65** |
| **கிராமசேவையாளர் பிரிவு** | : | **மாவடிவேம்பு – 02** |
| **துறை** | : | **சோதிடக்கலை** |
| **தொழில்** | : | **கமம்** |

- இவர் சித்தாண்டியைப் பிறப்பிடமாகவும், மாவடிவேம்பினை வசிப்பிடமாகவும் கொண்டவர்.

- இவர் சித்தாண்டியைச் சேர்ந்த பொன்னையா சாந்துப்பிள்ளை என்பவர்களுக்கு குடும்பத்தில் நான்காவது பிள்ளையாக அவதரித்தார்.

- இவர் தமது இளமைக்கல்வியினை சித்தாண்டி இராமகிருஷ்ண மிஷன் பாடசாலையில் க.பொ.த. சா.தரம் வரை கற்றார்.

- தனது தந்தையாரான பொன்னையா என்பவர் சோதிடக்கலையில் விற்பன்னராகத் திகழ்ந்தார்.

- தனது தந்தையாருடன் ஓய்வு நேரங்களில் சோதிடக்கலையை பயின்றார்.

- அதன் பின்பு மானசீக குருவாக சித்தாண்டியைச் சேர்ந்த தம்பியப்பாவிடம் சோதிடக் கலையை முறையாகப் பயின்றார்.

- இவர் முப்பது வருடம் சோதிடக் கலையில் அனுபவம் மிக்கவராக திகழ்கின்றார்.

- இவருடைய சோதிடக் கலையை கேட்பதற்கு பல திசைகளிலும் இருந்து மக்கள் கூட்டம் வருகை தந்து சோதிடக் கலையை கேட்கும் நிலை காணப்படுகின்றது.

- இவர் வெற்றிலை வைத்துப் பார்த்தல், கெடுதி கேட்டல், பிறந்த பிள்ளை பலன், ருதுவாகிய பிள்ளைகளின் பலன்கள், மற்றும் திருமணப் பொருத்தம் பார்த்தல், சாதகக் குறிப்பு எழுதுதல், வீடு கட்டுவதற்கான நிலையம் எடுத்துக் கொடுத்தல், கிணறு கட்டுவதற்கான நிலையம் எடுத்தல் போன்ற கருமங்களை ஆற்றி வருகின்றார்.

- இவர் சிறந்த முறையில் கணித்து சோதிடம் பார்ப்பதில் விற்பன்னராக திகழ்கின்றார்.அது மட்டுமன்றி இவர் சிறந்த சமூக சேவையாளருமாவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திரு. சீனித்தம்பி தெய்வநாயகம் |
| முகவரி | : | கனகலாயம், 5ம் குறிச்சி ஏறாவூர் |
| பிறந்த திகதி | : | 1948.09.19 |
| வயது | : | 64 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | ஏறாவூர் – 05 |
| துறை | : | ஆராய்ச்சியும் சமூகசேவையும் |
| தொழில் | : | உதவிப்பணிப்பாளர் (ஆராய்ச்சி) இந்துசமயகலாசார அலுவல்கள் திணைக்களம் |

- இவர் ஏறாவூர் - 05ம் குறிச்சியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தனது ஆரம்பக்கல்வியை 5ம் குறிச்சி மெதடிஸத மிஷன் பாடசாலையிலும், ஏறாவூர் சிரேஷ்ட தமிழ் கலவன் பாடசாலையிலும் கற்றார். பின்பு க.பொ.த.சா.தரப் பரீட்சையில் சித்தி எய்திய பின்பு தேசிய கடதாசி கூட்டுத்தாபனத்தில் சேர்ந்து கொண்டார். அதன் பின்பு க.பொ.த.உ.த பரீட்சையில் சித்தி எய்து பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரியாகத் தோற்றி கலைமணிப் பட்டம் பெற்றுக் கொண்டார்.

- இவர் தேசிய கடதாசி கூட்டுத்தாபனத்திலே சுமார் 16 வருடங்கள் சேவையாற்றியமை குறிப்பிடத்தக்கது. அப்போது களஞ்சிய காப்பாளர், அத்தியட்சகர் போன்ற தொழில்களை மேற்கொண்டார்.

- இவர் 1986ம் ஆண்டு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் சுமார் 22 வருடங்கள் சேவையாற்றி இருக்கிறார். அப்போதுகலாசார உத்தியோகத்தராக, அதன் பிற்பாடு 1944ம் ஆண்டு அராய்ச்சி உத்தியோகத்தராக, அதன் பிற்பாடு கலாசார உதவிப்பணிப்பாளராக (ஆராய்ச்சி) தற்போது ஓய்வு பெற்றுள்ளார்.

- இவர் இந்து சமய கலாசார திணைக்களத்தில் கடமையாற்றும் போது நாட்டில் உள்ள ஆலயங்கள், அறநெறிப்பாடசாலைகள், இந்து நிறுவனங்கள் என்பவற்றின் செயற்பாட்டிற்கு உந்து சக்தியாக திகழ்ந்தார்.

- இவர் இந்து சமய கலாசார திணைக்களத்தில் இருந்து கொண்டு பல இலக்கிய பணிகளை மேற்கொண்டு இருக்கிறார். அந்த வகையில் இந்து கலைக்களஞ்சியம் பல தொகுதிகள், பஞ்சாங்கம் என்பன அச்சிட்டு வெளியாகுவதற்கு இவர் மூல கர்த்தாவாக திகழ்ந்தார்.

- இவருடைய சேவையினால் பல ஆலயங்கள் கும்பாபிசேக கிரியைகள் கண்டது குறிப்பிடத்தக்கது. அத்துடன் அறநெறிப்பாடசாலைகளுக்கான சீருடை வழங்கல், ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுக்கான பணிகளையும் மேற்கொண்டு இருந்தார்.

- இவர் தன்னை தமிழ் இலக்கியம், சோதிடம், இந்துசமயம் போன்ற துறைகளில் மிகவும் அனுபவமும் ஆற்றலும் கொண்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இவர் இலக்கியம், சமயம், சோதிடம் போன்ற கருத்தரங்குகளுக்கு தென்ஆபிரிக்கா, மலேசியா, இந்தியா போன்ற நாடுகளுக்குச் சென்று தனது ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்து பாராட்டினைப் பெற்றார்.

- சிறந்த பேச்சு வன்மையும், எழுத்தாற்றலும் கொண்ட இவரது ஆக்கங்கள் நூல்வடிவிலும். கட்டுரையாகவும் வெளிவந்துள்ளன. கடந்த 20 வருடங்களுக்கு மேலாக வீரகேசரி வாரமலரில் வாரப்பலன்களை எழுதி வருவதுடன், கிரக மாற்றம், அரசியல் நிலமை, வருடப்பலன்கள் அவ்வப்போது எழுதி பலரது பாராட்டுக்களையும் பெற்றுக் கொண்டுள்ளார். மித்திரன் வாரமலரில் சோதிடரைக் கேளுங்கள் பகுதியில் சோதிடம் சம்பந்தமான பல கேள்விகளுக்கும் தொடர்ந்தும் விடை எழுதி வருபவர் ஆவார்.

- இவர் தனது குறித்த நேர்மையான சேவையின் மூலம் எல்லோரினதும் அன்பையும், மதிப்பையும் பெற்றுக் கொண்டு சேவையிலிருந்து ஓய்வு பெற்று சமூகசேவையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | தர்மலிங்கம் ஜெயக்குமார் |
| முகவரி | : | எல்லை வீதி, செங்கலடி-01 |
| பிறந்த திகதி | : | 1977.03.18 |
| வயது | : | 35 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | செங்கலடி - 01 |
| துறை | : | சோதிடம் |
| தொழில் | : | பூசகர் |

பங்குடாவெளியைப் பிறப்பிடமாகவும், செங்கலடி 01 இனை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் ரமேஸ்புரம் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலய பூசகராக உள்ளார். இவர் சோதிடம் பார்த்தல், வெற்றிலை பார்த்தல், தண்ணீர் ஓதுதல், நூல் போடுதல் முதலியவற்றை செய்து வருகிறார். அத்தோடு வீட்டு நிலையம் எடுத்தல், சுப நிகழ்வுகளுக்கு நாள் பார்த்தல் முதலிய நிகழ்வுகளையும் செய்து வருகின்றார். இவருக்குக் கிடைத்த பட்டங்கள்

சிவஸ்ரீ திருவருட் செல்வன் - சிவஸ்ரீ Y.E.S காந்தன் குருக்களால் வழங்கப்பட்டது.
நித்திய பூஜாக் குருக்கள் - பிரபாபரக் குருக்களால் வழங்கப்பட்டது.

மேலும் சமூக நிகழ்வுகளையும் செய்து வருகின்றார் சமயப் பணியுடன் சேர்த்து சமூக பணிகள் போன்றவற்றையும் பொறுப்பேற்று வழி நடத்தி வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| முழுப் பெயர் | : கந்தப்பு அரியதாஸ் |
| முகவரி | : R.D.S வீதி, மாவடி வேம்பு |
| பிறந்த திகதி | : 1965.08.08 |
| வயது | : 47 |
| கிராமசேவையாளர் பிரிவு | : மாவடிவேம்பு 01 |
| துறை | : வாத்தியக் கலைஞர் (டோல்கி) |
| தொழில் | : புகையிரத நிலைய ஊழியர் |

வந்தாறுமூலையைப் பிறப்பிடமாகவும், மாவடிவேம்பு - 01 இனை வசிப்பிடமாகவும் கொண்டவர். வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் கா.பொ.த (சாதாரண) வரை கற்றுள்ளார். இவர் இவ் வாத்திய கருவியினை கேள்வி ஞானம் மூலம் பழகிக் கொண்டார். 1988ல் சத்துருக்கொண்டான் சர்வோதய நிலையத்தில் இடம் பெற்ற இசை நிகழ்வில் தனது ஆரம்ப வாத்திய நிகழ்வை அமைத்துக் கொண்டார். அதன் பின் திராய்மடு முருகன் ஆலயத்தில் தனது டோல்கி வாத்திய கருவியின் திறனை அங்கு நடை பெற்ற இசை நிகழ்வில் வெளிப்படுத்தினார். 1989.01.01ல் வானம் பாடி எனும் இசைக் குழுவில் அமைப்பாளராக இருந்து அதன் மூலம் இசை நிகழ்வினை நடத்தினார். 1990களில் ஏற்பட்ட வன்முறை சம்பவங்களால் மட்டு நகருக்கு இடம் பெயர்ந்து அங்கு அருமைநாயகம் ஜெயராஜ் என்பவரது சுப்ப சிந் இசைக் குழுவில் இணைந்து 1991ல் நினைத்தாலே இனிக்கும் இசை நிகழ்வில் டோல்கி கலைஞராக அறிமுகமாகி பிரபல்யமானார். 1992ல் பொப்மன்ஸ் எனும் பாதிரியாரின் கிறிஸ்தவ இசை நிகழ்வு தொடர்ந்து 3 நாள் நடை பெற்றது. இவ் நிகழ்விலும் பங்கேற்று சிறப்பாக டோலகி வாசித்துள்ளார்.

பின்னர் ராணி ஜோசப், சிவகுமார் சிறிதர் பிச்சையப்பா, நிலாமதி பிச்சையப்பா, ஜெயபாரதி தாசன் ஆகியோரது இசை நிகழ்வுகளில் டோல்கி கலைஞராக பங்கேற்றுள்ளார். அதன் பின் பார்த்திபன் என்பவரது சாகரி இசைக் குழுவிலும் சிறந்த டோல்கி கலைஞராகவும் இருந்தார். தற்போது சாயி பஜனை, ஆலய இசை நிகழ்வுகள், சமூக நிகழ்ச்சிகள் என்பவற்றில் டோல்கி வாசிக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திரு. தங்கவேல் தவராசா |
| முகவரி | : | சவுக்கடி வீதி, தளவாய் |
| பிறந்த திகதி | : | 1979.02.18 |
| வயது | : | 33 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | தளவாய் |
| துறை | : | கொட்டு வாத்தியம் |
| தொழில் | : | கடற்தொழில் |

இவர் தளவாயை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர். இவர் கொட்டு மேளம் அடிப்பதில் சிறப்பானதொருவராக இவ்வூரில் விளங்குகின்றார். இவர் ஒரு பூசகரும் ஆவார். தனது தந்தையான தங்கவேல் என்பவரிடம் மாந்திரிக கலை நுட்பங்களை பழகி வருகிறார் இவர் ஆலய சடங்கு வேளைகளில் கொட்டு மேளம் அடிப்பவராகவும் இருக்கிறார். அதே வேளை இவர் வேறு இடங்களில் உள்ள ஆலயங்களில் சடங்குகள் நடக்கும் வேளையில் இவருக்கான அழைப்பு கிடைக்கப் பெற்று அவ் ஆலயங்களில் கொட்டு மேளம் அடிப்பதோடு காவியப் பாடல்கள் படிக்கும் திறன் கொண்டவராகவும் உள்ளார்



| | | |
|---|---|---|
| முழுப் பெயர் | : | கிருஷ்ண மூர்த்தி கிருஷ்ணராஜ் |
| முகவரி | : | உப்போடை வீதி, வந்தாறுமூலை |
| பிறந்த திகதி | : | 1976.08.29 |
| வயது | : | 36 |
| கிராமசேவையாளர் பிரிவு | : | வந்தாறுமூலை மேற்கு |
| துறை | : | தோல்வாத்திய கலைஞர் (தபேலா) |
| தொழில் | : | தொழில் நுட்பவியலாளர் |

இவர் வந்தாறுமூலை உப்போடையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர். வந்தாறுமூலை கணேசா வித்தியாலயத்தில் ஆரம்ப கல்வியையும், மட்/செங்கலடி மத்திய கல்லூரியில் உயர்தர கல்வியையும் கற்றார். இயல்பாகவே அவரிடம் இருந்த திறமையினால் தபேலா வாத்தியத்தினை கற்றுக் கொண்டார். தபேலா வாசிக்கும் போது அவர்கள் அதை எவ்வாறு கையாண்டு அவ் வாத்தியத்தை இசைக்குகிறார்கள் என்பதை பார்த்து அதன் மூலம் தனது வாத்திய திறனை விருத்தி செய்து கொண்டார். இவர் சாய்பாவா பஜனை நிகழ்வில் தபேலா வாசிப்பதோடு ஏனைய சமயம் சார்பான இசை நிகழ்வுகளுக்கு தபேலா வாசிப்பவராகவும் இருக்கிறார். பாடசாலைக் காலங்களில் இருந்து இன்று வரையும் தனது வாத்திய பணியை செய்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









**Ganna Dgital Printers, Batticaloa**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org